உ
கணபதிதுணை.

திருப்பூவணப்புராணம்.

இஃது
கந்தசாமிப்புலவர்
இயற்றியது.

மதுரைத்திருஞானசம்பந்ததேசிகசுவாமிகள்
ஆதீனத்து
அம்பலவாணசுவாமிகள்
விருப்பத்தின்படி
தேவகோட்டை,
உ - மு. அண்ணாமலைச்செட்டியாரவர்கள்
உ - ராம. சுப்பிரமணியச்செட்டியாரவர்கள்
உ - வீர. சோக்கலிங்கச்செட்டியாரவர்கள்
இம்மூவர்கள் பொருளுதவிபெற்று
மதுராபுரிவாசி,
இ - இராமசுவாமிப்பிள்ளை,
என்று வழங்குகின்ற
ஞானசம்பந்தப்பிள்ளையால்
அகப்பட்ட பிரதிகொண்டு

சென்னை:
இந்து தியலாஜிகல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

மன்மதஹு மாசிமீ 1896
இதன்விலை ரூபா கவ. 1/4

உ

சிவமயம்.

முகவுரை.

செந்தமிழ்ப் பாண்டிநாட்டிலுள்ள சிவக்ஷேத்திரங்களிலே, மூவர்தேவாரம் பெற்றதும், விராட்புருடனது திருமுகமண்டலமாகக் கொள்ளப் பெற்றதுமாகிய திருப்பூவணக்ஷேத்திர மான்மியத்தை அப்பதியில்வதிந்த கந்தசாமிப் புலவர் வடமொழியினின்று மொழிபெயர்த்துப் பாடினர். அப்பாடலடங்கிய ஏட்டுப்பிரதி ஒன்றே கிடைத்தமையால், அதுகொண்டு ஒருவாறு பார்வையிட்டு அச்சிடப்பட்டது.

சருக்க அகராதி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவணம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அறையார்புனலுமாமலருமாடரவார்சடைமேற்
குறையார்மதியஞ்சூடிமாதோர்கூறுடையானிடமா
முறையான்முடிசேர்தென்னர்சேரர்சோழர்கடாம்வணங்குந்
திறையாரொளிசேர்செம்மையோங்குதென்றிருப்பூவணமே.

மருவார்மதின்மூன்றொன்றவெய்துமாமலையான்மடந்தை
யொருபால்பாகமாகச்செய்தவும்பர்பிரானவனூர்
கருவார்சாலியாலைமல்கிக்கழன்மன்னர்காத்தளித்த
திருவான்மலிந்தசேடர்வாழுந்தென்றிருப்பூவணமே. (உ)

போரார்மதமாவுரிவைபோர்த்துப்பொடியணிமேனியனுங்
காரார்கடலினஞ்சமுண்டகண்ணுதல்விண்ணவனூர்
பாரார்வைகைப்புனல்வாய்பரப்பிப்பன்மணிபொன்கொழித்துச்
சீரார்வாரிசேரநின்றதென்றிருப்பூவணமே. (ங)

கடியாரலங்கற்கொன்றைசூடிக்காதிலோர்வார்குழையன்
கொடியார்வெள்ளையேறுகந்தகோவணவன்னிடமாம்
படியார்கூடிநீடியோங்குபல்புகழாற்பரவச்
செடியார்வைகைசூழநின்றதென்றிருப்பூவணமே. (௪)

கூரார்வாளிசிலையிற்கோத்துக்கொடிமதில்கூட்டழித்த
போரார்வில்லிமெல்லியலாளோர்பான்மகிழ்ந்தானிடமா
மாராவன்பிற்றென்னர்சேரர்சோழர்கள்போற்றிசைப்பத்
தேரார்வீதிமாடநீடுதென்றிருப்பூவணமே. (௫)

நன்றுதீதென்றொன்றிலாதநான்மறையோன்கழலே
சென்றுபேணியேத்தநின்றதேவர்பிரானிடமாங்
குன்றிலொன்றியோங்கமல்குகுளிர்பொழில்சூழ்மலர்மேற்
றென்றலொன்றிமுன்றிலாருந்தென்றிருப்பூவணமே. (௬)

பைவாயரவமரையிற்சாத்திப்பாரிடம்போற்றிசைப்ப
மெய்வாய்மேனிநீறுபூசியேறுகந்தானிடமாங்
கைவாழ்வளையார்மைந்தரோடுங்கலவியினானெருங்கிச்
செய்வார்தொழிலின்பாடலோவாத்தென்றிருப்பூவணமே.

மாடவீதிமன்னிலங்கைமன்னனைமாண்பழித்துக்
கூடவென்றிவாள்கொடுத்தாள்கொள்கையினார்க்கிடமாம்
பாடலோடுமாடலோங்கிப்பன்மணிபொன்கொழித்து
வோடநீரால்வைகைசூழுமுயர்திருப்பூவணமே. (௮)

பொய்யாவேதநாவினானும்பூமகள்காதலனுங்
கையாற்றொழுதுகழல்கள்போற்றக்கனலெரியானவனூர்
மையார்பொழிலின்வண்டுபாடவைகைமணிகொழித்துச்
செய்யார்கமலந்தேனரும்புந்தென்றிருப்பூவணமே. (௯)

அலைபாய்புனலைநீத்தவருந்தேரருமன்புசெய்யா
நிலையாவண்ணமாயம்வைத்தநின்மலன்றன்னிடமா
மலைபோற்றுன்னிவென்றியோங்குமாளிகைசூழ்ந்தயலே
சிலையார்புரிசைபரிசுபண்ணுந்தென்றிருப்பூவணமே. (௧௦)

திண்ணார்புரிசைமாடமோங்குதென்றிருப்பூவணத்துப்
பெண்ணார்மேனியெம்மிலறையைப்பேரியலின்றமிழா
னண்ணாருட்கக்காழிமல்குஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல்பத்தும்வல்லார்பயில்வதுவானிடையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாதமர்மேனியனுகிவண்டொடு
போதமர்பொழிலணிபூவணத்துறை
வேதனைவிரவலராணமூன்றெய்த
நாதனையடிதொழநன்மையாகுமே. (க)

வானணிமதிபுல்குசென்னிவண்டொடு
தேனணிபொழிற்றிருப்பூவணத்துறை
யானநல்லருமறையங்கமோதிய
ஞானனையடிதொழநன்மையாகுமே. (உ)

வெந்துயருறுபிணிவினைகடீர்வதோர்
புந்தியர்தொழுதெழுபூவணத்துறை
யந்திவெண்பிறையினோடாறுசூடிய
நந்தியையடிதொழநன்மையாகுமே. (ங)

வாசநன்மலர்மலிமார்பில்வெண்பொடிப்
பூசனைப்பொழிறிகழ்பூவணத்துறை
யீசனைமலர்புனைந்தேத்துவார்வினை
நாசனையடிதொழநன்மையாகுமே. (ச)

குருந்தொடுமாதவிகோங்குமல்லிகை
பொருந்தியபொழிற்றிருப்பூவணத்துறை
யருந்திறலவுணர்தமரணமூன்றெய்த
பெருந்தகையடிதொழப்பீடையில்லையே. (ரு)

வெறிகமழ்புன்னைபொன்ஞாழல்விம்மிய
பொறியரவணிபொழிற்பூவணத்துறை
கிறிபடுமுடையினன்கேடில்கொள்கைய
னறுமலரடிதொழநன்மையாகுமே. (சா)

பறைமல்குமுழவொடுபாடலாடலன்
பொறைமல்குபொழிலணிபூவணத்துறை
மறைமல்குபாடலன்மாதொர்கூறின
னறைமல்குகழறொழவல்லலில்லையே. (எ)

வரைதனையெடுத்தவல்லரக்கனீண்முடி
விரறனிலடர்த்தவன்வெள்ளைநீற்றினன்
பொருபுனல்புடையணிபூவணந்தனைப்
பரவியவடியவர்க்கில்லைபாவமே. (அ)

நீர்மல்குமலருறைவானுமாலுமாய்ச்
சீர்மல்குதிருந்தடிசேரகிற்கிலர்
போர்மல்குமழுவினன்மேயபூவண
மேர்மல்குமலர்புனைந்தேத்தவின்பமே. (கூ)

மண்டைகொண்டுழிதருமதியிறேரருங்
குண்டருங்குணம்பலபேசுங்கோலத்தர்
வண்டமர்வளர்பொழின்மல்குபூவணங்
கண்டவரடிதொழுதேத்தல்கன்மமே. (க0)

புண்ணியர்தொழுதெழுபூவணத்துறை
யண்ணலையடிதொழுதந்தண்காழியு
ணண்ணியவருமறைஞானசம்பந்தன்
பண்ணியதமிழ்சொலப்பறையும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனர்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிவேறுதிரிசூலந்தோன்றுந்தோன்றும்
　　வளர்சடைமேலிளமதியந்தோன்றுந்தோன்றுங்
கடியேறுகமழ்கொன்றைக்கண்ணிதோன்றுங்
　　காதில்வெண்குழைதோடுகலந்துதோன்று
மிடியேறுகளிற்றுரிவைப்போர்வைதோன்று
　　மெழிதிகழுந்திருமுடியுமிலங்கித்தோன்றும்
பொடியேறுதிருமேனிபொலிந்துதோன்றும்
　　பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனர்க்கே (க)

ஆணுகிப்பெண்ணுயவடிவுதோன்று
　　மடியவர்கட்காரமுதமாகித்தோன்று
மூணுகியூர்திரிவானுகித்தோன்று
　　மொற்றைவெண்பிறைதோன்றும்பற்றூர்தம்மேற்
சேணுகவரைவில்லாலெரித்தறோன்றுஞ்
　　செத்தவர்தமெலும்பினுற்செறியச்செய்த
பூணுணுமரைநாணும்பொலிந்துதோன்றும்
　　பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனர்க்கே (உ)

கல்லாலினீழற்கலந்துதோன்றுங்
　　கவின்மறையோர்நால்வர்க்குநெறிகளன்று
சொல்லாகச்சொல்லியவாதோன்றுந்தோன்றுஞ்
　　சூழரவுமான்மறியுந்தோன்றுந்தோன்று
மல்லாதகாலனைமுன்னடர்த்தறோன்று
　　மைவகையானினைவார்பாலமர்ந்துதோன்றும்
பொல்லாதபுலாலெலும்புபூணுய்த்தோன்றும்
　　பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனர்க்கே. (ங)

படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும்
பன்னிரண்டுகண்ணுடையபிள்ளைதோன்று
நடைமலிந்தவிடையோடுகொடியுந்தோன்று
நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்று
முடைமலிந்தகோவணமுங்கீளுந்தோன்று
மூரல்வெண்சிரமாலையுலாவித்தோன்றும்
புடைமலிந்தபூதத்தின்பொலிவுதோன்றும்
பொழிறிகழுமபூவணத்தெம்புனிதனார்க்கே. (சு)

மயலாகுந்தன்னடியார்க்கருளுந்தோன்று
மாசிலாப்புன்சடைமேன்மதியந்தோன்று
மியல்பாகவிடுபிச்சைகொள்வதற்றோன்று
மிருங்கடனஞ்சுண்டிருண்டகண்டந்தோன்றுங்
கயல்பாயக்கடுங்கலுழிக்கங்கைநங்கை
யாயிரமாமுகத்தினொடுவானிற்றோன்றும்
புயல்பாயச்சடைவிரித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (ரு)

பாராழிவட்டத்தார்பரவியிட்ட
பன்மலருநறும்புகையும்பரந்துதோன்றுஞ்
சீராழித்தாமரையின்மலர்களன்ன
திருந்தியமாநிறத்தசேவடிகடோன்று
மோராழித்தேருடையவிலங்கைவேந்த
னுடறுணித்தவிடர்பாவங்கெடுபித்தன்று
போராழிமுன்னீந்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (சு)

தன்னடியார்க்கருள்புரிந்ததகவுதோன்றுஞ்
சதுர்முகனைத்தலையரிந்ததன்மைதோன்று
மின்னனையநுண்ணிடையாள்பாகந்தோன்றும்
வேழத்தினுரிவெரும்பிப்போர்த்தறோன்றுந்
துன்னியசெஞ்சடைமேலோர்புனலும்பாம்புந்
தூயமாமதியுடனேவைத்தறோன்றும்

பொன்னனையதிருமேனிபொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௭)

செறிகழலுந்திருவடியுந்தோன்றுந்தோன்றுந்
திரிபுரத்தையெரிசெய்தசிலையுந்தோன்று
நெறியதனைவிரித்துரைத்தநேர்மைதோன்று
நெற்றிமேற்கண்டோன்றும்பெற்றந்தோன்று
மறுபிறவியறுத்தருளும்வகையுந்தோன்று
மலைமகளுஞ்சலமகளுமலிந்துதோன்றும்
பொறியரவுமிளமதியும்பொலிந்துதோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௮)

அருப்போட்டுமுலைமடவாள்பாகந்தோன்று
மணிகிளருமுருமென்னவடர்க்குங்கேழன்
மருப்போட்டுமணிவயிரக்கோவைதோன்று
மணமலிந்தநடந்தோன்றுமணியார்வைகைத்
திருக்கோட்டினின்றதோர்திறமுந்தோன்றுஞ்
செக்கர்வானொளிமிக்குத்திகழ்ந்தசோதிப்
பொருப்போட்டிநின்றதிண்புயமுந்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௯)

ஆங்கணைந்தசண்டிக்குமருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தறோன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றுங்
கோங்கணைந்தகூவிளமுமதமத்தம்முங்
குழற்கணிந்தகொள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (௧௦)

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தொருபால்வைத்துகந்தவடிவுந்தோன்று

நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனவடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபொற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனார்க்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இத்திருப்பதிகம் அகத்தியமுனிவர் திரட்டியருளிய
தேவாரத்திரட்டிற் சேர்த்த சிறப்புடையது.

சுந்தரமூர்த்திநாயனார்.

பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருவுடையார்திருமாலயனாலு
முருவுடையாருமையாளையோர்பாகம்
பரிவுடையாரடைவார்வினைதீர்க்கும்
புரிவுடையாருறைபூவணமீதோ. (க)

எண்ணியிருந்துகிடந்துநடந்து
மண்ணலெனாநினைவார்வினைதீர்ப்பார்
பண்ணிசையார்மொழியார்பலர்பாடப்
புண்ணியனாருறைபூவணமீதோ. (உ)

தெள்ளியபேய்பலபூதமவற்றொடு
நள்ளிருணட்டமதாடநவில்வோர்
புள்ளுவராகுமவர்க்கவர்தாமும்
புள்ளுவனாருறைபூவணமீதோ. (௩)

நிலனுடைமான்மறிகையதுதெய்வக்
கனலுடைமாமழுவேந்தியோர்கையி
லனலுடையாரழகார்தருசென்னிப்
புனலுடையாருறைபூவணமீதோ. (௪)

நடையுடைநல்லெருதேறுவர்நல்லார்
கடைகடைதோறிடுமின்பலியென்பார்
துடியிடைநன்மடவாளொடுமார்பிற்
பொடியணிவாருறைபூவணமீதோ. (௫)

மின்னனையாடிருமேனிவிளங்கவொர்
தன்னமர்பாகமதாகியசங்கரன்
முன்னினையார்புரமூன்றெரியூட்டிய
பொன்னனையானுறைபூவணமீதோ. (௬)

மிக்கிறையேயவன்றன்மதியாய்விட
நக்கிறையேவிரலாலிறவூன்றி
நெக்கிறையேநினைவார்தனிநெஞ்சம்
புக்குறைவானுறைபூவணமீதோ. (௭-௮ ௯)

சீரின்மிகப்பொலியுந்திருப்பூவண
மாரவிருப்பிடமாவுறைவானை
யூரனுரைத்தசொன்மாலைகள்பத்திவை
பாரிலுரைப்பவர்பாவமறுப்பரோ. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார், சேரசோழபாண்டியராஜர் மூவர்களோடும் மதுரையம்பதியை நீங்கித் திருப்பூவணத்துக்குச் சமீபித்து, அருகிலே வருந் திருத்தொண்டர்கள் அந்த க்ஷேத்திரத்தைச் சுட்டிக் காட்ட அதன்மீது "'திருவுடையார்" என்றெடுத்து "பூவணமீதோ" என்னுந்திருப்பதிகம் பாடிக்கொண்டு ஸ்தலத்திலேபோய், திருக்கோயில் சேர்ந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அங்கே சிலதினம் அமர்ந்தனர்.

கருவூர்த்தேவர் திருவிசைப்பா.

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருள்புரிந்தாளாண்டுகொண்டிங்ஙன்
சிறியனுக்கினியது காட்டிப்
பெரிதருள்புரிந்தானந்தமே தருநின்
பெருமையிற்பெரியதொன்றுளதே
மருதரசிருங்கோங்ககின்மரஞ்சாடி
வரைவளங்கவர்ந்திழிவைகைப்
பொருதிரைமருங்கோங்காவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௧)

பாம்பணைத்துயின்றோனயன்முதற்றேவர்
பன்னெடுங்காலநிற்காண்பா
னேம்பலித்திருக்கவென்னுளம்புகுந்த
வெளிமையையென்றுநான்மறக்கேன்
றேம்புனற்பொய்கைவாளைவாய்மடுப்பத்
தெளிதருதேறல்பாய்ந்தொழுகும்
பூம்பணைச்சோலையாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௨)

கரைகடலொலியிற்றமருகத்தரையிற்
கையினிற்கட்டியகயிற்று
விருதலையொருநாவியங்கவந்தொருநா
ளிருந்திடாயெங்கள்கண்முகப்பே
விரிதிகழ்விழவின்பின்செல்வோர்பாடல்
வேட்கையின்வீழ்ந்தபோதவிழ்ந்த
புரிசடைதுகுக்குமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௩)

கண்ணியன்மணியின்சூழல்புக்கங்கே
கலந்துபுக்கொடுங்கினேற்கங்
ஙுண்ணியையெனினுநம்பநின்பெருமை
நுண்ணிமைபிறந்தமையறிவன்
மண்ணியன்மரபிற்றங்கிருண்மொழுப்பின்
வண்டினம்பாடநின்றாடும்
புண்ணியமகளிராவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௪)

கடுவினைப்பாசக்கடல்கடந்தைவர்
கள்ளரைமெள்ளவேதுரந்து
னடியிணையிரண்டுமடையுமாறடைந்தே
னருள்செய்வாயருள்செயாதொழிவாய்
நெடுநிலைமாடத்திரவிருள்கிழிக்க
நிலவிளக்கலகில்சாலேகம்
புடைகிடந்திலங்குமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௫)

செம்மனக்கிழவோரன்புதாவென்றுன்
சேவடிபார்த்திருந்தலச
வெம்மனங்குடிகொண்டிருப்பதற்கியானு
மென்னுடையடிமைதானியாதே
யம்மனங்குளிர்நாட்பலிக்கெழுந்தருள
வார்வலயரவிழ்குழற்சுரும்பு
பொம்மெனமுரலுமாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (௬)

சொன்னவின்முறைநான்காரணமுணராச்
சூழல்புக்கொளித்தநீயின்று
கன்னவின்மனத்தென்கண்வலைப்படுமிக்
கருணையிற்பெரியதொன்றுளதே
மின்னவில்கனகமாளிகைவாய்தல்
விளங்கிளம்பிறைதவழ்மாடம்

பொன்னவில்புரிசையாவணவீதிப்
பூவணங்கோயில்கொண்டாயே. (எ-அ·சு)

பூவணக்கோயில்கொண்டெனையாண்ட
புனிதனைவனிதைபாகனைவெண்
கோவணங்கொண்டுவெண்டலையேந்துங்
குழகனையழகெலாநிறைந்த
தீவணன்றன்னைச்செழுமறைதெரியுந்
திகழ்கருவூரனேனுரைத்த
பாவணத்தமிழ்கள்பத்தும்வல்லார்கள்
பரமனதருவமாகுவரோ. (க0)

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவணப் புராணம்.

காப்பு.

திகழ்வரைமின்னனைவதனச் செங்கமலக்களையவிழ்க்கு ந்திவாகாஞ்செய், மகிழொருவெண்மதிமருப்பின்வயிரகிம்புரி வயங்குமத்தயானை, நிகழுமடியார்க்கன்புநீடுமறம்பொருளின் பம்வீடுநல்கும், புகழ்தருநற்கற்பகத்தின்பொற்பதத்தையெ ஞ்ஞான்றும்போற்றல்செய்வாம்.

நூற்பயன்.

தந்திமுகன்றப்பியரு ணந்திதனக்குரைப்பநந்தி சநற்கு மாரன், வெந்துயரமறவெடுத்துவிரித்துரைப்பவவன்வேதவி யாதற்கோதப், புந்தியுணர்ந்தவன்சூதமுனிக்குரைத்தபுட்பவ னபுராணந்தன்னைச், சிந்தைமகிழ்வுறப்படிப்போர்கேட்போர் நல்லிகபரங்கள்சேர்வரன்றே.

கடவுள்வாழ்த்து.

சபாபதி.

வேறு.

பூமேவுதிருமாலும் புண்டரிகத்தயனும் புரந்தானும்வா னவரும்புங்கவரும்போற்றப், பாமேவுபண்டருஞ்சொற்பரி வுமையாள்காணப்படர்தருசெம்பவளநறுஞ் சடைதாழமிலை ச்சுந், தேமேவுசெழுங்கொன்றைதேன்றுளிப்பவிருள்கால்சீ க்குமினன்மதிநிலவெண்டிசாமுகஞ்சென்றெறிப்ப, மாமேவு மணிமன்றுணடம்புரியுமெங்கோன் மன்னுபரிபுரமலர்த்தாள் சென்னிமிசைச்சேர்ப்பாம். (க)

திருப்பூவணநாதர்.

வேறு.

பூமாதுமகிழ்துளபப்புயல்வண்ண நெடுமாலும்புகழ்வெண்கஞ்ச, நாமாதுநடனமிடுநோன்மறைதேர்நான்முகனுநயப்பநன்னீர்த், தேமாதுசெழும்பவளச்சடையிருப்பத்திங்களிருடுரப்பச்சைசல, மாமாதுவடிவிலங்கமன்னியபூவணத்தரன்றாள்சென்னிசேர்ப்பாம். (உ)

ஒருபொருளாயுயிர்க்குயிரா யுருவநான்கருவநான்குபயமொன்று, யருள்வடிவாயகண்டிதமாயசஞ்சலமாயாதிநடுவந்தமின்றாய்க், கருதரிதாய்ச்செல்கதியாய்க்காண்பரிதாய்க்காரணகாரியங்கடந்த, பொருவில்பரிபூரணமாம்பூவணத்தெம்புனிதனையாம்போற்றுவாமே. (ங)

மேவியபல்லுயிர்கட்கும் விண்ணவர்க்கு மிக்ககளைகண்ணாயெண்ணில், பாவியவண்டங்களெலாம்படைத்தளித்துத்துடைத்தருளும்பதியாய்மேலாய்த், தாவிலருட்சச்சிதாநந்தவடிவாய்த்திகழ்சங்கரனைநாளும், பூவுலகும்பணிந்தேத்தும்பூவணநாயகனைநித்தம்போற்றல்செய்வாம். (ச)

புகலரியபுவனமெலாம் பொருந்துயிர்கட் கிரங்கியருள்பொழிந்துநாளும், பகர்தருமிப்படர்புவியிற்பலரறியாவகையொளித்தபரிசுதோன்ற, மகிழுயர்வானெழுபரிதிவானவன்வந்தருச்சித்துவணங்கியேத்துந், திகழ்தருபூம்பொழில்புடைசூழ்தென்றிருப்பூவணத்தரன்றாள்சிந்தைசெய்வாம். (ரு)

அழகியநாயகர்.

திங்கடவழ்சடாமௌலித்தென்கூடற்சிவபெருமான்சித்தராகிப், பங்கமுறுகருந்தாதுபசும்பொன்னாங்குளிகையருள்பான்மையாலே, பொங்கரவவகலல்குற்பொன்னனையாள்கண்டுவந்துபோற்றுநீரா, ரங்கணுலகம்புகழுமழகியநாயகர்பாதமகத்துள்வைப்பாம். (சு)

மின்னன்னை.

மன்னுமமழைதவழ்குழலுமதிதருநன்முகோதயமுமலர்ப்பூங்கையும், பன்னுதமிழ்ப்பால்சுரக்கும் பயோதரமுமறைகொழிக்கும்பவளவாயுந், துன்னுமணிநிகழுடையுந்துடியிடையுந்துலங்குறுமைந்தொழிற்கும்வித்தாய்ப், பொன்னனையானிடத்தமர்ந்தமின்னனையாள்பொற்பாதம்போற்றல்செய்வாம்.

விநாயகக்கடவுள்.

இகபரந்தர்திடமிந்நூற்கிலக்கணச்சொல்வழுவாமலிடையூறின்றிப், பகரவருள்புரிந்தருளப்பனிவரைமின்னனையெனும்பார்ப்பதியைப்பாங்காற், நிகழ்கலசமுலைமுகட்டிற்றென்றிருப்பூவணத்தரன்முன்சேர்ந்துநல்கும், புகர்முகத்துக்கருணைமதம்பொழிகவுட்டுப்போதகத்தைப்போற்றுவாமே, (அ)

முருகக்கடவுள்.

தலம்புகழ்வச்சிரத்தடக்கையிந்திரன்றந்தருள்பாவைதன்னேர்வள்ளி, நலம்புகழ்செவ்வேளரற்குஞானவுபதேசமருண்ஞானமைந்தன், றுலங்குகிரவுஞ்சகிரிதுளைபடவெஞ்சூரனுரங்கிழியவேலை, கலங்கவயில்வேல்விடுத்தகந்தனைப்பந்தனையகற்றிக்கருத்துள்வைப்பாம். (௯)

வயிரவக்கடவுள்.

அரிபிரமரகந்தைகெட வண்டங்களுடைந்துமிகு மங்கிகொண்டே, யுரியபலவுலகமெலாமொழிந்திடுகாளவர்கடமதுடன்மேல்கொண்டு, குருதிவாய்கொப்பளிப்பக்கூரயின்மூவிலைச்சூலங்கொண்டதிண்டோட், கருவனாநேர்தருவடுகக்கடவுளெமைக்காப்பக்கைகூப்புவாமே. (௧0)

சரசுவதிதேவி.

அரியசுவைதருமமுதவருவிபாய்ந்தொழுகருண்மண்டலஞ்சேர், விரிகதிர்வெண்மதிக்கற்றைவெண்கமலபீடிகைமேல்வீற்றிருந்து, பரவருநற்கலைகளெலாம்பவளவாய்திறந்துரைக்கும்பனுவலாட்டி, திருவடிகடமையெமதுசிரத்தினிலுங்கருத்தினிலுமிருத்துவாமே. (௧௧)

திருநந்திதேவர்.

திகழ்மகுடசேகரமுஞ்சிறுபிறையுநுதற்கண்ணுஞ்செங் கைநான்கு, மகிழ்சுரிகைப்பிரம்பினுடன்மான்மழுவும்படைத்தந்திவண்ணநண்ணி,யிகபரநல்கெம்பெருமானிணையடிவீழ்ந்தயன்முதலோரேத்தஞான்றும், புகழ்கயிலைமலைக்காவல்பூண்டதிருநந்திபதம்புந்திகொள்வாம். (௧௨)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திருத்தோணிபுரத்தமர்ந்தசிவனருளாலுமைகலசத்திருமுலைப்பால், விருப்போடுமமுதுசெய்துமிகுசைவத்துறைவிளங்கவேதமோங்கக்,கருக்குழிவீழ்ந்தலறவமண்கையர்கடாங்கழுவேறக்கருதிமாற, னெருப்புறுவெப்பகன்றிடவெண்ணீறெடுத்துச்சாத்தினர்தாணினைதல்செய்வாம். (௧௩)

திருநாவுக்கரசுநாயனார்.

அருள்பெருகுந்திலகவதி யாரருளாலமண்சமயமகற்றியன்பாற், கருதரியகற்புணையாற்கடனீந்திக் கருவேலைகடப்பான்போலு, மருவுபுகழ்வாய்மூரில்வைதிகசைவந்தழைப்ப வந்துதோன்றித், திருவதிகைப்பதிவருஞ்செந் தமிழ்நாவுக்கரையர்பதஞ்சிந்தைசெய்வாம். (௧௪)

சுந்தரமூர்த்திநாயனார்.

காதலுடன்மிகுமின்பக் கடிமணப்பூம்பந்தரின்கீழ்க்கலைவல்லோர்முன், மாதவன்போல்வந்திவனம் வழித்தொண்டனென்றிசைக்கும்வழக்கினாலே, பாதிமதிநுதற்பரவையிடையிருளிற் பங்கயப்பொற்பாதஞ்சேப்பச், சோதிதனைத்தூதுகொண்டசுந்தரன்றாள்சந்ததமுந்தொழுதுவாழ்வாம். (௧௫)

மாணிக்கவாசகசுவாமிகள்.

மருவார்கடொழுகழற்றென் மதுரைவருதமிழ்வழுதிமன்னர்கோமான், பொருவாசிகொணர்கெனச்செம் பொன்கொடுத்துவிடுத்திடவச் செம்பொன்னாலே, பெருவாழ்வையுறவிரைந்துபெருந்துறையின்மேவியதம்பிரானைக்கொண்ட திருவாதவூரடிகளிருபாதகமலங்கள்சென்னிவைப்பாம். (௧௬)

மெய்கண்டதேவர்.

பொய்கண்டவெவைவயுமெனப் பொல்லாதகணபதிதான் புகன்றுபின்னர், மைகண்டத் நடக்குமரன்வழங்குசிவஞான நூல்வகுத்துக்காட்டக், கைகண்டபின்னருளை கண்ணுகக் கண்டபெண்ணைப் புனல்சூழ்வெண்ணை, மெய்கண்டதேவ னடிகைகொண்டுகூப்பிமுடிமீதுசேர்ப்பாம். (கஎ)

திருந்தொண்டர்.

பார்மேவுசைவதவப்பாலோராய்ப்பரசமயநிராகரித்துப், பேர்மேவு பெருமைதரும்பெறற்கரிய பேரின்பமுத்திபெற் றோர், போர்மேவுமழுவேந்தும்பூவணத்தெம் புண்ணியன் பொற்கோயினண்ணுஞ், சீர்மேவு திருத்தொண்டர்சேவடிக டினம்பணிந்துசிந்தைசெய்வாம். (கஅ)

கடவுள்வாழ்த்து முற்றியது,
ஆகச்செய்யுள் (உ0)

அவையடக்கம்.

வேறு.

அற்றமில்கலையினுண்ணறிவின்மேலையோர்
பொற்றிருப்பூவணப்புராணமாண்புற
முற்பகர்வடகலைமொழிபெயர்த்துநீ
நற்றமிழான்முறைநவிற்றகென்னவே. (க)

பொங்குவெங்கதிரவன்பூசையாற்றிய
சங்கரன்கதைசொலத்தமியனெண்ணுத
றுங்கமாமேருவைச்சுமப்பனின்றெனப்
பங்குடையான்கரம்பற்றல்போலுமால். (உ)

குற்றமிலிரதநற்குளிகைதாக்கலும்
பொற்புறத்தாமிரம்புகரில்பைம்பொனு
முற்றவென்பாடலுமுணர்வின்மேதகு
நற்றமிழ்வாணர்முன்னவையுந்திருமால். (ந)

வேறு.

விடையுகைத்திடுமின்னனைபாகன்மேற்
றொடைநிரம்புசொல்சூடத்தொடங்கல்யா

னடையிடற்கருநல்லெழின்மைந்தர்சூழ்
கடல்கடக்கக்கருதுவதொக்குமால். (ச)

திருத்தகும்பொழிற்றென்றிருப்பூவண
நிருத்தமாடியநின்மலன்காதையை
யருத்தியாலுலகம்புகழ்காரிகை
விருத்தயாப்பினெடுத்துவிளம்புகேன். (ரு)

அவையடக்க முற்றியது.

ஆகச்செய்யுள். (உரு)

நைமிசாரணியச்சருக்கம்.

பொன்னலந்திகழ்ந்தோங்கியபூவணக்காதை
தன்னைநான்மறைச்சவுநகாதியமுனிகணங்க
டுன்னுமாதவச்சூதனைவினவியசூழ
னன்னிலம்புகழ்நைமிசவனிசிலநவில்வாம். (க)

காரின்மல்கியகந்தரந்தகாட்சியினுற்
சீரிணங்கியசென்னியிற்றிங்கண்மேவுதலா
லேரிணங்கியமாதவர்க்கின்பமீகையினு
ளரிபாகனைநிகர்ப்பதுநைமிசாரணியம். (உ)

சீரிணங்குறச்சேணிவந்தோங்கலாற்செய்ய
வாரிணக்குநன்மலர்க்கொடிமருவுகண்ணுறலா
லேரிணங்கியவெண்ணரும்புட்கணண்ணுதலா
னாரணன்றனையொத்ததுநைமிசாரணியம். (ங)

நான்முகங்களுநான்மறைநவிற்றுதலானு
நான்முகந்தருநாயகிநண்ணுதலானு
நான்முகங்களுநன்குறப்படைத்திடலானு
நான்முகன்றனையொத்ததுநைமிசாரணியம். (ச)

பன்னுநான்மறைபயில்பவர்பன்னசாலைகளு
மன்னுகின்றவட்டாங்கயோகத்தர்வாழிடமு
மின்னருட்கணுற்றிரண்டறநிற்பவரிடமு
நன்னலம்பெறநிறைந்ததுநைமிசாரணியம். (ரு)

வண்ணமேவியபூந்தவிசேந்தியவள்ள
லெண்ணிலாதவர்பிறப்புடனிறப்பெலாந்தங்கள்
கண்ணினூற்கண்டுகழிந்தபல்காலங்கள்கடந்தோர்
நண்ணிமாதவம்பயில்வதுநைமிசாரணியம் (சு)

காலனூணையுங்காமனதாணையுங்கஞ்ச
மேலயன்றிருவாணையுமேகவண்ணஞ்சேர்
கோலமாயவன்குலவியவாணையுமாக
நாலுநண்ணரிதாயதுநைமிசாரணியம். (எ)

பிரமசர்யம்வானப்பிரத்தம்மெழில்பிறங்கு
மரியநான்மறையறைந்திடுமேதிவணுச்சிரமம்
பாவுகின்றனயாவையும்பற்றறத்துறத்த
லுரியவாச்சிரமங்களுன்குடையதவ்வனமே, (அ)

புகழ்வினீடுவெண்பூதிசாதனம்புனைமெய்யர்
திகழ்செழுங்கதிரெறித்திடுசெஞ்சடாமகுடர்
மகிழ்சிறந்தநல்வற்கலையுடையினர்மாறு
திகழ்தலின்றியேநாடொறுமிருந்தவமிழைப்போர். (கூ)

எண்ணருந்திறலோர்புகழிருபிறப்பாளர்
நண்ணுமுப்பொழுதருச்சனைபுரியுநான்மறையோ
ரண்ணலுண்மகிழவகைவேள்விகளமைப்போர்
கண்ணுதற்கருமங்கமாறுங்களைகண்டோர். (க0

ஒருமைசேர்ந்தமெய்யுணர்வினிருவினையொழிந்தோ
ரருமைமும்மலர்நாற்காணந்தனையயர்த்தோர்
வெருவுமைம்புலப்பகைஞரைவென்றருள்வீரர்
கருதுருதவெண்ணெண்பெருங்கலைக்கடல்கடந்தோர்.

சூழ்ந்தவல்வினைத்தொடர்ட்டுகின்றதொல்பவத்தைப்
போழ்ந்தஞானவாட்படையினர்புரிமூந்நூன்மார்பர்
தாழ்ந்தநல்லுறிதாங்குகுண்டிகைத்தடக்கையர்
வாழ்ந்தவைதிகசைவர்வாழ்நைமிசவனமே. (கஉ)

பகைகடீர்ந்திடும்பன்னகவயிரியும்பாம்பு
மகிழ்விஞேங்கிடும்வாலுளையரியொடுமேதமா

மிருவிலங்கினம்விரும்பியோர்துறையுணீரருந்தி
யிகலதின்றியேயின்புறமருவுமெஞ்ஞான்றும். (கங)

வேறு.

காமாதிகள்விட்டேற்குநர்தண்டோரொருசாரார்
பூமாலைகளாற்பூசனைபுரிவோரொருசாரா
ரோமாதிகளுக்காவனகொணர்வோரொருசாரார்
பாமாண்புறவேபாடுநராடுநரொருசாரார். (கச)

யாகாதிகடருமங்களிழைப்போரொருசாரார்
யோகாதிகள்கருமங்களுழப்போரொருசாரார்
சாகாமூலபலந்தருகிற்பவரொருசாரார்
மாகாமந்தனைமாற்றிமகிழ்ந்தோரொருசாரார். (கரு)

வேதாகமநூன்மேதகவோதுநரொருசாரா
ராதாரத்தினடுக்கையறிந்தோரொருசாரார்
நாதாந்தத்தனைநாடிநவிற்றுநரொருசாரா
ரோதாவுண்மைப்பொருளையுணர்ந்தோரொருசாரார். (கசா)

வேறு.

உந்தியாரமுன்மூளநற்சுழுமுனைதிறந்ததினூடுபோய்
விந்துவாரமுதம்பொழிந்தமெய்விழிசெழுந்துளிவீசவே
யந்தமாதியிலாதசெந்தழலண்டமேகொளகைமண்டவே
நந்தஞானசுகோதயந்தனைநண்ணுகின்றனர்சிலரரோ. (கஎ)

நீதினற்றிரிபுண்டரத்தொடுசெய்யகண்டிகைமெய்யினர்
காதல்கூர்தருகாமனம்பதுகனவினுந்தெறல்காண்கிலா
ரோதுநற்சுகதுக்கம்வெம்பகையுறவுநன்றொடுதீதிலா
ராதியந்தமிலாதவன்றனையன்பினுன்மிகநம்பினோர். (கஅ)

நாக்கினுன்மறைபோற்றுவோரிவர் நண்ணுசாலைகண்மு
ன்னரோ, மூக்கினுற்பிணிமுகமெடுத்தெனமுள்ளெயிற்றரவ
ள்ளவே, யாக்குநற்பகுவாய்கள்கக்கிடுமலகில்செம்மணியில
கருன், றாக்குசோதிவிளக்கினுக்கிணைசொல்லலாமலதில்லை
யே. (கசு)

நித்தமாதவனைத்தினங்கொறுநீங்கிடாதருளோங்கநற்
பத்தியான்மிகுபன்னகத்தொடுபல்பொறிப்புலிசேர்தருஞ்
சித்திமுத்திகள்சேரநல்குறுதில்லையம்பலவெல்லைசார்ந்
தத்தனுடலருட்கணுடிடவிருதபோதனரமர்தல்போன்ம்.

தூயமாதவமேபயின்றிடுசுத்தர்நித்தர்சுகோதயர்
நேயநீடறுபோகமல்லதுநெஞ்சின்வேறுநினைக்கிலார்
மேயநைமிசகானகந்தனின்மேன்மையாவர்விளம்புவா
ராயிரம்பகுவாயனந்தனுநாவிசைத்திடலாவதோ. (௨௩)

நைமிசாரணியச்சருக்க முற்றியது.

ஆகச்செய்யுள். (௩௬)

சவுநகர்சூதனை வினவியசருக்கம்.

நவில்கின்றநைமிசாரணியந்தன்னி னற்றவத்தின் மிக்க சிவஞானவேட்கைச், சவுநகாதிபமுனிவர்கணங்களானோர்தர்க்கமோடுத்தரங்கள்சாற்றித்தாபித், துவமனிலாமாதவன்றன் மைந்தன்மைந்தரொருமையுடனிருண்மலந்தீர்ந்திருந்தங்கோர்நாட், சிவனடியையடையும்வகைதெரிக்குங்காதைசேர்ந்தவர்கடாந்தம்மிற்றேருங்காலை. (௧)

வேறு.

பின்னியபின்னல்பிறங்கவிரித்தோன்
மன்னியநல்லறைவற்கலையாத்தோ
னன்னியமத்தொழிலுனுமிழைப்போன்
பன்னியதீவினைபற்றறவிட்டோன். (௨)

பாயதலம்பெறுபல்லுயிருக்குந்
தாயினுமன்புதழைத்திடுமேலோ
னேயமிகுந்தவநீங்கலிலாதோன்
றூயவெணீறுதுதைந்திடுமெய்யோன். (௩)

புண்டரமீதுபொருந்திவிளங்குங்
கண்டிகைகொண்டகவின்றருமார்ப

னென்டருமெண்கலையாவுமுணர்ந்தோன்
பண்டருவேதபராயணர்சூழல். (௪)

அங்கணிலம்புகழுங்கணுதற்சேர்
சங்கரனன்புதழைத்துறன்மானச்
செங்கைகடாங்கியசென்னியன்மன்னுந்
துங்கமிருந்தவசூதனடைந்தான். (௫)

கட்டமும்வெம்பிணியுங்களைகட்ட
சிட்டர்கடாமெதிர்செங்கைகுவித்துச்
சட்டெனவாயிடைசார்ந்திடநாப்ப
ணிட்டதொராதனமேறியிருந்தான். (௬)

இருந்தருள்காலையிருந்தவவாணர்
சுரந்தருண்மாதவசூதனைநோக்காப்
பொருந்தியகைகணிகூப்பினர்போற்றித்
திருந்துரையின்னனசெப்புதலுற்றார். (௭)

நாடியகாலையினல்லிலமெங்குந்
தேடியபூடடிசேர்ந்ததைபொக்குங்
கேடிலருந்தவகேட்குதியெய்பா
னீடருளாலிவணீவரலாலே. (௮)

மாதவமேபுரிமாதவனான
மேதகுவேதவியாதனவன்பா
லாதரவிற்கொளருங்கலையாவு
மோதியுணர்ந்தவனக்கிணையுண்டோ. (௯)

உன்னையலாதினியோர்கதியின்றா
னின்னருளைப்பெறநேர்ந்தவன்யானென்
றென்னைமுனிட்டவிருந்தவர்முன்னென்
புன்மொழிநன்மைபொருந்தவுணர்ந்தே. (௧0)

முன்பொர்தினந்தனின்மூதறிவாலே
மன்பயில்புட்பவனத்ததுகாதை
மின்பயில்கின்றசுவேதவனத்தி
னன்கதைநாப்பணவின்றிடுகாலை. (௧௧)

அப்பரிசங்கணநைந்தசுருக்க
மெய்ப்படநாடிவிளங்கவிரித்துத்
திப்பியமானசெழுங்கதைமேன்மை
யிப்பரிசென்னவியம்பிடவேண்டும். (கஉ)

என்றிவைசவுநகனேத்தியிசைப்ப
நன்றிதுநன்றிதெனாநனிநாடிப்
பொன்றிகழ்மாமுனிபுங்கவவென்னாத்
துன்றியவன்பொடுசூதனுரைப்பான். (கங)

வேறு.

கந்தநறும்பொகுட்டுடைவெண் கதிர்நிலாக்கற்றைக்கம லமலர்ப்பீடிகைசேர்கலைமடந்தைதனையு, மூந்தமறைநான்கி னெடுபுராணமூவாறுமுழுதுலகமிறைஞ்சவன்பின் மொழிந்த வியாதனையுஞ், சுந்தரநற்கவுட்டுமதசலமருவிதூங்குந்தூங்கி யகைத்தூங்கன்முகபடாந்துலங்குமொற்றைத், தந்தமுறுமடி கடிருவடிகளையும்போற்றிச்சந்ததமு மருள்புரிவான்சிந்தனை தான்செய்தே, (கச)

வேதமொடாறங்கமாகமபுராணங்கண்மேதகுநற்கலையாவு மோதியுணர்ந்தவனீ, யாதலதற்கையமிலையாயினுமென்றன்னே யவையகத்துநன்குணர்ந்தோனுக்குதற்குநினைந்தே, யோதுக வித்காதைதனையெனவுரைத்தியதனாலுவந்துரைப்பன் சவுநக மாமுனிவரனேயென்னாச், சூதனருள்வியாதனுரைத்திட்ட வணமோர்ந்து தொல்கயிலைவளஞ்சிறிது சொல்லலுற்றான் மாதோ. (கரு)

சவுநகர்சூதனைவினவியசருக்க முற்றியது.

ஆகச்செய்யுள். (சுக)

நைமிசாரணியச்சருக்கம் சவுநகர்சூதனைவினவிய சருக்கங்களின் சுருக்கவசனம்.

நைமிசவனத்திலே, தவமிகுதியினாலே சிவஞானத்தில் விருப்ப முடைய சௌனகர்முதலிய முநிவர் குழாங்கள் சிவபிரான்றிருவடி

யை அடையும்படி விளக்குங்கதைபைத் தம்முள்ளே ஒருவருக்கொருவர் ஆராய்ந்துகொண் டிருக்கும்பொழுது, சூதமுனிவர்வர, அவரை அங்குள்ள முனிவர்கள் எதிர்கொண்டு வணங்கி ஆசனமிட, அதிலே சூதமுனிவர் வீற்றிருந்தார். அங்ஙனமிருந்தவரைநோக்கி, முன்பு ஒருதினத்திலே சுவேதவனக்ஷேத்திர மான்மியத்தை அருளும்போது, அதன் மத்தியிலே புட்பவன மான்மியத்தைச் சுருக்கிச்சொன்னீர், இப்பொழுது அதனை விரித்தருள வேண்டுமென்று சௌநகர்முதலிய முனிவர்கள் விண்ணப்பஞ்செய்ய, அதற்குச் சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாயச் சருக்கம்.

பங்கயன்முகுந்தன் பாகசாதனனே பரவருமிருடிகளுமமர்கள், புங்கவர்யாரும்புடைபரந்தீண்டிப்போற்றியேசாத்தமூம்பேறத், தங்குறையிரந்துதலைத்தலைசார்ந்துசந்ததமிடைதாத்தயங்குந், திங்களங்கண்ணி மிலைச்சியசடிலசேகரன்றிருக்கயிலாயம், (க)

மன்னியசென்னிவானுறநிமிர்ந்துமருவியகொடுமுடிபலவா, யுன்னதநூறாயிரமியோசனையாயுயர்க்குமவ்வளவைகீழுடைத்தாய்ப், பன்னருமகலப்பான்மையுமஃதாய்ப்பயின்றுசூழ்படரிருவிசும்பிற், றுன்னுபொன்மணிகள்சுடர்விடவிளங்குந்தொல்கயிலாயநீள்சிலம்பு. (உ)

மகரகேதனனைமருவுபோனகமாய்வாரியுண்கண்ணுதற்பெருமான், றகுமலகனைத்துஞ்சார்ந்துயிர்க்குயிராந்தம்பிரானெனவெம்பிரான்சேர், ககனகூடத்தின்முகட்டினுஞ்சென்றுகனகமாமணிவெயில்பரப்புஞ், சிகரகோபுரங்கள்சேண்டிகழ்ந்தோங்குந்திருக்கைலாயநீள்பொருப்பு. (ங)

பிரமன்மான்முதலோர்பெயர்ந்திடவெழுந்தபிரளயத்திலும்புடைபெயரா, அரியவானந்த வுருவமாயோங்குமூன்மையாயசலமாயொன்றுக், கருதருமுயிர்க்குக்களைகணாய்க்

கதியாங்கண்ணுதலண்ணலெஞ்ஞான்றும், பரிவின்வீற்றிருக்கும்பதியதாய்மேலாய்ப்பயில்வதுகயிலேயஞ்சயிலம். (ச)

வெங்கதிரவனுமீதுநண்ணுறலால் வெண்சுடராயினனென்ரு, லங்கண்மாஞாலத்தாருயிர்புனிதமாவதையறைதல்வேண்டின்றே,துங்கமேவியநற்சவுநகமுனிவசொல்லுதிநன்குநீதுணிவாற், செங்கண்மால்விடையான்றிருவருளுருவாய்த்திகழ்வதுகயிலேயாமெனவே. (ரு)

அன்றியும்வெய்யோனணைதருகாலே யலர்தருமருணமண்டலம்போய்த், துன்றியகிரணமேற்படவந்தச்சுவேதவண்ணந்துதைந்ததனு, லொன்றியவுணர்வினும்பர்தாங்கீழ்வந்துற்றிடினவ்வியல்பாவ, ரென்றஃதுணர்த்திநின்றதும்போலாமெழிறிகழ்கயிலேமால்வரையே, (சு)

சந்திரன்றிகழுஞ்சடிலசேகரமுந்தடக்கைகணான்குமான்மழுவுஞ், சுந்தரப்பிரம்புஞ்சுரிகையுநுதலிற் றுலங்கியகண்ணும்வெண்ணீறு, மந்தவான்மடவார்கண்டமங்கலநாணருதுறவாலமுண்டிருண்ட, கந்தரனருளுநந்தியம்பெருமான்கைக்கொடுகாப்பதக்கயிலே. (எ)

வேறு.

அடிமுடியறிதலின்ருகிநிற்றலான்
முடிவறமுகிழ்மதிமுடியிற்சேர்தலாற்
படர்புகழ்பரப்பியபால்வெண்ணீறணி
கடவுளைநிகர்ப்பதுகயிலேமால்வரை. (அ)

அரியயனமரர்களடிவந்தேத்தலா
லிருமையுமருளியேயென்றுமேவலாற்
பரனுமையொடுகலந்தருளும்பான்மையாற்
கரிமுகனனேயதுகயிலேமால்வரை. (கூ)

சுந்தரக்கண்ணுதறுலங்கிச்சேர்தலால்
வந்திடுஞ்சூருரமாற்றமேவலாற்
சந்ததங்குன்றமாய்த்தயங்குகாட்சியாற்
கந்தவேளனேயதுகயிலேமால்வரை, (கo)

உரியவானுறவளர்ந்தோங்கிநிற்றலால்
வரியளிமுரன்றபூமடந்தைமேவலா
லரியகான்மறைவிரித்தருளுநீர்மையாற்
கரியமாலனையதுகயிலைமால்வரை. (கக)

தோற்றியேநிற்றலாற்சுருதிபோற்றலா
னாற்றிசைமுகங்களுநண்ணுமாண்பினாற்
போற்றுநற்கலைமகள்பொருந்தலாற்புழற்
காற்சரோருகனிகர்கயிலைமால்வரை. (கஉ)

தினமிகுசெல்வங்கடிளைக்குஞ்செய்கையால்
வனமுறுநெடியமான்மருவுமாண்பினாற்
றனைநிகர்தாமரைத்தாளின்மன்னுகோ
கனதையைநிகர்ப்பதுகயிலைமால்வரை. (கங)

அலரும்வெண்டாமரையணைந்தபொற்பினாற்
பலகலையாகமம்பன்னும்பான்மையா
னலமிகுநான்முகனண்ணலாற்செழுங்
கலைமகளனையதுகயிலைமால்வரை. (கச)

எண்டிசாமுகங்களுமிருளைத்தள்ளியே
பண்புறுபாலொளிபரப்புகின்றது
கண்களாலளப்பருங்கவின்கொண்டோங்கிய
வெண்படாம்போர்த்ததாம்வெள்ளியங்கிரி. (கரு)

எள்ளரிதாயபேரின்பமீந்திடுங்
கள்ளவிழ்கடுக்கைநற்கண்ணியஞ்சடை
வள்ளனூடோறுமேல்வதிந்துதோன்றலால்
வெள்ளைமால்விடைநிகர்வெள்ளியங்கிரி. (கசா)

நாற்றிசையெங்கணுமன்னிலாத்திர
டோற்றமோடெழுந்துவான்றுருவச்செல்வது
பாற்கடறிரண்டுருப்படைத்துவிண்டொட
மேற்கிளர்ந்தனையதுவெள்ளியங்கிரி. (கஎ)

ஒழுகியபிலாவுலகுந்தியங்கியாற்
சுழுமுனைதிறந்துநற்றுவாதசாந்தத்திற்

பொழிதருமமுதமேபொங்கியெங்கணும்
விழுவதுபோன்றதுவெள்ளியங்கிரி. (கஅ)

நிரந்தரமெங்கணுநீடுபேரொளி
கரந்துயிர்க்குயிருமாய்க்கலந்துமேவிய
பரஞ்சுடர்திருவுருக்கொண்டபண்புமேல்
விரிந்ததுபோன்றதுவெள்ளியங்கிரி. (ககூ)

எண்ணருமகலிருள்விசும்பினெங்கணுந்
தண்ணருடவழநன்னிலாத்தழைப்பது
கண்ணருமமுதத்தைக்ககனங்கான்றிடும்
வெண்ணிலாத்தாரைநேர்வெள்ளியங்கிரி. (உ0)

திக்குடன்விதிக்கெனுந்திசைகளெட்டினு
மிக்குயர்முடியினும்வேறிடத்தினுந்
தக்கநற்கழைசொரிதாளமின்னுதன்
மிக்கதாரகைநிகர்வெள்ளியங்கிரி. (உக)

கண்ணுதலண்ணலைக்காலைமாலையி
னண்ணியேவானவர்நாளும்போற்றிடப்
பண்ணுகண்ணேணிபோற்பாரினின்றுநீள்
விண்ணிலவுதலுறும்வெள்ளியங்கிரி. (உஉ)

துந்துபியோசையுந்தூயநான்மறை
நந்தியதும்புருநாரதாதியர்
கந்தருவத்தவர்கானவோசையும்
விந்துநாதந்தருமிக்கவோசையும். (உங)

எண்ணரிதாயபாரிடங்களோசையுங்
கண்ணருநந்திமுன்கணங்களோசையும்
விண்ணவரோசையும்வேதவோசையும்
பண்ணவரோசையும்பயிலுமெங்கணும். (உச)

காமரமருச்சுநங்காகதுண்டநீள்
பூமிகுகுங்குமம்புன்னைவன்னிபொற்
றேமருவேலநற்றிகிரிகூவிள
மாமலகங்கடம்பாரமாதுளம். (உரு)

வண்பலவரம்பைமாவகுளந்தாடிமம்
பிண்டிமந்தாரமாம்பிரநற்பிப்பிலஞ்
சண்பகந்தமரநீள்சாலஞ்சந்தனம்
விண்டிகழ்பாரரைமாமரங்கண்மேவுமால், (௨௬)

பொற்புறுமணிமுடிப்புரந்தராதியர்
செற்றலுநந்திதன்செங்கைதாங்கிய
நற்பிரம்படிபடநண்ணுமாரங்க
ளற்றுதிர்குப்பைகளளப்பிலாதன, (௨௭)

விரவியமாதவர்வேள்வித்தூமமுஞ்
சுரர்மடவார்கடஞ்சுரியற்சூட்டிய
பொருவருகற்பகப்பூவுமேவிய
பரிமளந்திசைதொறும்பரந்துநாறுமால், (௨௮)

காழிருங்கூந்தல்சேர்கௌரிநாயகன்
வாழிருங்கயிலைமால்வரையைமானவே
சூழிருங்கடற்புவிதுதிக்கநீண்டிடு
மேழிருபுவனத்துமெங்குமில்லையே, (௨௯)

வேறு.

அந்தகன்கயிலைதன்னிலன்புள்ளவரியயனமரர்களவுணர்
சந்திராதித்தர்கின்னரர்வசுக்கள்சாரணரெண்டிசாமுகத்தர்
கந்தருவத்தர்காரிமாகாளிகருடர்வித்தியாதரர்சித்தர்[றேத்த.
மூந்துறுநிகமாகமமுணர்முனிவர்முறைமுறைதொழுதுநின்

வேறு.

சென்னிவான்றொடுசெம்பொற்கடிமதி
றன்னுமோர்செஞ்சுடர்மணிமண்டபந்
தன்னினல்லரியாசனத்திற்றக
மின்னுவேற்கந்தன்வீற்றிருந்தானரோ, (௩௧)

அந்தவேலையிலாறுமுகங்கொளுங்
கந்தவேளிருகஞ்சமலர்ப்பதம்
வந்தியாநன்மறைமுறைவாழ்த்தியே
நந்திகேசனவிலுதன்மேயினன். (௩௨)

ஈறுறுதநலெண்ணில்சிவாலயங்
கூறுகின்றதிற்கோதிலறம்பொருள்
வீறுசேரின்பவீடருளுந்தல
மாறுமாமுகத்தண்ணலருளென்றான். (ருரு)

என்றகாலையெழின்மிருகந்தவே
ணன்றுநன்றெனநந்தியைநோக்குறு
வொன்றுகாதலினுண்மைப்பொருட்கதை
மன்றகேளெனவாய்மலர்ந்தானரோ. (ருசு)

கண்ணுதல்பெறவந்தருள்கந்தவேள்
விண்ணவர்க்குவிடைகொடுத்தேகியே
யெண்ணுதற்கருமின்பத்தலத்திருந்
தண்ணறன்னையகத்தினிருத்தியே. (ருரு)

தனைநிகர்க்குமத்தானுவருளினாற்
புனிதமேவியபூவணமான்மிய
நினையுமெந்தைநிகழ்த்தநிகழ்த்துகே
ளனிமகிழ்ந்தருணந்தியந்தேவுகேள். (ருசு)

என்றுகந்தனிசைத்திடவந்நந்தி
தன்றனிச்சொல்சநற்குமரன்கொடே
வென்றிவேதவியாதற்குரைக்கவஃ
தன்றெனக்கவன்சொன்னதறைகுவேன். (ருஎ)

ஈதுமுன்னரிசைந்தசோபானமென்
றோதுநீதிச்சவுநகற்கோதியே
காதலாலக்கதையைவிரித்துயர்
சூதமாமுனிசொல்லத்தொடங்கினான். (ருஅ)

திருக்கைலாயச்சருக்க முற்றியது.

ஆகச்செய்யுள். (ருஅ)

திருக்கைலாயச் சருக்கச்சுருக்க வசனம்.

உமாதேவியார் சமேதராகச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கப் பெற்ற திருக்கைலாசமலையிலே, நவமணிகள் அழுத்திய செம்பொன்னாலாகிய ஒரு மண்டபத்திலே சிங்காசனத்தில், அறுமுகக்கடவுள் அமர்ந்தருளும்போது, திருநந்திதேவர் வணங்கி, அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் அருளுஞ் சிவக்ஷேத்திரத்தை அருளிச் செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்குச் சிவபிரான் தமக்கு அருளிச்செய்தபடி முருகக்கடவுள் திருநந்திதேவருக்கும், அவர் சநற்குமாரமுனிவருக்கும், அவர் வியாசமுநிவருக்கும், அவர் எனக்குஞ் சொல்லியருளினுரென்று சூதமுநிவர் சௌநகர் முதலிய முநிவர்குழாங்கட்குச் சொல்லுவாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

ஆற்றுச்சருக்கம்.

முன்னவனருளினாலேமுக்குறும்போட்டிமேலாந்
தன்னிகரருந்தவத்துச்சவுநகமுனிவகேண்மோ
பன்னுசெந்தமிழ்சேர்சங்கப்பாண்டிநன்னாடுசூழ்ந்த [பாம்.
தொன்மைசால்பொருநைவைகை வளஞ்சிலதொகுத்துரைப்

பன்னிறங்களினுஞ்சென்றுபடிகந்தான்பற்றுகின்ற
வந்நிலைபோல்வெண்மேகமார்கலிபடிந்தருந்தித்
துன்னியெம்மருங்குமார்த்துச்சூன்முதிர்ந்திடித்துமின்னி
மைந்நிறங்கவர்ந்துகொண்டுவானகத்தெழுந்ததன்றே. (உ)

இகம்பரமிரண்டுஞ்சேரவெடுத்தநூற்கடன்மடுத்திட்
டகந்தெளிந்துணர்ந்தமேலாமறிவுடைக்குரவரானோர்
பகர்ந்தமாணாக்கர்தம்பாற்பரிந்துநல்லருந்தமிழ்ச்சொற்
புகன்றபோற்பொதியவெற்பிற்பொழிந்தனபுனலின்றாறை. ()

மருவியவரசன்றன்பால்வண்கொடைக்கடலையுண்டு
பரவருமகிழ்விற்றத்தம்பதியிடைப்புலமைமிக்கோர்
விரைவொடுபடர்வதென்னமிகுவனங்கவர்ந்துவிண்டோய்
தருமுயர்மலயவெற்பிற்றண்முகில்பொழிந்தமாதோ. (ச)

கிளர்தருபொதியவெற்பிற்கேழுறுபொருநைநீத்தந்
தளையவிழ்ந்துயர்பூங்கொம்பர்த்தருக்குலஞ்சாய்த்துருட்டி
யளவில்பல்கால்கடோறுமடைத்தநெட்டணையுடைத்து
நெளிதிரைக்கடலைநாடிநெறிக்கொடுசென்றதன்றே. (ரு)

பொருவரும்பொருநைமன்னும்புனிதநீர்குடையுமாதர்
குருமணிக்கலசக்கொங்கைக்குங்குமமளைந்துசேருங்
கருதுநல்லறிவின்மேலோர்பேதையர்க்கலந்தகாலை
மருவுதன்னிலைகலங்கும்வண்ணமேபோலமாதோ. (சு)

மகிழ்சிறந்தியாவர்க்கேனும்வழங்கிடும்வள்ளலேபோன்
மிகுநலமணியும்பொன்னும்வீசுந்தெண்டிரைக்கரத்தா
லகமலர்ந்தங்கண்ஞாலத்தாருயிர்க்கருளவேண்டிப்
புகழ்தருபொருநைநீத்தம்பொருந்துகால்பரந்ததன்றே. (எ)

கொலைகெழுகூர்வேற்றுங்குங்குமரவேள்பதமேல்கொண்டு
கலைவருகன்னிதாள்கைகூப்பிமால்கழலிறைஞ்சி
வலனேவென்றவன்றாள்கண்டுவருணனைவணங்கிநீத்தம்
பலசமயத்துளோரும்பரவுறவொழுகுமன்றே. (அ)

பருப்பதந்தன்னினேங்கும் பராரைமாமரஞ்சாய்த்தீர்த்துப், பொருக்கெனப்பொருநைசெல்லப்பொந்தில்வாழ்புட்கள்போத, லுரைக்கரும்பகைஞர்வெம்போர்க்குடைந்திடுமரசனேடு, தருக்கறச்சூழ்ந்துநீங்காத்தானையமானுமன்றே.

வான்முகங்கிழியவோங்குமலயநீர்ப்பொருநைமண்மேற்
றுன்முகங்கொடுநடந்துதலைத்தலைமயங்கிமள்ளர்
கான்முகம்பரந்துமிக்ககருங்கடல்படியுந்தன்மை
நான்முகன்படைப்பநண்ணிநானிலமொடுங்கல்போலும். ( )

பொருதிருப்பொருநையோடுபுரிசடைப்பெருமான்றன்னுள்
மருவியமகிழ்வினீடும்வைகைமாநதியையுந்தான்
றருணவெண்ணிலாக்கொழிக்குந்தரளமாலிகைபோற்றுங்குந்
திருமிகுவண்மைசான்றசெந்தமிழ்ப்பாண்டிநாடு. (கக)

ஆற்றுச்சருக்க முற்றியது.

ஆகச்செய்யுள். (கக0)

திருநாட்டுச்சருக்கம்.

பூண்டதண்பொருநையின்சீர்புகன்றன
நீண்டிலகுஞ்சடைநிமலர்மேவிய
வேண்டிகழ்பதிகளேழிரண்டியைந்திடு
பாண்டிநாட்டணிசிலபகர்கிற்பாமரோ். (க)

வேறு.

புரங்குன்றச்சிலைகுனித்துப் பொறியரவுநாணாகப்பூட்டி மூவர், தரங்குன்றக்கருதாதுதழலெழவேநகைசெய்துதனை மேற்றாங்கும், காங்குன்றம்படைத்தனையகரடமதகரியுரி போர்த்தருளுங்காமர், பரங்குன்றஞ்சார்கூடற்பரமனருளா லோங்கும்பாண்டிநாடு. (உ)

பன்னுமலயத்துவசபாண்டியன்பண்டிழைத்ததவப்பயத் தினாலே, முன்னொருகாலவதரித்துமும்முலையாண்முடிதுல ங்கமுறையிற்காக்கு, மந்நிலையிலமர்புரிந்தங்கவளைமணம்பு ர்ணந்தருளியங்கணாளன், மன்னுநற்சுந்தரமாறனெனவரசு புரிந்துளதுவழுதிநாடு. (ந)

கொண்டலுறழ்மின்கூந்தற்கொண்டமணங்கொங்குதே ரென்றெடுத்து, மண்டலமெண்மாகீர்த்திவழுதிபெறவெழுது திருமுகமாம்வண்டீர், தண்டமிழின்பொருள்விளங்கச்சங்கத் தின்கீழ்நின்றுபரனுஞ்சாற்றும், பண்டருமத்தமிழ்ச்சங்கப்பா டன்மணங்கொழித்திடுந்தென்பாண்டிநாடு. (ச)

குலவுவடவேங்கடந்தென்குமரியெனத்தமிழெல்லைகூறு கின்ற, தலமதனிற்றலைமைபெறுதலமீரேழ்தயங்குறுசெந்த மிழ்நாடென்றே, யிலகுமரியயனமாரிந்திரன்வந்திறைஞ்சவ ருளேற்பநல்கு, மலைமகணல்லரசினறம்வளர்க்கவளஞ்சுரந்த ளிக்கும்வைகைநாடு. (ரு)

தவலறவேயொருநான்குதலைபிட்டவறுபஃதுதந்தலீலை சிவபெருமான்செய்தருளிச் செங்கயற்கண் மங்கையொடுஞ்

சேர்ந்தநாடு, கவுணியர்தங்குலத்துதித்தகாளையமண்கையர் தமைக்கழுவிலேற்ற, மவுலிதிகழ்வழுதிமகிழ்வண்டமிழேடெ திரேறும்வைகைநாடு. (சு)

தென்மதுரைபரங்குன்றந் திருவிராமேச்சுரமாடானைபுத் தூர், பன்னுதமிழேடகநெல்வேலிபகர்குற்ருலமாப்பனூர் பார், மன்னுபுனற்சுழியல்புனவாயில்கொடுங்குன்றமெழின் மருவுகானே, பொன்மதில்சூழ்பூவணமும்பொருந்துகின்றபு கழ்ப்பொதியப்பொருப்பனுடு. (எ)

வேறு.

மண்டுகின்றவன்மள்ளர்தம்மோசையும்
வெண்டிரைப்புனல்வெள்ளத்திஞேசையும்
பண்டருங்கிளேப்பாடலினேசையு
மண்டகோளகைக்கப்புறஞ்சாருமால். (அ)

கொண்டலொன்றைமின்கூறுசெய்தென்னவே
மண்டுமோரிருவன்பகட்டின்பிடர்த்
திண்டிறன்மள்ளர்பொன்னுகஞ்சேர்த்தியே
கண்டுவைரக்கலப்பைதொடுத்தனர். (கூ)

வேண்டுநீர்கொடுமேவவிரப்பியே
கீண்டுழுஞ்சாற்கிளர்மணிக்குப்பையைப்
பூண்டநல்வரம்பின்புறம்போக்குவார்
பாண்டிநாட்டுறும்பண்ணேயின்பாங்கெலாம். (கo)

தக்கநற்றசும்பின்றதியென்னவே
நெக்குநெக்குநிறைநறுஞ்சேற்றின்முன்
றிக்கினிந்திரதெய்வதம்போற்றியே
மிக்கமள்ளர்விதைத்தனர்வித்தையே. (கக)

மறுவிலாதுயர்மாதருமைந்தருஞ்
சிறுவர்தம்மைவளர்த்திடுசெய்கைபோ
லுறுமகிழ்ச்சியினேங்குமுழுநர்தா
நறியசெந்நெலினுறுவளர்த்தனர். (கஉ)

பொய்யின்ஞானப்புகலிப்பிரானமண்
கையர்தம்மைக்கழுவினிலேற்றுவான்
கொய்துசேர்த்தகுவான்முடியென்னவே
செய்யநாறுபறித்தவைசேர்த்தினர். (கங)

வள்ளத்தேயுறவாக்குமதுநுகர்ந்
துள்ளத்தேயுணர்வோடிடவோடிவீழ்ந்
தள்ளற்பள்ளத்தழுந்தினர்மள்ளர்தாங்
கள்ளுண்பார்க்குக்கதியுமுண்டாங்கொலோ (கச)

மள்ளரானவர்வான்மதிவள்ளத்திற்
றெள்ளிதாநறவுண்டுதெவிட்டியே
யுள்ளநாடியுழத்தியர்க்கூட்டுவார்
கள்ளின்மிக்ககளிப்புமுண்டாங்கொலோ. (கரு)

ஓடிமீளுவருண்டிடுகள்ளினைத்
தேடியோடித்தியங்கிமயங்குவார்
பாடியாடுவர்பண்ணைகளெங்கணுங்
கூடுமேள்ளர்குழாத்தொடுங்கூடியே. (கசு)

மாறின்மைந்தரைமாதருமைந்தரு
மீறில்செல்வமொடில்லறஞ்சேர்த்தல்போல்
வேறுவேறுவிளம்பிக்கடைசியர்
நாறுசேறுநடுவான்றொடங்கினர். (கஎ)

கந்தவார்குழற்கள்ளுண்கடைசியர்
சிந்தைகோந்துதியங்கித்தெளிந்துவந்
திந்திரன்றனையேத்திபிறைஞ்சியே
நந்துநேன்முடிநாட்செய்துநாட்டுவார். (கஅ)

எண்களோடியலெண்டிசையெங்கணுங்
கண்களோடிக்கடைகள்சிவப்பவே
யுண்களோடியுழத்தியருண்டுதாம்
பண்களோடிசைபாடிநடுவரால். (ககூ)

உற்றபண்ணையுலாவுமுழத்தியர்
மற்றையாரொடுமதுவுண்மயக்கினை

லற்றம்யாவையுமங்கைகள்கொட்டியே
குற்றமீதென்றுகூறிநகைப்பரே. (உ0)

துள்ளுசேலினந்தூம்புடைக்கும்புனல்
வெள்ளமாமருதந்திகழ்வேலிசூழ்
மள்ளர்தந்தவளவயனூறெலாங்
கள்ளுண்காமக்கடைசியர்நாட்டினர். (உக)

வேறு.

மிடைபடுசெஞ்சாலிதிகழ்மிகுந்தபுனற்பண்ணைதொறும்
புடைபெயர்ந்துபுனனிறுவிப்புகழ்பெறுசெந்நெற்சாலி
தடைபடுந்தாட்டடங்கமலந்தன்னுலென்றுளந்தளர்ந்து
கடைஞர்நடைக்கண்காட்டக்கடைசியர்பூங்களைகளைவார்.

வேறு.

அங்கணுழத்தியரள்ளியகழ்ந்த
செங்கமலங்கள்செழுங்கதிர்கண்டு
பொங்குதணீரிடைப்போந்தனசோரத்
தங்கிளைகண்டனர்தம்முகமொக்கும். (உ௩)

மங்கையர்தம்முகமானுவவென்றே
செங்கமலங்கடெரிந்துதெரிந்தே
யங்கண்மிகுந்தலமந்தமர்வுற்றே
தங்கவரிற்சிலர்தாங்களையாரால். (உச)

விட்டிடுகாமன்வியன்கணையொன்றே
யுட்கொடுமேவுமுழத்தியர்சில்லோர்
மட்டவிழ்செங்கமலத்தொடுகாவி
கட்டனர்மிக்கடுங்களையெல்லாம். (உரு)

பந்தவிலங்குபரிந்தவர்தம்பால்
வந்துநன்ஞானம்வளர்ந்திடுமோபோற்
கந்தமலர்க்களைகட்டவினோங்கிற்
றந்தவியன்பணையார்தருபைங்கூழ். (உசு)

செந்நெல்வளர்ந்துசெழுங்கதிர்சாய்தல்
பன்னுதமிழ்ப்புகல்பாலனைமுன்னு

ளின்னருளானதியேடெதிரேற
மன்னனெழுந்துவணங்குதல்போலாம். (உஎ)

வேறு.

வரம்பருறுமுழங்கோலிவாய்மருதநிலக்கிணைகறங்க
வரம்பொருதகதிரரிவாணிரைபூட்டியாங்குழவர்
பாம்பியரிந்தரிபரப்பிப்பணிலங்கடருமுத்தஞ்
சொரிந்திடவேயவைதிரட்டிச்சொன்னமலைபோற்குவித்தார்.

மேருகிரிசாய்த்திடல்போன்மிகுசெந்நெற்போர்சரித்துக்
காரிணங்குங்கருமேதிக்கணத்தினொன்குறப்பிணித்துப்
பாருறவேபலகாலுஞ்சூழ்ந்துபலாலந்தெரிந்து
மாருதநேருறத்தூற்றிமன்னியநென்மலைவளர்த்தார் (உகூ)

அழகியசீர்ப்புகழ்வேந்தற்காறிலொன்றுகொடுத்தைந்தில்
வழிபடுதெய்வம்பிதிரர்வருவிருந்துவான்கிளைகள்
விழைவுறவேயளித்ததற்பின்மிகுமொன்றால்வியன்குடிமை
பழகியசெல்வம்பெருகும்பாண்டிவளநன்னாடே. (ங0)

வேறு.

கொண்டல்சேர்பொழில்களெங்குங் குலாவுநற்பொழில்களெங்கும், பண்டைநான்மறைகளெங்கும்பகர்ந்திடுமறைகளெங்குந், தண்டமிழ்மணங்களெங்குந்தருகடிமணங்களெங்கு, மண்டாலயங்களெங்குமணிகொளாலயங்களெங்கும். ( )

மாதர்தம்பண்ணையெங்குமருதநீர்ப்பண்ணையெங்கு
மேதமில்செல்வமெங்குமிந்திரசெல்வமெங்கு
மோதுமஞ்சுகங்களெங்குமுளைக்குமஞ்சுகங்களெங்கு
மேதகுமூலகமெங்கும்விரும்புநல்லுலகமெங்கும். (ஙஉ)

வண்டமிழ்ச்சங்கமெங்கும்வார்புனற்சங்கமெங்குஞ்
சண்பகவனங்களெங்குந்தருமடவனங்களெங்கும்
விண்படர்வேழமெங்கும்வியன்கழைவேழமெங்கும்
பண்டருபாடலெங்கும்பதமிதிப்பாடலெங்கும். (ஙங)

வேதமந்திரங்களெங்குமிக்கதந்திரங்களெங்கும்
போதலர்வாவியெங்கும்புண்ணியதீர்த்தமெங்கு

மோதுபண்ணிசைகளெங்குமுழைக்கும்யாழ்ப்பாணரொங்கு
மாதர்தம்வண்ணமெங்கும்வண்டமிழ்வண்ணமெங்கும். (௩௪)

தேமலர்பயில்வசெங்தேன்செவ்வழிபயில்வசெங்தேன்
காமநூல்பயில்வர்மாதர்கமலமாமுகமொண்மாதர்
நாமநூல்பயில்வநாவேநாவலர்பயில்வநாவே
தாமமேபயில்வவன்னந்தாமரைபயில்வவன்னம் (௩௫)

முள்ளரைநாளஞ்சேர்ந்தமுண்டகக்கையானீவி
யெள்ளருங்கருவிபம்பயாழ்நரம்பிசைத்திபார்த்தே
யுள்ளமிக்குவகைகூர்ந்தாங்குழைக்கும்யாழ்ப்பாணர்பாடற்
றெள்ளமுதனையதீஞ்சொற்செவியுறவாக்கின்றாரும். (௩௬)

குழலிசைபயிற்றுவாருங்குஞ்சரம்பொருத்துவாரு
மழவர்சொன்மாந்துவாருமனையறம்புரிகிற்பாரும்
விழவணிவிரும்புவாரும்விருந்தெதிர்கொள்கிற்பாரு
முழவிசைவிரும்புவாருமுற்றுமெய்த்தவஞ்செய்வாரும். ( )

வாரணப்போர்சேர்ப்போருமைமறிப்போர்காண்போருந்
தேரணியூர்குவோருஞ்சிலைத்தொழில்பயிலுவோரு
மாரணந்தேர்குவோருமஞ்செழுத்தறைகுவோருங்
காரணங்கருதுவோருங்காரியந்தேர்குவோரும். (௩அ)

வேறு.

கன்னலஞ்சிலைகையேந்துங்காமனூறன்னைத்தாமே
பின்னிசைபாடுவோருமிருசெவிமாந்துவோரும்
பொன்னகர்தன்னின்மன்னும்புலவரிற்பொலிந்துசூழத்
தன்னிகராகியோங்குந்தண்டமிழ்ப்பாண்டிநாடே. (௩௯)

வேறு.

நீதின்மாதவர்சேர்ப்பனசாலையே சிறப்பின்மல்குந்தின
மன்னசாலையே, காதல்கூருங்கடிபொழின்மாலையேகருதுந்
றொடுகண்டிகைமாலையே, யாதர்காதன்மிகுமந்திமாலையேவ
ண்டுகிண்டியுறங்குவமாலையே, யாதரம்பெறுமாலெங்குமா
லையேயார்வமோங்குங்கழைக்கரும்பாலையே. (௪௦

சேய்கணின்றெளவைக்கீவதுமுத்தமேசிற்றில்கோலிச்
சிதைப்பதுமுத்தமே, பாய்புனற்றிரைசேர்வதுபண்ணையே

பாடலெங்கும்பயில்வதுபண்ணையே, வாய்திறந்துவழங்குவ வள்ளையேமானனூர்கடய்வார்காதும்வள்ளையே, யோய்மருங் கிலுடுப்பதுசேலையேயுற்றகண்களொப்பாவதுசேலையே (சுக)

கோலமாந்தரணிவதுமாரமேகுங்குமக்கொங்கைசேர்ப் பதுமாரமே, சாலவெங்குந்தவம்பயில்வாரமேதரங்கநீர்த்த ளம்புரள்வாரமே, மாலுலாவிவளருமந்தாரமேமன்னுதீஞ் சொல்வழங்குமந்தாரமே, சிலமாதவர்சிந்தையுமாரமேசேர்ந் தபண்ணைமருதமுமாரமே. (சுஉ)

புண்டரீகம் பொருந்துநற் சங்கமே பொங்கி யெங்கும் பொருந்துநற்சங்கமே, பண்டமாறுவபாவையராரமேபயி லுங்காமவிழாவாரவாரமே, வண்டுபாடுமலர்க்கருங்கோதை யேமைந்தர்செங்கைமருவுவகோதையே, யெண்டிசாமுகமு ஞ்சிவதானமேயிசைந்திடுந்தருமத்தொடுதானமே. (சுஙு)

வேறு.

சோலையின்மறைசொல்லுவவஞ்சுகங்
கோலவேள்விருதூதுவகோகில
நீலமாடநெருங்குவமேகங்கண்
மாலைசேர்வனவண்டின்குழாமரோ. (சுசு)

நீடியெங்குகிலாமுற்றமோங்குமே
மாடமூடுங்கலாபமயில்களே
பாடல்சேர்ந்திடும்பண்ணுடனேசையே
யாடுநீர்த்துறையன்னக்குழாங்களே. (சுரு)

அள்ளல்வேலையகலிடமெங்கணுந்
தெள்ளுசெந்தமிழ்ச்செல்வந்நிளக்கவே
கொள்பொருள்வெஃகிக்கொள்பவரின்மையால்
வள்ளியோர்கணமண்டலத்தில்லையே. (சசா)

செம்மைநல்குறுசெந்தமிழ்சேரலால்
வெம்மைசேர்ந்தவெளிற்றுரையில்லையாம்
பொய்ம்மையென்றும்புகன்றறியாமையான்
மெய்ம்மையென்றும்விளம்புவதில்லையே. (சஎ)

கோதின்மாமணிகுப்பைகொழிப்பன
வோதுதேன்மதுவுண்டுகளிப்பன
பாதமேபயிலும்பரதத்துடன்
மாதரோடுநடிக்குமயிற்குழாம். (௪அ)

தென்குலவியதேமொழியார்கடம்
பொன்குலாவியபூண்முலைதாங்கலாற்
றுன்பமேவுந்துடியிடையன்றிமற்
றின்பமேயலதேதமங்கில்லையே. (௪௯)

மேவுகின்றவிலங்குவிலங்குகள்
காவலென்பகடிமதிற்காவலே
யோவில்வன்சிறையுற்றபுனற்சிறை
தேவர்கோன்புகழ்தென்னவனுடெலாம். (௫௦)

வங்கவாரிதிசூழ்கின்றவையக
மெங்கணும்பகையின்றியிருத்தலாற்
றுங்கமேவுவெஞ்சூருந்தோன்றினர்
பங்கமேய்பண்ணைப்பாண்டிநன்னாடெலாம். (௫௧)

வேறு.

கண்டவளவான்மிகுகலைப்பொருளினாலும்
வண்டவளநாயகிவழுத்தரியதென்றூற்
கொண்டவளவில்புகழ்குலச்செழியராளு
மண்டவளநாட்டணியையாரறையவல்லார். (௫௨)

திருநாட்டுச்சருக்க முற்றியது.

ஆகச் செய்யுள், ௧௬௨.

திருநகரச்சருக்கம்.

ஆவணத்தணிதிகழலங்கனுற்றுபூங்
காவணங்கற்பகக்காவினீழல்செய்
தீவணமிலங்குசெஞ்சடிலசேகரன்
பூவணத்தணிசிலபுகலுவாமரோ. (௧)

வேறு.

நீடுதிரைக்கடலாடைநிலவேந்தர் நேரிழையார்நெருங்க வெங்குஞ், சூடகக்கைச்சுரர்மடவார்துணைவரொடும்விமா னத்திற்றுவன்றுமூதூ, ரேடலர்தாரிட்டருச்சித்திந்திரன்வந் தனைபுரியுமெழில்கொண்மூதூர், மாடமலிமறுகுதிகழ்வள மைசாறமிழ்ச்சங்கம்வளருமூதூர். (உ.)

தேவர்களுந்திசைமுகனுந்திருமாலுந்திசையோருஞ்செ ங்கைகூப்ப,மேவுதிருநடராசர்மீனவன்றன்விழிகளிப்பவெள் ளிமன்றுட், டாவின்மலர்ப்பதமாறித்தாண்டவஞ்செய்தருள் கின்றதருமமூதூர், மூவுலகும்புகழ்மதுரைமிகவிளங்குகில மகடன்முகமேபோல. (ந.)

அன்னதிருப்பதிக்கங்கிதிக்கினில்யோசனைக்கப்பாலமர் ந்துதோன்றுஞ், சின்மயமாஞ்சிவலிங்கஞ்செங்கதிர்வெய்யோ ன்பூசைசெய்யவைகு, மன்னுநவமணித்தேரூர்மறுகுதொறு மாளிகைசூளிகைநெருங்கும், பொன்மதில்சூழாலயஞ்சேர் பூவணத்தின்வளம்யாவர்புகலற்பாலார். (ச)

வேறு.

அரியயன்முநிவரயின்முகக் குலிசத்தமரர்கோனளகை யம்பதியான், பரவருமிருள்கால்சீத்திடத்தோன்றும்பல்கதிர் ப்பரிதிவானவன்சேர், தருணநல்லமுதகிரணசந்திரனற்றுன வரானவரோனோர், திருமகடினமுமருவிடத்திகழுந்தென்றிரு ப்பூவணநகரம். (ரு)

மேவியசடிலம்வெண்ணிலாவெறிப்பவிடையுகந்தேறிடு ம்விமல, ஞவலர்புகழ்நான்மாடநீள்கூடனயகனந்தியெம்பெ ருமான், பூவுலகேத்தும்பொன்னனையாடன்பொருவருமனை வருகமலச், சேவடிமணமெண்டிசாமுகம்விசுந்தென்றிருப்பூ வணநகரம். (சு)

பகலவன்பூசைபடைத்திடுபலனோ பண்ணவர்பண்ணுந ற்றவமோ, இகம்பரம்வீடுமும்மையுமுயிர்கட்கினிதருளெம் பிரானருளோ, மிகும்புகழ்சாலுமிவற்றுள்யாதென்றுவிரித்தி டற்கரியதாய்விளங்குஞ், சிகரகோபுரங்கடிகழ்ந்துசேணோங் குந்தென்றிருப்பூவணநகரம். (எ)

வேறு.

தொல்லைமாபுகழ்துன்றுஞ்சுராதியர்க்
கெல்லையில்லநவின்பமளித்திடு
மல்லலோங்கிவளர்ந்திடுமந்திரஞ்
செல்வமல்கியதென்றிருப்பூவணம். (அ)

குன்றமன்னநற்கொங்கைசுமந்துநேர்
மின்றயங்கிடைமின்னனையாளுடன்
கன்றுமான்கரமேந்தியகண்ணுத
றென்றமிழ்பயிலுந்திருப்பூவணம். (கூ)

அங்கண்வானத்தகடுகிழிபட
மங்குறோய்மணிமாடத்துங்கூடத்தும்
பொங்கரோங்கும்பொழில்களிடத்தும்வெண்
டிங்கண்மேவுறுந்தென்றிருப்பூவணம். (க0)

பொற்பதந்தனைப்பூசுரர்க்கீதலாற்
சொற்பதங்கடந்தோங்கியசூழ்ச்சியாற்
கற்பகத்தைவளர்த்திடுகாட்சியாற்
சிற்பரன்னிகருந்திருப்பூவணம். (கக)

எந்தையின்னருண்மேனிகொண்டெய்தலாற்
புந்திகொண்டதளித்திடும்பொற்பினாற்
கந்தமேவுங்கடாம்பொழியுங்கவுட்
சிந்துரந்நிகருந்திருப்பூவணம். (கஉ)

ஏய்ந்தவங்கணனங்கணியைதலால்
வாய்ந்தபொய்கையிடத்தில்வளர்தலாற்
போந்தவாறுமுகந்தருபொற்பினாற்
சேந்தன்போன்றதுதென்றிருப்பூவணம். (கங)

பொங்குமாமலர்ப்பூங்கொடிமேவலாற்
சங்கமோங்கத்தடக்கைதரித்தலா
லெங்கணுதனிடத்திலிருத்தலாற்
செங்கண்மானிகருந்திருப்பூவணம். (கச)

இசையநான்மறையின்னிசைபாடலாற்
கசடறுங்கலைமங்கைகலத்தலா

னசையுடனன்னதானகணுகலாற்
றிசைமுகன்னிகருந்திருப்பூவணம். (கரு)

புந்திகொள்ளும்பொற்பூவிற்பொருந்தலா
லந்தமற்றசெல்வங்களளித்தலால்
வந்தெஞ்ஞான்றுநன்மாலுடன்மேவலாற்
செந்திருந்நிகருந்திருப்பூவணம். (கசு)

நல்லெழில்வளர்நான்முகனண்ணலா
லெல்லையில்கலையாவுமியம்பலா
லல்லிசேர்தவளாம்புயபீடிகைச்
செல்விபோன்றதுதென்றிருப்பூவணம். (கஎ)

வேறு.

ஆரணநான்கு மங்கமோராறுமளவிடற்கரியபே ரொளி யாய், நாரணனவனுநாற்றிசைமுகனுங்கனவினுநண்ணுகற் கொண்ணுக், காரணமாயக்காரணவுருவாக்கண்ணுதலன்று கொண்டருளும், பூரணஞானச்சுடர்ப்பிழம்பெனவேபொன் மதின்மன்னியதன்றே. (கஅ)

எண்டருசரியையாதியோர் பயின்றங்கிருத்தலாலிறைப தம்போலும்,பண்டருவேதம்பாடிபேரிவாற்பன்னுநான்மறை யையும்போலுந், தெண்டிரைக்கடற்பாற்றிசைகளோடுதலா ற்றிசைமுகன்றன்னேயுஞ்சிவணுங், கொண்டிடுமெண்டகோள கைக்கப்பாற்குலவுபொற்கோபுரவாயில். (ககூ)

பல்லுயிரெல்லாம் பரிவுறவோங்கப் படைத்தலாற்பங்க யனெக்குஞ், செல்வமோங்கிடவேதினந்தொறும்வளர்க்குந் திறத்தினுற்செங்கண்மாலொக்குந், தொல்பவமனைத்துந்து டைத்தலான் மறைக்குஞ்சூழ்ச்சியா லருள்புரிதொடர்பாற், சொல்லரும்புகழ்சேருருத்திரன்மகேசன் றெழிலறுசதாசிவ னெக்கும். (உ0)

வேலொடுசேறிந்தமிகுபொறிமயிற்கண்விரவலால்வேல னையொக்குங், கோலமேவியநற்சூலமேல்கொண்டுகுலாவலா ற்கொற்றவையொக்குஞ், சாலவும்படைகடாங்கலான்மிக்கச மர்பொருநிருதரையொக்கு,மேலுநன்னிதியமீட்டலான்மன் னுமிருநிதிக்கிழவனையொக்கும். (உக)

விரவுவானிமிர்ந்துமிக்கபொன் முடிகண்மேவலான்மே
ருவையொக்கும், பரவமேற்கண்கள்படைத்தலாலணிசேர்
பாகசாதனன்றனையொக்கும், பொருவிகந்தோங்கிப்பூந்தனம்
பொருந்துபொற்பினாற்பூமகளொக்குங், கருதியேகாண்டற்
கருமையான்ஞானக்கண்ணுதலண்ணலையொக்கும். (உஉ)

நாடுறயார்க்குநனிசிறந்தோங்கு நற்பெறியுடுத்தபொற்
புரிசை, மாடுறுசீரார்வாரிசேர்கின்றவண்மையையுமதெனவ
குப்பா, நீடுபல்லுலகைகிரப்பியுன்னதமாய்நேமிமால்வரைய
தன்பாங்கர்ப், பீடுறமன்னும்பெரும்புறக் கடல்போற்பிறங்கு
பேரகழிசூழ்ந்திலகும். (உங)

தண்டரளங்கள்வெண்டிரை கொழிக்குந்தடங்கரைமரு
ங்கினிலுடுத்த, மண்டியசெல்வப்பெரும்புனற்சீரார்வாரியின்
வானவருலகங், கண்டவருள்ளங்களிமிகத்தூங்கக்காண்டகு
மாட்சியின்மிகுமா, லண்டர்காடதனினண்டர்காடடைந்ததெ
ன்பதுமற்புதமாமோ. (உச)

பள்ளமார்பயத்தாற் பயந்தரும்பரிகப் பாங்குறுமித்தி
கைப்பளிக்கு, வெள்ளிவான்றகட்டின்விளங்கும்வெண்டா
ளம் விரிசுடர்வெண்ணிலாவெறிப்பத், தள்ளருபெருஞ்சீர்
த்தபநியப்புரிசைதன்னிறந்தான்றணந்ததனல், வள்ளல்சேர்
கயிலைமால்வரையெனவேமன்னியதென்னலாமாதோ. (உரு)

கோலமாரகழிற்குளித்திடுகுன்றக்குஞ்சரந்தனைத்திமிங்
கலந்தான், சாலும்வெம்பசிதான்றணித்திடவிழுங்கித் தன்ன
கட்டடக்கிடுந்தன்மை, வேலைகளேழும்விரவியொன்றாகிமே
விடுமந்நாண்முகுந்தன், சேலுருவாகிச்செறிந்தபல்லண்டஞ்
சிறுசெலுவடக்கியபோலும். (உசா)

தக்கசீர்க்கப்பறரங்கமாங்கரத்தாற்றண்டாளஞ்சொரிக்
தளப்பத், தொக்கபொற்புரிசைசூழ்ந்திடுஞாயில் சுற்றியபித்
திகைதன்க்குப், பக்கமோடிடுநற்பாசொலாமடங்கப்பதித்திடும்
பளிங்கின்மேற்பதித்த, மிக்கநல்வயிரவெண்ணிலாக்கற்றை
வெண்படாம்போர்த்ததுபோலும். (உஎ)

அன்னபேரகழிதன்னழகொழுகு மங்கண்வானத்துயர்ந் தோங்க, மன்னியதேரூர்மணிமறுகின்பால்வயிரவான்றாணி ரைநிறுவித, தன்னுசெம்பவளப்போதிகை தாங்குஞ்சுடர் மரகதத்துலாஞ்சேர்த்திப், பொன்மதிலமைத்துப்புலமணி யழுத்திப்பொற்புறச்சித்திரம்பொறித்து. (உஅ)

தருமொளிபரப்புஞ்சந்திரகாந்தந்தரையெலாஞ்சீர்பெறச் சமைத்துப், புகழ்பெறமிகுசெம்பொன்னினல்வேய்ந்துபொ ற்சிகரம்பலவமைத்துத், திகழ்பெறுகமலபீடிகைமருவுதிரு மணிவாயில்கடோறு, மகிழ்தருமாடகூடமண்டபங்கண்மாளி கைகுளிகைநெருங்கும். (உகூ)

அன்னமென்னடையா ராடுமோடரங்குமணிமணிக்கோ புரநிரையு,மன்னவர்திறைகளளக்குமண்டபமும்வண்டமிழ்க் கழகமண்டபமு, முன்னையாரணங்கண்முழங்குமண்டபமு மும்முரசதிருமண்டபமுந், தன்னிகர்தருநற்றூனமண்டப முஞ்சார்ந்தபல்வீதியுநெருங்கும், (௩௦)

மந்திரமொடுதெற்றந்திரம்பயிலும் வைதிகசைவநன்மட முஞ், சந்ததம்பயிலுஞ்சதுர்மறைமுனிவோர் சதுக்கமும் வணிகர்சந்திகளுஞ், சிந்தையின்மகிழ்ச்சி யோங்குபல்பண் டஞ்சேர்ந்திடுங்கோலமார்தெருவு, மந்தமில்குடிகளமர்ந்து வாழ்கின்றவாவணமெங்கணுநெருங்கும். (௩க)

வேறு.

ஆனவைதிகசைவமுமண்ணறன்
பான்மைசேர்ந்தபஞ்சாக்கரமும்பயின்
ஞானமாதவர்நற்காத்தேந்திய
தானமுந்தவமுந்தழைத்தோங்குமால். (௩உ)

நல்லதும்புருநாரதரின்னிசை
வல்லவீணையினேசையுமைம்புலன்
வெல்லுமாதவர்வேதத்தினேசையுஞ்
சொல்லுமாதர்தந்துந்துபியோசையும். (௩௩)

வம்பருநன்மணிமுழவோசையும்
பம்பியேபெழும்பல்லியவோசையுஞ்

செம்பொன்மாமணித்தேரினதோசையுங்
கம்பமேவுகடாக்களிற்ருேசையும். (௩௪)

விந்துநாதம்விளங்கியவோசையுஞ்
சந்தநான்மறைதாமுழங்கோசையு
மிந்திராதியரோத்திடுமோசையு
மந்தவார்கலியோசையடக்குமால். (௩௫)

ஓங்குபூங்கமுகும்முயர்வாழையுந்
தூங்குபைங்குலைத்தெங்குந்துருக்கமுங்
கோங்குமாரமூங்குக்குலுவும்மனந்
தாங்குசெஞ்சந்தனமுஞ்சாரணமும். (௩௬)

புன்னைசம்பகம்பூதவம்பூங்கமை
மன்னுசூதமந்தாரம்வருக்கைமேற்
பன்னுகின்றபராரைமரங்களுந்
துன்னு தண்டலைசூழ்ந்திடுமெங்கணும். (௩௭)

பற்பகற்ருேறும்பாங்கினிலோங்கிய
நற்பொழிநிகழ்நண்ணியபூவணன்
பொற்பதத்திற்புரந்தரன்போற்றிடுங்
கற்பகச்செழுங்காவுமணக்குமால். (௩௮)

கோடரங்கள்குயில்விளையாடலே
நீடரங்கினிலாவிளையாடுவ
மாடமேல்விளையாடுவமஞ்ஞைக
ளாடுநீர்விளையாடுவவன்னங்கள், ௩௯)

வாவிநீர்விளையாடுவர்மாதர்கள்
காவிமேல்விளையாடுங்கயற்கண்கள்
பாவின்மேல்விளையாடிடும்பண்ணெலாம்
பூவின்மேல்விளையாடுவள்பூமகள் (௪0)

வேறு.

துறுமலர்பொதுளுஞ்சீர்ச்சோலைகண்மேலெங்கு
நிறைபுனலுறுசங்கீனிலவொளிதங்கு
மறுவறுபுகழ்மன்னும்வாவிகடொறுமேவு
மறுபதமிசைபாடுமாயிதழரவிந்தம், (௪௧)

பங்கமதறநாளும்பாயுறைவாய்நீத்நங்
தங்கியபுதுவாசச்சததளமதுமாந்திப்
பொங்களிபண்பாடும்புண்டரிகக்கோயின்
மங்கையைநிகர்மாதர்மங்கலமிடமெங்கும். (௪௨)

பிறைநுதலதுவொக்கும்பிடிநடையதுவொக்குஞ்
சிறுகிடைதுடியொக்குந்திரண்முலைமலையொக்கும்
வெறிமுலைமுகையொக்குமென்னகையதுநீண்ட
கறைகெழுவேலொக்குங்கண்ணிணையதுமாதோ. (௪௩)

முயலுறமுதயஞ்சேர்முழுமதிமுகமொக்குங்
குயில்குழலதுவொக்குங்கோகிலமொழியொக்கு
மயிலியலதுவொக்கும்வாய்பவளமதொக்கும்
பயிலரவதுவொக்கும்பரவருமகலல்குல். (௪௪)

தங்கியதிருமால்கைச்சங்கதுகளமொக்கும்
பைங்கழையதுவொக்கும்பரவுறுபசுந்தோள்க
ளங்கைகள்செங்காந்தளம்மலரதுவொக்குஞ்
செங்கமலமதொக்குஞ்சேவடியதுதானே. (௪௫)

வேறு.

செல்வந்தான்விளையாடுமனைகளேசெய்கடாம்விளையாட
ம்மனைகளே, மல்குமம்மனைவாயினற்கோலமேமாதர்வாயின்
மணக்குந்தக்கோலமே;பல்பெருங்கதைபன்னுந்தமிழ்களேப
யிலிடங்களும்பன்னுந்தமிழ்களே, நல்லசெல்வங்கணுடொறு
நந்துமேநல்லதல்லதுநாடொறுநந்துமே. (௪௬)

தலமலிந்துவிளங்குந்தடங்களே தங்குவாசந்தரும்பூந்த
டங்களே, யலகில்வாசமுநிவர்மடங்களேயடைந்தவர்க்கரு
ளன்னமடங்களே, கொலைபுரிந்திடுங்கும்பகடங்களேகுலாவு
மெக்குநிலாவுகடங்களே, மூலைமுகந்தருமுத்தின்படங்களே
மொழியுமும்பன்மூமும்படங்களே. (௪௭)

வேறு.

அங்கண்மிகவோங்குபுகழ்நகரிதன்னுட்
டுங்கநெடுமாலைநிகர்சொல்லுமிளைஞோருஞ்
செங்கமலமங்கைநிகர்திங்கணுதலாரு
மங்கலவிதத்துடன்மணத்தொழின்முடிப்பார். (௪௮)

மோகமிகுமாடமணிமுன்றின்முகமெங்கும்
பூகமொடுபூங்கதலிபொற்பினடுகிற்பார்
நாகரிகமாலிகைகளுவணிசெய்வார்
மாகமுயர்மாமகரதோரணநிறுப்பார். (௪௯)

மேலுறவிதானமணிமேவுறவிரிப்பார்
கோலமணிமன்னுநிறைகும்பநடுவைப்பார்
மாலிலகுமட்டமனமங்கலநிரைப்பார்
பாலிகைகளெண்டிசைமுகத்திடைபதிப்பார். (௫௦)

கண்டவர்மனங்களிகொள்காமனனையாருங்
கெண்டைதனையுண்டுவளர்கேழ்கிளர்கண்ணாருங்
கொண்டசதியோடுமகிழ்கூர்ந்துகுலவிச்சேர்
பண்டருவிபஞ்சியிசைபாடிநடமேய்வார். (௫௧)

குழைபடருகன்னியர்கள்கோலமதனன்னார்
மிழையகடுகிழியவெழுமாமணிபதித்த
வெழுநிலைநன்மாடமிசையின்புறவிருந்தே
கெழுமிமிகுகின்னரநலொழுகுமிசைகேட்பார். (௫௨)

பண்களினொடின்னிசைபயிற்றியிடுகிற்பார்
மண்கமணிரியச்சகடைவையமதுகைப்பார்
விண்கணுறுகோபுரநல்வீதிகள்விளங்கக்
கண்களிகள்கூரவிடுகாவணநிரைப்பார். (௫௩)

திங்கணுதலிற்றிலகமும்புனைதல்செய்வார்
பொங்குதலிணங்கவணிபொற்பினணிகிற்பார்
தங்குகலவைத்தொகுதிதன்னொடுகுழைத்துக்
குங்குமசுகந்தமுலைகொண்டணிதல்செய்வார். (௫௪)

மற்றுநிகரற்றிலகுமாடமிசைமுன்றிற்
சிற்றில்களிழைத்துவிளையாடியிடுசேய்க
ளற்றதிருமாமணியனைத்தினையும்வாரிக்
குற்றமெனமுச்சிகொடுகுப்பைகள்கொழிப்பார். (௫௫)

கோதைகொடுகோலமிகுகோதையணிசெய்வார்
காதைகளளந்துசெவிகாதலினிறைப்பார்

போதுநியமஞ்செய்துபோதுகள்கழிப்பார்
மாதர்களுமைந்தர்களுமாதருடன்வாழ்வார். (௫௬)

விழைவுறநன்மாடமதின்மிக்கிலகுதீபம்
பழகியசெல்வத்தினுயர்பரிசனநிரைப்பா
ரிழையினழகொழுகுபுகழிட்டிடைமினார்தங்
குழலின்மிகவகிலிடுகொழும்புகைநிறைப்பார். (௫௭)

மைக்கிரியெனப்பிளிறுமால்களிறிணைப்பார்
தக்கதகரைப்பொருசமர்த்தொழில்விளைப்பார்
மிக்கமணிதுண்டலம்விளங்குகதிர்வீசக்
குக்குடமிசைத்துமிகுகுரவைமிடுகிற்பார். (௫௮)

விஞ்சியவிண்முகடுதொடுமேருமுலைகண்டே
யஞ்சுமிடைசேர்ந்தமடவன்னநடைமின்னார்
மஞ்சரியின்வண்டுமதுவுண்டினிசைபாடக்
கொஞ்சுகிளிமழலையொடுகுயிலின்மொழிபயில்வார். (௫௯)

மருவுமணிமன்றுதொறுமன்னவர்கள்சேர்வர்
தரியலர்கள்வாயிலிடைதகுதிறையளப்ப
ரரிவையராங்குதொறுமாடல்பயில்கிற்பார்
திருமறுகுதொறுமினியசிலதியர்கடிரிவார். (௬௦)

மங்குலைநிகர்க்குமிவர்வார்குழல்களென்பார்
வெங்கடுவிடத்தைநிகர்மேவும்விழியென்பார்
செங்கிடையையொக்குமிவர்செய்யவிதழென்பார்
பங்கயமதொக்குமிவர்பாதமலரென்பார். (௬௧)

வெய்யமணிமேவுமுலைமேருமலையென்பார்
கைகளிவையல்லதிகழ்காந்தண்மலரென்பார்
யையுமிடையன்றிஃதுநற்றுடியதென்பார்
பொய்யில்புறவடிபுதியபுத்தகமிதென்பார் (௬௨)

இன்னபரிசெங்கணுமியைந்தமுறையாலே
பொன்னகருநாணமிகுபொற்புடனிலங்குந்
துன்னுபொழில்வைகைநதிசூழ்தரவிளங்கு
மந்நகரிதன்னணியியாரறையவல்லார். (௬௩)

சுந்தரமிகுந்திடுசுராதியர்விரும்பு
மந்தமில்சிறப்பினளகாபுரியிதென்னச்
சந்தகமுமிம்முறைதயங்குகவின்மூது
ரிந்திரசெல்வத்துடனியைந்திடுமெஞான்றும், (௬௪)

வேறு.

பங்கமற்றமறைவழுத்துபானுகம்பனுயிரஞ்
சங்கவாயிருலுமித்தலத்துமேன்மைதானுரைத்
தங்கையாயிரத்திரட்டிகொண்டுதீட்டவமைகிலா
திங்கொர்நாவில்யான்விரித்தெடுத்தியம்பலாகுமோ.

திருநகரச்சருக்க முற்றியது.

ஆகச்செய்யுள். (௨௨௭.)

பாயிரம்.

செங்கதிர்வெய்யோன்பூசைசெய்தவாறுந் திகழ்திரு
சனன்விடுசேர்ந்தவாறும், பொங்குமணிகன்னிகைநீர்பொ
ருந்துமாறும்புகலருந்தன்மனன்கதியிற்புக்கவாறுந், தங்கு
தருமஞ்ஞன்முத்திசார்ந்தவாறுந் தன்னிகருற்பலாங்கிபதிசா
ர்ந்தவாறும், பங்கமில்பாற்கரபுரப்பேர்படைத்தவாறும்பன்னு
மெலாப்பவங்களேயும்பாற்றுமாறும். (௧)

செங்கமலன்சாபமுற்றுக்கணந்தவாறுந்திருமகடன்சாப
ந்தான்றீர்ந்தவாறு, மங்கையவதாரஞ்செய்தமர்ந்தவாறும்வா
ர்சடையோனவளேமணம்புணர்ந்தவாறுந், தங்கியதக்கன்வே
ள்விதகர்த்தவாறுஞ் சங்கரிபூவணத்தில்வந்தவாறுந்தீர்த்தங்,
கொங்கணிசுச்சோதிதாணுடுமாறுங் கோதில்பிதிர்களேமுத்தி
சேர்த்தவாறும். (௨)

அருளுடனேதீர்த்தங்களாடுமாறுமருங்கலியின்வலியை
களனகற்றுமாறுந், திருவிழாவணிபெறச்செய்வித்தவாறுஞ்
சிதம்பரநல்லுபதேசஞ்செய்தவாறுந், தருமூலகிற்சகாத்த
மாயிரத்தைஞ்ஞூறு தங்குநாற்பான்மூன்றுதந்தவாண்டிற்,
பொருவருநற்புலவோர்சொற்புலமைகாட்டப் புட்பவனபுரா
ணமெனப்புகலலுற்றேன். (௩)

பாயிரமுற்றியது.

ஆகச்செய்யுள். (௨௩௦.)

முதலாவது
சூரியன் பூசனைச்சருக்கம்.

ஓசைகொளித்தலத்துலகியாவையும்
வீசியகனேயிருள்விழுங்குகின்றவான்
றேசுடைத்தினகரன்சிவலிங்கந்தனைப்
பூசனைபுரிந்ததுபுகலுவாமரோ, (௧)

பன்னருமாதவம்படிவமாகியே
மன்னியசவுநகமகிழ்ந்துகேண்மியா
வென்னலுமன்னவனியம்பருந்தவர்
துன்னுநற்சூதனைத்துதித்தன்மேயினன், (௨)

உன்றனக்கிணையிலையுலகமூன்றினு
முன்றனக்கிணையிலையுனாக்குங்காலையி
லுன்றனக்கிணையுனையுரைக்குமாதலா
லுன்றனக்கொன்றுளதுரைசெய்வாமரோ. (௩)

அங்கண்வானகத்திருளகற்றுமாரழற்
பொங்குவெங்கதிரவன்பூசையாற்றவே
சங்கரன்விரும்பியேதானிலிங்கமா
வங்கவணடைந்தவாறருளுநீர்மையால். (௪)

ஒன்றியகலையெலாமோதியேயுணர்
வென்றிமேவியபுகழ்வியாதன்றன்னரு
டென்றியவருந்தவச்சூதமாதவ
வின்றெமக்குரையெனவியம்பினனரோ, (௫)

வேறு.

கங்கைதங்கியசெஞ்சடிலசேகரன்முன்கண்ணகன்கதம்பமாவ[illegible]னத்திற், கங்கிதிக்கதனிலமைந்திடுகின்றவனாதலையிட்டக[illegible]வநத்தின், மங்குறோய்புட்பவனமதிலென்றுமன்னுமெம்பிரா[illegible]ன்மகிழ்ந்தருளுந், துங்கமாதவநற்சவுநகவென்றுசூதமாமுனி[illegible]வரன்சொல்வான், (௬)

அந்தநல்வனத்தினுதிகாலத்தி லரியயன்முதற்கடவுளர்கள், வந்துபோற்றிசைக்குமாண்பினதாகிமலைமகள்வளர்க்கும்வான்றருவாய்ப், புந்திகொள்பாரிசாதமென்றொருபேர் புனைந்துநீங்காதுபொங்கொளியா, யிந்திராதியர்சேணெண்டிசாமுகத்துமெங்கணும்பரந்துமிக்கிலகும். (எ)

கெழுதருநன்னீர்க்கிருதமாலையெனுங் கேழ்கிளர்வைகையங்கரைமேன், மொழியுமத்தருவின் மூலத்தினோங்கி முளைத்தெழுசிவலிங்கவடிவாய், வழிபடுமடியார்மனங்கொளவிளைந்தவரந்தனைநினைந்தருள்புரிந்து, விழைவினெஞ்ஞான்றும்வீற்றினிதிருப்பன் விண்ணவன்கண்ணுதற்பெருமான்,

செங்கண்மால்விடையூர்சிவபிரான்றனக்குத்தெக்கிணதிக்கதிற்றிகழ்ந்து,மங்கலவிளைவான்மறைமுறைவழாதுமன்னியவத்தலந்தன்னி, லங்கண்மாஞாலமெங்கணும்புகழுமழகியமின்னனையாகி, யெங்கணாயகிதானிருந்தவம்புரிந்தே யிமையந்திடுமியல்பினெஞ்ஞான்றும். (௯)

அன்னதொல்சிறப்பி னருந்தவமிழைக்குமந்தநற்பொற்கொடியான, கன்னிதன்முன்னேகருங்கடற்றூன்றுங்கதிர்க்குலம்பரப்புமாதவன்றூன், பன்னுமான்மாக்கள்பாவத்தையொறுப்பான்பண்புறத்திருமணிகன்னி, யென்னுநற்றீர்த்தமேமூலகேத்தவெழில்பெறத்தொட்டதொன்றுண்டால்,

இந்நறறீர்த்தந்தன்னையோரொருகாலிசைப்பவருறுபவமொழிவர், வந்ததிற்படிந்தமாத்திரையதனின்வருபிறப்பனைத்தையுமாற்றிச், சந்ததம்பொருந்துசச்சிதாநந்தத்தடங்கடற்றடத்தினிற்படிந்தே, யந்தமாதியிலாவருளுடன்கலந்தேயார்வமாமுத்தியைச்சேர்வார், (௧௧)

சித்திரவலங்காரத்துடனுயர்வான்சேருமக்கற்பகமூலத், துத்தமதவங்கட்குறுதவப்பலங்க ளுதவுமெம்பிரானுவந்திருந்தே, யத்தருமலரா லருச்சனைபுரியுமன்பருக்காயிடையருளால், வித்தகமிகுநல்வேண்டுருக்கொண்டுவேண்டினூர்வேண்டியதளிப்பான், (௧௨)

அன்னதொல்புட்பவனத்ததுநாப்ப ணதிமனோகரமிகவு டைத்தா, யுன்னதமொருநான்கனையதாய்ச்சுற்றும்பாதயோசனையதையுடைத்தாய்ப், பன்னுமூவுலகும்பாரிசாதமெனப் பகர்வதாய்ப்பணைபலவுடைத்தாய், மன்னியபறவைவிலங்கு கடம்முள்வருபகையொழிந்திடவைகும். (கங)

அத்தருகிழக்கீழமரிலிங்கத்தினருளினாலாயிரங்கதிரோ, னித்தமாய்த்தனதுபதம்பெறுகிற்பா னினைந்ததுநெஞ்சகங் கொண்டே, சித்திரைத்திங்கட்சித்திரைத்தினத்திற்றேசுறப்பூசனைபுரிவான்,சுத்தநீராடித்தூயநீறணிந்துதுலங்குகண்டிகை மணிபூண்டு. (கச)

பொங்குலகேத்தும் பூர்வலிங்கத்திற்பொருந்தவாஹுகங் கொடுதிரட்டி, யங்கையினொன்றினமைத்ததினிகழ்த்துமாறு போலங்கணன்றன்னைக், கங்கைதங்கியசெஞ்சடிலசேகரமுங் கதிர்த்திரணிலவுகான்றொளிருந், திங்களங்கொழுந்துஞ்செங் கண்வாளரவுந்திருமுகமண்டலமைந்தும். (கரு)

கண்கண்மூவைந்தும் கரங்களீரைந்தும் கவின்றிகழ்ப டைக்கலங்களுநஞ், சுண்டிருள்பரந்தகண்டமும்பகுவாயுற்ற நற்பன்னகாபரணங், கொண்டதிண்டோளுங்கோலமார்பகமு ங்குலவுசங்கக்குழைக்காதும், புண்டரிகத்தினுரிபுனையரையு ம்பொருந்தியபொற்பதாம்புயமும். (கசு)

சுத்தமாமிதயகமலத்தினின்றுஞ்சுழுமுனைமார்க்கத்தினாலே சித்தநேர்நிறுவித்துவாதசாந்தத்திற்சேர்ந்துறுசிறந்தமந்திரத்தாலத்தருபிராணவாயுவால்வாங்கியலர்தருகரத்தினிலமைத்துச் சத்தியோடரியசதாசிவமூர்த்திதன்னையேநன்குறநிசித்து, ()

வண்ணமேவியநன்மதுமலர்தன்னைவண்கரங்கொண்டுபின் கூப்பி, யுண்ணிகழ்சமனையுன்மனைக்கப்பாலோங்கியேநிட் களமாகித், தண்ணிலாவெறிக்குஞ்சந்திரநேகர்தந்தநூறாயிர வொளிதே, றெண்ணருஞானவுருவமாஞ்சிவனையிலிங்கமத்தி யத்தினிலிருத்தி. (கஅ)

தாபனஞ்செய்தபின்றகுசந்நிதானஞ்சந் நிரோதனந்தந்து, மாபரன்றனக்குச்சுவாகதார்க்கியமும்வழங்கியேகாளகன்னிகையுஞ், சோபனவிலிங்கமுத்திரையுடனேதுலங்குகைகூப்புமுத்திரையுந், தூபமுமிலங்குதீபமுங்கொடுத்துச்சுகந்தநன்மஞ்சனமாட்டி. (கசு)

திலந்தருதயிலந்தேனுவைந்துவந்து சிந்தைகொள்கின்றவைந்தமுத, நலந்தருமான்பானண்ணிடுந்ததிநெய்கன்மதுகன்னலின்சாறு,பலங்குளிர்தெங்குசந்தனக்குழம்புபத்தியினாட்டிநீராட்டித், துலங்கியவைகைத்துறையினீர்சுமந்தசுரிமுகச்சங்கநீராட்டி. (உ0)

மகிழ்தருதிருவொற்றுடையுஞ்சாத்திமருவுசெம்பட்டுடன்மன்னு, மகமகிழ்கலவையாரமேலணிந்தேயரவகங்கணங்கரத்தமைத்துப், பகர்நவமணிகள்படர்வெயிற்கிரணம்பரப்புமாபரணமுமணிந்து, திகழ்மணிமகுடஞ்செங்கதிரொளிப்பத்திருமுடியிலங்குறச்சேர்த்தி. (உக)

பரவிடுநைவேத்தியம்பலவளித்துப் பாத்தியாசமனமுங்கொடுத்துத், திருமிகுதூபதீபமுங்காட்டித்திருவெழுத்தஞ்சையுஞ்செபித்தாங், குரியநற்பூசைப்பலனரற்குநவியோரிருகாலமுஞ்செய்து, குருமலர்கொண்டுபணிந்தெதிர்முக்காற்கும்பிட்டுத்தட்டமுமிட்டு. (உஉ)

நிருத்தனுண்மகிழநிருத்தமுஞ்செய்து நீடுநற்கனவதிவின்னுந், திருத்தகுமயன்மாறேடியுங்காணாச்சிவலிங்கதரிசனங்காணூஉ, வருத்தியாற்கண்களருவிநீர்பொழியவானந்தபரவசனாகித், தரித்திடுஞ்சென்னிக்கரத்தினனாகிச்சதுர்மறைத்துதிபடித்தனனால். (உங)

வேறு.

சுகரன்புடையானேதுதிசொல்வார்புடையானே
யிகல்சார்படையானேகுறளேழுசூழ்படையானே
திகழ்நன்படையானேயுறுசெனனம்படையானே
புகழ்மன்றுடையானேபொருபுலித்தோலுடையானே. (உச)

அண்டங்கரியானேயரியயர்கட்கரியானே
விண்டங்கொளியானேசதுர்வேதத்தொளியானே
பண்டங்கிசையானேயுறுபவமொன்றிசையானே
கண்டங்கரியானேநுதற்கண்டங்கரியானே. (உரு)

மேவும்பொருவில்லாய்மகமேருப்பொருவில்லாய்
சேவின்றுவசத்தாயருடினமொன்றுவசத்தா
யோவில்லுயிர்க்குயிராய்திருவுருவம்பாமுயிராய்
தாவில்சிவபதத்தாய்திகழ்தருதாமரைப்பதத்தாய். (உசா)

கதிநல்குசங்கரனேயுலகவைநீக்குசங்கரனே
விதிநல்குகங்கையனேசடைமிசைதாங்குகங்கையனே
கதநல்குமங்கணனேயுமிழ்கடுநாககங்கணனே
திதனுனவங்கியனேதிகழ்திருமேனியங்கியனே. (உஎ)

மனமொன்றுமெம்மானேமழுமானேந்துமெம்மானே
புனல்சேர்சடையானேபுவிபுகழ்மாசடையானே
சினமால்விடையானேயடிசேராவிடையானே
கனலேந்தினகரனேயெனத்துதித்தான்றினகரனே. (உஅ)

வேறு-

அன்னதோர்காலேதன்னிலவ்விலிங்கத்துநாப்பண்
கன்னியாயுலகமீன்றகௌரிமெய்கலந்துதோன்றச்
சென்னியிற்றிகழ்ந்தகற்றைச்செஞ்சடாமகுடவேணி
மன்னியமதிக்கொழுந்தும்வாளராவிலங்குமார்பும். (உகூ)

அங்கண்மாஞாலங்காக்குமபயமும்வரதமுஞ்சேர்
பொங்கொளிதிசைவிளக்கும்போர்மழுப்படையுமானும்
வங்கவாரிதியினஞ்சமருவுகந்தரமுமேனி
தங்குவெண்ணீறுமிக்குத்தயங்குகண்டிகைநற்றுரும். (கூ0)

கோடிசூரியருங்கோடிகுளிர்மதித்திரளுமொன்றாய்
நீடியவொளியும்வேங்கைநிகழ்பொதியதளுந்தோன்ற
மாடுறுமயன்மால்விண்ணோர்மாதவர்முநிவர்போற்றத்
தேடரும்பொருளையந்தத்தினகரன்றெரியக்கண்டான். (கூக)

நித்தமாயருள்சுரக்குநிருமலன்றன்னைக்காணூஉ
வத்திரமின்றியானையதிபதியாகவேண்டுஞ்
சுத்தமாமெனதுமிக்கதொல்விருப்பதத்திற்கென்னுப்
பத்தியாற்சததளச்செம்பங்கயபதத்தில்வீழ்ந்தான். (௩௨)

பதந்தனில்வீழ்ந்திறைஞ்சும்பரிதிவானவனைநோக்கிக்
கதங்கொடுகாமற்காய்ந்தகண்ணுதல்யாருங்கேட்ப
விதங்கொளீரேழ்பொழிற்குமிக்கிறையாயிலங்கி
வதிந்துநீவாழ்நாள்காறும்வாழ்கெனவரங்கொடுத்து. (௩௩)

திக்கிலகொளிபரப்புந்தினகரகேளெமக்கிங்
கக்கினிகோணந்தன்னிலரும்பெருந்தீர்த்தமொன்று
மிக்கபூமுகையவிழ்ந்துவெறிகமழ்தரவிளங்குந்
தக்கநின்னுமந்தன்னுற்சதுரமதாகத்தந்து (௩௪)

மலர்தலையுலகம்போற்றமணிகன்னியென்னுநாம
நிலையுறநிறுவிநாளுநீடொளியிலங்கக்காண்டி
குலவிடுநின்னூற்பூசைகொண்டுநல்லருளால்யாமு
மிலகினமித்தலத்திலென்றமிவ்விலிங்கந்தன்னில், (௩௫)

விசியவிருள்கால்சீக்கும்வெஞ்சுடர்ப்பரிதிநின்றன்
பூசனைபுரிந்தமேலாம்புண்ணியபரிபாகத்தா
லாசைகூர்ந்தருளாலிந்தவணிகிளர்பாரிசாதத்
தேசுறுதிருநிழற்கீழ்ச்சேர்ந்துடன்றிகழாநின்றோம் (௩௬)

இச்சையாலுருவங்கொண்டேயிருக்குமிம்மிலிங்கத்திற்குப்
பச்சிமதிக்கினோங்கும்பாரிசாதத்தின்மூல
நிச்சயமுறயாமென்றுநிகழ்ந்தினிதிருத்தலாலே
யச்சுரதருமுன்செய்தவருந்தவம்யாதோவென்றான். (௩௭)

கருணைகூர்கனலிதெய்வகம்பிபன்றனையழைத்து
விரிகடலுலகுக்கெல்லாமேதகுவிழைவுடைத்தாய்த்
திருமிகுகின்றசெம்பொற்சிகரநீள்கோயிலாக்கித்
தரைபுகழ்தீர்த்தமொன்றுதன்னிகராகக்காண்டி. (௩௮)

காண்டிநீயிருந்தகோணகன்ஞாலந்தன்னில்
வேண்டுபுமிகவுமேலாய்விளங்கிடவெந்தனூன்று

நீண்டகலிருவிசும்பினிறையணிகுறைபாடின்றிப்
பூண்டநின்பதத்திற்பின்னர்ப்போதியாலெனப்புகன்று. (௩௯)

பன்னரும்புவியின்மேலாம்பான்மைசேர்தானந்தன்னி
லுன்னருந்தவத்தின்பேற்றாலுத்தமோத்தமமித்தான
மன்னுமித்தலத்தின்யாவர்மருவியேமகிழ்வின்வாழ்வ
ரன்னவர்க்குண்டாமுத்தியென்பதற்கையமின்றால், (௪௦)

சந்ததம்விளங்கியாமித்தலந்தனிலிருத்தலாலே
வந்திவண்வைகுவோர்க்குமருவுகம்மருளினாலே
யந்தமொன்றின்றிநாளுமறம்பொருளின்பம்வீடென்
றிந்நால்வகையுமுண்டாமென்றனனெவர்க்குமேலோன் ()

பூதலத்திருள்விலக்கிப்பொங்குவெங்கதிர்பரப்பு
மாதவன்றனக்குநாதனருளுருவாகத்தோன்றி
மேதகுமந்திரத்துண்மிக்கமந்திரமாயுற்ற
வோதருமஞ்செழுத்தைவிதிப்படியுபதேசித்தான். (௪௨)

அவ்வுபதேசந்தன்னையங்கணனருளக்கேட்டுக்
கவ்வையொன்றின்றிமிக்ககருத்தினையொருக்கிநேராய்ச்
செவ்விதினுணர்ந்துமேலாந்திருவருள்கண்ணாக்காணு
மிவ்விறையிருந்தவாறிங்கிப்பரிசெனத்தெளிந்து. (௪௩)

வானகத்தருவின்மூலமருவிவெம்பரிதிவானோன்
ஞானந்தானிஃதென்றோதுநற்றிருவஞ்செழுத்தான்
மோனந்தானாகியன்பின்மோகித்துமுடியாவின்ப
வானந்தத்தழுந்தியொன்றாயற்புதமடைந்திருந்தான். (௪௪)

அருளுடன்கூடியொன்றாயானந்தத்தேனருந்தும்
பரிதிவானவனையெங்கோன்பங்கயச்செங்கைதன்னாற்
கருணையிற்பரிசித்தந்தக்கதிரவன்கண்டாக்காமுன்
றிருவருள்பிரகாசிக்குஞ்சிவலிங்கந்தனின்மறைந்தான். (௪௫)

தீதறப்பரிசிக்கின்றசிவகரவிசேடந்தன்னா
லாதாத்துற்றநேயமதினின்றும்விழித்துப்பாரா
வோதுபுத்தேளிர்தம்மாலொருவராலறியவொண்ணா
நாதனைநேடிக்காணானற்றியானத்தினுற்றான். (௪௬)

நீடுமெத்தியானநீங்கிரேரில்பஞ்சாக்கரத்தைப்
பீடுறவுபதேசங்கொள்பெருகொளிப்பரிதிப்புத்தேள்
வாடுநுண்ணிடைசேர்கின்றமங்கைபங்கொழித்தவெங்கோன்
கூடுமென்பினிலெடுத்துக்கூறியதகத்துக்கொண்டான். (சஎ)

வேறு.

அந்தவாறருளிஞலமைப்பனென வண்ணறன்திருமுன ண்ணுசீர், சுந்தரம்பெறநிறைந்திலங்குகதிர்துன்றுதன்றனது செங்கையாற், கந்தநீர்மருவவுந்துகாதலொடுகல்வியுற்பலசு கந்தநேர், சந்தமேவுமரவிந்தமாகமிகுசதுரநன்கொடுசமை த்தரோ, (சஅ)

நானமேவுநர்தமக்குநன்குமிக நண்ணநெஞ்சகமதெண் ணியே, யூனமில்கருணைஞானதேசிகனுரைத்தமந்திரமது ற்றசீர், மோனஞானமுடன்மூழ்கியத்துவிதமாகியின்புடன் முயங்கியே, வானளாவிவருகங்கையாதிதிருமன்னுதீர்த்தம வையுன்னியே, (சகூ)

தற்பரம்பொருளிஞணையாலுரியதாபனஞ்செய்துதருக் கிஞன், மற்றுமோரிணையிலாதவேதநெறிமந்திரந்தனைமொ ழிந்துசங், கற்பபூருவமதாகநெஞ்சினிடைகருணைகூர்ந்துவ கைகருதிநன், குற்றதீர்த்தமடுமூழ்கிஞனுலகிஞேங்குபே ரொளியிஞம்பரான். (ருo)

மாதிரம்பரவுமாதிபுட்பவனவைபவத்தினதுசெய்தியாற்
சோதிகட்குமிகுசோதியாயிலகுதுங்கமேவுதிரளங்கமா
யோதுயிர்க்குமுதலோனுமாகியுயருத்தமத்துறுவரத்தையேய்ந்
தாதபக்கடவுணுதனுற்றவுலகாதிபத்தியமடைந்தனன், (ருக)

மன்னுநல்விசுவகன்மனைக்கருதி வம்மினென்றுகொடுவ ல்லேகூய்ப், பொன்னிஞேங்குவளர்புரிசையைந்திஞெடுபொ ற்பினீடுமுயர்கோபுரந், துன்னுகின்றசிகரங்களோடிலகுசோ திமாமணிகொளாலயம், பன்னுமாடமிகுமண்டபங்கள்சிலப ண்டுபோற்பரிதிகண்டனன். (ருஉ)

பொற்பினீடிய சதாசிவத்தின்மகிழ் பூவணத்துறைபுரா தனர்க், குற்சவந்தனைநடாத்தவெண்ணிமன்னுவகைபூத்தெ ழூசுவேச்சையால், வெற்றியானைமுகனுதிவிக்கிரகம்வேறு வேறுமறைவிதியினு, லற்பின்மேதகையசெம்பொனுலுருவ மைத்துநன்மணியழுத்தியே. (ருங)

கதிரவன்றனதுபெயரினுனிலகுகாந்திநாயகனெனும்பெ யர்,மதிவயங்கவணிமகுடசேகரநல்வானவன்றனையுமன்றினி ற், சதியினிற்றன்மிகுதாண்டவஞ்செயருடம்பிரான்றனையளி த்துநூல், விதிபதிட்டைசெய்துவேதபூசையும்விழாவுமேத்தி டவிளக்கினன். (ருச)

வையசுத்தின்மலமாயைகன்மமற மாற்றியேவதியுமந்த ணீர், பொய்யிலன்புகொடுபொங்கிலிங்கமதுபோற்றிசெய்து புரிபூசையாற், றெய்விகந்தருவிமானமீதுகொடுசெஞ்சுடர்ப் பரிதிவானவன், வெய்யமாமணியின்மிக்கிலங்கணிவிளங்கு தன்னுலகின்மேயினன். (ருரு)

பொருவில்புட்பவனவை பவத்தணிபுகழ்ந்திடும்புவன மெங்கணு, மரியவப்பதியின்மேன்மையீதெனவளந்துரைக் கவெளிதாகுமோ, பரவுமப்பதியின்வைகுநர்க்குரியபரபத ம்பகர்தல்சரதமாந், தருணமிக்கபுகழருண்மனத்திடைதருக் கிவாழ்மிகுதவத்தினீர். (ருசா)

யாதொர்புட்பவனவத்தலத்திரானஞ்செழுத்தையருள் செய்தனன், யாதொர்செங்கதிர்தனக்குமந்திரவெழுத்தினிற்ப லமேய்ந்டும்,யாதொர்நற்றலமதென்பதொன்றுதற்குநேர்பு கலலாவதோ, யாதொர்நற்றலமதுண்டெனப்புகறலாவதோர் தலமுமில்லையே. (ருஎ)

ஞாலமீதிலருண்மேனிகொண்டுவருஞானதேசிகனதரு ளினு, லாலநீழலறநால்வருக்கருளுமண்ணறன்றிருமுனண் ணியே, சீலமோடுதிருவஞ்செழுத்தையொருகால்விதிப்படி செவித்துளோர்க், சேலுமுத்தியிஃதையமென்பதிலையிருபிற ப்பின்வருமிருடிகாள். (ருஅ)

மண்ணுகின்றமணிகன்னிகைப்புனலில்வந்துமூழ்கியரு ணைந்துசீர்த், தொன்மரத்தினுறுநன்னிழற்கண்மகிழ்துன்னு சோதிதிருமுன்னரோ, பன்னுமன்னதுபதேசம்யாவர்சிலர்பண் ணினோரதுபரித்துளோ, ரின்னபான்மைகிகழிருவரும்பொரு விலீசனல்லுருவிசைதுவார். (ருகூ)

இந்நகற்பதிபிடத்தினீறணியுமெண்ணிலாருயிர்களுக்கெலா மந்தமிக்கதிருவஞ்செழுத்தினுபதேசமெய்தலரிதரிதரோ விந்நகற்கலியுகத்தினிந்தவுபதேசமானதுபலிக்கிலிங் கித்திரப்பதவியின்பமுற்றுமிகவுடையவன்கதிபடைவரால்.

வெந்நழற்பொடியையொக்குமித்தலம்விளம்பிலென்ற வையுளங்கொளா, வந்துபொற்பின்மணிகன்னிகைக்கமலவா விமூழ்குபலமேவலா,லந்தமற்றதிருவஞ்செழுத்தைவிதியடை வினிற்கொடுசெபித்தருட், செந்தமிழ்ப்பொதியமுனிவனங்கை கொடுசிந்துவைப்பருகினனரோ. (சுக)

பன்னுகின்றவறுபதமுரன்றிசைகொள் பங்கயத்திருமட ந்தைசேர்,பொன்னினீடுமுயர்புரிசைசூழ்ந்திலகுபூவணப்பதி யின்மேவியே, மன்னுகங்கைமுதலாதிதீர்த்தமனமகிழ்வின் வைகுபுகழ்மாமணி, கன்னிகைப்புனலின்மூழ்குமன்னவர்க ள்கயிலைவெற்பினிடைபயில்வரால். (சுஉ)

மங்கலங்கொடனுமாகநற்றலை வழங்குகின்றதொருதிங் களிற், பங்கயத்திணைடுபானல்செங்குவளைபன்மலர்கொண்ம ணிகன்னிகைப், பொங்குநற்புனிததீர்த்தமாடுதல்பொருந்து மாறுகொடுபோதருள், றங்கியங்கடையகிற்பரோலவர்கள்சங் கரன்றனுருவங்கொள்வார். (சுங)

சிவபிரான்றனதுதிருமுன்மேவுநதி தீர்த்தமன்னுமொரு சார்பினி, னிவறல்சேர்தருமொரொய்யும்வெங்கணையெழுந்து சென்றுவிழுமெல்லைவாய்ப், பவமெனும்பரலையெரிகொளுந் துமிகுபாவநாசமதெனும்பெயர், நவையிறீர்த்தமதினுமூடினர்க் குலகநாடுமுத்தியதுகூடுமால். (சுச)

வேறு.

சித்திரைகொள்சித்திரைமெய்திங்கள்கலைசேர்நாள்
வைத்தபுகழாதபனன்மந்திரநவிற்றி
யுய்த்தமணியோடையினினுச்சிதனின்மூழ்கி
நித்தனைவணங்குநர்கணீடுகதிசேர்வார். (சரு)

இந்தநலிரும்பதியிருந்தகையியம்பின்
முந்தையொருநான்மறைமுடிந்தபொருடானுய்
நந்துசிவஞானமதுநன்குறுவதாகி
நிந்தையறுமின்மலமதாய்நிகழ்வதாகி. (சுசு)

ஏதமிலதோர்பிரணவச்சொருபமேயாய்ப்
பாதகமறுத்திலகுபஞ்சவனமாகி
யாதிநடுவந்தமறியாதபரமாகி
யோதரியவாதிசைவசித்தாந்தவுருவாய். (சுஎ)

பொருந்தியிடுமின்பமிகுபூவணமதன்கட்
டிருந்துணர்வின்யாவர்சிலர்சென்றுதரிசிக்கி
னருந்தவமிழைத்தருளினங்கிருடிகாளே
யருங்கதியவர்க்கடையுமையமிலையம்மா. (சுஅ)

கிட்டுபெயர்மன்னியகிரேதநலுகத்திற்
சிட்டர்தினமும்பரவுதேவிபுரமென்று
மிட்டமுறுகாமியமியாவுமருள்செய்யும்
புட்பவனமென்றுமுலகம்புகழுமாதோ. (சுகூ)

தேற்றமுறவேதிகழ்திரேதநலுகத்திற்
சாற்றிடுமிலக்குமிதனதுபுரமென்றே
தோற்றமுறுமன்னியதுவாபரயுகத்தி
ளுற்றலைப்பிரானகரமென்றுபெயர்நண்ணும். (எ0)

ஈற்றின்வருகின்றதொரிருங்கலியுகத்தி
ளுற்றிசைகள்போற்றிசெயுநன்குறுதவத்தோர்
மேற்றிகழும்வெஞ்சுடரின்மேதகையபேராற்
பாற்கரபுரப்பெயர்படைத்ததுபடிப்பால். (எக)

பூரணமெய்ஞ்ஞானமதுபுந்திகொடுவஞ்சம்
வேரறவகழ்ந்திடுநல்வேதியர்கண்மன்னே
வேருறுமானந்தவனமென்றுமெணவொண்ணு
வாருயிர்கண்முத்திபெறுமாச்சிரமமென்றும், (௭௨)

திக்குலகெலாம்புகழ்சிதம்பரமதென்றும்
பக்கமுறுதக்கிணகாசிப்பதியதென்றுந்
தக்கசதுர்வேதபுரமென்றுமதுசார்பேர்
மிக்கபிதிர்முத்திபுரமென்றுநனிமேவும். (௭௩)

இத்தலநரர்க்குறவிருந்திருவளிக்கு
மித்தலமிரும்பவமியாவையுமொழிக்கு
மித்தலமிலங்குசிவஞானமதுநல்கு
மித்தலமநாதியுளதாயினையுமன்றே. (௭௪)

தொக்கவுயிர்கட்கிலகுதொன்னகரிதன்னுட்
டக்கவரமிக்குதவுதந்திமுகவெந்தை
யிக்குலவுநற்பதியிரும்பெருமையாலே
முக்கணிமலன்றனையருச்சனைமுடித்தான். (௭௫)

வென்றிதருமித்தலநன்மேன்மையுறலாலே
யென்றனதுவாய்மையினிசைக்கவெனதன்றே
மன்றவொருநூறுவருடந்தனினுமாதோ
துன்றுகதைவல்லபடிசொல்லமுடியாதே. (௭௬)

நிகழ்மறையுணர்ந்தசவுநகமுநிவநீடு
புகழுலகெலாம்பரவுபூவணமிகுஞ்சீர்
மகிழ்பிரமகைவர்த்தமாகியபுராணந்
திகழெழுபதென்னுமத்தியாயமிதுசொல்வார் (௭௭)

இந்தவகைகந்தனருணந்திபெறவின்பா
லந்தமில்பெருங்கயிலையின்கணருள்செய்தா
னந்துமறையீர்களெனநைமிசவனத்திற்
சுந்தரமிகுந்ததவசூதனுரைசெய்தான். (௭௮)

வேறு.

இந்தனத்திடைசெந்தழல்வந்தபோலிந்நற்பதிமுந்தவி
யந்ததோ, ரந்தநற்சிவலிங்கம்விளங்கவேயந்தரத்தவர்செங்க
திர்கண்டசிர், தந்தவிக்கதைகண்டுபுகன்றுளோர்தங்குநற்செ
விகொண்டுபுகழ்ந்துளோர், புந்தியிற்கொடுவந்துபுகழ்ந்துளோ
ர்பொங்குமுத்தியின்வந்துபொருந்துவார். (௭௬)

சூரியன் பூசனைச்சருக்கமுற்றியது

ஆகச்செய்யுள். (௩௦௯.)

சூரியன்பூசனைச்சருக்கச்சுருக்கவசனம்.

தாமிரபருணிநதியும், வைகைநதியுஞ் சூழப்பெற்ற செந்தமிழ்ப்
பாண்டிவளநாட்டிலே, விராட்புருடனுக்குத் துவாதசாந்த ஸ்தான
மாகக் கொள்ளப்பெற்ற மதுரையம்பதிக்கு அக்கினிதிக்கிலே, ஒன்றரை
க்காதநூரத்துள்ள திருப்பூவணத்தில், உமாதேவியாராலே வளர்க்கப்
பெற்ற பாரிசாதவிருட்சத்தின் அடியிலே சுயம்புமூர்த்தியாகிய சிவலி
ங்கப்பெருமான் முளைத்தருளியிருப்பார். அவருக்குத் தென்றிசையி
லே மின்னனையாராகிய தேவியார் தவஞ்செய்துகொண்டிருப்பார்.
அத்தேவியார் சந்நிதியிலே சூரியனாலே தோண்டப்பட்ட மணிகன்னி
கை என்னும் ஒரு தீர்த்தம் உண்டு. அப்பாரிசாத விருட்ச மூலத்தமரு
ஞ் சிவலிங்கப்பெருமானது திருவருளாலே, சூரியன் தனது பதவியை
நிலைபேறாக அடையும் வண்ணம் எண்ணி, சித்திரைமாசத்திலே சித்
திரை நக்ஷத்திரத்திலே பூஜைசெய்யும்பொருட்டு ஸ்நாநம்பண்ணி வி
பூதி ருத்திராட்சங்கள் தரித்து பூஜோபகரணங்கள் சேகரித்துக்கொ
ண்டு. சுயம்புலிங்கம்போல மணலைத்திரட்டிப் பஞ்சசுத்திகள் செய்து
ஆசனம் பூசித்து, அதன்மேல் இலிங்கத்திலே வித்தியாதேகமாகிய
சதாசிவமூர்த்தியை நியாசஞ்செய்து, நிட்களரூபரும் அநேகசந்திரர்
ஒளிபோல ஞானரூபருமாகிய பரசிவனாகிய மூர்த்திமானைத் து
வாதசாந்தத்தின்மேலே தியானித்துப் புட்பாஞ்சாலியினாலே வித்தியா
தேகத்தில் ஆவாகித்துத் தாபனம் சந்நிதானம் சந்நிரோதானஞ்செய்து
சுவாகதார்க்கியமும் காளகன்னிமுத்திரை இலிங்கமுத்திரை முதலிய
வும் தாபநிடங்களுங்கொடுத்து, திருமஞ்சனம் அபிஷேகித்து, பின்பு

தைலக்காப்பு மாக்காப்பு மஞ்சட்காப்பு பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் பால் தயிர் நெய் தேன் கருப்பஞ்சாறு முதலியனவும் சந்தனக்குழம்பு முதலியவும் அபிஷேகித்து, திருவொற்றாடைசாத்திப் பட்டுப்பரிவட்டம் அணிந்து, விபூதி சந்தனங்கள்தரித்து, இரத்தினாபரணங்களும் மகுடமும் அணிந்து, புஷ்பமாலைகள்சாத்தி, பலவித நைவேத்தியங் கள்செய்து பாத்தியாசமனார்க்கியங்கள் கொடுத்து, தீபாராதனஞ்செய்து, ஸ்ரீபஞ்சாக்ஷரம்ஜபித்து, ஜபகன்மங்களோடு ஆன்மாவையுந் தத்தஞ்செய்து, நமஸ்கரித்துக் கும்பிட்டுக் கைகொட்டிக் கூத்தாடித் தரிசித்து, கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் பொழியப்பரவசனாகிச் சுருதிகளாலே தோத்திரஞ்செய்தான். உடனே அவ்வருட்குறியினின்று உமாதேவி சமேதராகச் சிவபிரான்தோன்றியருளி, சூரியன் விரும்பியபடி அவனுலோகாதிபத்திய முதலியவற்றை அநுக்கிரகித்து, இப்புட்பவனக்ஷேத்திரத்திலேவசிப்பவர்க்கு அறமும்பொருளும் இன்பமும்வீடும் உண்டாமென்று அருளி அவ்வாதித்தனுக்குந் தீக்ஷைசெய்து திருவைந்தெழுத்தை உபதேசித்து அவ்வருட்குறியிலே அந்தர்த்தானமாயினார். பின்பு ஆதித்தன் கேட்டவுபதேசப்பொருளைச் சிந்தித்துத் தெளிந்து, சிவபிரான் ஆஞ்ஞைப்படி சிவலிங்கத்துக்கு அக்கினிதிக்கிலே, தனதுகையினாலே சதுரமாகத்தோண்டி உற்பலமுந் தாமரையும் உண்டாக்கி, திருவைந்தெழுத்தைத் தியானித்து விதிப்படி ஸ்நாநம் பண்ணி அத்தீர்த்தத்துக்கு மணிகன்னிகையென்னும் அபிதானமிட்டுத் தன்னுலகாதிபத்தியத்தையும்பெற்று, தேவதச்சனை அழைப்பித்து ஆலயம்நிருமித்து ஆவரணதேவதைகளையும் பிரதிட்டைசெய்து, திருவிழாநடாத்தித் தன்னுலகத்தையடைந்தான். சிவபிரான் திருவைந்தெழுத்தை உபதேசித்தற்கிடமாகியது இத்திருப்பூவண க்ஷேத்திரமாதலால், அம்மந்திரத்தை ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி திருமுன்பு விதிப்படி செபிப்பவர்க்கு முத்திசித்திக்கும். மணிகன்னிகைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சிவலிங்கப்பெருமான் திருமுன்னர் அமர்ந்து ஸ்ரீபஞ்சாட்சர வுபதேசஞ்செய்தவரும் பெற்றவரும் சிவசாரூப்பியம்பெறுவர். அகத்தியமகாமுநிவரும் அம்மணிகன்னிகைத் தீர்த்தத்தின் மூழ்கித் திருவைந்தெழுத்தை விதிப்படி ஜபித்துச் சமுத்திர ஜலத்தை ஆசமனஞ்செய்தார். அத்தீர்த்தத்தில் கங்கைமுதலியனவந்து தங்குதலால் அதில்முழ்கினேரும். சித்திரைமாசஞ் சித்திரை நக்ஷத்திரம் பூரணைசேர்ந்த வுச்சிப்போது சூரியன்மந்திரஞ்செபித்து முழுகிச் சிவலிங்கதரிசனஞ்செய்தவரும் திருக்கயிலாசஞ்சேர்வர். சிவபிரான் திருமுன்பு பொருந்திய வைகைநதியில் ஒரு அம்புசெல்லும் எல்லைவரையுள்ள தீ

த்தத்துக்குப் பாவநாசதீர்த்தமென்று பெயர்; அதிலேமுழுகினோர் சிவலோகம் பெறுவர். அத்திருப்பதியைத் தரிசித்தோர் திருக்கைலாசமடைவர். இந்த க்ஷேத்திரத்துக்குக் கிரேதாயுகத்திலே தேவிபுரம் புட்பவனம் என்றும், திரேதாயுகத்திலே இலக்குமிபுரம் என்றும், துவாபரயுகத்திலே பிரமபுரம் என்றும், கலியுகத்திலே, பாஸ்கரபுரம் ஆனந்தவனம் முத்தியாச்சிரமம் சிதம்பரம் தக்ஷிணகாசி சதுர்வேதபுரம் பிதிர்முத்திபுரம் என்றும் பெயர்பெறும். இப்பதி வசிப்போர்க்குச் செல்வத்தைநல்கும். பாவத்தைப்போக்கும். சிவஞானத்தை ஆக்கும். இபபதியில் வதிந்தருளிய பெருமையாலே விநாயகக்கடவுள் சிவார்ச்சனை செய்து முடித்தார். இங்ஙனம் பிரமகைவர்த்த புராணத்திலே எழுபதாமத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

திரணாசனன் முத்திபெற்ற சருக்கம்.

ஓதரியவுண்மையதாயோங்குபரி பூரணமாயுவமையின்றாய்ச், சோதிபதாய்ச்சுகவடிவாய்ச்சொல்லரிதாய்ச்சுருதிகளுந்தொடரொணுதாய்க், காதலினாலனைவர்களுங்காண்பரிதாய்க்காரணகாரியங்கடந்த, வேதமறுபொருளினையாமிதயகமலத்திருத்தியிறைஞ்சுவாமே. (க)

வேறு.

சத்தியஞானமார்சவுநகாதிப
வுத்தமராந்தவத்தோர்கள்சிங்கமே
சித்தநன்குணர்திரணாசனன்மிகழ்
முத்தியையடைந்ததுமொழிகுவாமரோ. (உ)

என்னலுமன்னுயிர்க்கிரங்குமின்னரு
ளன்னலந்தயங்கியநகைமுகத்தனைத்
தன்னிகருந்தவச்சவுநகன்புகழ்
துன்னியசூதனைத்துதித்தன்மேயினான். (ங)

வேறு.

எம்பிரானருளினலேயாவையுமுணர்தலானு
மம்புவியிடத்துரோமகருடணனெனும்பேரானு
மும்பருமுணரவொண்ணுவொருபொருளுடைமையானு
மிம்பரினுனக்குரோமிருந்தவவாணரின்முல். (ச)

உலகெலாம்பணிந்துபோற்றுமுயர்தவத்தும்பரானே
நிலவுபேரின்பநல்குநீடருட்பெற்றியானே
குலவியநண்பெஞ்ஞான்றுங்கூட்டியகொள்கையானே
கலையுடையோர்கடம்பாற்கழிபெருங்காதலானே (ரு)

சைவமார்க்கண்டங்காந்தந்தங்கியவிலிங்கங்கூர்மம்
வையகம்புகழ்வராகம்வாமனமருவுமச்சம்
பொய்யறுபிரமாண்டஞ்சீர்பொருந்துநற்பவுடிகத்தோ
டெய்தியபிரமம்பாற்பமிசைத்திடுமிவற்றினேடும். (சா)

காதல்கூர்நாரதீயங்காருடம்வயிணவஞ்சூழ்
மாதிரம்புகழும்பாகவதத்துடன்மருவுமேத
பேதமிலாக்கிநேயம்பிரமகைவர்த்தமியாவு
மோதிடநின்னற்கேட்டோமொன்பதிற்றிருபுராணம். (எ)

ஆங்கவைதன்னின்மேலாயறைந்தனையலர்ந்தசெம்பொற்
பூங்கொடிபடர்ந்துநீடும்பூவணமதனைப்பின்னு
மோங்கியகாதைநாப்பணுரைத்தனைபூருவத்திற்
பாங்கினற்கும்பகோணமென்றொருபதியதன்றே. (அ)

மக்களுக்கிழைத்தநீதிமாதவம்பலிப்பதாகித்
தொக்கவெம்பிறப்பிற்சூழுந்தொல்பவந்துடைப்பதாகித்
தக்கசெல்வங்களெல்லாந்தானருள்புரிவதாகித்
திக்குடையுல்கம்போற்றுந்தீர்த்தங்கள்பலவுமாகி (கூ)

கலிவலிதொலைப்பதாகிக்கண்ணகன்ஞாலந்தன்னி
னலகிலாவுயிர்கட்கெல்லாமாநந்தமளிப்பதாகிப்
பலமுநிகணங்களோடுபண்ணவர்பணிவதாகிக்
குலவுமாச்சரியமாகிக்கோதிலாச்சிரமமாகி (க0)

சோதியாயுலகமெல்லாஞ்சுத்தமாக்குவதாய்மேலா
யாதிதெய்விகத்திேனுடுபவுதிகமான்மிகத்தைப்
போதல்செய்பெற்றித்தாயபூவணந்தன்லின்மன்னு
மேதகுதானமுண்டேல்விரித்திவண்விளம்புகென்றுன். (கக)

விளம்புவனென்றுவேதவியாதன்மாணுக்கன்சொல்வா
னுளங்கொளுந்தவத்தோரேயுற்றநின்பாக்கியத்தாற்
களங்கமின்றுயதோர்நற்காரணந்தன்னுன்மாதோ
வளந்தறிவொண்ணுப்புத்தியடைந்தனையன்றேயென்றுன்.

மண்ணிலாயிரம்பிறப்பின்மனமொழிகாயந்தம்மாற்
பண்ணிடுங்கருமத்தாலேபல்பெரும்பதியினென்று
மெண்ணும்யாகாதிகன்மமியற்றியேதீர்த்தமாடி
நண்ணுபுண்ணியதானத்தினற்றவம்புரிந்துமாதோ. (கங)

சொல்லருமின்பமுற்றுச்சுவர்க்காதிபோகந்துய்த்துப்
பல்பயனருந்திப்பின்னர்ப்பாரிடைநரர்களாகி
யல்லலொன்றின்றிநாளுமரியநற்றருமந்தன்னி
னல்லதொல்குலமுற்றோற்குநண்ணிடும்புத்திதானே. (கச)

புந்திதானுடையதாகப்பொருவிடைப்பாசன்மேவு
மந்தணமானதானமான்மியந்தனை வினவுஞ்
சிந்தனையுண்டாமீதுதீமையோர்க்கடையலாகா
நிந்தனீர்முறைமைநீசெயிருந்தவப்பேறேயன்றே (கரு)

அந்தணர்தமக்குமேலோயானுநன்கடைந்தேனுக
நந்துநின்னளியென்றேதுநாரினுற்பிணிக்கப்பட்டேன்
முந்துசெல்வத்துச்செல்வமுழுதொருங்குடையோய்நின்னுற்
புந்திகொள்செல்வம்பெற்றேனுதலாற்புகல்வன்கேண்மோ.

உலகெலாமொடுங்கும்போதினுததிகளேழுமொன்றாய்த்
தலைதடுமாற்றந்தந்துதாபரசங்கமங்க
ளிலயமதடைந்தகாலையிருந்தமைதனக்குநாளு
மலகில்காரணத்திேனுடங்கமைந்தகாரியமுமாகி (கஎ)

பெற்றிடுமமுதகும்பம்பிரளயசமுத்திரத்தி
னுற்றதனுப்பணின்றுமுலாவுபுவதியுங்காலை
மற்றையததனைவிண்டுவந்துமுக்கூறுதந்து
சிற்சிலகாலஞ்செல்லத்தெருண்டவானணுகிமாதோ (௧அ)

பூவுறைதிருவின்மேலாம்பூவணந்தன்னின்முன்னுந்
தாவில்சீர்க்கும்பகோணந்தன்னிலாங்கரற்குப்பின்னு
மேவியததன்பினுமம்விளங்குநற்றலங்கடோறு
மூவுலகங்கள்போற்றுமுக்கணனருளின்வைத்தான். (௧௯)

நாமநீர்வையம்போற்றுநல்லமிர்தாம்மிசத்தொன்
றேமமாம்புட்பமாகியின்னமுதுருவமன்னிப்
பூமகள்பொருந்திவாழும்பொழிறிகழ்பூவணத்தின்
மாமணிகன்னிகைக்கண்வந்ததுவீழ்ந்ததன்றே. (௨0)

நிகழ்தருமருளினாலேநிறைந்தகன்னேயத்தோடு
மகிழ்சிறந்தோங்குமாதிவருணகேண்மருவுதீர்த்தந்
திகழ்மாயதீர்த்தமென்றுஞ்செங்கண்மால்விடையின்பாகன்
புகழ்மணிகன்னிமென்றும்பொருந்தியதிரண்டுநாமம். (௨௧)

தருமமாம்பொருடனக்குத்தங்கியவங்கிதிக்கிற்
றிருந்தழகியமின்னன்னேதிகழ்திருமுன்னர்ப்பாங்காற்
பொருந்துதெய்வீகமாமப்புநிததீர்த்தம்படிந்தோர்க்
கரும்பிரமகத்தியாதியாம்பவமனைத்துநீக்கும். (௨௨)

பொழிறிகழ்புராதனத்தெம்பூவணங்கோயில்கொண்ட
குழகனைத்தொழுமுன்செம்பொற்கொடிதனைக்கும்பிட்டோர்க
டொழுதிடுமக்கணத்திற்றொடர்புறுந்தோடந்தன்னால்
விழுவர்களகோரமென்னும்வெங்கொடுநிரயந்தன்னுள். (௨௩)

ஆதலினன்புகூர்ந்தேயரும்பெருங்கலைதெரிந்த
மூதறிவுடையோர்முக்கண்மூர்த்தியைத்தொழுகமுன்ன
மாதவினீதியாலேமங்கையையங்கைகூப்பிப்
பாததாமரையிற்பின்னர்ப்பணிந்திடக்கடவரன்றே. (௨௪)

மெய்முநிகணங்கட்கெல்லாம்விழைவுறுந்தவத்தின்வேந்தே
யெய்தியதெனதுசிந்தையையமொன்றிதனேயின்னே
பொய்யறுகேள்வியோய்நீபோக்குவதன்றியிந்த
வையகந்தன்னில்வைகுமாதவரில்லேமாதோ, (உ௫)

என்னெனிலியம்பக்கேண்மோ விறைவியையிறைஞ்சு முன்னர்த், தொன்னெறிசிவலிங்கத்தைத் தொழார்க்குறுந் தோடமென்றி, யன்னதுதான்வந்தெவ்வாறடைந்திடுமீதுபூர் வந், தன்னில்யான்கேட்டதின்ருற்சாற்றுதிதவத்தோயென் ருன். (உ௬)

சாற்றுகேன்சநற்குமாரன்ருனுமீதையமுற்றே
நாற்றலேப்பெருமான்றன்னேநணுகுமுன்னயந்துகேட்ப
வேற்றமாமிதிகாசத்திலெடுத்தவனிசைத்ததொல்சீர்
மாற்றமில்காதையொன்றுமாதவத்தலேவகேண்மோ. (உ௭)

வேறு.

முன்னுதியுகந்தனின்மோதுதிரைத்
தென்னுர்ந்தகௌதமிதீரமுறு
மந்நான்மறையோர்குலமாதவனும்
பன்ஞசனன்றன்பரிவின்வருவோன். (உ௮)

திருவின்மகிழுந்திரஞ்சனனென்
றருமந்தபெயரதுதந்துடையோன்
றருமந்திகழ்வைதிகசைவனுளங்
குருவின்சரணங்குடிகொண்டிடுவோன். (உ௯)

வழுவாதருளின்வழிநின்றிடுவோன்
பழுதானவையொன்றுபகர்ந்தறியான்
முழுமாதவமென்றுமுடித்திடுவான்
செழுநான்மறைசேர்திருவாயுடையான். (௩௦)

மிகுமேதகுநல்விரதந்தருவோன்
ஞெருமாதருமத்துறைநின்றிடுவான்
புகல்வேள்விகணன்குபுரிந்திடுவான்
சகவாழ்வுதணந்திடுதன்மையினேன் (௩௧)

வேதங்களைகண்டருள்வித்தகனீ
டேதந்தருசெய்கையிசைந்தறியா
ஞேதும்புவனத்துயிருக்குயிரா
நாதன்புகழன்றிநவின்றறியான். (௩௨)

செவ்வான்மதிபோற்றிகழ்கண்ணுதலா
ரவ்வாழ்வெனுநீடலையாழியிடைக்
கவ்வாதுயருங்கதிதன்னையினி
யெவ்வாறடைவோமெனவெண்ணினனால். (௩௩)

பொய்வாழ்வினையேபொருளென்றுதின
மெய்வாழ்வினையேவிடுகின்றனமா
லைவாய்வருபொருளினவாவினைநீத்
துய்வான்வழியாமுணர்கின்றிலமால் (௩௪)

பேராதுறுகற்பெண்ணாசையினு
லாராதுலகத்தடையக்கடவே
னேராருமிலாநிமலன்னருளாற்
சீரார்கதியெவ்வழிசேர்குவனால் (௩௫)

விண்ணாடர்களும்மேலானவரும்
பெண்ணாசையினற்பிழைபெற்றனராற்
பெண்ணாசைவிடப்பெறுகின்றவரோ
கண்ணார்நுதலான்கழல்சேர்குவரால். (௩௬)

சிறைசேருடலின்செயன்மாண்டிடவோர்
குறிதானருளுங்குருதேசிகனு
லறிவாலறியுமருளாலறியப்
பெறுபேறினியான்பெறுமாறெவனோ. (௩௭)

கைம்மான்மழுவுங்கனல்சேர்விழியு
மம்மாதரவானனிநாடரிதா
யிம்மானுடர்போலிம்மாநிலமேற்
பெம்மானருளப்பெறுமாறெவனோ. (௩௮)

என்னாவிவைபன்னியிரங்கியெழா
முன்னான்மறையோதியமூதறிவாற்
றன்னாசிரியன்றனையெய்திடுவா
னன்னாமகவிற்றிகடந்தனனால். (௩௯)

வேறு.

கோடிவான்மதியமுங்கோடிபானுவு
நீடியபேரொளிநிறைந்தமெய்யனை
வீடருந்தவத்தினான்மிகச்சொலித்திடும்
பீடுறுதேசினாற்பிறங்குவான்றனை. (௪0)

படர்புவியிடத்துயிர்க்கருளும்பான்மைசேர்
நடையனைநான்மறைநவிற்றுவான்றனைத்
தடைபடாதருளினாற்சார்ந்தநெஞ்சனை
யிடருறுமில்லறமிறப்பிப்பான்றனை. (௪௧)

புண்டரநீற்றணிபொலிந்தமுண்டனை
வெண்டிருநீறதுவிளங்குமெய்யனைக்
கண்டிகைகொண்டிடுகவின்கொண்மார்பனைக்
குண்டிகைதாங்கியேகுலவுங்கையனை. (௪௨)

முறுகவிழ்தாமரைமுகத்தினான்றனைப்
புரிமணமிசையினிற்பொருந்துவான்றனைத்
திரிபுரமெரிசெய்தசிவபிரான்றனின்
மருவியதிருவுருவயங்குவான்றனை. (௪௩)

விட்டிடும்வேணவாவேட்கையான்றனைச்
சிட்டர்கள்பரவிடுந்தேசிகன்றனைக்
கட்டுவார்சடையனைக்கருதருந்தவ
முட்டறுரோமசமுனியைக்கண்டனன். (௪௪)

மூண்டெழுகாதலான்முடுகிக்கண்ணுறீஇப்
பூண்டபேரன்பின்மெய்ப்புளகம்போர்த்தனன்
மாண்டகுசிந்தையன்வரம்பின்மாதவங்
காண்டகுமுனிவரன்கழலிறைஞ்சினான். (௪௫)

அருள்பெறுமாசையாலடியற்றேவிழு
மரமதுவென்னவேவல்லேவிழ்ந்தெழீஇக்
கருணையங்கடலதாங்கடவுள்கேளனுக்
குருபரனேடிவைகூறன்மேயினுன். (சசு)

வேறு.

மங்கையர்மைந்தரென்னும்வங்கவாரிதியின்மூழ்கிப்
பங்கமதுற்றியான்செய்பவத்தினலமூர்துகின்றே
னங்கதினமூந்தலாலேயறம்பொருளின்பவீடென்
றிங்கிவையொன்றுந்தேறேனியம்பிடினிவற்றினென்னும் ( )

இல்விடையிருத்தலாலேயில்லதேயுண்டாப்பின்னர்ச்
செல்வம்வந்தடையுமந்தச்செல்வமுந்தேயும்பின்ன
ரல்லல்வந்தடையும்பின்னரசமகிழ்வுண்டாம்பின்னர்ப்
புல்லுதற்கரியமேலாம்புத்திரராவரன்றே. (சஅ)

புத்திரராயகாலேப்பொருந்திடுங்கீர்த்திமிக்கா
மத்தகுமதனனிந்தையடைந்திடுமடைதலாலே
மெய்த்தகுவியாதிவந்துமேவிடுமேவலாலே
நித்தமும்வருத்தநீடுநீடநித்திரையுண்டாகும். (சகூ)

நித்திரையான்மூதேவிநிகழுமங்கதனல்வேறூர்
மெய்த்தனம்விரும்புமத்தான்மிக்கிடுந்துன்பமுற்றுச்
சித்தநன்னிலேதிரிந்துதிபங்கிாடொறுமயங்கி
யத்தமாஞ்சுழியிலாழ்ந்தேயறவுமெய்வருந்துமன்றே. (ருo)

வருந்தவேநாளும்பாந்கள்வல்விடவடிவதாகி
யிருந்திடருழக்குமிந்தவில்லிடையியைந்துநாளும்
பெருந்துயர்கொடுகீழ்மேலாய்ப்பிறந்திறந்துழன்றேனனே
யருந்தவமியற்றினெவ்வாறடைந்திடுமின்பமுத்தி. (ருக)

குருபரவெனக்குநீயேகூறிடுகதிவேறின்ருன்
மருவும்யாகாதிகண்மமாவிரதங்கள்சாந்தி
யரியநற்றவந்தானங்களன்றியேயெளிதிற்சேரு
மூரியதோர்கதிக்குபாயமுண்டெனினுரைத்தல்வேண்டும்.

சுந்தரத்தவத்தாலங்கஞ்சொலித்திடுஞ்சோதியானே
சிந்தையினுணர்ந்துவல்லேதிருவருள்புரிதியென்ன
வுந்துகாதலின்மிக்கோங்குமுரோமசமுநியுவந்தே
யிந்தவாறுரைப்பக்கேட்டியெனத்திருவாய்மலர்ந்தான். (ருங)

நந்நான்மறைதெரிந்தநற்றிரணுசனப்பேர்
மைந்தனேமதிவயங்குமாட்சிமையுடைமையானே
யிந்தமாநிலத்தெஞ்ஞான்றுமெண்ணிடினரர்களாலே
வந்திடுமுபாயந்தன்னுன்மருவியதருமமெல்லாம். (ருச)

மெய்ம்மையதாகியிந்தமேதகுமுலகுக்கெல்லாஞ்
சம்மதமாகிமுன்னஞ்சாற்றிடுமுபாயமின்றி
யம்மகிற்கறைதல்வேண்டியன்பினேமாய்ப்புகுந்தே
யிம்முறைமையினுஞ்சேருமென்பதுமதித்தாமன்றே. (ருரு)

நற்பதிபலவுஞ்சென்றுநான்மறைவிதிவழாம
லற்புதமருவுதீர்த்தமாடிநீயாங்காங்குற்ற
சிற்பரமாகியோங்குஞ்சிவலிங்கங்கண்டுசூழ்ந்தே
யுற்றபேரன்பினோடுமுவகையினுறப்பணிந்து. (ருசா)

மதிவலோய்வாரிசூழுமலர்தலையுலகம்போற்ற
விதிமுறைவிசேடித்தன்பின்மிக்கதானங்கணல்கித்
துதிகொடிம்முறையினுற்றிற்றொல்பவமொல்லைநீங்குங்
கதிபெறலாகுமின்றேற்காணலாந்தகையதன்றே, (ருஎ)

எனமுநிகழறியன்போடின்னருள்விடையுந்தந்தே
முநிவனன்றுரைக்குமந்தமுதிர்பழச்சுவையின்சொல்லா
லினிதுடல்புளகப்போர்த்தாங்கில்லறந்துறந்துவல்லே
புனிததீர்த்தங்களாடிப்புந்தியிற்கொண்டுபோந்தான். (ருஅ)

வேறு.

நயிமிசங்கயைநற்பிரயாகையே
யயர்வில்புட்கரம்ரோமகருடணம்
பயிறருஞ்சுரபாண்டம்பைசாசமே
யியல்கன்மோதகேச்சுரமிராக்கதம். (ருகூ)

கோதில்கோகன்னங்கோமுகைகட்கமே
நாதனன்குறுஞானகுண்டங்கதை
காதல்கூர்பிரபாசங்கபிலையே
பாதகந்தவிர்க்கும்பாபமோசனம். (சுO)

கோபருப்பதங்கோவர்த்தனம்புகழ்
சீபருப்பதந்தீர்த்தந்தினந்தரு
மாபுகழ்க்காமசாரமாசற்றசீர்த்
தூபமிக்கெழுந்தூயசோணசலம். (சுக)

கேடிலாதகிருட்டிணவேணிநல்
வீடுநல்கிடும்வேகவதிம்மிகும்
பீடிலங்குசொற்பேசுப்ரயாணமாஞ்
சேடதீர்த்தந்திகழுந்திருநகர் (சுஉ)

மிக்ககாஞ்சிகாவேரிவிலாளமே
தக்கசம்புதலமயதீர்த்தங்கள்
பக்கமோடுபடிந்துவிதிமுறை
தொக்கலிங்கங்கள்யாவுந்தொழுதரோ. (சுங)

பன்னுசெந்தமிழ்ப்பாண்டிநன்னாட்டினின்
மன்னும்வைகையின்வந்துபடிந்தபி
னன்னமென்னடையங்கயற்கண்ணியோ
டென்னையாளுடையானையிறைஞ்சியே. (சுச)

முன்பகர்ந்ததோர்யோசனைமூண்டிடும்
பொன்பயின்றதென்பூவணமேவியே
யின்பமாமணிகன்னிகையிற்படிந்
தன்பினன்னையையஞ்சலிசெய்தரோ. (சுரு)

மிக்கவூழ்வந்துமேவிடவாயிடை
முக்கணன்றிருமுன்சென்றுதாழ்ந்தெழீஇப்
பக்கமோடுபதம்பணியாமலே
தெக்கிணவர்த்ததென்றிசைசென்றனன். (சுசு)

வேறு.

சென்றுகாவதத்திற்றிகழ்திருச்சுழியற்சிந்துதீர்த்தம்படி ந்தியல்பிற், பின்றிகழ்பின்னல்பிறங்குவானவனைப்பெரிதருச் சனைமுடித்ததற்பின், பொன்றிகழ்புரிசைப்பூவணத்தடைந் தப்புனிதநீர்படிந்ததன்கரைமே, லொன்றினனுகவோரிராக் கதனுயுழன்றுதன்னலமிழந்தன்றே. (௬௭)

இருளறவுலகத்திருங்கதிபெறுவானெழில்பெறுபுனிதநீ ராடி, விரவுநல்லந்தவேதியன்றனக்குவிபரீதமாகவேமேவுங், கருதருகிரமங்கடந்ததோடத்தாற் கதுமெனக்கலங்கியேயுள் ளம், பரவழன்றினும்பைசாசமெய்கொடுவெம்பசியினுற்பரித பித்திருந்தான். (௬௮)

ஆனதோர்காலேயருவினைப்பயத்தாலங்கணனற்பதங்கா ண்பான், றேனிவர்வாசந்தினங்கமழ்பொழில்சூழ்தென்றிருப் பூவணந்தன்னிற், பான்மைசேரிரண்டாம்பரிதிகண்டாங்குப் படர்ந்தபேரொளிநிழற்படிவ, நான்மறைபயிலுநல்லிசை வீணைநாரதமுனிவனண்ணினனால். (௬௯)

ஆபவன்றன்னையந்தமாமுனிகண் டையவென்றமுதமா மொழியாற், பேயினதங்கம்பெற்றனையாரோபெரும்பசியுற்ற னைபோலா, நீயுரைவிளம்புகென்னலுமவன்பினீடுபேருவகை யிற்கூடித், தூயமாதவனைத்தொழுதுகாண்கையினுற்றெருல் லுணர்வடைந்திவைசொல்வான். (௭௦)

காதல்கூருலகிற்கனைகதிர்ப்பரிதிக்கடவுளையனைநாரத னே, யோதுமில்வாழ்வாமுறுதியினிடர்ப்பட்டுறுகதிபெறுகு வான்விரும்பித், தீதறுதீர்த்தம்யாவையும்படிந்தித்திருநகர் மருவதீர்த்தந்தோய்ச், தேதமாகியமின்னெனுமனைவாழ்வை யெறிந்திடவெண்ணியாளியைந்தேன். (௭௧)

வேறு.

காதலுடன்மேவுவடுகக்கடவுடன்னைப்
பாதகமலங்கண்மிசைசென்றுபணிவுற்றே

கோதறுநன்னீர்கொண்மணிகுண்டமதின்மூழ்கி
யாதரவினேறினனகன்களையினம்மா. (௭௨)

அந்தவமையந்தனினல்லந்தணர்தமன்னு
சிந்தனைகலங்கிமெய்திரிந்தனனியானே
முந்தைவினையோவலதுமூண்டபவமேயோ
விந்தவிதிவந்ததெதுவென்றறிகிலேனே. (௭௩)

நெருக்கியுதரத்தினுறுநீடுபசியாலே
யிரக்கமறமுன்பினியையாதனபிதற்றி
யரக்கவுருவாயிவணலக்கண்மிகவுற்றேன்
விரிக்கினிதுமுன்விதிவிலக்கிடவொணாதே. (௭௪)

பாம்புபணைகொண்டெழுபராரைமரநீழல்
விரும்புமொருவன்றலைவிழுங்கனியையொக்கு
மிரும்புனலியாத்திரையினெண்ணமுறுமென்முன்
புரிந்ததவநீமகிழ்பொருந்திவரலாலே. (௭௫)

உன்னையலதோர்கதியுளைத்திடவுமுண்டோ
வன்னதினின்முன்னிகழுமாயிரசென்மத்தின்
மன்னுபவநின்னடிவணங்கிடவகன்ற
தின்னினிமகிழ்ந்திவணிரங்கியருளெந்தாய். (௭௬)

என்னலுமிரங்கிமிகுமின்னருள்சுரந்தே
யன்னவனைநின்னிலெனவங்கையினமைத்தே
மன்னியசெழுங்கமலவள்ளல்பெறவந்த
நன்மகதிவீணைபயினாரதனிசைப்பான். (௭௭)

அந்தணர்குலத்தலைவவஞ்சலினியஞ்சல்
வந்துளதோர்காரணம்வகுத்திடுவனின்னே
புந்திகொண்மெய்பூவணபுரத்தினினிதாக
முந்தியுளதந்தபரமுத்தியதுவுண்டே. (௭௮)

நீவிதிவசத்தினிவணோர்ந்துமஃதினிநீடும்
பூவணபுரேசனிருபொன்னடிதொழாதே
தேவியிருபாதமலர்சென்றுதரிசித்தே
மேவினைபின்வேறோர்பதிவென்றியுடனன்றே. (௭௯)

வேதியர்குலாதிபவிளம்பிடுவனீயிப்
போதுமலர்மாதுதிகழ்பூவணபுரஞ்சேர்
நாதனைவணங்கியபினுயகிசெழும்பொற்
பாதமலரன்பொடுபணிந்துபவநீப்பாய். (அ0)

காசிகெயையீசனடிகாமர்புனன்மூழ்கி
நேசமொடிறைஞ்சினர்கணோர்ந்தபலனெல்லாம்
பூசுரர்களாசைதருபூவணமெனும்பே
ராசில்பதிவந்தடையுமையமிலையம்மா. (அக)

ஓர்கவினுமோதிடுவமுண்மையிஃதுண்மை
பூர்வமதுவாகியதொர்பூவணமதன்க
ணேர்தருமெம்மானைமுனிறைஞ்சுதல்செயாரே
லூர்கிருமியார்நிரயமுற்றிடருழப்பார். (அ௨)

அவ்வளவதன்றுலகிலாய்வருவர்நாயா
யிவ்வுரைநன்மந்தணமியம்பிடுவதன்றால்
வெவ்வினைகடிந்துதவமேன்மைபெறலாலே
செவ்விதினினக்கிதுசெப்பினமியாமே. (அ௩)

பன்னுதுமியாமுனதுபாவமறவீடு
முன்னினுலகம்புகழுமோர்புனிததீர்த்த
மின்னதெனவேயறிவதெம்மிறைவனன்றி
யன்னதனின்மேன்மைதனையாரறியகிற்பார். (அ௪)

பூர்வமுறுமீசனதுமுன்னமுறுபூர்வத்
தோர்தருமைஞ்ஞூறுவரிவிற்கிடையினுற்ற
தேர்கொள்கடிவாசனனியியற்றியததற்குப்
பேர்பிரமதீர்த்தமெனவேயுலகுபேசும் (அ௫)

புத்தியொடபுத்திதருபூர்வகருமங்க
ளித்துயர்வருங்கிரமபங்ககருமங்க
ளுத்தமகுலோத்தமவிஃதுண்மைபடிவுற்றுற்
சித்தமகிழப்பிரமதீர்த்தமதகற்றும். (அ௬)

அருந்தவனைநிந்தனையறைந்தவதிதோட
மிருங்குலவொழுக்கமதிகந்தகனதோடம்

பரந்திடுமெங்கீர்விழிபரப்புவதனாலே
பொருந்துமரணைணயதனுஃமிவைகள்போக்கும். (அஎ)

கார்த்திகைநன்மாதமுறுகார்த்திகைநன்னாளிற்
றீர்த்தர்தினமும்படிசெழும்பிரமதீர்த்தங்
கூர்த்தவறிவோயதுகுளித்திடுகளித்தே
யார்த்திடுமரக்கவுருவக்கணம்விடுப்பாய். (அஅ)

நாடிநவில்கின்றமறைநாலுமுகனன்னீ
ராடியிடினன்றியிவரக்கவுருவந்தான்
வீடலரிதாகுமுயர்மேதினியின்மீதோர்
கோடிசனனங்களவைகூடினும்விடாதே. (அகூ)

இன்னதொருதீர்த்தமதினின்னலமியம்பின்
முன்னுரிமைசேருமுகமுற்றுமதினின்றும்
பின்னுறுமுகத்தில்வருபெற்றியினுமின்று
மன்னதனின்மூழ்கினெவரும்மதிகராவர். (கூ0)

ஆகலினரும்பவமகன்றிடுமெதன்க
ணீதகைமையோடமர்திடுகதிகூடும்
பூதலமெலாம்பாவுபுட்பவனமேமுன்
னேதுபலநற்பதியினுத்தமமதாகும். (கூக)

பூர்வமதின்மேவிவளர்பூவணமதன்கட்
டோர்வருமருட்குறிச்சேவையதனாலே
பார்மிசைபடர்ந்துவருபாவமவையாவும்
சேர்படுதலாவதொருகிமிடமதினீங்கும். (கூ௨)

காசிநகரிற்செய்தகடுங்கொடியபாவம்
பூசுரர்தினம்பரவுபூவணமதிற்போ
மோசைதருபூவணமுனுற்றியிடுபாவ
மாசரியபூவணமதன்கணதுதீரும். (கூ௩)

ஈதுசாதம்மெனவியம்பியருளாலே
போதுவமெனவினிதினுசிகள்புகன்றே
நாதமுறுவீணைபயினாரதனலங்கூர்
கோதிறிருமாலதுவைகுண்டமதடைந்தான். (கூ௪)

பொற்சுவருடுத்தலகுபூவணமமர்ந்த
தற்பரனெடுற்றபரைதன்னையடிபேணிப்
பற்பகலுமன்பொடுபணிந்தருளின்வாழ்ந்து
நற்பரமமுத்திநிரஞ்சனனடைந்தான். (௩௫)

காதன்மிகுபிரமகைவர்த்தம்தினென்று
போதவெழுபஃதெனப்புகலத்தியாயத்
தோதுமிக்காதைசவுநகவுணர்தியென்றூன்
சூதனெனும்பேர்பரவுதொல்லுணர்வின்மேலோன்.

வேறு.

மருவுமிந்தநன்மந்தணமானதோர்மகிழ்பெருங்கதைதவன் பவமானகா, னெரிபொருந்திடுமென்பர்கண்மேலையோரிணை யிகந்துறுமிங்கிதன்மேன்மைதான், பரவுகின்றவர்கள்பண் கொடுபோடினோர் பகரிரும்பொருடந்துசொல்பான்மையோர், திரமுடன்செவிகொண்டிதுதேர்குவோர்சிவபெருமபதி சேர் வதுதிண்ணமே. (௩௭)

நிரஞ்சனன்முத்திபெற்றசருக்கமுற்றியது.

ஆகச் செய்யுள் (௨௦௩)

நிரஞ்சனன்முத்திபெற்றசருக்கச்சுருக்கவசனம்.

பின்னர்ச் சூதமுனிவர் சௌநகமுனிவரை நோக்கி ஹே முனிவரே? நிரஞ்சனன் முத்திபெற்ற கதையைச் சொல்லுவாமென்றனர். அதற்குச் சௌநகமுனிவர் சூதமுனிவரைநோக்கி, உரோமஹர்ஷணரென்னும் திருநாமமுடையவரோ? நீர் சைவபுராண முதல் பிரமகைவர்த்த புராணமீறாகிய பதினெண்புராணங்களிலும் திருப்பூவணக்ஷேத்திரம் சிறந்ததென்று திருவாய்மலர்ந்து, அதன்மத்தியிலே கும்பகோணக்ஷேத்திரத்தைக் கூறினீர். அத்திருப்பூவணத்துக்கு மேம்பட்ட க்ஷேத்திரம் உண்டேல், உரைக்கவேண்டுமென்று கேட்க, சூதமுனிவர் சொல்லுவாராயினர். உலகமெல்லாம் ஒடுங்குதற்குக் காரணமாக எழுகடலும் ஒன்றுயெழுந்த பிரளயத்திலே ஒரு அமிர்தகும்பம் தோன்றி உலாவியது. அதனை விஷ்ணுவந்து சிவபிரான்திருவருளினால்

மூன்றுகூறாக்கி, முதலாவது ஒரு கூற்றைத் திருப்பூவணத்திலும், பின்பு ஒரு கூற்றைக் கும்பகோணத்திலும், அதன்பின் ஒருகூற்றை எல்லா க்ஷேத்திரங்களிலும் வைத்தார். முதலாவது வைத்தகூறாகிய அமிர்தம் அத்திருப்பூவணத்துள்ள மணிகன்னிகைத் தீர்த்தத்திலே புஷ்பமாய் மணிபோலவந்து வீழ்ந்தது. அத்தீர்த்தத்திற்கு மாயாதீர்த்தமென்றும், மணிகன்னிகையென்றும் இரண்டு பெயருண்டாகியது. அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்வோர்க்குப் பாவங்களெல்லாம் ஒழியும். அத்திருப்பூவணத்தை ஆலயமாகக்கொண்டு வீற்றிருந்தருளுஞ் சிவலிங்கப்பெருமானை முதலிலே தரிசித்துப் பின்பு தேவியாரைத் தரிசிக்கவேண்டும். அங்ஙனமன்றித் தேவியாரைமுதலிலே தரிசித்தவர் சிரயம்பெறுவர். இது யாதுகாரணத்தாலென்னின், முதலாம்யுகத்திலே, கௌதமிதீரத்திலே, பன்னுசனனென்னும் பெயருடைய பிராமணனுக்குத் திரணசனனென்னும் ஒரு சற்புத்திரன், வைதிகசைவசிரோமணியாய், வேதாதிகலைகளின் கரைகண்டவனாய், யாகாதிகிரியைகள் செய்பவனாய், சிவதருமங்கள் பலவும் புரிபவனாய், சிவபிரான்றிருவடிகளை மனவாக்குக் காயங்களினால் வழிபடுவோனாய், பெண்ணாசை முதலியவற்றவனாய், பொய்வாழ்வினையொழிந்து மெய்வாழ்வுபெறவேண்டும் பேரவாவுடையனாய், ஆசாரியர் அடிமலர் குடிகொண்டவுளத்தனாய், மற்றுஞ் சற்குணங்களுடையவனாயிருந்தான். அங்ஙனமிருந்தவன் தன்னுடைய ஆசாரியராகிய உரோமசமுநிவரைக் கண்ணுற்று வணங்கி, எளிதாக முத்திசித்திக்கும் உபாயத்தை யுரைத்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு அம்முநிவர்பிரான், சிவக்ஷேத்திரங்கள் பலவற்றினுஞ் சென்று, அங்குள்ள சிவதீர்த்தங்களிலே விதிப்படி ஸ்நானஞ்செய்து, சிவலிங்கமூர்த்திகளைப் பேரன்போடு வழிபட்டு, சிவஞானதிகள்செய்தால், பாவங்களொழிந்து முத்திபெறலாமென்று அருளினர். உடனே திரணசனன் துறவறம்பூண்டு சிவஸ்தலங்கள் பலவற்றினுஞ்சென்று, சிவதீர்த்தங்களிலே மூழ்கி, சிவலிங்கங்களைச்சேவித்து, சந்தனப்பொதியச் செந்தமிழ்ப் பாண்டிநாடு சேர்ந்து, வைகைநதியில் ஸ்நானஞ்செய்து, திருவாலவாயில்வீற்றிருந்தருளும் ஸ்ரீமீநாக்ஷி சுந்தரேசுவரரைவணங்கி, திருப்பூவணக்ஷேத்திரஞ்சேர்ந்து, மணிகன்னிகைத்தீர்த்தத்தின் முழுகியெழுந்து உமாதேவியாரைத் தரிசித்துச் சிவலிங்கப்பெருமானைத் தரிசியாமல், தென்றிசைநோக்கிச்சென்று திருச்சுழியற்பதியை அடைந்து சிந்துதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, சிவலிங்கப்பெருமானை வழிபட்டு, மீண்டு திருப்பூவணஞ்சேர்ந்து மணிகன்னிகைத்தீர்த்தத்தின் மூழ்கி, அதன்கரையில், இராக்கதனாய்த்தன்னறிவிழந்து, பசியினாற் பரிதபித்திருந்தான்.

அப்பொழுதுநாரதமுனிவர்வந்து, அவ்விராக்கதனைநோக்கி யாரென்று வினவியவளவிலே சிறிது அறிவு விளங்கிய அவன், பவக்கடல் கடந்து முத்திக்கரையை அடையும்படி விரும்பிப் பலதீர்த்தங்களுமாடி இப்பதியை அடைந்து இந்தீர்த்தத்தின் மூழ்கியவளவிலே மனங்கலங்கினவனானேன்; இதற்குக்காரணம் புலப்படவில்லையென்றனன். அதற்கு நாரதமுனிவர், யோகக்காட்சியினாலுணர்ந்து, பூவணநாதரை முதலிலே வழிபடாது தேவியாரைவழிபட்ட தோடத்தால், இப்பேயுருவம் பெற்று மயங்கினாய். இனி முதலிலே புட்பவனேசுரரை வணங்கிப் பின்பு அம்மையைவணங்கினால் நற்கதிபெறுவாய். பின்னும் புட்பவனேசர் சந்நிதியிலே ஐஞ்ஞூறு விற்கிடையுள்ளவுள்ள ஒரு பிரமதீர்த்தமுண்டு. அது முறை பிறழ்ந்த பாவமுதலியவற்றைப்போக்கும். அதிலே கார்த்திகைமாசங் கார்த்திகை நட்சத்திரத்திலே ஸ்நானஞ்செய்தல் விசேடமாம். ஆதலால், அப்பிரமதீர்த்தத்திலே மூழ்கி அரக்கவுருவையகற்றிப் புட்பவனேசுரரை வழிபடுவாய். ஸ்ரீகாசி முதலிய பதிகளிற் செய்தபாவங்கள் இப்பதியிற்போம். இத்திருப்பூவணத்திற் செய்த பாவம் இத்திருப்பூவணத்திலே ஒழியுமென்றுகூறித் திருமாலுலகஞ்சேர்ந்தனர். சேர்ந்தபின் நாரதமுனிவர் அருளிய வழியே திரஞ்சனனெழுமிப் புட்பவனேசுரரையும் தேவியாரையும் வழிபட்டுத் திருக்கைலாசபதவிசேர்ந்தனன். இங்ஙனம் பிரமகைவர்த்தபுராணத்திலே எழுபத்தோராமத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

மணிகன்னிகைச்சருக்கம்.

நற்கதிபெறுந்திரஞ்சனன்கதை
யற்புதங்கேட்டுநெஞ்சமைதிகொண்டிலன்
சொற்றகுமாதவச்சூதயான்புகல்
கிற்பனின்னமுங்கேட்குமாசையால். (௧)

ஓதருமுலகிலாருயிர்கள்செய்திடு
பாதகமனைத்தையும்பாறல்செய்யுமக்
கோதறுமாமணிகுண்டமேன்மையை
யேதுவினோடெடுத்தியம்பல்வேண்டுமால். (௨)

உற்றமன்பதைக்குபகாரியாவது
மற்றுநீயல்லதிவ்வையத்தில்லையாற்

சொற்றிடென்வாய்மொழிதுணிந்துநாடியே
யிற்றெனவேவிரித்தினிதினுலரோ. (௩)

என்றிவைசவுனகனியம்பக்கேட்டரு
டுன்றியதுகளறுசூதன்சொல்லுவான்
கன்றிடுமெறுபகைகடிந்துநாடொறும்
வென்றிகொளந்தணர்வேந்தர்வேந்தனே. (௪)

அத்தலப்பெருமையையாயிரம்பெரும்
பைத்தலையனந்தனும்பங்கயத்தனுஞ்
சித்திரமலர்த்திருமாலுர்தேவரு
மித்திறமெனவுணர்த்தியம்பலாகுமோ. (௫)

ஆயினெம்மாலிஃதறையப்பாலதோ
தாயினுமுயிர்க்கருள்சவுனகாதிப
தூயவாசான்றனுற்சொல்லுமந்தண
நேயமோடதிற்சிலநிகழ்த்துவாமரோ. (௬)

அண்டமோர்விராட்புருடன்றனங்கமாம்
புண்டரீகத்திருப்பொருந்தும்பூவணங்
கொண்டபேரெழில்குடிகொண்டவன்முக
மண்டலமாகவேமறைந்துவைகுமால். (௭)

பண்டைநாளமுதகும்பத்திலாரமு
தெண்டகுமணிமயமாகியிப்புனல்
விண்டலகின்றதுவீழ்தலான்மணி
குண்டமென்றொருபெயர்கொண்டிலங்குமால். (௮)

துன்னுதற்கரியவத்தூயதீர்த்தமா
மன்னதினுடினோரமுதருந்தியே
பன்னுபத்தயன்றன்கற்பம்பரிந்துதாம்
பொன்னுலகத்தினிற்பொருந்திவாழ்குவார். (௯)

அரியயனுருத்திரனமரர்கோன்கடற்
றரைபுகழ்நாரதன்சனகனுதியர்
கருடர்கந்தருவர்நற்கபிலரோனையர்
திருமணிகன்னிகைத்தீர்த்தம்வாழ்வரால். (௧௦)

வேறு.

கோலமன்னுதிர்த்தமாடுகுலவுபூர்வமுகமதாய்
வாலுகந்தனுன்மிகுந்தவானிலங்குவெய்யவன்
சிலமோடுசெய்யிலிங்கதெரிசனஞ்செய்வோர்கொடுங்
காலன்மேனிதானிரண்டுகண்கள்கொண்டுகண்டிடார். (கக)

அந்தலிங்கதரிசனத்தினுனன்முத்தியடையுமால்
வந்துநாளுநாளுமேவணங்கினோர்கள்யாவரும்
புந்தியாற்செய்பாவமும்புண்ணியம்மதாகுமா
லிந்தநீர்மையுண்மையுண்மையென்பதையமில்லையே. (கஉ)

எண்ணிறைந்தநன்மணிகனிகையினெய்தியாடுதல்
கண்ணினன்னுபூவணக்காசிலிங்கதரிசனம்
புண்ணியம்புரிந்துளோர்தமக்குநேர்பொருந்திடும்
பண்ணுபாதகர்க்கோர்காலமும்பலித்திடாதரோ. (கங)

இருநிரந்தருள்சுரக்குமிம்மணிகன்னிகைநதி
யருடவத்தினுனதானமதனினுமன்புகூர்
தெரிசனத்தினுமிக்கசிர்தயங்குகங்கையின்
பரிசனத்தினும்வெய்யபாதகங்களழியுமால் (கச)

தெரியினரியபிரமகத்திதிர்க்குமுரியதரிசனம்
பரவுமமுதநாளுமுன்னல்பண்ணுமேவுபரிசன
மரியபலமெலாமளிக்குமத்திருத்தானமே
விரவுமமுதமணிமயங்கொண்மணிகனிகையின்மான்மியம்.

தந்தைதாய்தமக்கிழைத்தகணிவில்பாதகங்களும்
பந்தமாற்றுகின்றதோர்பராபரன்றுரோகமுஞ்
சுந்தரங்கொள்வேறோர்மாதர்தோளணைந்ததோடமும்
முந்தையோனைநிந்தைசெய்தமுடிவிலாதபாவமும். (கரு)

வேதியர்க்குவெகுளிசெய்தன்மிசைதலல்லமிசைதல்வெம்
பாதகங்கண்மாடபத்தியங்களாதிபாதக
மோதுகோள்களாதிபாவமொழியுமாவிப்பூவணத்
தீதிலன்பினோடுவந்துதெரிசனஞ்செயளவினில். (கஎ)

இத்தலத்தில்வைகியேயிடும்பையில்குடும்பியா
யுத்தமகுலத்தனுகியொற்கமிக்குடையனுய்
முத்திகாமனுணசிஎன்முத்தனங்கையிற்றில
மத்தனைச்செழும்பொனல்கினேர்பலத்தையடைகுவாம்.(கஅ)

தூயவுலகினேமருவுசுகமெலாமடைந்தவ
னேயபுத்திரர்பவுத்திரர்களோடுநீடுவாழ்ந்
தேயநற்சிவபுரத்தினேறியின்பமுற்றதின்
மேயநாளிருந்துமேதினிக்குவேந்தராவரால். (கசு)

ஊனநீங்குமையர்கையிலுள்ளொருமையோடுகோ
தானநல்கினேர்கணீடுதவாயிலின்பமருவியே
தீனமின்றிவாழ்ந்துபின்றிருந்தருந்தவத்தினு
லானகாமதேனுவின்றனமுதநன்கருந்துவார். (உ0)

பின்னர்நற்றவந்தனிற்பெருங்குலத்துதித்துநேர்
பன்னுபுத்திரர்பவுத்திரர்களோடுபெரிவினுன்
மன்னுசெல்வமுடன்மகிழ்ந்துவாழ்ந்துமீண்டுமாசிலாச்
சின்மயன்றினம்பொருந்துசிவபுரத்தையடைகுவார். (உக)

ஓதுமுத்தராயணத்தினேடுதக்கிணயன
மீதினுற்றகதிர்கடம்மைவெவ்வராவிழுங்குநாண்
மாதவுற்பலத்தினமதிவிரிந்தொடுங்குநா
ளாதிவாரம்பஃதொர்பக்கமவ்வெதிபாதத்தினம். (உஉ)

ஏழுமாறுதலையிலிட்டவெண்பஃதுசேர்ந்தநற்
காலமோடுசங்கிராந்திகாலமட்டமீதனின்
வாலசங்குதங்கிநன்குவளருமணிகன்னிகையினின்
மாலகந்தைகொன்றசூலவயிரவன்றனருளினல் (உங)

வேறு.

இலகொளிபரப்புமெல்லோனெதிர்முகந்தரவிருந்து
மலருடன்றூர்வைமிக்கவன்கனிதண்டுலங்கொண்
டலகிலாப்பவங்களுயேற்காடுமித்தீர்த்தந்தன்னுற்
றொலைவுசெய்தருளவேண்டுஞ்சோதியேயெனப்பணிந்து.

சூரியவிலிங்கந்தன்னைச்சொல்லுமந்திரத்தினாலே
சீர்பெறச்செபித்துத்தேவதேவனைப்பிரார்த்தித்தன்பாற்
பேர்பெறுதீர்த்தமூழ்கிப்பிதிர்களோடிருடிகட்காங்
கேர்பெறுதர்ப்பணங்களிரவிமந்திரத்தினாலே. (உரு)

யாவனிம்முறையிற்செய்வானவன்கடலுடுத்தபார்மேற்
றேவர்கண்முனிவர்மிக்கதென்புலத்தவர்கடன்செய்
மேவியபிரமசாரியெனின்விருப்பறுத்தேயொல்லை
மூவுலகங்கள்போற்றமுத்தியையடைவனன்றே (உசா)

அருமணமுடித்தோன்பின்றையைவகைவேள்வியாற்றிக்
கிரியைநூற்கிடக்கையானேகேடில்பூசனையமைத்தே
திருமகள்சுவர்க்கஞ்சேயாற்சேர்வனீதொருவினாலும்
பெருகுமத்தீர்த்தமூழ்கிற்பிதிர்கடன்றரும்பேறுண்டாம். ( )

தீதிலாவேள்விசெய்தோன்றேவனுந்தன்மைபோல
வோதுமத்தீர்த்தம்பொனுகவுவோனும்பனுவா
ணுகலாலத்தலம்போலரும்பிதிர்கடன்கடம்மைப்
போகல்செய்தலங்களிந்தப்பூதலத்தில்லைமாதோ. (உஅ)

இத்தலமன்றிவேறோரிருங்கதியளிக்குங்ஞான
மித்தலமதனிலின்றுமியம்பிடினுகையாலே
யித்தலமதிசமாமாயிரங்கோடிநற்றானத்து
ளித்தலங்கண்டாலிம்பரிருங்கதிரண்டுமுண்டால். (உகூ)

கற்றுணர்வுடையோர்கண்டகண்ணிமைகைநொடித்தல்
பெற்றிடலமையுமேலும்பிறங்கிடுஞானந்தன்னு
லுற்றவஞ்ஞானந்தன்னுலோதுபூவணத்தில்வாழ்வோர்
நெற்றியிற்றிகழ்ந்தவொற்றைநேத்திராவரன்றே. (௩௦)

நல்லதோர்தளிர்தானுதனவிலொருகனிதானுதல்
வில்லிலங்கியபுரூரமின்னிடையன்னைபாகம்
புல்லியபூவணத்தெம்புனிதனுக்கினிதளிப்போர்
சொல்லுருத்திரனுப்பின்னர்ச்சுத்தமாமுத்திசேர்வார். (௩க)

வேறொருதலத்தினின்றுமெய்யுயிர்வியோகமெண்ணி
மாறிலாவித்தலத்தின்வைகுறின்மரணகாலை

கூறரிதாயசெம்பொற்கொடியிடைமடவாளோடுந்
தேறிடவந்தவன்றன்றெக்கிணகன்னந்தன்னில். (௩௨)

பாரிடைப்பிதாமகற்குப்பயப்பயப்பரிதல்போலச்
சீருடைக்கடவுடன்பொற்றிருமேனிசாத்திக்கொண்டு
பூரணமகிழ்ச்சியோடுபுத்திரன்றன்னைத்தேற்றித்
தாரகப்பிரமந்தன்னைத்தானுபதேசஞ்செய்வான். (௩௩)

சாற்றுதுமான்றனுணைசத்தியமீதுசாற்றி
லாற்றல்சான்முனிவகேண்மோவாதலாலரிதினேனு
நாற்றிசையுலகமேத்துநற்றிருப்பூவணத்திற்
போற்றியேயெவரும்வாழ்கபுந்திகொண்டெங்கனுன்றும். ( )

மருவியகாசிவாசமக்கண்மிக்குடல்வருந்தும்
பொருவிறென்பூவணந்தான்பொருந்திடாமெய்வருத்த
மரியனபொருளொன்றில்லையாதலாலந்தவித்தீர்
கருதிலப்பூவணந்தான்காசியிலதிகமாகும். (௩௫)

பவமில்பஞ்சாமுதத்தாற்பஞ்சகவ்வியத்தான்மிக்க
சுவைதருநன்னீர்தன்னாற்சோதியையாட்டுவிப்போன்
சிவனதுவடிவமென்றேசெப்பிடுமுலகமெல்லா
மவனதுபெருமைதன்னையறிகுவனமலன்றானே. (௩௬)

கதிர்விடுமணிகுண்டத்தின்கரையினிற்கடவுண்முன்னர்ப்
பிதிர்மகிழ்சிராத்தத்தோடும்பிண்டநற்றிலோதகத்தை
விதிமுறைபிதிர்கட்காற்றின்வெஞ்சுடர்ப்பரிதிவானோ
மதிதருவாழ்நாள்காறுமனமிகமகிழ்ச்சியுண்டால். (௩௭)

பொங்குவெங்கதிர்பரப்பும்புனிதமாமணிகுண்டத்திற்
றங்குநீரிடைப்பிதிர்க்கடங்களங்கங்கிடந்தா
லங்கவர்மகிழ்ச்சிகூர்ந்தாங்கக்கணந்தன்னின்முக்க
ணெங்கணாயகனாற்பெற்றேயிடபவாகனத்தராவார். (௩அ)

ஆதலாலரியமைந்தரத்தியைப்பத்தியாலே
யோதிடும்பிதிர்கடாம்போயுயர்பதிகதியிற்சேர்வான்
காதலால்வருந்தியேனுங்கடைப்பிடிகருதிமாதோ
கோதிலாமணிகுண்டத்திற்கொண்டிடக்கடவரன்றே (௩௯)

முந்தொருகாலந்தன்னின்மொழியினோர்கங்கமங்கந்
தந்திடந்தனனங்கத்தைத்தசையெனநசையிற்கொண்டே
யந்தநற்றீர்த்தத்திட்டாங்ககன்றதக்கனத்தினன்னே
னிந்தநற்றீர்த்தந்தன்னுலிருங்கதியேறினனல். (சo)

இந்தநற்றீர்த்தம்வேதத்தியம்பிடுஞ்சாரமாகு
மிந்தநற்பிறப்புக்கீறுசெய்திடுகடவுளாகு
மிந்தநற்கதைச்சுருக்கமியம்பினனீவிருந்தா
மிந்தநன்மாணக்கர்க்கிங்கிசைத்திடுமெந்தஞான்றும். (சக)

சந்தமாமறைதேர்கின்றசவுனகமுனிவகேண்மோ
வந்தநற்பிரமகைவர்த்தந்தருமத்தியாய
மிந்தவாறடைவிற்றேர்தியெழுபதின்மேலிரண்டாம்
புந்திகொள்புகழ்செறிந்தபூவணக்காதைமாதோ. (சஉ)

வேறு.

சேணுலாவியதிங்கடருங்குடைசேருமாமதன்றன்றனை வென்றதோ, ரேணுலாவியவின்பசுகம்பெறுமேசிலாவருடந் திடுமெந்தனிர், மாணுலாவியமண்டலமெண்டகுமாசிலாமணி குண்டமடைந்தசிர், பாணுலாவியசெஞ்சொல்பகர்ந்தவர்பாக சாதனன்றன்பதிதங்குவார். (சங)

மணிகன்னிகைச்சருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள் (சசக)

மணிகன்னிகைச்சருக்கச்சுருக்கவசனம்.

திருப்பூவண க்ஷேத்திரமானது விராட்புருஷனுக்கு முகமண்டலமாகக் கொள்ளப் பெற்றதாயிருக்கிறது. அப்பதியிலுள்ள தீர்த்தத்தில், விஷ்ணு, முதலாவதுவைத்த அமிர்தக்கூறு மணிமயமாய் வீழ்ந்தபடியால், அதற்கு மணிகன்னிகையென்று பெயர், அதிலே ஸ்நானஞ்செய்வோர் பத்துப் பிரமகற்பம்வரை அமிர்தமுண்டு தேவலோகத்தில் வாழ்வார். அத்தீர்த்தத்திலே எல்லாத் தேவர்களும் இருடிகள் முதலாயினரும் வசிக்கின்றார்கள். அதிலே மூழ்கிச் சூரியலிங்க தரிசனஞ்செய்வோர், காலனைக்காணமல், காலகாலர் கயிலையைக்காண்பார்.

அத்தீர்த்தமாடுதலும் அச்சிவலிங்க தரிசனஞ்செய்தலும் அறஞ்செய்வோர்க்கே கைகூடும். அத்தீர்த்த தரிசனத்தாலும் பரிசத்தாலும் பாவங்கள்போகும். புண்ணியங்கள் ஆகும். அத்தல தரிசனஞ்செய்வோர்க்குச் சிவத்துரோகபாவமும், மாதாபிதாக்களுக்குச் செய்த அபராதமும், பிறர் மனைவியைச்சேர்ந்த பாவமும், பெரியோரை நிந்தித்தபாவமும், அந்தணரைக்கோபித்த பாவமும், புசிக்கக்கூடாதவைகளைப் புசித்தபாவமும், மாடாபத்திய பாவமும், கோள்கூறிய பாவமுதலியவும் ஒழியும். அப்பதியில்வதியும் பெரியோர்க்குப் பொன்கொடுத்தவரும், கோதானஞ்செய்தவரும் இகத்திலும் பரத்திலும் இன்பம் அநுபவிப்பார். உத்தராயணம், தக்ஷிணாயனம், சூரிய சந்திரகிரகணங்கள், விதிபாதம்முதலிய புண்ணியகாலங்களிலே, அத்தீர்த்தக்கரையில் அமரும் வைரவக்கடவுளை வணங்கி, கிழக்குமுகமாக, அறுகு புட்பம் அரிசி கனி இவைகளோடு அமர்ந்து, [சூரியலிங்கமூர்த்தியே உமக்கு நமஸ்காரம் இத்தீர்த்த ஸ்நாநத்தினாலே பிறவிகளனைத்தினுஞ் செய்த பாவங்களைப் போக்கியருளும் என்னும் பொருளுடைய] சூரியலிங்கமூர்த்தி மந்திரத்தைச்செபித்து அத்தீர்த்தத்திலே மூழ்கி, பிதிர்களுக்கும் இருடிகளுக்கும் தர்ப்பணஞ்செய்பவன் பிரமசாரியானால் முத்தியடைவான். கிருகஸ்தனானால் சுவர்க்கஞ்சேர்வன். தருப்பணஞ்செய்யாவிடினும் ஸ்நாநமாத்திரத்தாற் பிதிர்தருப்பணஞ்செய்த பயன் பெறுவன். அத்தீர்த்தக்கரையிலே சுவர்ணதானஞ்செய்வோன் சுவர்க்கஞ் சேர்வன். அப்புட்பவன ஸ்தலம்போலப் பிதிர்கடனைத் தீர்த்தல் ஒருஸ்தலமுஞ் செய்யமாட்டாது. ஒரு கணப்பொழுது ஞானத்தாலாவது அஞ்ஞானத்தாலாவது அப்பதியில் வதிவோர் சிவசாரூப்பியம் பெறுவர். ஒருதளிராதல் கனியாதல் புட்பவனேசருக்குப் பத்தியொடு கொடுப்போர் மூத்தராவர். மற்றைய தலத்தினின்று தேகவியோகத்தைச் சிந்தித்து இத்தலஞ்சேர்ந்து மரித்தவர்க்குச் சிவபிரான் தாரகமந்திரமாகிய பிரணவோபதேசஞ் செய்தருளுவர்; ஆதலால் இப்பதியின்கண் யாவரும் வதிதல்வேண்டும். காசிவாசத்தினாலே பெரிதும் உடல்வருந்தும். புட்பவன வாசத்தால் உடல் வருத்தமுறாது; ஆதலாற் காசிப்பதியினும் புட்பவனம் ஏற்றமாகும். பஞ்சாமிர்தம் பஞ்சகவ்வியம் சுத்தோதகமுதலியவற்றைச் சூரியலிங்கமூர்த்திக்கு அபிடேகித்தால் சிவசாரூப்பியம்பெறலாம். மணிகன்னிகாதீரத்திலே பிதிர்சிராத்தமுதலியன செய்தால் நெடுங்காலம் பிதிர்கள் பெரிது மகிழ்வார். அத்தீர்த்தத்திலே பிதிர்கள் அஸ்திகிடந்தால் அவர்கள் சாரூப்பியமுத்தியடைவர்; ஆதலால், புத்திரரானோர் பத்தியோடு பிதிர்கள் முத்தியடையும் வண்ணம் அவர்கள் அங்கங்களை அங்கேயிடக்கடவர். முன்னம் ஒருகாலத்தில் ஒரு அந்தணன் அங்கத்தைக்

கழுகு அங்கே யிட்டதனால் அவன் கதியடைந்தான். இவ்வனம் பிரம கைவர்த்தபுராணத்திலே எழுபத்திரண்டா மத்தியாயத்திலே கூறப் படும்.

திருச்சிற்றம்பலம்.

நாலாவது
துன்மனன்சருக்கம்.

தூண்டுகின்றசெஞ்சுடர்கொள்சோதிதாள்
பூண்டவன்புசேர்பொற்பின்மேலையோன்
காண்டகுந்தவச்சூதன்கண்ணுறீஇ
மீண்டுமோர்கதைவிளம்பன்மேயினான். (க)

வீரவேடனைவென்றசௌனக
வோர்கநீயிஃதுரைப்பக்கேட்டிடி
லாருயிர்க்கெலாமாயுணல்கிடுஞ்
சேரும்வல்வினையாவுந்தீர்க்குமால். (உ)

வேதநன்குணர்வியாதன்முன்னரோ
யோதிநெஞ்சகத்துவகைகூர்தருங்
கோதிலாமணிகுண்டமான்மிய
மேதுவாற்சிறிதியம்புவாமரோ. (ங)

தருமநன்கதைதஞ்செவிக்கொளார்
நரகவாதிகளாவர்நாளுமே
திருமிகுங்கதைசெவிமடுத்துளோர்
மருவிடுஞ்சுவர்க்கத்தின்வாழ்குவார். (ச)

நவிற்றுகின்றவெந்நரகமென்றுநற்
சுவர்க்கமென்றுமேற்சூதமாதவ
வெவற்றினாலிவையேயுமாலரோ
வவற்றைநீவிரித்தருளவேண்டுமால். (ரு)

தந்தைதாய்புகழ்தருமதேசிகன்
முந்தைநான்மறைதன்னைமுற்றுண

ரந்தணுளனாயறிஞர்தங்களே
நிந்தியார்தமைநிந்தைசெய்துளோர். (சுா)

பொருவினுன்மறைபுகலுமந்தண
ரரனரும்பொருளபகரித்துளோர்
கருதிவந்துபொய்க்கரிபகர்ந்துளோர்
பரவுகன்னிகைதனேப்பழித்துளோர். (எ)

மதுநுகர்ந்திடுமங்கையானன
மதனேமோந்தவரவளேமேவினேர்
கதுமெனப்ப்ரமகத்திபண்ணினேர்
விதமுறுவிடர்விரவுகாதலர் (அ)

நன்குலத்திலாசாரநந்திடாத்
தன்குலக்கொடிதனிபுலம்பவே
பொன்பறிப்பவர்தோளேப்புல்குவோர்
மின்குலத்தியைப்பெட்பின்மேவுவோர். (கூ)

கொழுநனைப்பிழைத்தோர்கள்கூடுரு
மழலேயின்சொல்வாய்மைந்தர்பூணணி
விழைவின்வவ்வினேர்வெஃகிநன்பொருள்
பழுதிலாதுயர்பசுவைவிற்றுளோர், (க0)

புண்ணியப்புனல்புண்ணியத்தல
மெண்ணிடும்பதினெண்புராணநூ
றண்மையாகநிந்தனேயிசைத்துளோ
ரண்ணலாலயமிலயமாக்குவோர். (கக)

அண்ணறன்னேநிந்தனேயறைந்துளோர்
பண்ணிடுந்தருமம்பழித்துளோர்
திண்ணமாயவைசிதைவுசெய்துளோ
ரெண்ணறம்பொருளெண்ணிவிற்றுளோர் (கஉ)

அன்னம்விற்றுளோரதுபழித்துளோர்
முன்னே நூல்வருமுறைதிறம்பினேர்
சொன்னவாசகந்தோமுறுத்துளோர்
பன்னலாக்கொடும்பழிபகர்ந்துளோர். (கங)

கருதுகின்றதங்காரியத்தினன்
மருவினோர்கடம்மன்னுகாரியம்
பெருகுகாதலிற்பிழைபடுத்தினோர்
பரிவுகூர்ந்துளோரவரைப்பார்த்துளோர். (கச)

நந்தனவனாறியகூவனீர்
தந்திடேரிதான்றந்திடக்கருத்
துந்துகாதலினுரைத்துளோர்தமை
நிந்தைசேர்ந்தசொன்னிகழ்த்திநின்றுளோர். (கரு)

தந்தைதாய்திவசஞ்செயாதவர்
வந்துநம்பினோர்தமைவதைத்துளோர்
சுந்தரந்துதைந்திலங்குதொன்மைசால்
வெந்தநீறணியாதமெய்யினோர். (கசு)

சிந்தையின்மகிழ்தந்திடுந்திரு
வைந்தெழுத்தினையவமதித்துளோ
ரெந்தைகண்டிகையினையிகழ்ந்துளோர்
நிந்தைசேரிவர்நிரயவாணரே. (கஎ)

திருகுசிந்தனைதீர்ந்தமாதவ
மருவுஞாலமேன்மன்பதைக்கெலாம்
பெருகுநாடொறும்பீழைமம்மர்செய்
நரகுறுந்திறநவிலுவாமரோ. (கஅ)

வேறு.

கும்பிபாகங்கராளங்கூடவிட்டாசனத்தோ
டம்புவியிகழ்லாலாம்புசேவனமறையுங்கீலம்
பம்புவெங்கிருமியுண்டல்பகர்ந்தவிகராளங்கண்டங்
கம்பதப்ரகரங்காலசூத்திரங்கரியகாகம். (கக)

ஒட்டகம்புலியயத்தோடுறுமயிடத்தின்றுண்டம்
கொட்டிடுதேத்தாங்காரங்கொல்லயபாத்திரஞ்சேர்
தட்டல்குட்டனக்கிசேர்ந்தசைகதத்தினில்வறுத்தல்
பட்டுருவசிபடைத்தபத்திரமூத்ரபானம்; (உ0)

மன்னியரவுரவஞ்சேர்மாரவுரவங்களாதி
தன்மைகளுணருங்காலேத்தருமராசனுந்தயங்குஞ்
சின்மயனருளாற்றேருஞ்சித்திரகுத்தன்றானு
மிங்கிலேதன்னைநாடியிற்றெனக்கிளத்தலாகா. (உக)

ஆதலால்யாவரேனுமரும்பெரும்பாதகங்க
டேதுறமுயலிவிந்தத்தீநரகடைவரன்றே
யாதுகாரணத்தினுலுமிகபரமியைவோர்தீய
பாதகமானவற்றைப்பாற்றிடக்கடவரன்றே. (உஉ)

சொற்றிடுந்தருமமுந்தான்சுருக்கியேதெரித்துச்சொல்வா
மற்றதுமுனிவகேண்மோவகிஞ்சையேவாய்மைசேர்த
லுற்றிடுகளவுதீர்தலுளமகிழ்கூர்தலோடு
பொற்புறுதேகசுத்திபூசைசன்னியாசிபூசை. (உஙு)

துறவிகடமதுபூசைசொல்லிடுமெதிதிபூசை
வறியனாக்கதியிலோனைமருவுமந்தகரைக்காத்த
லுறுமனச்சழக்குத்தீர்த்தலுற்றிடுசுகன்மம்பேண
லறையகிஞ்சாதியீரேழந்தணர்விதியிற்றந்தோர். (உச)

சரணடைந்தோர்கடம்மைத்தாங்குதன்மாகமுழ்க
லரனருச்சனையியற்றலதிதியர்க்கனமீவோர்க்குப்
பரவுபகாரம்பேணல்பண்ணுகன்னிகாதானத்தோ
டுரியவான்முதிரையெள்ளோடுயர்பலதானஞ்செய்தோர். ()

தருமகாலங்கடன்னிற்றண்புனற்பந்தர்செய்தோர்
பொருவில்புண்ணியம்புரிந்தோர்புங்கவர்யாரும்பூசை
யுரிமையினியற்றவுள்ளமோர்தருங்காதல்கூர்ந்தே
திருமிகுசுவர்க்கபோகத்தெரிவையர்திரட்சியோடும். (உசூ)

நம்பிராடகநடிப்பநவமணித்துவசமின்னக்
கிங்கிணிமாலைத்தாமங்கெழுமியேயெங்குந்தூங்கக்
கண்கொளாத்துணைவெண்கற்றைக்கவரிக்காலசைப்பமாதர்
விண்குலாவியவிலக்கவிமானத்தினுப்பண்மேவி. (உஎ)

தெண்டிரைக்கடற்பாற்கொண்டதிசைவிசயஞ்செலுத்தி
வண்டருநீழல்சேர்ந்துமிக்கபூந்தேன்றுளிப்ப

வெண்டகுமுலகம்போற்றவிரேழிந்திரர்கள்கால
மண்டர்களடிவணங்கவமருலகத்தில்வாழ்வார். (உஅ)

முண்டகனனையவேதமுனிவமுன்னிறுத்தவாற்ருற்
கண்டதையன்றிக்கேட்டகாலேயிற்பவங்கடீர்க்கு
மண்டலம்பரவுமந்தமாமணிகுண்டமேன்மை
யெண்டொகைபெறவெடுத்தங்கிசைக்குவமின்னுங்கேண்மோ.

நயவுணர்வறியாதானோர்நான்மறைக்குலத்தின்வந்தோ
னெயினரோடிணங்கிவாழுமிழிதொழின்முழுதுணர்ந்தோன்
கயமுறுகபிலேகன்னீர்க்கரையினிற்கருதிவாழ்வோன்
றுயர்தருதுராசாரஞ்சேர்துன்மனனென்னும்பேரோன். (௩௦)

சீர்த்திகளகன்றவேதத்திறங்கள்யாவுந்திறம்பி
யார்த்தகல்லறிவிழந்தேயறந்தருஞ்செயன்மறந்து
கூர்த்தவெங்குன்மனோயாற்கொலேபுரியெயினரோடுந்
தூர்த்தர்களோடுங்கூடித்தொன்னெறிமுறைதுறந்தான். ( )

வேறு.

காதலுடன்மாதர்பயில்காமகலேதன்னை
காதமொடுபாடிமிகநாடகநடிப்போன்
றீதில்பலதேனுவொடுசெந்தழல்வளர்க்குங்
கோதின்மறையோரைநனிகொன்றுயிரையுண்போன். (௩௨)

ஏற்புடையபாலகரையிட்டிடையினேரைப்
பாற்படுவாலீசரொடுபெண்புடைமையோரைச்
சீற்றமொடுதேசமிசைசென்றுநனிகொன்று
கூற்றுணவிரும்பியுயிர்கொள்ளேயிடுகிற்போன். (௩௩)

சொற்றகையவின்னபலதொல்லுலகினேரைச்
செற்றமொடுகொன்றவர்கள்செம்பொனவைகொண்டே
வெற்றிமிகுபாதகன்விரும்பியணையாத
கற்புடையமங்கையர்கள்காசினியிலுண்டோ. (௩௪)

கொன்றுதிரியுங்கொடியகூற்றமனையான்செய்
நன்றிகளிலொன்றறியுநன்றியதுவுண்டோ

சென்றுபடிகின்றதொருதீர்த்தமதுவுண்டோ
வன்றியிவனீந்திடுமெரும்பொருளுமுண்டோ. (௩௫)

எண்டிசைமுகத்தினமரொக்கடவுடன்னைக்
கண்டனனெனப்பரவுகட்டுரையுமுண்டோ
வுண்டலரிதாய்வளர்தலோருயிருமுண்டோ
மண்டனில்வதைக்கரியமன்பதையுமுண்டோ. (௩௬)

திண்டிறலின்வேட்டைபுரிசிந்தைமிகுதீயோ
னெண்டகவியம்பலுறினின்றுமிவன்முன்னும்
பண்டரொருபாரினிடைபண்ணவருபாவ
முண்டெனவெடுத்தினுமுரைத்திடவுமுண்டோ. (௩௭)

கட்களவுபொய்மைகொலைகாமமுறுகாமத்
துட்டரெனவேமருவுதூர்த்தர்தொழுமூர்க்கன்
மட்டறுகிராதரெனுமாகுலவரோடு
மிட்டமுறநாளுமுலகெங்குமுழல்கின்றான். (௩௮)

சத்தியமொழிச்சவுனகத்தலைவநாளுந்
துய்த்தல்பழுதென்றுபகர்தூய்மதுவுமுண்டே
பத்திதருபன்னகபணமுடிகிடந்த
வித்தலனவன்செய்பவம்யாதெனவுரைப்பாம். (௩௯)

துன்றியமதங்கர்பலதூர்த்தர்புடைசூழ
வென்றிதருவேடருடன்வேட்கைமிகுதீயோன்
மன்றலவிழ்கண்டகவனங்கடொறுகாடிச்
சென்றுபலதேசமவைசிலபகல்கழித்தான். (௪0)

மன்னுமிருவினையொப்புவந்தடைதலானு
மன்னதொர்திரோதமருளாய்வருதலானும்
பன்னருவிழாவணியெனப்பகர்தல்கேட்டுப்
பொன்னுலகெலாம்பரவுபூவணமடைந்தான். (௪க)

வேறு.

இடர்ப்பிறப்பிறப்பென்றோதமிருங்கடற்படிந்துநாளுங்
கடைப்படாதுயிர்க்கிரங்கிக்கதியருள்புரியநீடும்

படித்தலம்போற்றுகின்றபங்குனியுத்தரத்தின்
விடைக்கொடியேற்றிமிக்கவிழாவணிகடந்ததன்றே. (சஉ)

மதிதொடுசெம்பொற்றேரூர்மாடநீண்மறுகுதோறும்
புதுநறுங்கலவைச்சேறுபொலிதரமெழுகிக்கோலம்
விதிபெறவெழுதும்வாயில்வெண்ணிறப்பளிக்குத்திண்ணை
முதிர்நிலாவெறிப்பத்தூயமுளைகொள்பாலிகைவயங்க. (சங)

சீர்மணிமாடந்தன்னிற்சித்திரகூடந்தன்னி
லேர்பெறுமரமியத்தினெழுநிலைமாடந்தன்னிற்
றோரணவீதிவாயிற்சுடர்மணிமண்டபத்திற்
பூரணகுடநற்றீபம்பொங்குவெங்கதிரிற்பொங்க. (சச)

நீடுகோபுரவாயிற்கணிலாவுமிழ்நிலாமுற்றத்தி
னூடரங்கதனிற்செம்பொனம்பலந்தன்னிற்சோதி
கூடுநற்சதுக்கந்தன்னிற்கொடிமணிச்சித்திரஞ்சேர்
மாடகூடத்தினட்டமங்கலநின்றிலங்க. (சரு)

மிகுபுகழ்வேந்தர்விண்ணோர்மிண்டியவீதியின்கண்
மகுடநன்மணியின்குப்பைவயின்வயினலகிட்டெங்கும்
புகழ்பெறத்தெளித்தவாசப்புனிதநீரோடுபுத்தேளிர்
மகிழ்வொடுபொழிமந்தாரமாமலர்வாசம்வீச. (சசா)

மாமணித்தேர்களெங்குமாடமண்டபங்களெங்குந்
தாமநீள்வீதியெங்குந்தக்கபூம்பந்தரெங்கும்
பூமகளுறையுளெங்கும்பூங்கமுகரம்பைநாட்டிக்
காமர்பொன்னகரமென்னக்கடிநகரலங்கரித்தார். (சஎ)

வேறு.

செங்கமலத்திற்றிசைமுகன்மாயன்றேவர்கள்சித்தர்கண்முனிவர், புங்கவர்யாரும்புடைபரந்தீண்டிப்போற்றிநின்றிசைத்திடப்புகழ்யாழ், மங்கலகீதவிதத்துடன்பாடிமலர்தலைபுலகமங்கையரோ, டங்கண்வானத்தினழகொழுகியநல்லரம்பையர்நாடகநடிப்ப, (சஅ)

திண்டிறற்குலவுதிக்குபாலகர்தந்திசைதொறுஞ்சேர்ந்துசேவிப்பத், தண்டலல்குண்டோதரனகல்வானிற்றயக்குவெ

ண்மதிக்குடைநிழற்ற, வெண்டிசைவிளக்குமிருசுடர்மருங்கி ணிணைமணிச்சாமரையிரட்ட, விண்டலந்தயங்குவெள்ளிமால் வரைபோல்விடைக்கொடிமீதுநின்றிலங்க. (சகூ)

பண்டருவிபஞ்சிபாடிடுமொலியும் பல்லியந்துவைத்திடு மாலியுங், கொண்டல்சேர்கூந்தற்குங்குமக்கொங்கைக்கொ டியிடைப்பிடிநடைத்தீஞ்சொற், ெறுண்டையங்கனிவாய்த் தோகையர்நடிக்குந்துணைப்பதாம்புயச்சிலம்பொலியு, மெண் சாமுகத்துமண்டர்வானகத்துமெங்கணுஞ்சென்றெதிரேற.

திண்டிறற்குலவுதீர்த்தர்களேத்துந்திருவருணந்தியெம் பெருமான், மண்டுகாதலிற்சேர்வானவர்செம்பொன்மணி முடிதருபிரம்பொலியும், பண்டருவேதப்பாடலினொலியும் பன்னுதேவாரத்தினொலியுங், கொண்டசீர்வானத்தண்டகூட த்தின்கொழுந்துவிட்டதுபடர்ந்தேற. (ருக)

இன்னனவளஞ்சேரிந்திரசெல்வத்திலங்கியவீதியினலங் கூர், பொன்னலந்தயங்குமின்னனையிடங்கொள்பூவணமே வியபெருமான், பன்னருஞ்சிகரபந்தியின்மிக்கபைம்பொன் மால்வரையெனச்சோதி, மன்னியவலங்காரந்திகழ்ந்தோங்கு மணிநெடுந்தேரினில்வந்தார். (ருஉ)

வேறு.

இந்தநல்விழாவணியிடத்தெயினர்சூழ
வந்தமலரோனுநெடுமாலுமறியாத
வெந்தைபெருமானுமிகுமின்னருளினாலே
சிந்தைமகிழ்வோடுநனிசென்றுதரிசித்தான். (ருங)

நாதமுயர்விந்துவினுநாடரியநம்பன்
மேதகுவினோருடனல்வீதிகள்கடந்தே
பூதலமெலாங்குலவுபொற்சுவருடுத்த
கோதின்மணிசோதிவிடுகோயிலிடைபுக்கான். (ருச)

காதலுடன்மேவுகனகங்களவுகொள்வா
னேதுநிகழ்காலமெனவெண்ணிமனனூடே

போதுமவணீடுதெனியூசலெனவந்த
வீதிதனினின்றுவிளையாடல்புரிகின்றான். (௫௫)

பண்டறிவருங்கொடியபாதகனைவீதி
கண்டிடுபவத்தையுறுகாதலுடன்வெய்யோன்
றெண்டிரைகொடீர்த்தமதுசென்றொழிவனென்றுட்
கொண்டனனெனக்குடகடற்கிடைகுளித்தான். (௫௬)

முண்டகமிலங்குமணிகுண்டமதின்மூழ்கி
யண்டர்தொழுமுத்தியினடைந்திடுவனந்தோ
கண்டிடுவமென்றுவருகாட்சியதுமான
மண்டலம்விளங்குமதிவானவனுதித்தான். (௫௭)

வேறு.

ஆங்கவனையிருள்யாமத்தன்னதன்
பாங்குறுகொலைபுரிபரிசனங்களை
யிங்குநீர்வம்மினென்றெடுத்துவல்லைகூய்
நீங்கருகாதலானிசழ்த்தன்மேயினான். (௫௮)

நிகழ்த்தலொன்றுடையன்யானீவிர்கேண்மெனா
வுகப்புடன்யாமெலாமொருங்குகூடியே
புகழ்ச்சியினீடியபுரவலன்மனை
மிகுத்தகற்றனங்கொடுமீண்டுசெல்குவோம். (௫௯)

என்றவனியம்பலுமெயினர்நன்றெனா
வென்றிவேல்வேந்தனன்மனையின்மேவியே
தன்றனியிலக்கர்தபனியங்கொடு
மன்றல்சேர்மலர்த்திருவாயினண்ணினார். (௬0)

கடைத்தலைவாயில்காவலர்கள்கண்ணுறீஇ
யடுத்தவர்யாரெனாவையுற்றோர்சில
ரிடிக்குரலெனவதிர்த்தெழுந்துசீறியே
படைத்தலைவீரர்கள்படையின்மூண்டனர். (௬௧)

மூண்டனர்முறைமுறைமுடுகிமுன்னரோ
மாண்டகுதிறற்படைமானவேடருந்

காண்டகுகனற்பொறிகண் கள்சிந்தவே
யேண்டிகழ்வாயிலினிடைக்கணீண்டினுர். (சூஉ)

வேறு.

இடங்கொள்வானகத்தெறிகுவரோற்றுவரீர்ப்பர்
தொடர்ந்துசுற்றுவர்பற்றுவரடுத்துமெய்துளைப்பர்
படர்ந்துசெல்குவர்மீள்குவர்படைக்கலன்வழங்கிக்
கொடுஞ்சமர்த்தொழில்புரிகுவர்குருதிநீர்குளிப்பார். ()

தெரிவருந்திறற்சாரிகைகறங்கெனத்திரிவர்
குருதிவாய்தொறுங்கொப்பளித்திடவுயிர்குறைப்பர்
வெருவியோடுவர்மீள்குவர்வெள்குமுதெதிர்ந்து
பொருவர்மீண்டுமங்கிருவருந்தோள்புடைத்தெதிர்ப்பார்

வேறு.

எதிர்த்திருவிசும்பிடையெறிந்திடுவருள்ளங்
கொதித்திடுவர்செங்கைகொடுகுத்திடுவர்வெண்பல்
லுதிர்த்திடுவொன்பினையொடித்திடுவர்நெஞ்சின்
மிதித்துயிர்பதைத்திடவிதந்துடனடிப்பார். (சூடு)

தண்டிபெதிர்சென்றுசிலர்தாடலைதுணிப்பார்
கண்டமதனைச்சிலர்கள்கண்டமதுசெய்வார்
மண்டமர்புரிந்துசிலர்வன்கரமறுப்பார்
துண்டமதனைச்சிலர்கடுண்டமதுசெய்வார். (சூசு)

ஏவரும்வெலற்கரியவீறில்பெருவாயிற்
காவலர்தமிற்சிலமையாயிடைகலந்தே
கூவிளிகொளக்கொலைஞர்கோறல்புரிகின்றுர்
மேவும்விதிவந்தணையில்வெல்லவெவர்வல்லார். (சூஎ

வேறு.

வீடரிதாயவெம்போர்விளைத்தலும்வேந்தன்சேர்ந்த
நீடியமணிமுகப்புநிரைதொறுமிடிந்தநீள்வான்
கூடியமணிசேர்செம்பொற்கோபுரநிலைகுலைந்த
பீடுறுகின்றமாடப்பித்திகைபிறழ்ந்ததன்றே. (சூஅ)

பொருவின்மாளிகையிடத்தும்பூம்பொழிலிடத்தும்பொங்கி
யருவிபாயமுதவெள்ளத்தகலிருவிசும்பிற்றோன்றுந்
தருணவெண்ணிலாக்கொழிக்குஞ்சந்திரகாந்தச்சோதி
பரவியவிடங்களெங்கும்பரந்தனகுருதிநீத்தம். (சுகூ)

அந்நிலைதன்னின்மிக்கவன்னதொன்னகரினுப்பண்
கன்னவிறடங்தோள்வீரர்கம்பலைசெவிமடுப்ப
மின்னுவெம்படைஞர்யாரும்வெகுண்டனர்விரைவினீண்டி
மன்னியபுரிசைவாயில்வந்தனர்வளைந்துகொண்டார். (எ0)

ஆங்கவர்வெருவியெங்ஙனடைகுவமென்றுகொண்டு
நீங்கரும்வாயினீங்கிநீள்கடைப்புறத்துப்போந்து
தாங்கரும்வெகுளிவீரர்தூரத்திடத்தகைத்துத்
தீங்கறுமணிகுண்டத்திற்சென்றனர்திகைத்துவீழ்ந்தார். (எக)

இப்பெரும்புனனமக்கிங்கிருங்கதிதருமென்றேயோ
வப்பெரும்பயத்தாலங்தோவந்தநீர்குளித்தோர்யாரு
மெய்ப்படாடியங்கண்மீண்டெழுந்திலர்களம்மா
தப்பறவக்கணத்திற்றமுயிர்பிரிந்தாரன்றே. (எஉ)

வேறு.

நெற்றிதருகண்ணர்திருநீறிலருமெய்யர்
நற்சடிலசேகரர்கணுன்குதடங்தோளார்
பெற்றமதுகைத்துவருபிஞ்சகனையன்றி
மற்றுமொர்தெய்வந்தனைமனத்தறிகிலாதோர். (எங)

சோதிவிடுகின்றதிரிசூலர்சிவதூதர்
மாதிரம்விளக்குகதிர்மன்னுமணிதுன்னுங்
கோதில்பல்விமானமவைகொண்டவண்விரைந்து
நாதனருளான்மகிழ்வினண்ணினர்கண்மன்னோ. (எச)

தங்கொளியின்மிக்குயர்தனித்தனிவிமானத்
தங்கவரையங்கிலையினன்பினவைமேல்கொண்
டெங்கள்பெருமானுரியவின்னருளினேயோ
புங்கவர்தொழச்சிவபுரத்தினிடைபுக்கார். (எரு)

செப்புமவரிப்புடவிதேடவருபாவ
மப்புனலொளித்ததினகற்றினர்களென்னு
வொப்பரியதீர்த்தமெனவோர்ந்துலகமாடி
னெப்பவமுமாற்றுமெனயாமொழிவதென்னே. (எசா)

ஆதலினியாவர்களுமாதரவினென்றும்
வேதியர்தமக்குநிதிவேண்டியதொர்தானங்
கோதறவளித்துமணிகுண்டமதின்மூழ்கிற்
றீதில்சிவலோகமதுசென்றடைவரன்றே. (எஎ)

பூர்வமுறுபூவணபுராணகதைதன்னைப்
பேர்பெறவழுத்துமுயர்பிரமகைவருத்தத்
தோர்வரியபேருலகுணாக்குமெழுபான்மூன்
ரூறிவளிக்குமத்தியாயமிஃதம்மா. (எஅ)

வேறு.

பரிதிமடுவுறுபான்மையைநாளுமேபரவையுடைதிகழ் பார்தனிலோதுவோ, ரொருமையுடன்மனனூடதைநாடுவோ ருரியசெவிநுகருனமின்மேன்மையோர், கருணையுறுமிகுகா மருசீர்கொடேகருதியறைகுநர்பூசைசெய்காதலோர், மருவு முருவசிமாமுலைமீதரோவருடமொருபதினாயிரம்வாழ்வரே.

துன்மனன்சருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள் (௱உஅ)

துன்மனன்சருக்கச்சுருக்கவசனம்.

பிதாமாதா ஆசாரியர் அந்தணர் இவர்களை இகழ்ந்தவரும், அந்தணர் பொருளை அபகரித்தவரும், பொய்ச்சான்று புகன்றோரும், கன்னிகையைப் பழித்தோரும், கள்ளுண்டவளதுமுகத்தை மோர்ந்தவரும், அவளைச் சேர்ந்தவரும், பிரமகத்தி செய்தவரும், விடரோடுகூடியவரும், கற்புடைய மனைவியைவிட்டுப் பரத்தையரைச்சேர்பவரும், குலமகளிரைக்கலப்போரும், கணவர் சொற்கடப்பவரும், குழந்தைகளணியைத் திருடுவோரும், பொருளை விரும்பிப் பசுவைவிற்போரும், பதினெண் புராணங்களைப் பிரமாணமாகக்கொள்ளாதவரும், சிவாலயத்தையிடி

ப்பவரும், சிவநிந்தைசெய்பவரும், அறத்தைப்பழித்தவரும், அழித்தவரும், பொருள்கருதி விற்றவரும், அன்னத்தை விற்றவரும், பழித்தவரும், நூல்வழியொழுகாதவரும், மொழி பிறழ்ந்தவரும், வீணைப்பழி மொழிவோரும், தங்காரியநிமித்தம் பிறர்காரியந்தைக் கெடுத்தவரும், பரிதபிப்போரைப் பார்த்தவரும், திருநந்தவனம் கிணறு குளங்களைசெய்யச் சொல்பவரை யிகழ்பவரும், பிதாமாதா சிராத்தஞ்செய்யாதவரும், நம்பினோரை வதைப்பவரும், திருநீறணியாதவரும், திருவைந்தெழுத்தை மதியாதவரும், உருத்திராக்ஷத்தை நிந்திப்பவரும், கொடியகும்பிபாகமுதலிய நரகங்கள்சேர்ந்து பெருங்கொடுந் துன்பங்களை நெடுங்காலம் அநுபவிப்பர். அஹிம்சை உண்மைகூறல்முதலிய தருமங்களையுடையவர் விமானமேறிச்சென்று சுவர்க்காதிலோகங்களிலே போகங்களை அநுபவிப்பார்.

கபில தீர்த்தக்கரையில் வேதியர்குலத்திற் பிறந்தவனும், வேடரோடுகூடியிழிதொழில்செய்பவனும், துராசாரனுமாகிய துன்மனனென்பவன் ஒருவன் இருந்தான். அவன் தூர்த்தர்கள் முதலாயினரோடு கூடித் தன்வருணத்திற்குரிய முறையில் வழுவினேன். காமநூலைக் கற்றுப்பாடி நடிப்பவன். பிராமணர் மற்றும் பாலர் மாதர் முதலியோரைக்கொலைசெய்பவன். மற்றும் பலரைக்கொன்று அவர்கள் பொருளை அபகரித்து வாழ்பவன். இவன் புணராத கற்புடைய மடவாரில்லை. இவன்செய்த நன்மை ஒன்றுமில்லை. இவன் வழிபட்டதெய்வம்ஒன்றுமில்லை. இவன்புசியாதவுயிர்களில்லை. இவன்செய்யாத பாவங்களில்லை. இவன் பஞ்சமகாபாதகர்களாலேசூழப்பட்டுப்பலகாடுகளிலும்காடுகளிலுஞ்சுழன்று சிலகாலஞ்சென்றபின்பு பூர்வசிவபுண்ணியத்தினாலே இருவினையொப்பும்மலபரிபாகமும் வந்தமையால் திருப்பூவணத்திலே திருவிழாநடத்தலைக் கேள்வியுற்று அந்தக்ஷேத்திரத்தை அடைந்தான். அடைந்து பங்குனியுத்தரமகோற்சவத்திலே திருவீதியிலே திருத்தேர்மீது சிவபிரானைத் தரிசித்துப் பகற்பொழுது கழிந்தபின், பலவீதிகளையுங்கடந்து இராஜகிருகத்திலே புகுந்து திரவியங்களைந் திருடுங்காலத்தை நோக்கிக் கொண்டிருந்தான். அப்படியிருந்தவன் அர்த்தராத்திரியிலே கூடவந்த கொலைகாரப் பரிசனர்களோடு அரமனைப் பொக்கஷத்திலே பிரவேசித்து, அளவற்ற பொருள்களை யெடுத்துக்கொண்டு அரமனைக்கடைவாயிலை அடைந்தபோது, வாயில் காப்போர்கண்டு திருடரோடு போர்செய்யத்தொடங்கியவழித் திருடர்கள் பயந்து தப்பியோடி மணிகன்னிகைத் தீர்த்தத்தில் விழுந்து மரித்தார்கள். அங்ஙனமரித்தமையால், சிவபிரான ஆஞ்ஞைப்படி சிவதூதர்கள் விமானங்களுடன் வந்து இறந்தவர்களைத் தனித்தனி விமானத்திலேற்

நிக்கொண்டுபோய்ச் சிவலோகஞ் சேர்த்தனர். இங்ஙனம் அபுத்தி பூர்வகமாக அத்தீர்த்தத்தில் வீழ்ந்து மரித்தவருஞ் சிவலோகஞ் சேர்வராஞல், புத்தி பூர்வகமாக அத்தீர்த்தத்தில் ஸ்நாநம்பண்ணிச் சிரத்தையோடு சற்பாத்திரங்களிலே திரவியங்களைத் தானஞ்செய்வோர் சிவலோகஞ் சேர்வதிற்சிறிதும் ஐயமில்லை. இங்ஙனம் பிரமகைவர்த்தபுராணத்திலே எழுபத்து மூன்றுமத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

தருமஞ்ஞன்முத்திபெற்றசருக்கம்.

ஓதுநன்பலமாயுகமுறுவதாய்க்கேட்போர்
பாதகங்களைப்பற்றறத்துடைப்பதாய்ப்பின்னும்
காதல்கூர்மணிகன்னிகைமன்னுமோர்காதை
சூதமாதவன்சவுனககேளென்ச்சொல்வான். (க)

தெக்கிணந்தருதிக்கினிற்றிரைபுரள்பொருநைத்
தக்கதீரநீடலைமைசேர்தாபதர்நெருங்குந்
தொக்கவஞ்சிறைப்புட்குலந்துதைந்தபூம்பொதும்பர்
மிக்கதோர்தலம்வேணுநல்வனமெனவிளங்கும். (உ)

குலவுமவ்வனங்கொண்டதோர்குடதிசைமருங்கி
னலகில்பல்புகழடைந்தகோலாகலமெனும்பேர்
நிலவுமக்கிராமத்தினோர்நேரிலந்தணனீ
டுலகம்யாவையுமொருங்குநின்றேத்திடவுதித்தான். (ங)

அந்தணர்க்கெலாந்தலைமையாயங்கமோராறுந்
தந்திடும்புகழ்தரித்தநற்சதுர்மறையுணர்ந்தோன்
முந்துகின்றவெண்ணெண்கலைமுழுதுணர்மேலோன்
சிந்தையிற்றிருவஞ்செழுத்தடைவினிற்செபிப்போன். (ச)

நித்தநன்னியமத்தொழினிரப்பிடுநெறியோன்
புத்திரர்தரும்பவுத்திரர்பொருவருகிளைஞர்
மைத்தடங்கண்மங்கையரொடும்வாழுநமென்னுஞ்
சித்தநன்குணர்வேதசன்மாவெனத்திகழ்வோன். (ரு)

செங்கணேறெனத்தினந்தொறுந்தினந்தொறும்வளர்ந்து
கொங்குலாங்குழற்கோதையர்மனங்களிகூர்ந்து
துங்கமேவியகாமனேயெனவெழிறுதைந்து
மங்கலந்தருவடதிசைக்கிறையெனவாழ்நாள். (௬)

வந்தியாவருமணங்கமழ்மலர்ப்பதமிறைஞ்ச
விந்தமாநிலத்திரும்பொருள்யாவையுநுகர்ந்து
முந்தையூழ்வினைதிறம்பலான்மூப்புவந்தடைய
வந்தநான்மறையந்தணனுருயிர்துறந்தான். (௭)

அந்தவந்தணன்றந்தருளருமறைக்குலத்தோ
னிந்துவென்னநாடொறும்வளரெழிற்கலைமதியோன்
முந்தைநான்மறைசந்ததமுழங்கிடும்வாயான்
றந்தையிற்றிகழ்தருமஞ்ஞனென்னுநாமத்தோன். (௮)

சாற்றுகின்றவத்தருமஞ்ஞன்றனைத்தருதந்தைக்
கேற்றநூல்விதியிருங்கடனியாவையுமுடித்தே
நாற்றடந்திசையோடியனுனிலமெங்கும்
போற்றுகங்கையிற்போதுவான்புந்தியிற்றுணிந்தான். (௯)

அத்தன்மெய்த்தகுமங்கம்யாவுந்தெரிந்தோர்கும்
பத்தமைத்துநற்படாங்கொடுபுதைத்துவாயரக்கின்
முத்திரைக்குறியிட்டுயர்முத்திதானல்கு
முத்தரத்திசைகொண்டுமோணுக்கனேடுற்றான். (௧0)

வங்கவாரிதிவளாகத்துமருவியாங்காங்குத்
தங்குமாதவர்செங்கையிற்றானகன்கீந்து
பொங்குசிதநற்புண்ணியதீர்த்தங்களாடி
யங்கயற்கண்ணிபங்கன்மேவாலவாயடைந்தான். (௧௧)

அடைந்துமாநதியாடியேயருங்குலப்பிதிர்க
ளுடன்கலந்திடுமுனிவர்கடேவர்கட்குற்ற
கடன்கழித்தறுகண்ணிலர்கதியிலர்தாள
வடங்கொள்பூணணிமங்கையர்வனமுலையுண்போர். (௧௨)

விருத்தவேதியராதுலர்வேணவாவொழிய
வருத்தமேனியதழநறவமைத்திடுஞ்சேதாப்

பெருத்தகாதன்மெய்த்தந்தைநற்பெரும்பதம்பெறுவான்
கருத்தனுகியாங்குதவியேகணிப்பருந்தானம். (கங)

வேணிமேன்மிளிர்வெண்ணிலாமிலேச்சியகூட
லேணுநாயகிதன்னைமுத்தினம்பணிந்தேத்திக்
காணுமாறரிதாகியகடவுள்செம்பாகம்
பூணுலாமலைமங்கைசேர்பூவணமடைந்தான். (கச)

புடவிபோற்றுமப்பூவணங்கோயிலாக்கொண்ட
விடையுகைத்திடும்விண்ணவர்கோன்றனைவடுகக்
கடவுடன்பதங்கண்டுபின்கைகுவித்திறைஞ்சி
மடல்விரிந்தபூமாமணியோடையில்வந்தான். (கரு)

வேறு.

மண்டலம்புகழ்கொண்டமாமணிகுண்டநீரின்மணங்கமழ்
புண்டரீகமுநனையவிழ்ந்தபொதும்பர்நீடுசெய்பொழில்களு
மண்டராதியர்தானமும்புகலரியவாச்சிரமங்களும்
பண்டைநான்மறைபாடுமந்தணர்பழகிடுந்திகழ்கழகமும். ( )

மன்னுமாச்சிரமத்தினிற்குரமாதவம்புரிமாட்சியும்
பன்னுநன்கலைபயிலுமந்தணர்பன்னசாலைகளும்பொறி
துன்னுமாமயிலாலவந்தெழுதூமமுந்தழலோமமுங்
கன்னல்வேடனைவென்றசவுநககண்டுகண்களிகொண்டனன்.

சித்தநன்குதெவிட்டியாயிடைத்தேசுகால்வடுகேசனைச்
சுத்தமார்திலந்தூருவாக்கதைதுன்னுபூசைமுடித்துவந்
தத்திகும்பமகன்கனைக்கணைமைத்தளித்தருளத்தனை
முத்திதானடைவிப்பவெய்துபுமோகமோடதின்மூழ்கினன்.

மூழ்குமேல்வையினுழ்கடற்புனன்மொண்டெழுன்மழை பொழியவே, சூழ்தருந்திசைமாறிடும்படிதூவுமாலிகள்சிதறி நல், வேழ்வியங்கணன்விசையெழுந்துசெல்மிகுபதங்கடமிட றவத், தாழ்தலத்திடைவீழ்தலுற்றதுசங்கரன்றிருவருளி னல், (கசு)

மிக்கவத்தடம்வீழ்தல்கண்டுளம்வெருவியோடியெடுத்தன
ளக்கடத்தினிட்டவங்கமனைத்துமக்கணமாய்மலர்

தக்கநற்சதபத்திரத்தொடசோர்ந்தவுற்பலமாகவே
தொக்கவன்பினிறைஞ்சியந்தணர்சூழலுற்றிவைசொல்லுவான்.

அற்புதந்தனேயென்சொல்கேன்மிகுமறவிர்காளரிதரிதரோ
பெற்றதாதைபிறங்கெலும்புபெருங்கடத்திலிருந்துதா
ளெற்றவித்தவிலஞ்சிகாப்பணெழுந்துவீழ்ந்தரவிந்தமோ
டுற்றபானலதாகயானொருவேனுமேதிருவுடைமையேன். ( )

பாசமோசனதீர்த்தமென்பதுபண்டுகண்டதுகேட்டதாய்க்
காசிமாநகரத்தினும்மிதுகட்டுரைத்திடவொண்ணுமோ
பேசின்முன்னமருந்தவஞ்செய்பிதாக்களுங்கதிபெற்றனர்
பூசுராதிபர்போற்றுமிப்பதிபூர்வமாமிதுபுகலிலே. (உஉ)

ஈதுமுன்னரிழைத்தமாதவமீண்டுகண்டனனுகவிப்
போதெனன்குலவாணரும்புகழ்பொற்பின்வந்துபொருந்தினு
ராதலாலடியேனுமுய்ந்தனனதிகசற்குருவிரதனு
னுதவேதமுனகரடைந்தனனென்றுநின்றுநடித்தனன், (உங)

இன்னதன்மையனிங்கிலத்தினினென்னின்மேலவரின்றெனு
வன்னவந்தணர்தம்மைநீங்கினனுலயந்தனேயண்மியே
துன்னுநாகர்தலத்துநின்றுமொர்சோதிலிங்கமதாகியே
முன்னைநாளின்முளைத்தெழுந்தருண்மூர்த்தியைத்தொழுதேத்தினன்.

வேறு.

அருண்மேனிதரித்தருள்வாய்சரணமறிவுக்கறிவாமா னேசரண, மூரகாபரனுசரணஞ்சரணமொருமூவிலைவேற் கரனேசரணம், பொருளேயடியார்புகலேசரணம்பூதப்படை யாய்சரணஞ்சரணந், திருமாலயனறிவரியாய்சரணந்திகழ்பா ற்கரபுரசிவனேசரணம். (உரு)

கழைவேளையெரித்தருள்வாய்சரணங்கனகாசலவிற்கர னேசரணம், பொழில்சேரநிறைந்தருள்வாய்சரணம்பூர்வந்த ருபுண்ணியனேசரண, மொழியாவுலகமொளிப்பாய்சரண மொருவெஞ்சமனையுதைத்தாய்சரணஞ், செழுநான்மறையி ன்முடிவேசரணந்திகழ்பாற்கரபுரசிவனேசரணம். (உசு)

ஒருமானிலகோருருவாய்சரணமோதுந்தொழிலேந்துடையாய்சரணம், புரமூன்றெரிசெய்தருள்வாய்சரணம்பொருமால்விடைமேல்வருவாய்சரணம், பெருகாதரவேபிரியாய்சரணம்பிறைவேணியனேசரணஞ்சரணந், திரையார்புனல்சேர்சடையாய்சரணந்திகழ்பாற்காபுரசிவனேசரணம். (உஎ)

அடைவார்வினைதீர்த்தருள்வாய்சாணமருளாலறியும்பொருளேசரணங், கடல்சேர்விடமுண்டவனேசரணங்கமலன்றருகங்கையனேசரணஞ், சுடர்சேர்சுடலைப்பொடிபூசிடுநற்சுகரூபமதையுடையாய்சரணஞ், செடிசூழ்மிகுகற்பகநன்னிழலிற்றிகழ்பாற்கரபுரசிவனேசரணம். (உஅ)

மாயாவுருவாரமலாசரணமாலானவர்பாலேலாய்சரணந், தாயாயுலகந்தருவாய்சரணந் தன்னடியார்கட்கருள்வாய்சரணம், பேயோடாடும்பெருமான்சரணம்பிரிவருதிவ்வியவுருவாசரணந், தீயேந்தியசெங்கானேசரணந்திகழ்பாற்கரபுரசிவனேசரணம். (உகூ)

பொருமதகரியுரிபோர்த்தாய்சரணம்பொதுவினினடமிடுபுனிதாசரணம், வெருவரல்விடவருள்விகிர்தாசரணம்வேதபராயணநாதாசரண, மரியயனடிபரவமலாசரணமடல்விடைதருகொடியரனேசரணந், திருமணியுமிழ்கட்செவியணிமகுடந்திகழ்பாற்கரபுரசிவனேசரணம். (௩0)

பத்தர்விரும்புவரத்தினைநித்தம்பரிவான்மிகவுந்தருவாய்சரணம், புத்திகொளுத்தார்புந்திபுகுந்தவர்பூசனைகொண்டருளீசாசரணம், தத்துவஞானமளிப்பாய்சரணஞ்சஞ்சிதபாசமறுப்பாய்சரணஞ், சித்தியுமுத்தியுமிக்கருள்புரியுந்திகழ்பாற்கரபுரசிவனேசரணம். (௩க)

அட்டகுணஞ்சேரமலாசரணமாதுலர்தம்மையளிப்பாய்சரண, மெட்டுருவாகியவிறைவாசரணமெங்குநிறைந்தருளேந்தாய்சரணங், கட்டமுநோயுங்கவர்வாய்சரணங்கதியருள்பரபகமானேய்சரணஞ், சிட்டர்தினந்தொழுந்தேவேசரணந்திகழ்பாற்காபுரசிவனேசரணம், (௩உ)

வேறு,

என்றின்னனபன்னியிறைஞ்சுதலுமிமவானருளுமுமை யாளிடமாம், பின்றங்கியசெஞ்சடையெம்பெருமான்பெரி துந்திருவுள்ளமலர்ந்தருளி, நின்றன்புமனத்துறுதருமஞ்ஞ னேர்கண்டிடநல்விழிகல்கியரோ, வன்றங்கலராசனன்மாலறி யாவத்தன்பரமுத்தியளித்தனனே. (கஙு)

அத்தன்பரமுத்தியளித்தருளியமரும்பொழுதினருடங் கியநற், சித்தங்களிகூர்செழுநான்மறைதேர்திகழ்ஞானசுகோ தயமாதவர்காண், முத்தந்திரைதத்தியதன்கரையின்மோதுங் கடல்சூழ்முதுபாருலக, மித்தன்மையையுனித்தர்மஞ்ஞ னேத்துந்துதிபன்னிவியந்தனரால். (கச)

தருமஞ்ஞனேச்சந்ததமும்புகழ்வோர்சாமீபமதிற்றனெ ய்திடுவா, ரிருதஞ்செவிகொண்டிடுவோர்கையினல்விலகும்பர முத்தியையெய்திடுவார், பரவுந்தனையிற்படர்கின்றிடுவோர் பரிவாலிவைபன்னினரேலவர்தா, முறைதங்குடல்விடுறுகா லரன்வந்துறுதாரகமந்திரமோதுவனல். (கரு)

வேறு.

அங்கவருபதேசந்தனையுற்றேயரியவிமானத்துரிமையினே றிச். சங்கரனருள்கூர்கிங்கராராவார்சரதமிதருள்வழிசெவியி னிறைப்போர், வெங்கனலாயிரம்வேள்வியர்வேள்விமேய நல்வாசபேயம்மோர்நூறு, பொங்குலகஞ்செய்தபுண்ணிய கண்ணுவர்பொழில்புரிபாவமுமொழிகுவரன்றே. (கசா)

வேறு.

பிரமகைவர்த்தமாம்பெரும்புராணத்திற்
றருமஞ்ஞன்காதையத்தியாயஞ்சாற்றிடி
னருமையிங்கெழுபஃதைந்நாலதிற்
கரைதருசவுனககருத்திற்காண்டியால். (கஎ)

வேறு.

தருணமெய்ச்செழுந்தழல்வளர்த்தநர்மஞ்ஞனுக்குநற் கதியளித்தநின், பரிதிதொட்டபைந்தடமதுற்றசிர்ப்பரவைசுற்

நீடும்படியிடத்தரோ, கருதியிற்பெருங்கதைபடித்துளோர்
கருணையிற்றினஞ்செவிநிறைத்துளோ, ராருணலத்தினங்கண
னுருக்கொடேயரனிடத்துவந்தருகிருப்பரோ. (௩அ)

தருமஞ்ஞன்முத்திபெற்றசருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள். (ருசுசு)

தருமஞ்ஞன்முத்திபெற்றசருக்கச்சுருக்கவசனம்

தக்ஷிணதிக்கிலே தாமிரபர்ணிநதிக்கரையிலே வேணுவனமென்னும் க்ஷேத்திரத்துக்கு மேலத்திசையிலே கோலாகலமென்னுங் கிராமத்திலே, வேதசன்மாவென்னும் பெயருள்ள ஒருபிராமணன் இருந்தான். அவன் நாலுவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும் மற்றுங் கலைகளையும் ஓதியுணர்ந்தவன், நித்தியகர்மங்களை வழுவாதுசெய்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விதிப்படி மெய்யன்பொடு ஜபிப்பவன். புத்திரர் பௌத்திரர்களோடுகூடிக் குபேரனுக் கொப்பாகவாழ்பவன், அவனுக்கு மூப்புப்பருவம்வந்து தேகவியோகம் அடைந்தனன், அடைந்த பின்பு அவனுடைய புத்திரன் தருமஞ்ஞனென்னும் பெயருடைய ஒருவன் பிதாவைப்போல வேதமுதலியவற்றை ஓதியுணர்ந்து ஒழுக்கத்திலே வழுவாதவனுதலால், தன்னுடைய பிதாவுக்கு அந்தியேஷ்டியை அன்புடன்முடித்துப் பிதாவின் அங்கமுழுவதையும் ஒருகடத்திலே அடைத்து வஸ்திரத்தினலே வாயைமூடி அரக்குமுத்திரைவைத்துக் கங்கைநதியிலே இடும்வண்ணம் எண்ணி, மாணுக்கரோடு உத்தரதிசை நோக்கிச்சென்றான். சென்று சிவஸ்தலங்களிலே பெரியோர்களுக்குத் தானங்கள்கொடுத்துத் தீர்த்தங்களிலே ஸ்நாநஞ்செய்து, மதுரையம்பதிசேர்ந்து, தீர்த்தங்களிலேமூழ்கித் தானங்கள்கொடுத்து மூன்று தினந்தங்கி ஸ்ரீமீநாக்ஷிசுந்தரேசுரரைத் தரிசித்துத் திருப்பூவணஞ்சேர்ந்து சிவலிங்கப்பெருமானைத் தரிசித்து, மணிகன்னிகைத் தீர்த்தக்கரையைஅடைந்து, வயிரவக்கடவுளை எள்ளு அறுகு அட்சதை இவைகளினலே பூசித்து, அஸ்திகடத்தை அக்கரையிலே வைத்துவிட்டு அத்தீர்த்தத்திலே மூழ்கினன். மூழ்கும்போது பெருமழை பெய்தமையால் விரைந்தெழுந்து கரையேறும்பொழுது, கால் இடறி அஸ்திகடம் அத்தீர்த்தத்திலே விழுந்தது. உடனே யோடி அக்குடத்தையெடுத்தவழிச் சிவபிரான் திருவருளினலே அக்குடத்திலடைத்த எலும்புமுழுவதும்

தாமரைமலரும் உற்பலமலருமாக விருக்கக்கண்டு பெரிதுமகிழ்ந்து அம் மணிகன்னிகாதீரத்திலே பர்ணசாலைகளிலே வசிக்கின்றமுனிவர் குழா ங்களிடத்தேபோய் நிகழ்ந்தவைகளை விஞ்ஞாபித்து, இந்தக்ஷேத்திரம் ஸ்ரீ காசிக்ஷேத்திரத்தினும் ஏற்றமுடையதாம். என்னுடைய பிதாமுத லியோருங் கதியடைந்தனர்' என்று கூறிச் சிவாலயஞ்சேர்ந்து, சிவ லிங்கப் பெருமானைத்தரிசித்துவணங்கித் துதித்தபொழுது, அவ்வருட் குறியினின்று சிவபெருமான் இடபாருடராய்த் தோன்றித் தரிசனங் கொடுத்துத் தருமஞ்ஞனுக்கு நற்கதியும் அருளி மறைந்தருளினர். தருமஞ்ஞனைப் புகழ்வோரும் அவன்றுதியைப் படிப்போரும் பாவங் கள் நீங்கிச் சுவர்க்கலோகஞ்சேர்வர். இங்ஙனம் பிரமகைவர்த்த புரா ணத்திலே எழுபத்தினாலாமத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

ஆறவது

உற்பலாங்கிபதியையடைந்தசருக்கம்.

தற்பரத்துடன்றிகழ்சவுனகப்பெயர்
முற்றுணாருந்தவமுனிவகேட்டியாற்
சொற்றிடற்கரும்பரிசுத்தமேவிய
நற்கதைதன்னையாகவிற்றுவாமரோ. (க)

இம்மைநற்றவமுழந்தெம்பிரானிடத்
தம்மைதன்னடியிணையருச்சித்தேத்தியோர்
கொம்மைசேர்வரிமுலைக்கோதில்கொம்பனுள்
கைம்மைநீக்கியமணிகன்னிகைப்புனல். (உ)

முன்னருந்தவம்பலமுற்றியன்னைதன்
பொன்னடிக்கமலத்திற்பூசையாற்றிய
வன்னவள்காதையையறைதிருநதீ
யென்னலுங்கேண்மினோவென்றியம்புவான். (ங)

துங்கபத்திரையெனுந்தூநதிக்கரை
தங்கியபுண்ணியகிராமந்தன்னில்வாழ்
பங்கயன்னையகோபாலனென்றொரு
துங்கவேதியன்மறைக்குலத்திற்றோன்றினான். (ச)

அன்னவன்றன்னிடத்தவதரித்ததோர்
கன்னிமான்கன்னல்வேள்கணைக்கிலக்கனுள்
பொன்னுலகத்தினிற்புலவர்போற்றிட
மன்னியவுலகினில்வந்துதோன்றினுள். (ரு)

முந்தைநாளிவளுறின்முகில்வணன்கடற்
செந்திருமாதினைச்சிந்தைகொண்டிடா
னந்துநான்முகனுநாமாதைநண்ணிடா
னிந்திரன்வேண்டிலனிந்திராணியை. (சா)

கற்பகஞ்சேர்தருகாமவல்லியோ
கொற்றவில்வேளையாட்கொள்ளுந்தெய்வமோ
வெற்றியந்தணன்புரிமெய்த்தவங்கொலோ
மற்றவடன்னையான்மதிக்கற்பாலதோ. (எ)

நிறையிருட்சைவலநீலமாமுகில்
குறைவில்சீர்க்கொன்றையின்கோலந்தாங்கியே
பிறையொடுபெருந்திருப்பிறங்கன்மேலணிந்
தறல்விரிபாளைசேரளகபந்தியாள். (அ)

கொம்மைசேரமுதநற்கோதிலாக்குளிர்
செம்மதிபோன்றொளிர்திருமுகத்தினுள்
வெம்மைநீடியபுகழ்வேனில்வேடிருக்
கைம்மிகுஞ்சிலைநுதற்கவினிலங்குவாள். (கூ)

தாமநற்றூழ்குழைதந்தபொற்புறு
மாமணியூசல்போல்வயங்குகாதினுள்
காமசங்கீதமேகலந்தகாமனூற்
பாமணமொழுகுசெம்பவளவாயினுள். (கO)

சேயுயர்விசும்புறுதிங்கள்போன்றொளிர்
வேயுறுநித்திலம்விளங்குமூரலாண்
மாயவனேந்தியவண்ணவால்வளை
யாயகந்தரத்தினிலமைந்தபூணினுள். (கக)

இனமிகுகயற்கண்மூண்டிகல்செய்யாமலே
துனிவழியடைத்துநேர்துலங்குதுண்டத்தாள்

புனமுறுபசுங்கழைபொருந்துகின்றதோட்
கனவளைதாங்கியகாந்தட்கையினள். (கஉ)

கோதில்பூவணத்தினுங்கும்பகோணத்துங்
காதல்கூர்விண்ணவர்கரந்துதாங்கொணர்ந்
தாதிகாலந்தருமமுதகும்பமிப்
போதுசேர்ந்தனவெனப்பொலிந்தகொங்கையாள். (கஙு)

தூமணிகன்னிகைச்சுழிகொளுந்திமேன்
மாமணிவயிற்றுறுமயிரொழுங்கினள்
காமருசிறப்புறுகலைவல்லோர்களு
மாமதியாலறிவருமருங்குலாள். (கச)

ஆர்ந்தமாமணிதிகழும்பொன்மேகலை
பாந்தளின்றெருகுபணம்பரித்தவல்குலாள்
வார்ந்தநெட்டிலையொடுவயங்குபூங்குலை
சார்ந்திடுமரம்பைநேர்தருகுறங்கினள். (கரு)

கருதரிதாயகற்கடகந்தன்னைநேர்
தருமழகியமுழந்தாள்வயங்குவாள்
இருதமாலையில்விளையாடுகின்றநற்
றிருமிகுமணிவரால்சேர்ந்தகாலினள். (கசு)

எண்ணுவமேயமுமிசைக்கலின்றெதிர்
நண்ணுவமானமுநடுவினுவினோர்
கண்ணுறநிறுப்பவேள்கருத்தமைத்துடன்
பண்ணியபொற்றராசெனும்பரட்டினள். (கள)

இரதிகாந்தன்கலையெழுதுபுத்தக
மருவியவிருபுறவடிவயங்குவா
ளருளுடனுரியபேடாடல்கொண்டிடும்
பரிபுரவொலிமிகுபதாம்புயத்தினள். (கஅ)

நாதவேதம்பயினற்குலாதிப
காதல்கூரின்பகற்கற்பின்மேதகு
மாதராண்மலர்தலையுலகமாண்புற
வோதுமுற்பலாங்கியென்றுரைக்கும்பேரினள். (ககூ)

இந்தநல்லுலகினர்யாருமேத்திடச்
சுந்தரமெய்யினிற்றுலங்கிநாட்குநா
ளந்தநன்மடநடையன்னமன்னவள்
சந்திரகலையெனத்தான்வளர்ந்தனள். (௨0)

பக்கமோடன்னவட்பயந்துளோர்கடாந்
தொக்கிருந்துளங்களி துளங்கவோர்நனுண்
மைக்கருங்கண்ணியைமாமணஞ்செயத்
தக்கவர்யாரெனத்தம்மிற்றேர்ந்தனர். (௨௧)

இன்னணந்தம்முளத்தெண்ணியெண்ணியே
யன்னவரிருவருமாயுங்காலையிற்
றன்னிகரந்தணனொருவன்றான்மகிழ்
மன்னியமணிக்கடைவாயில்சார்ந்தனன். (௨௨)

மன்றல்செய்விருப்புடைமறைவலாளன்முன்
சென்றவன்சொன்றியீகென்றுசெப்பலு
நன்றுசேரொழிவினைநாடித்தேவனென்
றொன்றியவுள்ளநின்றாசலாடினன். (௨௩)

பழகியநான்மறைபயிலுமந்தண
னழிவிலாப்பெருந்திருவழகுங்கோலமுங்
குழலுடன்யாவையுங்குறிப்பிற்கண்ணுறீஇக்
கழிபெருங்காதலான்கழறன்மேயினான். (௨௪)

மேவினையாரைநீமிக்கவன்புகூர்
யாவனின்றந்தையெங்கேகுகிற்றியென்
பாவையுமன்னமும்பரிந்துநல்குவேன்
மாவிரதீயுரைவழங்குகென்னவே. (௨௫)

என்னலுமதற்கிசைந்தின்சொல்வாய்மையாற்
கன்னிசேருவகையங்கடற்குளித்தனன்
றன்னுணர்விழந்துரைதளர்ந்துதேறினன்
பின்னருந்தன்னுடன்பேசலுற்றனன். (௨௬)

மங்கலமவுட்கலியவிப்பிரன்றரு
திங்கள்போற்கலைமதிசேர்ந்தமைந்தன்யான்

றங்கியபிரமசுற்சரியம்பூண்டுளேன்
பொங்குமாதவம்பலபுரியும்புந்தியேன். (உஎ)

அருமறையங்கமோராறுமாய்ந்துளேன்
குருவருளுடைமையேன்கோதினின்மகட்
டருதியேலென்கையிற்றருவசாமென
வுரியமோனத்துடனுற்றிருந்தனன். (உஅ)

ஆங்கவன்மோனமோடிருந்தகாலையிற்
றூங்கரும்விருப்புடன்சார்ந்துதன்மனை
வாங்குவினுதலியைவரவழைத்தனன்
பாங்குடையந்தணன்பகர்தலுற்றனன். (உகூ)

நம்பெருந்தவத்தினனமதுகற்பகக்
கொம்பினைமணஞ்செய்வான்குறித்தொரந்தண
னிம்பரினடைந்தனனிருக்கின்றானென
வம்புலாமுலையவண்மகிழ்ந்துவாழ்த்தினள். (௩௰)

அங்கதுபோழ்தினினரியகேதனங்
தங்குபூம்பந்தர்கள்சமைத்துச்சார்ந்தநற்
பங்கமில்பல்லியந்துவைப்பப்பாவைதன்
மங்கலமணவணிமரபினாற்றினர். (௩க)

அறுசுவையடிசிலந்தணர்கட்காற்றியே
மறைவழிமணமகன்மலர்ப்பதங்கழீஇ
யறையிருகரங்களினளிக்கமாதொடுங்
குறைவில்சீர்மனைமிசைக்கொண்டுசேர்த்தினர். (௩உ)

தாவில்சீர்க்கன்னிகாதானநல்குவான்
காவிசேர்தடங்கணாள்காண்டகப்புனல்
பூவுறழ்செங்கையிற்புகாமுனன்குயிர்
மேவியமணமகன்வியோகமாயினன். (௩௩)

ஆண்டகையுயிர்பிரிந்தவனிசேர்தலு
மாண்டனனென்றுகன்மாதர்மைந்தர்கள்
காண்டலுநடுங்கிமெய்கலங்கியேங்கியே
யேண்டகவெடுத்தணைத்தினிதியம்பினர். (௩௪)

பொற்கொடிமடந்தையிப்போதுபாக்கியம்
பெற்றிலளென்றுதாம்பேசிப்பன்முறை
மற்றவட்புல்லியேவாய்புலம்பிபின்
றற்புதமெய்தினரரற்றுகின்றனர். (௩௫)

அந்தணன்மணப்பிரேதத்தையன்பினுன்
முந்தைநூல்விதிவழிமுறையிற்கொண்டுதான்
றந்திடுமந்தியச்சடங்கிழைத்தபின்
வந்தனர்தம்பதிவழிக்கொண்டேகினர். (௩௬)

பளபளத்திளகிநற்படீரகுங்குமக்
களபமுங்கியமுலைக்காமர்கன்னியுந்
தளரிடையன்னையுந்தந்தையும்பெருங்
கிளைஞருநெஞ்சகங்கிலேசமுற்றனர். (௩௭)

பின்னர்முத்திங்கடான்பெயர்ந்துசெல்லவக்
கன்னியைமணஞ்செய்வான்கருதிச்சேர்ந்தரோ
வன்னவந்தணனுநீரங்கைதாங்குமுன்
றென்னிலேசேருயிர்துறந்துபோயினன். (௩௮)

மங்கையர்க்கரசியைமாமணஞ்செய்வான்
றுங்கமோடணைகுநர்தம்மைத்தூக்கினோர்
பங்கமிலாதநற்பத்திரட்டியோர்
தங்களாருயிர்தனைத்தணந்துபோயினர். (௩௯)

மற்றவள்பொருட்டிவர்மாய்ந்தபின்னரே
பெற்றருளன்னையும்பிறங்குதாதையும்
வெற்றுடம்பாகவிண்விரைந்துபோயினர்
பொற்றொடிதான்றனிபுலம்பிவைகினள். (௪0)

நீடியகிளைஞரானிந்தையுற்றனள்
கூடியேயணைதருகொழுநர்க்கூட்டிடும்
பீடுறும்பெரும்புனற்பிறங்குநற்றலந்
தேடியேயெண்டிசாமுகமுஞ்சென்றனள். (௪க)

ஓதுநல்லுண்டியுமுறக்கமுங்கடிந்
தேதமிறீர்த்தங்களெங்குமாடியே

போதவிழ்பொழிதிகழ்பூவணந்தனிற்
காதலினடைந்தனள்காமர்கன்னிகை. (சஉ)

படர்ந்தெரியுமிழ்கொடும்பாலைசேர்வில
நடந்திடும்வெம்மையானன்புனற்றரு
தடந்தெரிகுற்றதிதாகமோடுரு
வடந்திகழ்பூண்முலைமடந்தைகண்டனள். (சங)

பண்டருமறையவர்பன்னசாலையும்
புண்டரிகச்செழும்பொய்கையும்புக
ழெண்டகுமிருந்தவரியைந்திலங்குபூந்
தண்டலைசூழ்மணிகுண்டந்தன்னையே. (சச)

வெள்ளிடைவெயிலின்மெய்வெதும்பிவேர்வர
வுள்ளநொந்தடிபெயர்த்தியங்கியேயுராய்த்
தெள்ளுதீம்புனன்மிகப்பருகித்தேக்கியே
யள்ளனீர்த்தடங்குடைந்தாடினளரோ. (சரு)

தடமடுமூழ்கியதபோபலத்தினு
னிடைவிழுநாளறவிருந்தவம்புரி
தொடர்வுறுமருள்விடுசோதிதுன்றுமெய்
முடிவறுகாலவமுனியைக்கண்டனள். (சசா)

பன்னிருகான்முறைபடிபஞ்சாங்கமாய்
மன்னியபொன்னடிவணங்கிவீழ்ந்தெழீஇ
யன்னவள்கழறலோடணுகலின்றியே
நின்னருள்புரியெனநேர்கின்றளரோ. (சஎ)

சின்மயமாகியசிவானுபூதிசேர்ந்
தந்நிலைதிரிந்தவனன்னமென்னடைக்
கன்னிகைதன்னைநேர்கடைக்கண்டாக்கியே
மூன்னுறுகாதலான்முநிவன்கூறுவான். (சஅ)

சீர்மிகுமாதராய்சேர்கன்குநீ
யார்கொலோவெங்கிருந்தேகுகிற்றியா
னேர்தருகணவன்யார்நிற்பயந்தவன்
பேரெதிங்கடைந்ததென்பேசுவாயென்றான். (சகூ)

அகங்குதுகலிப்பவேயரியமாதவன்
மிருந்தபேரன்புடன்விளம்பக்கேட்டுள
மகிழ்ந்தனள்பாக்கியவதியும்யானெனத்
திகழ்ந்தசெம்பவளவாய்திறந்துசொல்லுவாள். (ருo)

வேறு.

நெடுங்காலந்தவமுழந்துநீள்சடையோனருள்படைத்து நீண்டபார்மேற், படர்ந்தேறும்பல்புகழ்சேர்பங்கயனையனைய தவப்படிவமென்னு, வுடன்சேருமுயிர்த்துணைவருயிர்துறந் துமுயிர்சுமந்திங்குழலுமிக்க, கொடும்பாவியெனதுநிலைகூற ரிதாயினுஞ்சிறிதுகூறக்கேண்மோ. (ருக)

தொன்மறையோர்புகழ்ந்தேத்துந்துங்கபத்திரையெனு மோர்தூநதிப்பால், மன்னுமதன்கரையின்கண்மருவுபுண்ணி யகிராமத்துவாழ்வோன், கொன்னவிலந்தணர்கோமான்கோ பாலன்றந்தகுலக்கொடியேனுனே, யிங்கிலத்திற்பிறந்தவன் றேயெல்லோருமேசுதற்கிங்கிலக்காய்நின்றேன். (ருஉ)

இங்கதுவுமிசைக்குவன்கேளேனையளிப்பவெனைப்பயக் தவெந்தையந்தோ. மங்கலமாமறைவிதியின்மணவாளர்செங் கையினின்வழங்கும்வேலைத், துங்கமுறுமைந்நான்குதுணை வராருயிர்துறந்துதுறக்கஞ்சேர்ந்தா, ரங்கதனலடியேனுமரு ங்கணவற்பெறவேண்டியடைந்திட்டேனல். (ருங)

முன்னைவினையின்பயனேவிம்மையில்யான்செய்தபவ மூண்டதேயோ, கன்னியெனப்பேர்படைத்துங்கலங்கழிந்த காரிகைபோற்கலங்காநின்றேன், றன்னிகராகின்றவெழிரு ங்குமடமங்கையர்கடங்கண்முன்ன, ரென்னேயோவென் னேயோவின்னமும்யானுயிர்சுமந்திங்கிருக்கின்றேனல். (ருச)

மிக்கார்வத்துடன்கௌரிவிரதமநுட்டித்துமுன்னைவிதி யினாலே, யெக்காலுமிழைத்திடுமுத்தியாபனநீயிழப்பவிஃதி யைந்ததென்று, முக்காலமுதலியனமுறையானேமுற்றறி ந்துமொழியுமந்தத், தக்கார்கொளம்முநிவன்ஞானக்கண்ணா லுணாந்துசாற்றினனே. (ருரு)

அலர்கதிர்வெய்யோன்றீர்த்தத்தங்கணன்றனருளதனு லாடலாலே, நிலவலயந்தனிற்செய்தநீண்டகொடும்பாதகமு நீங்காநின்று, மலிபுகழ்சேரித்தீர்த்தமான்மியத்தினன்மிகுமங் கலமுமாகு, முலகமெலாம்பணிந்தேத்தவுயர்தவநீபுரியும்வ கையுரைப்பக்கேண்மோ. (ருசு)

பைந்தடஞ்சேர்தருமுட்டாட்பங்கயப்பொற்பூவினெடு ற்பலங்கைக்கொண்டு, மந்திரதந்திரம்பொருந்தவாலுகவேதி கைசதுரம்வகுத்தமைத்தே,யந்தரியையாவாகித்தக்கற்பவிதி பூசையாற்றினின்பாற், சுந்தரிநேர்வந்துநிற்பொற்சுமங்கலிய ந்தந்தருளுஞ்சுடர்வேற்கண்ணுய். (ருஎ)

என்றுமுநிவரனிசைப்பவேந்திழைநலிருங்கணவற்பெ றுவான்வேண்டி, நன்றிதெனமகிழ்ந்தந்தனன்முநிவனுச்சிரம கணுகிப்பாங்கா, லொன்றியவன்புடன்விதிநின்றுமையாடன் திருநோன்பையுவந்துநோற்றே, யன்றுடனுத்தியாபனஞ்செ ய்தருங்கணவன்றனையருளினடைந்தாளன்றே. (ருஅ)

இத்தகையதீர்த்தத்தினினிதாடவிடர்ப்பிறவிக்கடற்ப டாவே, யுத்தமசற்குலத்தினில்வந்துற்பவித்தவுலகமெலாமுவ ப்பினுலே, நித்திலத்தையொத்தநகைநேரிழைதன்வைதவ்வி யநீக்கலாலே, பத்தியுடன்மடவாரும்படிந்தாடக்கடவர்தினம் பரிவிற்பாங்கால். (ருகு)

வேறு.

இடபநல்விரவிதன்னிலெழிறருமிந்துவாரத்
துடனிகழ்நடோளந்தவோடையினுடிமன்னுங்
கடனுறுமிக்ககாமக்கலங்கழிமகளிரானேர்
தொடர்பினல்வருபிறப்பிற்சுமங்கலியாகிவாழ்வார். (சுo)

கோதின்மங்கலியாய்க்காதற்கொழுநனைக்கூடுகின்ற
மாதரானந்நீராடின்மகிழ்தருமகப்பேறுண்டாங்
காதலிற்கலந்தகாமர்கன்னியர்கணவற்சேர்வர்
மேதகுத்தியாபனத்தால்விரதநற்பலங்களுண்டாம். (சுக)

வேறு.

அற்பினேங்குசீரானடிக்கண்வாழற்புதந்தருமருடவத்தின, னுற்பலாங்கிதன்கதைபடித்துளோருய்த்துணர்ந்துதஞ் செவிவழிக்கொள்வோர், கற்குமாண்பினேர்கலியகத்தரோகட்டவெங்கொடும்பயமகற்றியே, மற்றையாண்டையோர்வளமைபெற்றுமேல்வைத்திடுங்கதிமருவுகிற்பரே. (சுஉ)

உற்பலாங்கிபதியையடைந்தசருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள் (சுஉகூ)

உற்பலாங்கிபதியையடைந்தசருக்கச்.
சுருக்கவசனம்.

துங்கபத்திரை நதிக்கரையிலே, புண்ணியகிராமத்திலே, கோபாலனென்னும் பெயருள்ள ஒருபிராமணன் இருந்தான். அவனுக்கு உற்பலாங்கி யென்கிற நாமமுள்ளவளாய்ச் சாமுத்திரிகா சாஸ்திரத்திற்சாற்றியபடி அமைந்த இலக்கணங்களை யுடையவளாய் ஒருபுத்திரியிருந்தாள். அவள் பிறைமதிபோல வளர்ந்து மணப்பருவம் அணையும்நாளிலே, ஒரு நாள் தந்தைதாயர் இருவரும் நம்முடைய அருமைப்புத்திரியை மணஞ்செய்தற்குரிய வரன் யாவனே என்று தம்முள்ளே ஆராய்ந்துகொண்டிருக்கும்போது, அவர்கள் வீட்டுத் தலைவாயிலின்கண்ணேதேவனேவென்றுமதிக்கத்தக்கஒரு பிரமசரியப்பிராமணன்வந்து அன்னப்பிக்ஷை கேட்டனன். அவனைக் கோபால வேதியன் கண்ணுற்று இவன் நம்முடைய பெண்ணுக்கிசைந்த வரனே யென்று கருதி, என்னுடைய அன்னமென்னடைக் கன்னிகையுடன் அன்னமுங்கொடுப்பேன் உன்னுடைய தந்தை முதலாயினரையும் செல்லுமிடத்தையும் சொல்லென்று அப்பிரமசாரியை வினவினன். அப்பிரமசாரியும் மகிழ்ந்து, யான் மவுட்கலியனென்னும் பிராமணன் பெற்ற புத்திரன் வேத முதலியவற்றை ஆராய்ந்துளேன். நைஷ்டிகப் பிரமசரிய விரதியாய்த்தவம்புரியுங் கருத்துடையேன், உன்னுடைய புத்திரியைக் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளுவேனென்றனன். அதுகேட்ட கோபால வேதியன் தன்னுடைய மனைவி முதலாயினர்க்குச் சொல்லி, மணப்பந்தர் அமைத்துச்சிலசடங்குகள் செய்த பின் கன்னிகையைத்தானஞ்செய்யுமுன் வரன் மரணமடைந்தனன். இங்ஙனம் இருபதுவரர்கள் வந்து

கன்னிகையைத்தானம் ஏற்குமுன் மரணம் அடைந்தார்கள். பின்பு கன்னிகையின் பிதா மாதாக்களும் சுவர்க்கலோகஞ் சேர்ந்தனர், அதன்பின்னர் அக்கன்னிகை, நாயகனையடையுங் கருத்தினளாய்ப் பலசிவஸ்தலங்களைச்சேர்ந்து சிவதீர்த்தங்களிலே மூழ்கி, திருப்பூவணஞ் சேர்ந்து, மணிகன்னிகைத் தீர்த்தத்தைக் கண்ணுற்று அதிலே ஸ்நாநஞ்செய்தாள், செய்தபுண்ணிய விசேடத்தால் அத்தீர்த்தக்கரையின்கண்ணே காலவமுநிவரைக்கண்டு நமஸ்கரித்து ஒன்றும் உரையாது அவரதநுக்கிரகத்தைநாடித் தூரத்தேநின்றனள். நின்ற வுற்பலாங்கியைநோக்கி நீ வந்த வரலாற்றைச் சொல்லென்று, முநிவர் வினவியவழி, அவள் "தங்கபத்திராநதிதீரத்திலே, புண்ணிய கிராமத்திலே, கோபாலவேதியன்பெற்ற புத்திரியாகிய யான், என்னுடைய பிதா வேதவிதிப்படி கையிலே தானஞ்செய்தற்குமுன் இருபது நாயகர்கள் சுவர்க்கஞ்சேர்ந்தமையால், நிலையாயிருக்கத்தக்க கணவனை அடையவிரும்பி இங்கேவந்தேன்" என்று கூறினள். அதற்குப் பூர்வஜன்மத்திலே கௌரிதேவியின்விரதம் அநுட்டித்து உத்தியாபனஞ்செய்யாதவிட்டமையால் இங்ஙனம் நிகழ்ந்ததென்று யோகக்காட்சியால் உணர்ந்து, இத்தீர்த்தத்திலே மூழ்கினமையால், பாவமெல்லா நீங்கினவன்றி மங்கலமும் உண்டாகும். ஆயினும் "இத்தீர்த்தத்தலர்ந்த கமலமலரும், உற்பலமலருங்கொண்டு உமாதேவியாரை விதிப்படி பூஜித்தால் நேரில் எழுந்தருளி மங்கலந்தந்தருளுவார்" என்று முநிவர் சொல்லியருளினர். உற்பலாங்கியும் அம்முநிவர் அருளியவண்ணம் தேவியாரை ஆராதித்து உத்தியாபனஞ்செய்து தேவியார் திருவருளினாலே கணவனை மணந்து, தீர்க்க சுமங்கலியாயிருந்தாள். இத்தீர்த்தத்திலே இடபமதியிலே சோமவாரத்திலே அமங்கலிகள் ஸ்நாநஞ் செய்தால் மறுபிறப்பிலே தீர்க்க சுமங்கலிகளாக வாழ்வார், சுமங்கலிகள் ஸ்நாநஞ்செய்தால் புத்திரப் பேறடைவர். உற்பலாங்கி கதையைப்படித்தவருங் கேட்டவரும் நற்கதி பெறுவார்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது
பாற்கரபுரச்சருக்கம்.

தன்னுயர்தவத்தின்மிக்கசவுநகமுனிவவன்பான்
மன்னியவுற்பலாங்கிவண்கதைவகுத்துரைத்தாம்
பன்னுபாற்கரபுரப்பேர்படைத்ததுபகர்வமென்று
வின்னருட்சூதன்வேதவியாதனையிறைஞ்சிச்சொல்வான். (க)

காசினியிடத்துமேலாங்காசிபன்றனக்குமிக்க
வாசிலாவழகுபூத்தவணியிழையதிதியென்பா
டேசுறநிவந்துவாளிற்செறியிருள்விழுங்கியெங்கும்
வீசுசெங்கதிரோன்றன்னைமேதினிவிளங்கவீன்றாள். (உ)

எல்லையில்புகழ்சேர்தொட்டாவீன்றருளிலவச்செவ்வாய்
முல்லைசேர்வனமுருந்தின்முகிழ்நகைவயங்குகொங்கை
நல்லசஞ்சையேயென்னுநண்ணருங்கற்பகஞ்சேர்
வல்லியைப்பரிதிவானோன்மாமணம்புரிந்தான்மன்னோ. (ங)

குன்றெனத்திரண்டெழுந்தகுங்குமக்குவவுத்தோளின்
மன்றலங்தொடைசேர்நல்வைவச்சுதன்றனையும்வன்கட்
டன்றனிப்பகர்வெற்றித்தருமராசனையுநீலத்
துன்றுமெய்யமுனையென்னுந்துடியிடைதனையுமீன்றாள். (ச)

வேறு.

பேசியவந்தப்பெண்கொடியென்னும்பரபையென்பா
டேசுறுசெங்கதிரைத்தொழுதெய்வமெனக்கொள்வாள்
வீசுசெழுங்கதிர்வெம்மையினூற்றலண்மேவாளாய்
நேசமுடன்றன்னிழலுருவாகவினைந்திட்டாள். (ரு)

அந்தநிழற்றனதங்கமதாகவணங்கேநீ
யிந்தவிருத்தமியம்பலையென்னவிசைத்திட்டே
சிந்தைமகிழ்ந்துசெழுங்கதிரோனுளஞ்சேமித்து
வந்துரைதந்தனடந்தையிடத்தினில்வரலாறே. (சா)

தன்மகடன்னிலைகண்டுவெகுண்டுதடந்தோளான்
வன்னமயிற்பெடையன்னகுலக்கொடிமாதேகே

ணின்னுறுகேள்வனேயன்றியெனில்லிடைநீசேற
லுன்னகமிக்கிலேயொல்லேயினேகென வுரைசெய்தான். (எ)

அம்மொழிகேட்டலுமக்கணமங்னகன்றந்த
வெம்முனேவேல்விழிமின்மனேமேவிடவெருவுற்றே
கொம்மைகொள்பேடுறுகொய்யுளேயுருவங்கொண்டங்கச்
செம்மைதரும்புகழுத்தரகுருவதுசேர்கின்ருள். (அ)

சேர்ந்தலர்செங்கதிர்வானவன்வெம்மைதிளேப்பாளாய்ச்
சார்ந்தலரும்பொழினின்றுமுதிர்ந்துலர்சருகார்ந்து
கூர்ந்தகடுங்கதிரோனேயுளத்திற்கொண்டந்த
வார்ந்தகருங்குழன்மாதுதவஞ்செய்துவருநாளில். (கூ)

வார்தருபூண்முலேவாள்விழியாமடமயில்செய்த
தேர்வரிதாகியபட்டிமையிறையுந்தேராஞ
யார்கலிவேலேமுகட்டினில்வந்தெழுமழல்வெய்யோன்
ருர்குழன்மேவியசாயையையன்பிற்சார்ந்தற்ருன். (கo)

மருவியசாவருணியெனுமெட்டாமநுவேந்தன்
றரைபுகழ்தரவருமொருசனியீசன்றம்மோடும்
பாவருமிகுபடவரவகலல்குற்பணியின்சொ
லிருள்பருகியகுழலுறுபுத்திரியையுமீன்ருளாய் (கக)

முன்னவடானருண்மூவர்கடம்மையுமுனிவுற்றே
பின்னவடானருண்மைந்தர்கள்பாலருள்பெருகுற்ரு
ளன்னதுகண்டுமெதிர்ந்திலன்முன்னவனனுசன்ருன்
புன்மதிகொண்டுபுகன்றகடுஞ்சொல்பொருஞகி. (கஉ)

தாயெதிர்வந்தவனேயிடறிடவொருதாடேக்கி
நீயிதுசெய்யநினேந்தனேநின்ருண்முரிகென்றே
யாயவனங்கணகன்றிடவவ்வந்தகனேத்தா
னேயெனுமுன்னமிசைத்தனளந்தவிருஞ்சாபம். (கங)

மாதுரைதந்துமுனிந்துவழங்கியவன்சாபந்
தாதையுணர்த்திடவந்தகன்வந்ததுசாற்றக்கேட்
டேதமின்மைந்தர்களேதுசெய்கிற்பினுமீன்ருேர்க
டீதுறுமாமொழிசெப்பிடினங்கதுதீதாமால். (கச)

குரும்பைமுலைக்குயின்மென்மொழியிட்டகொடுஞ்சாபம்
பொருந்துபுழுக்களருந்தசையுண்டுனபொற்பாதந்
திருந்துகவென்றருண்மைந்தனொடங்குறைசெய்தற்பி
னருந்ததிநேர்தருகற்பினணங்கையடைந்தானல். (௧௫)

அந்தக்காலத்தலர்கதிர்கொண்டேயகல்வானில்
வந்திப்புவியில்வல்லிருள்சீக்குமார்த்தாண்டன்
சிந்தைக்கெட்டாச்சித்திரமதனைத்தேரானுய்ச்
சந்தக்கொங்கைத்னதயலைநோக்கித்தான்சொல்வான். (௧௬)

மேயநம்மைந்தர்கண்மூவர்கடம்மைவெகுண்டிந்தச்
சேய்களையன்பினுவந்தாைசெய்ததுசெப்பென்பா
னீயெனலும்பரையன்றெனவஞ்சினனேர்நின்ற
சாயையெனும்படிசாற்றினள்கற்பின்றலைநின்றாள். (௧௭)

பொங்கியெழுஞ்சுடர்மின்னிலைகண்டுபொருளாகி
யங்கவள்வைத்தெனையன்பினகன்றனளத்தன்பாற்
செங்கதிர்வீசுதிகழ்ந்தவருட்கடல்சேரொந்தா
யிங்கடியன்பிழைநீபொறுத்தாண்டருளெனநின்றாள். (௧௮)

தன்னிகர்சாயையெனுங்கொடிசாற்றியமாற்றங்கேட்
டந்நிலையின்கணறைந்நிலனென்றுமருஞ்சாப
முன்னரிதாகியபொங்கொளியாவுமொடுக்கிச்சொற்
றென்னுலகம்புகழ்மாதுலன்மாமனைசேர்ந்தானல். (௧௯)

எல்லொளிவானவனென்னெருமடமானெங்குற்று
ளொல்லையினீயிதுசொல்லெனவுத்தரகுருவுற்றே
யல்லடுமின்கதிர்வெம்மையினூற்றலளாயோடிப்
பல்குதவந்தனையாற்றினளென்னலுமப்பானு. (௨௦)

குன்றவிலாவியல்கொண்டதொராண்மாவாயேகித்
துன்றியமானையைக்கண்ணுறவெண்ணீர்த்துளிதானு
மொன்றியவிருதொளைநாசிகைவழிதரவொழுகும்றே
பின்றொடர்மாலைமருத்துவரிருவர்பிறந்தார்கள். (௨௧)

அன்னநல்வேலையினலர்கதிர்வெய்யவனன்பாலே
நின்னையடைந்தனனின்கணவன்யானீயஞ்சே
லென்னலுநற்றவமெய்தலினிரவியொடின்புற்ருண்
மின்னெறிவிரதமிழைத்தலின்வெம்மையின்வீடெற்ருள். (உஉ)

வீடெற்றந்தவிளங்கிழையுந்திகழ்வெய்யோனுங்
கூடெற்றன்பின்முயங்குபுதன்பதிகொண்டேய்வா
ஞடெற்றன்பினனுகதலத்திடைநண்ணுங்காற்
றேடெற்றங்கணடைந்தனர்பண்ணவர்திரளோடும். (உங)

தேவர்கள்கந்தருவத்தவரேனையர்செகமெங்கு
மேவுமநுக்கிரகந்தருவெம்மைவிருப்பாலே
யோவறுசெங்கதிர்வானவன்மேவவுவப்பிற்கூய்ப்
பூவுலகம்புகழ்பொங்கிடவாசிபுகன்ருர்கள். (உச)

சட்டகமன்னியசர்ச்சனையைத்திகழ்சாணைக்கட்
கட்டமுகுற்றிடமற்றையவும்பர்கடைந்தொப்ப
மிட்டனரப்பொடிவீழ்தலுமத்தலமெங்குந்தான்
புட்பவனம்பெயர்பெற்றதுபாற்கரபுரமென்றே. (உரு)

அப்பொடிவீழ்பதியெத்தனையுண்டத்தனைசீரார்
மெய்ப்பதியிற்றிருமேவியபூவணமேலாகுஞ்
செப்பருமப்புகழ்சேயிழையாரொடுதிகழ்வெய்யோ
னிப்புவனங்களியாவும்வழுத்தவினைந்துற்ருன். (உசு)

உத்தமமாகியவித்தலமுற்றுநலுபவாசம்
வித்தகநல்விரதஞ்செபமுண்டநமெய்த்தானம்
பத்தியினுவிவைபண்ணிலநந்தம்பலமாகுஞ்
சத்தியமாமிதுசத்தியஞானதவத்தீர்காள். (உஎ)

சுத்தமெய்ஞ்ஞானசுகோதயமாநீர்த்துறைமூழ்கித்
தத்துவசுத்திபிறந்திடுசெவுநகதன்னேரா
மித்திகழ்பிரமகைவர்த்தத்தெழுபானேந்தாகு
மத்தகுபூவணமான்மியமறைதருமத்யாயம். (உஅ)

வேறு.

கருதரும்புகழ்மேவுபாற்கரபுரம்புகழ்காதைதான்
பருகுசெந்தமிழ்மேன்மையாற்பரவுபண்பொடுபாடுவோ
ரருளுடன்செவியூடுகேட்டவையுளங்கொடுதேர்குவோர்
திருமிகுந்திடுதேவரூர்தினமிருந்தரசாள்வரே. (உகூ)

பாற்கரபுரச்சருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள் (கூ௰கூ)

பாற்கரபுரச்சருக்கச்சுருக்கவசனம்.

காசிபமுனிவர் அதிதியென்னுமனைவியைச் சேர்ந்துபெற்ற சூரிய னென்பவன், துவட்டாவின் புத்திரியாகிய பிரபையென்பவளை மண ந்து வாழ்ந்திருக்கும்போது, அப்பிரபையானவள் சூரியனது வெப்பத் தைச் சகியாதவளாய்த் தனதுநிழலைத் தன்னைப்போலப் பெண்வடிவா கும்படியெண்ணி ஆக்கித்தன்னுடைய நாயகனிடத்தே நிறுத்திவிட்டுப் பெண்குதிரைவடிவெடுத்து, உத்தரதேசம்நோக்கிப்போய் ஒருவனத்திற் றங்கி,சூரியனது வெம்மையைப்பொறுக்கும்படி அவனைத்தியானித்துக் கொண்டு தவஞ்செய்யுநாளிலே, தன்னுடைய மனைவியானவள் சாயா தேவியை நிறுத்திவிட்டுச்சென்றமையைச் சூரியன் சிலகாலத்திற்குப் பின்பு தெரிந்து, ஆண்குதிரைவடிவெடுத்து மனைவி தவஞ்செய்யும்வன ஞ்சேர்ந்து, அவளைக்கலந்தவழித் தவவிசேடத்தாலே சூரியனது வெம் மையைப் பிரபையும் பொறுத்து மகிழ்ந்தனள். பின்பு சூரியனும் பிரபையும் ஆகாயவழியாகச் செல்லும்போது, தேவர்முதலாயினோர் சக் தித்துச் சூரியமண்டலத்தினது சர்ச்சரையைக் கடைந்து செப்பஞ் செய்தார்கள். அச்சர்ச்சரையைக்கடையும்போது அப்பொடி திருப்பூ வணத்தில் வீழ்ந்து எங்கும்பரந்தது. முதலாவது திருப்பூவணத்தில் விழுந்து, பின்பு மற்றையஸ்தலங்களிற் பரந்தமையாலே திருப்பூவண ஞ்சிறந்து பாஸ்கரபுரமென்னும் பெயர்பெற்றது. சூரியன்தன்னுடை யமனைவியரோடு திருப்பூவணக்ஷேத்திரத்தையும் மற்றையக்ஷேத் திரங்களையும் தரிசித்தான். உத்தமமாகிய திருப்பூவணக்ஷேத்திரத் திலேதங்கி, உபவாசம் விரதம் ஜபம் தானமுதலியன அன்புடன் செய் தால் ஒன்று அநந்தமாகும். இங்ஙனம் பிரமகைவர்த்த புராணத்தி லே எழுபத்தைந்தாமத்தியாயத்திலே கூறப்படும்,

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது
சர்வபாவமோசனச்சருக்கம்.

சுத்தமாம்புராணந்தேர்ந்தசூதனன்மாதவத்தோய்
சித்திரமணிகுண்டத்திற்றிசைமுகன்றீர்த்தந்தன்னிற்
பத்தியினடைந்தியாரும்படிந்திடுகாலபேத
மித்திறனன்றிமாதோவிசைக்குவதின்னுமுண்டால். (க)

பல்பவமகற்றுந்தானம்பண்ணிடுங்காலம்பாங்காற்
றெல்லைநூல்விதிவழாமற்றொடங்கிடுஞ்சாந்தியன்றி
மல்லலோங்கெழில்சேர்தீர்த்தமாடவல்வினைகண்மாய்க்கு
மெல்லையில்பலங்கடம்மையெடுத்துகன்கியம்புகென்றான். ()

மோனஞானந்தெரிந்தமுழுதுலகிறைஞ்சியேத்த
லானவானந்தவெள்ளத்தழுந்திடுமந்தணாள
வூனமதகலச்செய்திங்குரைக்குவமோர்கவென்னாத்
தானருள்கூர்ந்தசூதன்சவுனகற்குரைப்பதானான். (ங)

மேடநற்றிங்கடன்னின்மிக்கபூரணையினன்பாற்
கூடியமவுனத்தோடுவடுகனைப்பணிந்துகொன்றை
சூடியகடவுடன்னைத்தொழுதிராக்கடையில்விண்ணோர்
தேடருமணிகுண்டத்திற்சேர்ந்தவர்பலத்தைச்சொல்வாம். ()

வேதியற்கோறலாதிவெங்கொடும்பாவமாயப்
பாதகமனைத்துமங்ஙன்பாறிடும்பரிவின்முன்ன
மோதிடுமந்நாளினொளிகிளர்மணிகுண்டத்தி
னேதமிலந்நீர்மூழ்கினின்பமாமுத்திசேர்வார். (ரு)

அக்கினிட்டோமமாதியரியநல்வேள்வியாற்ற
மிக்கசெம்பொன்கொடுத்தோர்மேவியபலன்களுண்டாம்
பக்கமோடரிதினேனும்பகர்ந்திடுமந்நாளிற்
றொக்கசீர்மணிகுண்டஞ்சேர்தோயத்திற்றோயமாதோ. (சு)

கடுங்கொடுங்குட்டநோயன்களத்துரோமத்தன்மிக்க
கொடும்பிணியாளனந்நீர்குடித்திடினொளிக்கும்வெந்நோய்

திடம்படுமிடபமன்னுந்திங்களிற்சௌம்யவாரத்
தடைந்ததின்மூழ்கிற்செம்பொனரும்பெருங்களவுநீங்கும். ()

இந்தநீர்மணிகுண்டத்தினின்புறக்கருதியன்பாற்
புந்திகன்றனக்குப்புந்திபொருந்திடப்பொலங்கொள்பைம்பொன்
வந்துநன்கியைந்ததானமகிழ்ச்சியின்வழங்கினோர்கட்
கந்தகன்றன்னைக்காண்டலருந்தண்டமிரண்டுமின்றாம். (அ)

மன்னியமைந்தரானோர்வைகாசிவிசாகந்தன்னிற்
பன்னுநான்மறையோர்கையிற்பரவுதன்பிதிர்கடம்பாற்
றுன்னுவெம்பசிதணிப்பான்றூயவெட்டயிர்பான்மாடந்
தன்னிகர்குளந்தயங்குந்தக்கசித்ரான்னத்தோடும். (கூ)

அரியனபொருளினட்டவறுசுவையுண்டிமிக்க
பரிமளஞ்சுகந்தநன்பூப்பாதுகைகுடைபூணுந்தி
யுரிமையினுலோபியாதங்குதவிடிற்பிதிர்கள்வான்றோ
யிரவிவெண்மதிநாட்காறுமின்பத்தினியைவரான்றே. (க0)

தந்தைதாய்வர்க்கத்தோடுந்தகும்பெருங்கிளைஞரோடுஞ்
சுந்தரந்துதைந்திலங்குந்தூயநல்விமானநூறு
முந்துறவந்துசூழமுடுகியேகடிதினேகி
யெந்தைசேர்கயிலைவெற்பினிடத்தினிதமர்வரன்றே. (கக)

தன்னிகர்மாகத்திங்கடக்கமந்திரிசிங்கத்தின்
மன்னுமாமாகந்தன்னின்மாமணியோடைசேர்ந்த
வன்னதீர்த்தத்தினாடியரும்பெருந்தானமீவோர்
பன்னரும்பவங்கள்யாவும்பற்றறத்துடைப்பரன்றே. (கஉ)

தனைநிகர்தநுர்மாதத்திற்சதுர்முகன்றீர்த்தந்தன்னி
லினைதலொன்றின்றிநெஞ்சத்தினியதேநுவைவதைத்தோர்
மனமொழிமெய்களொன்றிமன்னொருமாதமூழ்கி
னனையதோர்கர்லையந்தவரும்பவமனைத்துநீங்கி. (கங)

தக்கபன்மணிப்பதாகைத்தவளநல்விமானத்தேறி
மிக்கசீர்விளங்குமந்தவிரிஞ்சனதுலகமெய்தித்
தொக்கசெம்மணிகள்வானிற்சுடரவன்வெயின்மறைத்தொண்
டிக்கிலகொளிபரப்புஞ்சித்திரமண்டபத்தில். (கச)

நிறைமதிபுரையுமந்தணித்திலக்கொத்துமாலே
முறைமுறைநிவந்தமாடமுகப்பினின்ஞாங்கர்த்தூங்கக்
குறைவறுசெம்பொற்சோதிகுலவுபூங்கொடிகளாட
மறுகுசேர்நிரைகடோறுமகரதோரணம்வயங்க. (கரு)

வேதநற்புராணமாதர்மிக்கவெண்டிக்குப்பால
ரோதுகந்தருவர்வீணையுயர்தவச்சநகாதி
யேதமின்முனிவர்போற்றவீரேழிந்திரர்கள்காலங்
கோதறவாழ்ந்துபின்னர்க்குவலயத்தரசராவார். (க௬)

கார்த்திகைத்திங்கடன்னிற்கார்த்திகைநாளிற்றிங்கள்
சேர்த்திகழ்கலேயீரெட்டுஞ்செறிந்தநாள்குறைந்தநாண்மெய்க்
கீர்த்திகொள்க்ரகணகாலங்கெடுமதிதிங்கள்சேர்நா
ளார்த்தசுந்தரப்பொன்சேயிலருங்கலேயொடுங்குமந்நாள். (கஎ)

வந்திடுமிவற்றையிந்தமலர்தலேயுலகந்தன்னிற்
புந்திகொளறிவின்மிக்கோர்புட்கரயோகமென்ப
ரந்தநீர்மையினுலோரொன்றுயிரங்க்ரகணமொக்குஞ்
சிந்தைகூர்ந்தந்நீராடிற்சிவபுரியதனிற்சேர்வார். (கஅ)

தவலருஞ்சிவநிசிக்கட்சந்நிதிமன்னுதீர்த்தத்
தவலமதகலவுன்னியாடியேயன்பின்மிக்க
புவனமன்கியாரும்போற்றும்பூவணங்கோயில்கொண்ட
சிவபிரான்றனேவில்வத்திற்சிறப்புடன்பூசைசெய்து. (கசு)

உவமனிலந்தநாளினுண்டியோடுறக்கநீத்துப்
பவமறப்புராணம்பன்னிற்பகர்சிவநிசியதொன்று
னுவலிலங்கியதலத்தினூற்றொருகோடிகொண்ட
சிவநிசிவிதியிற்பூசைசெய்திடும்பலத்தைச்சேர்வார். (உ0)

அச்சிவநிசிக்கணுனேந்தரியபஞ்சாமுதத்தோ
டிச்சையாங்குசோதகம்மோடெட்டயிலாதிகொண்டு
நிச்சயமணிகுண்டத்தினீரினுட்டினர்பதத்தை
நச்செயிற்றநந்தனுனுநவிற்றநாவசைக்கவற்றே. (உக)

ஆயினுமரிதுவந்ததறைகுவனவர்சாலோக
மேயபின்சாரூபத்தின்மேவியேவிளங்குங்கார்த்தி
கேயனேடொத்தநந்திகேயனுக்கிணையதாகி
யோய்விலாயிரஞ்சதுர்நல்லுகஞ்சிவலோகத்தேய்வார். (உஉ)

செய்யவொண்பட்டினுலுந்திகழ்ந்தவெண்பட்டினுலுந்
துய்யபூங்கதலிபூகமாதியதொங்கறன்ன
லதிகழ்பூவணத்தெம்மடிகளையலங்கரித்தோர்
பையழகொழுகுந்துத்திப்பன்னகாபரணனுவார். (உங)

ஐம்பெரும்பாதகங்களகற்றிடுமஞ்செழுத்தை
யிம்பரினேன்றதீக்கைக்கினனுயிருந்தானேனு
நண்பினன்வெறுப்புத்தன்னனவின்றிடினேர்கால்வானத்
தும்பரின்மேலாயன்னேனுறுபவமொழிப்பனன்றே. (உச)

தேறிநன்கிருகாற்செப்பிற்றிகழ்திருக்கயிலைசேர்வா
னூறுடனெண்காலன்பினுவன்றிடில்வீடுசேர்வான்
மாறிலாச்சதவுருத்ரமந்திரஞ்செபிக்கின்மூழ்கிற்
கூறருநன்றிகொன்றகொடும்பவங்குலையுமன்றே. (உ௫)

உருத்திரன்றனக்குமிக்கோங்கொளியுருத்திராக்கமாலை,
யருத்தியினளித்தோரக்கவணிமணியொன்றினுக்குத்
திருத்தகுசிவலோகத்திற்றிகழ்தருவருடம்வாழ்ந்து
பரப்பிரமத்தைச்சேர்வர்படர்புவியிடத்துமன்னே. (உசா)

எப்பொருளேனுமுள்ளத்தின்பமுற்றதனையன்பா
லப்பொருடன்னைமேலாமரன்றனக்காகவென்றே
தப்பறவளிப்போரிக்தத்தடங்கடலுடுத்தபார்மே
லொப்பறவாழ்ந்துபின்னருயர்பரமுத்திசேர்வார். (உஎ)

ஓதுமிவ்வத்தியாயமுறுபவமொழிக்குமேலோர்
பூதலத்துபதேசஞ்செய்பொருடருசாரமாகுங்
காதலினேதுவோர்க்குக்கருதியதளிக்குமென்று
மேதகவுரைத்தவற்றைவேட்கையின்விளங்கக்கேட்போர். ()

மேதினியிடத்தின்மேவுமிக்கதீர்த்தங்கள்யாவுங்
காதலிற்சென்றடைந்துகலந்தவைபடிந்தோராவர்

போதநன்குணர்ந்தமேலோர்புகன்றிடும்வேள்வியாவு
மாதரவதனாற்செய்தவரும்பலமடைவரன்றே. (உகூ)

இந்நநற்பூவணத்தினினிதுவாழ்கிற்போர்தம்மை
யந்தரதேசநின்றுமடைந்தவரிவர்க்கண்டாங்கே
முந்துறுபவங்கடீர்ந்துமுத்தியையடைவரென்றுற்
புந்திகொண்டமர்வோர்வீடுபொருந்துதல்புகலல்வேண்டா.

கூனலம்பிறைமிலேச்சுகோடீரபாரத்தெந்தை
யூனமிலுமையாள்கேட்பவுரைத்தருளுபதேசத்தை
யானதோர்காலேதன்னிலாறுமாமுகங்கொடுற்ற
ஞானவானதனைக்கேட்டுநந்திபானவின்றுன்மன்னே. (௩க)

நந்திதான்கேட்டவற்றைநற்சநற்குமாரற்கோத
வந்தநற்சனற்குமாரனருள்வியாதற்குரைப்பச்
சுந்தரவியாதனெற்குத்தொகுத்துபதேசஞ்செய்ய
முந்துறக்கேட்டவற்றைமொழிந்தனனுமக்கியானே. (௩உ)

நுண்ணியபொருளாய்மேலாய்நுவலருமுலகுக்கெல்லாம்
புண்ணியமளிக்குமிக்கப்பொருடனைவிரும்பிக்கேட்டோற்
குண்மகிழ்ந்துரைத்ததின்றீங்குமக்கியான்றெருகுத்துரைத்தேன்
கண்ணுதற்பெருமான்றந்தகணிப்பருங்கருணையாலே. (௩௩)

ஈதுமக்கிறைவன்ஞானமெய்துதற்கேதுவாகு
மாதலாலருண்மைந்தர்க்குமரியநன்மாணுக்கர்க்குங்
காதல்கூர்பவர்க்குமிந்தக்கருதருபுராணந்தன்னை
யோதுதியறிவின்மேலோயுடங்கியைந்தெந்தஞான்றும். ()

வேறு.

அழகியமின்னன்னையெனுமானந்தவல்லியுடனமர்ந்து தோன்றுஞ், செழுமலர்க்கொன்றையினறும்பூந்தேன்றுளிக்குஞ்செஞ்சடிலசேகரன்சேர், பொழிநிகழ்பூவணக்காதை புகல்பிரமகைவர்த்தபுராணந்தன்னி, னெழுதரியமறைமுநிவ னீரெழுபத்தாறுமத்தியாயமாகும். (௩௫)

வேறு.

இந்தவத்தியாயம்படித்துளோரின்பமுற்றநாளுஞ்செவிக் கொள்வோர், சிந்தையிற்கொடேசெஞ்சொல்செப்புவோர் செங்கரத்தினனன்குதீட்டுவோர், மைந்தர்பெற்றமாமைந்தர் சுற்றவேமங்கலத்தினன்மண்டலத்தில்வாழ்ந்தந்தமற்றசிரண் டர்பொற்பினீடம்பொன்மிக்கவானங்கிருப்பரே. (ருசு)

சர்வபாவமோசனச்சருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள். (சுசுஉ)

சர்வபாவமோசனச்சருக்கச்சுருக்கவசனம்.

சித்திரை மாசத்திலே பூரணையிலே, முதலாவது வயிரவக் கடவுளை வணங்கிப் பின்பு சிவபெருமானை வழிபட்டுச் சூரியோதயத்தி ற்குமுன்னே, மணிகன்னிகைத்தீர்த்தத்திலே, ஸ்நாநஞ்செய்தவர்க்குக் கொலைமுதலியபாவங்கள் நீங்கும். அக்கினிட்டோமமுதலியவேள்வி கள்செய்தற்குப் பொருள் உபகரித்தபுண்ணியமுண்டாம். குட்டநோ யன் கண்டத்துள்ளே உரோமமுடையவன் மற்றுங்கொடிய நோயன் அத்தீர்த்தநீரைப்பருகினால் அந்நோய்கள் ஒழியும். வைகாசிமாசத்திலே புதவாரத்திலே அத்தீர்த்தத்திலே மூழ்கினவனுக்குப் பொருட்களவின் பாவம்போகும். புதன்பொருட்டு அத்தீர்த்தத்திலேமூழ்கிப் பொருளைத் தானஞ்செய்வோனுக்கு இயமதண்டமில்லை. புத்திரர்கள்வைகாசிமாசத் தில் விசாகநக்ஷத்திரத்திலே அந்தணர்கையிலே பிதிர்களைநோக்கி,எள்ளு தயிர்பால் உழுந்துவெல்லம் இவைகளாலமைந்த சித்திரான்னத்துடன் அறுசுவைக்கறியமுதும், சந்தனம் புட்பம் பாதுகை குடை ஆபரண ங்கள் முதலியவும் தானஞ்செய்தால் அப்பிதிர்கள் சந்திராதித்தர் உள்ள ளவையும் சுகமனுபவிப்பார். தானஞ்செய்தவர் அப்பிதிர்களுடன்திருக் கைலாசபதவிசேர்வர். மாசிமாசத்து மாமககாலத்திலே மூழ்கித்தா னஞ்செய்வோர் பாவங்களைப்போக்குவர். மார்கழி மாசத்திலே பிரம தீர்த்தத்திலே ஸ்நாநஞ்செய்தோர் கோகத்திமுதலியபாவநீங்கி விமா னமேறிச் சுவர்க்கஞ்சேர்ந்து பதினான்கு இந்திரப்பட்டம்வரைவாழ் ந்து பூலோகத்தில் அரசராவர். கார்த்திகை மாசம் புட்கரயோகத் திலே மூழ்கினோர் சிவபுரஞ்சேர்வார். சிவராத்திரியிலே பிரமதீர்த்த த்திலே ஸ்நாநஞ்செய்து, திருப்பூவணநாதரை வில்வத்தாற்பூசித்து

உபவாசமாயிருந்து, சிவபுராணபாராயணஞ்செய்தால், மற்றைத்தலத்தில் அளவில்லாத சிவராத்திரி விரதம் அநுட்டித்தபயனைப் பெறுவர். சிவநிசியிலே, புட்பவனேசருக்குப் பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் தயிலம் குசோதகம் இவைகளாலும், மணிகன்னிகாதீர்த்தத்தாலும் அபிஷேகித்தால்,ஆயிரஞ்சதுர்யுகஞ் சிவலோகத்தில் வசிப்பர்,செம்பட்டினாலும் வெண்பட்டினாலும் வாழை கமுகுகளினாலும் புட்பவனேசனை அலங்கரித்தோர் சாரூப்பியமடைவர். புட்பவனத்திலே, தீக்ஷைக்குருகளல்லாதவனும் திருவைந்தெழுத்தை ஒருமுறை உச்சரித்தால், பாவங்களினின்று நீங்குவான். இருகால் உச்சரித்தால், திருக்கைலாசபதவி சேர்வன். நூற்றெட்டுமுறை உச்சரித்தால், முத்தியடைவன், ஸ்ரீ ருத்திரமந்திரத்தை நூறுருஜபித்தால், நன்றிகொன்றபாவம் ஒழியும். புட்பவனேசருக்கு உருத்திராக்ஷமாலை தரித்தால் ஒவ்வொருமணிக்கு ஒவ்வொருவருடம் சிவலோகஞ்சேர்ந்து வாழ்ந்து பின்பு பூலோகத்திலே சிவஞானத்தைப்பெறுவர். எந்தப்பொருளையும் புட்பவனேசருக்கு அன்புடன்அளிப்போர் இகபரங்களையடைவர். இவ்வத்தியாயத்தைப்படிப்பவருங் கேட்பவரும் எல்லாப்புண்ணியங்களையும் அடைவர். இங்ஙனம் பிரமகைவர்த்தபுராணத்திலே எழுபத்தாறுமத்தியாயத்திலேகூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது

பிரமசாபமோசனச்சருக்கம்.

ஆயுநான்மறையுமங்கமோராறுமாகியவமுதகானனநீர், பாயுநாவுடையசவுநகமுநிவன்படுகலியுடைதிரைப்பரவை,மாயிருஞாலந்தன்னினீரோன்பான்மருவியபுராணமோர்வடிவாந் தூயமாதவத்தின்றுறைபெறுஞானசூதனைநோக்கினன்சொல்வான், (க)

பூர்வநன்குறவேயோரொருபதினெண்புராணமின்னுன் மிகக்கேட்டோ, மோர்வுடைத்தின்றுமுனைக்குவதுண்டாலுனைக்குமிப்புராணத்தினியல்பைப், பாரிடைநீயேபகரயான் கேட்கப்பாக்கியம்படைத்தனனாகி, லார்பரமரியவிருதயகமலமனையநின்னுன்மலர்ந்தன்றே. (உ)

ஓங்குவான்கங்கைமாநதிமதிகண்டுவெட்டெடுத்தெழுந்த லைபுரட்டத், தூங்குவார்சடிலந்துதைந்தசெம்பவளச்சுடர்வி டுசோதிவானவனைப், பூங்குழலுமைமுன்பூசையாற்றியபின் போந்தருச்சித்தனர்தம்மைத், தாங்கருவெகுளிதணந்தமாத வசோற்றெனச்சவுநகற்குரைப்பான். (ங)

அங்கண்வானத்தினகடுபோழ்ந்தவிருமணிமணிச்சிகரப ந்திகளும், பங்கமில்பாரிசாதவாசப்பூம்பணைதிகழ்பராரைமா மரமுந், துங்கமேவியநன்மடங்கலேமுதலாத்தொகுவிலங் கீட்டமுந்துலங்கு, கங்கைமாநதியினருவியின்முழக்குங்கதித் திடுங்கயிலைமால்வரையில். (ச)

கண்ணகன்புவியிற்கலைகணுகியநற்கற்பகக்கடவுள்காங் கேய, னெண்வகைவசுக்களெண்டிசாமுகத்தரிராக்கதர்மருத் துவரிருவர், நண்ணுகிம்புருடர்கின்னரர்மணிகணருபணந்த ருமுராகேசர், வண்ணமேவியநல்வெண்ணிலாக்கொழிக்கும்வ ளைந்திடுமிளம்பிறைமுடித்தோர். (ரு)

மாதிரம்புகழுமாதிகேசவன்கார்வண்டிசைகொண்டமா மலரோன், றீதறுதேவர்கருடர்கந்தருவர்சித்தர்வித்தியாதரரி யக்கர், பூதலத்திருளைவிழுங்கிவானேங்குபொங்குவெங்கதிர் கள்பன்னிருவர், காதல்கூரீரெண்கலைதிகழமிர்தகதிர்விடுமு டுபதிக்கடவுள். (சா)

சித்திரக்கலினச்செருவயப்பரியூர்திகழ்வளைசெண்டுகை க்கொண்டோ, னத்திரிவசிட்டன்முற்கலன்புகழ்பாரத்துவா சன்கவுண்டினியன், சுத்தப்ருங்கிருடிகண்ணுவன்பாரிற்றுக ளறுசுகன்சதுர்வேத, வித்தகவிணைநாரதன்சநகாதியமுநிக ணமிடைந்தேத்த. (எ)

பரவரிதாயவுருவங்கொண்டரியபண்டரும்வேதங்க ளோத, மருவியேதிருமுன்வணங்கியேழ்கோடிமந்திரநாயகர் வழுத்த, வருளினுற்கண்டவடியவர்பிருத்தவாநந்தவாரியில ழுந்தப், பொருவில்பூதங்கள்புடைபரந்தீண்டிப்புகழ்ந்துடன் பாடிநின்றுட. (அ)

அந்தரதலத்தில்வந்துதிக்கின்றவந்திமாமதியமோர்கோடி, சுந்தரந்துதைந்துசுடர்விடும்வெய்ய சூரியரோரொருகோடி, வந்திடுஞ்சென்னிவளர்ந்தெழுந்தூய வடவையங்கனலொரு கோடி, தந்தவைதிரண்டொன்ருய்வளர்சோதிதருந்திருமே னியினெருபால். (கூ)

கழையுநல்பாலுங்கண்டும்வார்தேனுங்கருங்குயிலிசையு மேழிசையும். குழலினதிசையுங்கோதிலாவமுதுங்குழைத்தி டுகுதலையந்தீஞ்சொற், பழமறைப்பொருளேப்பவளவாய்கொ ழிக்கும்பத்திசேர்கித்திலமுறுவ,லிழைதருமருங்குலேந்திளங் கொங்கையிமயமால்வரைமயிலிலங்க (க௦)

விட்டெறிகின்றவெண்மதிக்குழாமும்வெய்யவரநேகரும் போல, மட்டறுவயிரமன்னுசெம்மணிசேர்மகுடநன்மாமுடி வயங்கக், கிட்டியேறுதலைக்கிழித்தெழும்விழித்தீக்கொழு ந்துவிட்டதுகிளர்ந்தோங்கக், கட்செவிப்பகுவாய்க்கடுவுமிழ ரவகங்கணமணிக்கதிர்பரப்ப. (கக)

முழங்கிவந்தலைகள்புரண்டிடக்கரத்தான்முடித்தசெஞ் சடாமுடிக்கிடங்க, குழந்தைவெண்மதியின்கோடுழக்குற்ற குளிர்புனற்குறுந்துளிசிதறச், சுழன்றுவீழ்ந்திசைகண்முரா ன்றுறுவாசத்துதைந்துதாதாடியுண்மகிழ்ந்து, வழிந்தநற்பசுந் தேன்வண்டுணுங்கொன்றைவாசமெண்டிசாமுகம்விச. (கஉ)

காசினிபுகழுங்கலைதிகழ்மதிபோற்கருணைநற்றிருமுக ம்பொழியப், பூசும்வெண்ணீறும்பொருந்துமார்பகத்திற்பொ ங்குமாரங்கணின்றிலங்க, மாசறுசோதிவயிரகேயூரமன்னிய வாகுவின்வயங்க, வீசியகிரணவெம்படைக்கலங்கண்மேவிய கரங்களில்விளங்க. (கஙு)

நினைவருஞ்சங்கக்குழைகிலவுமிழ்ந்துநீண்டவார்காது பூண்டெறிப்பக், கனைகடல்வயிறுகலங்கவன்றெழுந்தகடுவிட ங்கந்தரங்காட்டப், புனிதமாகியநற்புள்ளிசேர்தருவெம்பொ ருபுலித்தோலுடைபொலியப், பனகமாமுதரபந்தநன்மணி கள்ப்ரவரும்பாயிருள்பருக. (கச

தங்குமால்வரையிற்றருமருவியெனச்சார்ந்தவுத்தரீயமார் பிலங்க, வங்கையிலபயவனுமிகாங்குலியிலணிபவித்திரமழ கொழுகப், பங்கமுற்றிரைத்துப்பாய்திரைசுருட்டும்பரவை சூழ்பாரொலாமிடந்துஞ், செங்கண்மாலின்னுந்தேடரிதாயதி ருவடித்தாமரைதிகழ. (௧௫)

சோதிசேர்வயிரத்தூணிரைநிறுவிச்சூழ்ந்தபொற்பித்தி கையமைத்து, மீதுசேர்பவளப்போதிகையிருத்திமிகுந்தந ன்மரகதந்தயங்கு, மோதுமுத்தாத்தோடுறுதுலாஞ்சேர்த்தி யொளிமணிகிளர்தரவழுத்தித், தீதில்சந்திரகாந்தந்தளைப்படு த்துச்சித்திரமழகுறச்சேர்த்தி. (௧௬)

விளங்குமண்டபத்தின்மேவியேகாப்பண்மிக்கதல்லெழி லரிசுமந்த, வளர்ந்தெழுஞ்சோதிவழங்கிடக்குயிற்றுமாதிலா மணித்தவிசேறி, யளந்தறிவரியவருமறைப்பொருளாயானந் தமேதிருவுருவா, யிளம்பிறைமுடித்தவெம்பிரானமரர்தம்பி ரானினிதுவீற்றிருந்தான். (௧௭)

அந்தவேலையினினந்தியெம்பெருமானங்கையிற்பிரம்பி னைக்கொண்டே, வந்தவண்மிடைந்தவானவர்முனிவர்தம்மை நேர்வான்முறைசேர்த்தி, யந்தமிலவுணர்தங்களைக்கொண் டேயணிபெறநிறுவியேயொருபாற், சிந்தையின்மகிழ்கூர்ந் தெந்தைதன்றிருமுன்றிரிந்துநல்லருந்துதிசெய்ய. (௧௮)

அரம்பைமேனகையூர்வசியழகொழுகுமரியசீர்த்திலோ த்தமைமுதல, வரம்பெறுமுயர்வான்மகளிர்மந்திரஞ்சேர்மத் திமைதாரகமரபிற், றிறம்பெறவெழுதுசித்திரமென்னத்திக ழ்ந்துசெம்பவளவாய்திறந்து, நரம்புறுவீணைநன்மூலதாங்கி நாதகீதத்துடனடித்தார். (௧௯)

தீதறுகின்றதேவமாப்ரதஞ்சித்ரசேனனேடுலக
மோதிடுமெந்தவுருப்பசிநடித்தேயுற்றிடுநாதகீதஞ்சேர்
வேதமேறுகருமிக்கநன்செவிக்குவீணையேயிசைவிருந்தளிப்ப
மாதினைமணந்துவாமபாகங்கொள்வானவன்றிருவுளமகிழ்ந்தான்.

ஞானிலத்துயிர்கணன்கதிபெறுவானுன்முகன்வரகினைத் தேயோ, வானகஞ்சுழலவருங்கொடுஞ்சண்டமாருதம்வந்த வைபுகுந்தே, யூனநீங்கியவவ்வுருப்பசிமருங்குலுடுத்தவொ ண்டுகிலினைநீக்கா, வானகாலையினிலாயிடைவெருவியனைவ ருமவகிதரானர். (உக)

உறுபெருங்காதலுள்ளமீக்கொள்ளவோங்குபேரெழினல ந்தாங்கு, முறையறுகன்னன்மூரிவிற்காமன்முடுகினன்மல ர்க்கணைதொடுப்பக், கறையணற்கொடியகட்செவிப்பாந்தட் கணபணுடவியவளல்குற், குறியிடந்தன்னைநோக்கினன்கமல க்கோயில்வீற்றிருந்திடுங்குரிசில். (உஉ)

ஆங்கதுகாணூஉவளவிலன்டத்துமகண்டிதமாயசஞ்ச லமா, யோங்குபேரொளியாயுயிர்க்குயிராகியுன்னுமுன்னுண ர்ந்திடுமொருவ, னீங்குகம்பானீயெனலோடுகிலமிசைவீழ்ந் தடிபணியப், பாங்குறுநந்திபணியினுலெழுவப்பரஞ்சுடர்பங் கயற்குரைப்பாள். (உங)

உருப்பசியெனும்பேரொண்டொடியிவடனுரைப்பருமு ருமூலத்தில், விருப்படனின்கண்பாப்பிலையதனுன்மிக்கநன் சபைவிடப்பணித்கார், திருத்தகுமெமதுதெய்வநற்சபையிற் றிருகியசிந்தனையதனோடு, பொருக்கெனநினைந்தபுந்தியிலாதா ய்புகல்வதொன்றுண்டதுகேண்மோ. (உச)

அரவுருட்குரவனங்கிசேர்தலத்திலாகமவேதமோதிடத் தி, னெருமைசேருள்ளத்துணர்விறிற்றாங்குமோங்குநல்லு றுவர்களிடத்து, மருமலர்க்குழலார்வனப்பினைநாடிமயங்கு வார்யாவரேயெனினு, மிருடருநரகரிவர்பெரியோராகிகந்தி டப்படுவரென்றுன்றும். (உரு)

இத்தகைமையினுனிற்புறம்பாகவிசைத்தனமீங்குநீயெ ம்பால், வைத்தபேரன்பின்மகிழ்ந்தனமின்னேமனத்திடைம தித்திகன்மைந்த, புத்திபூருவத்தாற்பொருந்துகம்மிலிங்கபூச னைபுரிந்திடின்மாதோ, வத்தகுகணத்திலடைந்தவத்தோடம கன்றிடுமஞ்சலீயஞ்சல். (உசூ)

இன்னமுதங்கான் றிருட்குறும்பெறியுமிந்துவின்மரபி னில்வந்த, பன்னுசெந்தமிழ்த்தென்பாண்டிநன்னாட்டிற்பயின் றிடும்பதிபலவுளவா, மன்னதின்மேலாயறைந்திடுங்கூடலால வாய்ப்பதிக்குயோசனையின், மன்னிடும்வன்னிதிக்கினோர்தல ம்பூவணமெனுமணிநிகழ்நகரம். (உஎ)

உரைசெயுமந்தவோங்கெயின்மூதூரோரொருமூவுல கேத்த, மருவிடுமதன்கண்மத்திமைவயங்குவான்முகடணவு வண்பணைசூழ், பரவரும்பாரிசாதமொன்றுண்டப்பாரைமா மரத்திருநீழற், புரிகுழலுமைமுன்புரிதருசெயலாற்பூசைசெ யிலிங்கமொன்றுண்டால். (உஅ)

அச்சிவலிங்கமருள்வடிவாகியம்பலத்தலத்தினின்றளி சேர், முச்சகம்புகழமுளைத்திடுமூவாமுதலுமாய்முழுதலகி றைஞ்ச, நிச்சயப்பொருளாய்நிமலமாய்நிறைந்துநிகழ்ந்துநங் கண்மணிவடிவாய்ப், பச்சைமாமயிலோர்பாதிநின்றிலங்கப்ப ரம்பொருளாகியேவிளங்கும். (உகூ)

ஆதலாலரியவச்சிவலிங்கத்தன்பினுயிரஞ்சதுர்யுகங்கள், பூதலமதனிற் பொருந்தியாங்கெம்மைப்பொற்புடன்பூசனைபு ரியி, னீதியின்யாமுநிகழ்ந்துமுன்றோன்றிநினக்கருள்புரிகு துமென்று, வோதிநீபோதிமாதொடுமென்றானுயிர்க்குயிரா கியவொருவன். (௩0)

அன்னகாலையினிலன்னவாகனனுமஞ்சியேயஞ்சலிசெ ய்து, "முன்னைநாளிழைத்தமுதிர்வினைவந்துமூண்டிடும்விதியி துவென்னுப், பன்னுநாமகன்றபரிசனஞ்சூழப்பதங்களிற்படி ந்தெழுந்தன்பாற், பொன்னலர்கடுக்கைப்புரிசடைப்பிரானை ப்போற்றினன்விடைகொடுபோந்தான். (௩க)

பன்னகாபரணப்பரஞ்சுடராயபண்ணவன்பண்ணவர்தம க்குந், தன்னிகர்தத்தம்பதியிடைச்செல்வான்றக்கநல்விடை கொடுத்தருளி, மன்னியநந்திவானவன்கோயின்மணிக்கடை வாயின்முன்காப்ப, மின்னிகர்மருங்குன்மெல்லியலோடும வெள்ளிமால்வரையில்வீற்றிருந்தான். (௩உ)

வேறு.

சுந்தரமேனிதுளங்கனல்கொண்ட
வந்திவண்ணத்தனநுக்கிரகத்தாற்
புந்திமகிழ்ந்துயர்புட்பவனத்திற்
கந்தமலர்க்கடவுள்கடிதுற்றான். (௩௩)

பண்டருவேதபராயணர்மேவுந்
தண்டலைசூழ்பனசாலைகளும்பொற்
புண்டரிகந்திகழ்பூந்தடமியாவுங்
கண்டனனெண்டருகண்கள்களித்தான். (௩௪)

ஓசைகொளந்தவுருப்பசிதன்மே
லாசையளித்தவரும்பவநீப்பான்
றேசுமிகுந்ததொர்தெய்விகலிங்கம்
பூசைசெயும்படிபுந்திநினைந்தான். (௩௫)

நாமகள்சேர்தருநான்முகனன்காற்
பூமகள்போற்றிசெய்பொற்கொடிமுன்னர்க்
காமியமிக்கருள்கங்கைகலந்த
மாமணிகன்னிகைவந்துபடிந்தான். (௩௬)

வாய்மொழியொன்றும்வழங்கலனுகி
யாய்மலர்கொண்டுநலங்கணன்வைகுங்
கோயினன்வாயில்கொளுங்குணதிக்கிற்
றூய்மையுடன்சதுரங்கம்வகுத்து (௩௭)

தன்கைதரித்ததொர்தண்டதுகொண்டே
யன்பொடுகல்லினனங்கைகள்செய்ய
நன்குறுதீர்த்தகயப்பொடுகண்டே
பொன்பயிலுந்திருக்கோயில்புகுந்தான். (௩௮)

காருலவுந்திகழ்கற்பகநீழற்
சேர்தருகின்றதொர்தெய்விகலிங்க
நேர்விழிகாண்டலுநேரின்மெய்ஞ்ஞான
வாரிபடிந்துமுயங்கினன்மாதோ. (௩௯)

அண்டமடங்கலுமன்னமதாகித்
திண்டிறலானனிதேடியுநானே

பண்டறியாதபரஞ்சுடர்தன்னைக்
கண்டனனென்றுகளித்தனனம்மா. (சய)

பூருவமாயருள்பொங்குமிலிங்கத்
தேருறுமின்புருவத்திலிருத்தி
நேரில்கொடும்பவநீக்கிடுகிற்பா
ஞரணபூசனைசெய்தனனன்பால். (சக)

சோடசப்பூசைதொடங்கிமுடித்தே
பாடலொடாடல்பயின்றறமங்கை
தாடனிலேவழிபாடதுசெய்வா
ஞடிவருந்தினனுனிலமெல்லாம். (சஉ)

மன்றவனந்துளவோன்மலருந்தி
யன்றுபிறந்தருளன்னமுயர்த்தோ
யொன்றுநல்வாய்மையுரைப்பதுகேட்டி
யென்றசொல்வானினெழுந்ததையன்றே. (சங)

நன்மலையீன்றருளுமையகிமேனுண்
முன்னவன்வாய்மைமொழிந்திடுமாற்ருற்
றன்னுறுமின்னறணந்திடவிங்ஙன்
மன்னுதவம்புரிகின்றனண்மாதோ. (சச)

புல்லுமரன்கழல்பூசைசெய்தம்பொன்
வல்லிமணற்கண்மறைந்துறைகின்ருள்
ளொல்லையினீக்கியுஞற்றுதிபூசை
செல்வநலெண்டிகழ்சித்திகளுண்டாம். (சரு)

செந்தழன்மாதவர்செப்பியசாப
நந்திடவெந்தையைநாயகியோடும்
புந்திமகிழ்ந்துசெய்பூசனையாலே
யிந்திரைதன்னையியைந்தனன்மாயோன். (சசு)

ஆதலினின்னபராதமுமிந்த
நாதனருச்சனையாலதுநந்துஞ்
சோதியும்வந்துநினக்கெதிர்தோன்றும்
போதுதியென்றதுபோயதேயன்றே. (சஎ)

அன்னதுளங்கொடரன்னருளாலே
மன்னியபொற்கொடிமாதைமறைத்த
நன்மணலுக்கிடைநாடருஞானப்
பொன்னுறுபூங்கொடிபோலெதிர்நின்றாள். (சஅ)

வெளிப்படுகின்றபொன்மின்னனையாளை
யளப்பரிதாகியவன்பொடுகண்டு
களித்தனனீள்கருணைக்கடல்சென்று
குளித்தனனின்பொடுகூடினனன்றே. (சகூ)

செற்றரிதாயசுகோதயநல்கும்
வெற்றிதருங்கதிர்வீசுமெய்ஞ்ஞான
பொற்கொடியைப்புகழ்புந்தியினேந்தே
யற்புதமெய்தியருச்சனைசெய்தான். (ருo)

ஓதருமோங்கொளியுற்றதொர்பாரி
சாதமதின்னிழற்சார்தரலால்வெம்
போதகநீக்குநர்பொற்புறுபாரி
சாதவனேசனெனப்பெயர்சாற்றும். (ருக)

பூவுலகம்புகழ்பொற்புறுரோகை
மேவியரூபம்விளங்குதலாலே
பூவுலகந்திகழ்பொற்கொடியென்று
மேவியநாமம்விளம்பியதன்றே. (ருஉ)

பொன்னுலகந்திகழ்பொன்னனையாள்பான்
மன்னுசெவ்வானிடைவந்தொளிர்கின்ற
மின்னெனநின்றுவிளங்குதலாலே
மின்னனையென்றுவிளம்பினர்மேலோர். (ருங)

நாடொறுமிம்முறைநல்லமுதஞ்சே
ரோடையினுந்தனதோடையினுஞ்சென்
றாடியருச்சனைக்காவனகொண்டன்
பூடுருகச்சிவபூசையுழந்தே (ருச)

கோலமதாமணிகுண்டகனிருநி
மூலியினன்பமாமூண்டதலத்தோ

ராலவிழற்கணமைத்தொருலிங்க
நாலுமுகன்வழிபட்டனனன்றே. (ருரு)

அத்தருமூலினண்ணலைநண்ணிச்
சித்தமகிழ்ச்சியுடன்றெரிசிக்கிற்
புத்திகொள்பூருவமாய்ப்புரிபிரம
கத்தியென்வெவ்வினைக்கட்டறுமன்றே. (ருசு)

அன்னியமாமனையாளையணைத்த
ருென்முறையல்லதுதுய்த்திடுதோடஞ்
சென்மமொர்நூறுசெய்தீவினைதீரு
மன்னதனூற்பின ரன்பதிசேர்வார். (ருஎ)

சிற்சிலநாளவைசென்றொழியப்பின்
புற்றருளெந்தைக்குத்தரதிக்கி
னெற்றருமெண்டலையிட்டதொர்நூறு
விற்கிடையெல்லையின்விண்டுவைக்கண்டான். (ருஅ)

கண்டகவன்னவனைக்கைகுவித்தே
மண்டனில்வந்திடும்வாய்மைவழங்கி
யெண்டிசைபோற்றிடவேய்ந்திருவோரு
மண்டர்பிரான்கழல்கண்டமர்நாளில். (ருகூ)

வேறு.

திருமிகுமுரோமசன்சிறந்தகௌதமன்
பரவுமாங்கிரசன்பரத்துவாசனெண்
டரைபுகழ்வசிட்டனற்சனகனுதியர்
மருவினரயன்றனைவணங்கியேத்தினர். (சுo)

ஆங்கவரனைவருமந்திவான்மதி
தாங்குசெம்பவளவார்சடிலசேகரன்
பூங்கழலருச்சனைபுரிந்துவைகலா
லோங்குமித்தலமயனுலகமொத்ததே. (சுக)

எம்மையாளிறைவனுக்கினியவாலயஞ்
செம்மையிற்குயிற்றுவான்சிறந்ததெய்வநற்

கம்மியன்றனைவரக்கருதியாங்கொரு
மும்முறைவிளித்தனன்முளரிவேந்தனே. (சுஉ)

அந்தநல்லுரைசெவியணைதலோடும்வர்
தெந்தைநீவிளித்ததென்னியம்புகென்றலுஞ்
சுந்தரவரியளிதுதைந்துதேனுகர்
கந்தமாமலருறைகடவுள்கூறுவான். (சுஙு)

காவிசேருந்தடங்கட்படாமுலைத்
தேவியோர்பங்குறைதெய்வநாயகன்
மேவியாருயிர்க்கெலாம்வீடுநல்குவான்
கோவினீயணிபெறக்குயிற்றுகென்னவே. (சுச)

அருடருமரியபஞ்சாக்கரப்பெருந்
திருமதிலாலயஞ்சிகரமண்டபங்
குருமணிதயங்குநீள்கோபுரங்கள்சேர்ப்
பரமனுடகந்தினம்பயிலுமண்டப்ம். (சுரு)

கரிமுகன்கந்தவேள்கருணையேபொழி
திருமுகமண்டலஞ்சிறந்திலங்கவான்
பெருகொளிபரப்பிடும்பிரமதாண்டவ
மருள்புரிதரவெழுந்தருளுநாயகன். (சுசு)

இன்னநல்விக்கிரகங்களெண்டிசை
துன்னுசெங்கதிரொளிதுதைந்திலங்குசேர்ப்
பன்னருநவமணிபயின்றுபைம்பொனீள்
பொன்னணிமகுடவான்பொருந்துமண்டபம். (சுஎ)

மன்னுதேரூர்மணிமறுகுதோறுநீள்
பன்னுமெண்ணெண்கலைபயிலுமண்டப
மன்னமன்னவர்நடமாடுமண்டபந்
தன்னிகர்தரவருதானமண்டபம். (சுஅ)

நந்தனவனங்களுநதியபொய்கையுங்
கொந்துலாவுங்குயில்கூவுஞ்சோலையு
மந்தணர்மனைகளுமன்னசாலையுஞ்
சந்ததமிம்முறைதயங்கக்கண்டனன். (சுகூ)

கண்டபின்றன துளங்களித்துக்கம்மிய
னண்டநாயகன்றனக்கணிகொளாலய
மெண்டொகைபெறவினிதியற்றினேனெனுப்
புண்டரீகன்பதம்போற்றிப்போயினுன். (எo)

போயபினுடனெழீஇப்புண்டரீகனற்
ருயினுமுயிர்க்கருடம்பிரான்றிருக்
கோயில்களியாவையுங்குறித்துளங்கொளா
வேயவெண்கண்களா லினிதுகண்டனன். (எக)

வன்னியோராந்துமுன்வளர்த்துநேர்வளி
தன்னையுள்ளடக்கியைம்புலன்கடாங்கியே
பொன்னனையானடிப்பூசைசெய்தபி
னுன்னரும்பரசிவயோகுற்ருனரோ. (எஉ)

பாவமானவையெலாம்பற்றறுத்துமே
லாவமாணவையெலாமாகமப்படி
மாபரன்வடிவமாய்வயங்கவாங்கவை
தாபனஞ்செய்தனன்சதுர்முகப்பிரான். (எங)

தேனலர்கொன்றையஞ்சிகழிவானவன்
ருனருள்செய்தநாட்டணந்துமாண்டதும்
பான்மைசேர்சத்திநிபாதமுற்றது
ஞானநாயகன்றிருவுளத்துநாடினுன். (எச)

இன்னதற்றவங்கள்கண்டிரங்கியெம்பிரான்
பன்னகபணமணிப்பணிகடாங்கியே
மன்னும்வானவர்கள்பூமழைபொழிந்திட
மின்னனையாளுடன்விடையிற்ருேன்றினுன். (எரு)

தோன்றலும்விழித்துமெய்துணுக்கமுற்றமீ
வான்றெடுபெராமாமரந்தன்வேரறத்
தான்றவீழ்வபோற்சதுர்முகன்கதிர்
கான்றிடுங்கண்ணுதல்கழலிறைஞ்சினுன். (எசு)

இறைஞ்சிமேயன்றனையெழுகெனுவெழுந்
தறிந்தடியேன்பிழைத்தவற்றைநீக்குவான்

வெறுந்தமியேன்மனம்வெளிநின்றுயென்றுச்
சிறந்தநன்மறைத்துதிசெப்பலுற்றனன். (எஎ)

வேறு.

ஈசாசரணமெந்தாய்சரண
நேசாசரணவிமலாசரண
மாசானவைதீர்த்தடியார்க்கருளுந்
தேசாசரணஞ்சிவனேசரணம். (எஅ)

மூவாமுடியாமுதலேசரண
மேவாதவர்பான்மேவாய்சரணங்
காவாயெனவேகடனஞ்சயிலுந்
தேவாதியர்தந்தேவேசரணம். (எகூ)

அகிலந்தருகாரணனேசரணம்
புகலும்புவனாதிபனேசரண
மகிழ்மன்மதவேண்மாண்டேயெரியத்
திகழ்வெங்கணனேசிவனேசரணம். (அ௦)

உலகெங்கணுமோருருவாசரண
மலர்செங்கதிரோனதிதாகமுடன்
வலம்வந்துழலும்மகமேருவெனுஞ்
சிலைதங்கியகைச்சிவனேசரணம். (அக)

உலகாதரகல்லொருவாசரண
மலமாயைகளைந்தருள்வாய்சரண
மலையாழியின்மேவமுதாசரணந்
திலகாபரணாசிவனேசரணம். (அஉ)

வேறு.

இன்னபன்னியேயெம்பிரான்றிரு
முன்னர்மாணநன்முறையினேத்தியே
சென்னிமீதினிற்சேர்த்தசெங்கையா
னன்னவாகனனறைதன்மேயினான். (அங)

பூருவத்தியான்புரிந்தபாதகந்
திருமாறருள்செய்துதீநிலாச்

சோர்விலாதசாத்துவிகநற்குண
நேரிலென்பதநீயளித்தரோ. (அச)

இந்தநற்பதியெம்பிராட்டிதன்
முந்தைநாமத்தால்மொழிந்ததாயினு
மெந்தையோருகமென்றனுமைத்தாற்
றந்திடும்வரந்தருதல்வேண்டுமால். (அரு)

என்றனுயுனையிழைத்தபூசனை
ன்றதாக்கொளும்வரமுநல்குவா
யொன்றுமித்தலத்துறைபவர்க்கெலாங்
கன்றுபாதகங்கழிதல்வேண்டுமால். (அசு)

ஈதவீதியானினிதியற்றகில்
திருவுளம்மகிழ்செய்யவேண்டுமாற்
பரவுபன்னகாபரணநீயெனுக்
கருணையங்கடல்கருணைசெய்குவான். (அஎ)

கந்தமேவுநற்கமலயோகிகேண்
முந்தைநாண்முயன்முடிவில்பாதக
நந்துகின்றதானன்கினீநவி
லந்தநல்வரமவையளித்தனம். (அஅ)

வித்தகந்தருவெள்ளைமேனியாள்
சத்தமாதவத்தலைவர்சூழநீ
பத்தியோடுகின்பதத்திலேகெனு
வத்தனந்தலிங்கத்தமர்ந்தனன். (அகூ)

அத்தனந்தலிங்கத்தமர்ந்தபின்
பத்தியாலயன்படியிற்றாழ்ந்தெழீஇ
வித்தகஞ்சருவிழாநடத்தியே
சத்தியவ்வுலகத்திற்சார்ந்தனன். (கூ0)

மன்னுபிரமகைவர்த்தந்தன்னினற்
பொன்னுலாவுதென்பூவணக்கதை
யின்னதேழ்தலையிட்டவெழுபதாய்ப்
பன்னுமத்தியாயம்பகர்ந்திடில். (கூக)

வேறு.

பிரமசாபமகற்றிடுமிக்கதைபெருகுகாதலினித்தமுமோதுவோ, ருரியஞானவுரைப்பொருள்செப்பினரொருமையோடுசெவிகொடுத்தோர்குவோர், கருணையால்வரைகுற்றநர்கற்குநர்கழறுகாதைகருத்தினினாடுவோர், மருவிநீடுசுவர்க்கமதற்றரமகளிர்சூழவிருப்பரொங்காளுமே. (சுஉ)

பிரமசாபமோசனச்சருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள் (எஅச)

பிரமசர்பமோசனச்சருக்கச்சுருக்கவசனம்.

திருக்கைலாசமலையிலே, செம்பொன்னுலாகிய திருமண்டபத்திலே, அரிபிரமேந்திராதி தேவர்முதலியோர்சூழத் திவ்வியசிங்காசனத்திலே, உமாதேவியார்சமேதராக ஸ்ரீகண்டசரீரியாகிய சிவபெருமான் வீற்றிருந்தருளினர். அப்பொழுது, திருநந்திதேவர் வேத்திரப்படையினாலே அவ்விடத்திலேநெருங்கிய தேவர் முநிவர்குழாங்களை ஒதுக்கிச் சந்நிதியிலே உலாவிநின்று துதிசெய்ய, அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமைமுதலிய தேவரம்பையர்கள் வீணுகானத்தொடுநடித்தார்கள். அம்மகளிருள்ளே ஊர்வசி தனியே நடித்தபொழுது சிவபிரான் திருவுளமகிழ்ந்தருளினர். அப்போழ்து ஊர்வசி இடையிலேயுடுத்த வஸ்திரத்தைப் பெருங்காற்றுவந்து சற்றே ஒதுக்கியபோது மற்றையோரெல்லாம் பெரிதும் அஞ்சித்தலைகவிழ்ந்தனர். பிரமனொருவனே இரகசியஸ்தானத்தைக் காமமேலீட்டால் உற்றுநோக்கினன். அதனையுணர்ந்த சிவபிரான், நமது சந்நிதியிலே நிற்றற்கு நீ அருகன் அல்லனெனப் பிரமனைநோக்கிவிலக்கியபோது, அப்பிரமன் கீழேவிழுந்து பெரிதும்பணிந்து எழுந்துநின்றனன். அப்போது, சிவபிரான் "நமது சந்நிதியிலும் ஆசாரியன் அக்கினி வேதாகமங்களோதுமிடம் நமதருளை நாடிக்கொண்டிருக்கும் பெரியோர் இவ்விடங்களிலும் மகளிர் அழகைக்கண்டு மயங்குவோன், நரகவாசியாவன்" என்றும், அங்ஙனமாயினும் நீ நம்மாட்டுவைத்த அன்பினால் மகிழ்ந்தோம். இவ்விடத்தே நீ செய்த அபராதமானது நமதருட்குறியைப்பூசித்தால் ஒழியுமென்றும், பூமியிலே செந்தமிழ்ப்பாண்டிநாட்டிலே, திருவாலவாய்க்ஷேத்திரத்துக்குச் சமீபத்துள்ள திருப்பூவணத்திலே, நம்முடைய தேவியினாலே பூசிக்கப்பட்ட மகாலிங்கத்தை நீ பூசித்தால், அங்கே தோன்றி

உனக்குக் கருணைபுரிவோம் என்றும் திருவாய்மலர்ந்தருளினர். அருளியவுடன் சிவபிரான்மாட்டுப் பிரமன்விடைபெற்றுத் திருப்பூவணஞ் சேர்ந்து, மணிகன்னிகைத்தீர்த்தத்திலேமூழ்கி, சுவாமிசந்நிதிக்கு நேரிலே ஒருதீர்த்தமுண்டாக்கித் திருக்கோயிலினுள்ளே போயச் சிவலிங்கப்பெருமானை விதிப்படி அருச்சித்துப் பின்பு தேவியாரையும்பூஜித்து அப்பால் மணிகுண்டதீர்த்தத்துக்கு நிருதிமூலையிலே ஆலநிழலின்கண்ணே தன்பேராலே ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்தான். பின்னர்ச் சுவாமிசந்நிதிக்கு வடதிசையிலே நூற்றெட்டுவிற்கிடைத் தூரத்திலே தவஞ்செய்துகொண்டிருந்த விஷ்ணுவைக்கண்டு வணங்கி, தான் பூமியில்வந்த வரலாற்றைக்கூறிக் கலத்திருக்குங்கால், பிரமன் தேவகம்மியனைவருவித்துப் புட்பவனேசருக்கு ஆலயம் அமைக்கும்படிசொல்ல, தேவகம்மியன் சிற்பநூலின்படி திருக்கோயில் அமைத்தான். அமைத்தபின் திருக்கோயிலினுள்ளே பிரமன்புகுந்து சிவலிங்கத்தைப்பூசித்துச் சிவயோகத்திலிருந்தான். அதனையுணர்ந்த சிவபிரான் இடபாரூடராகத்தோன்றியருள, உடனேபிரமன் எழுந்து வணங்கித் துதித்தான். அத்துதிக்குச் சிவபிரான்மகிழ்ந்து பிரமன்செய்த பாவத்தையும்போக்கிப் பூவணத்து வசிப்பவர்க்கும் டாவந்திரும்படி அருளி அந்தர்த்தானமாயினர். பின்பு பிரமனுக் திருவிழாகடாத்திச் சத்திய லோகஞ்சார்ந்தான். இங்ஙனம் பிரமகைவர்த்தபுராணத்திலே எழுபத்தேழாமத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது

இலக்குமிசாபமோசனச்சருக்கம்.

பான்மைசேருலகம்பரிந்துகாத்தளிக்கும்பகவனும்படர்சிறையளிசெங், தேன்விருந்துண்ணுஞ்செய்யபூங்கோயிற்றிருவுமீங்குற்றதென்னெனலு, நான்மறைதினமுநாவினையாடெற்சவுனகமுனிகேளென், முனனமலர்ச்சேயருந்தவத்துறைபோமழகியசூதன்பின்மொழிவான். (க)

முன்னொர்நாளுலகமூடிருள்விழுங்குமுழுமணிக்கிரணமொய்த்தெழுசெம், பொன்னினற்சமைத்தபித்திகைதொறுநற்பொங்கொளிபுதுவெயிலெறிப்பத், துன்னியெண்டிசையு

ஞ்சுடர்விடுசிகரச்சோதிவான்முகடுபோழ்ந்தவிரு, மன்னுமண்டபத்தின்மத்தியின்முடங்குவாலுளைமடங்கலாசனத்தில்.

தலைமைசேர்மகுடந்தடமுடிதயங்கச்சங்குசக்கரங்கைநின்றிலங்க, வுலகிருளோடவிலகொளிபரப்புமொருமணிகிடந்துமார்பொளிரப், பலகதிரவிர்பொற்படாமரைவயங்கப்படிமிசையளந்ததாள்விளங்க, மலர்மகளோடுமரகதமலைபோல் வைகினன்வைகுண்டமூர்த்தி, (௩)

மாறின்முக்கோடிமருவியவேலைவைகும்வைகுண்டலோகத்தி, னேறியசெங்கையிலங்கியசங்குமெரிசுடராழியுமேந்து, நூறொருகோடிநாரணர்சூழ்ந்துநுணங்கியகேள்வியின்வணங்கி, வேறுவேறுயமிக்கநற்றுதியின்விரும்பியாங்கவரவர்விளம்ப. (௪)

வில்லுமிழ்மாலைமிக்கதந்திரிசேர்வீணைநல்விஞ்சையர்பாட, நல்லெழிலரம்பைமெல்லியலார்களுட்டியகின்றுமுன்னடிப்பச், சொல்லிடுந்தடக்கைசுமந்திடுஞ்சூரற்றுளங்குகஞ்சுகியர்கடுதிப்பப், பல்லியந்துவைப்பப்பண்டருவேதபராயணர்பணிந்துமுன்பரவ. (௫)

அந்தநற்சமயமண்டபமதனிலளிக்குலங்களிக்கும்வண்பொகுட்டுக், கந்தமாமலரில்வந்துதிக்கின்றகடவுளர்பதின்மருமோரேழ், மந்திரகோடிநாதரும்வயிரவச்சிரத்தடக்கைவான்றருநே, ரிந்திரனிமையோரியாவருமீண்டியிருமருங்கிறைஞ்சிநின்றேத்த. (௬)

திருமலர்ப்பொகுட்டுச்செய்யபீடிகையிற்றிசைமுகன்வரவருள்புரிந்தா, னருமறைமுனிவர்க்கமுதநற்கிரணவழகொழுகானனமலர்ந்தான், மருவியகுலிசவானவன்றனக்குமணிமுடிதுளக்கினனேனைக், கரிவிலதாயகடவுளர்தமக்குக்காண்டருகடைக்கணேக்களித்தான். (௭)

பங்கயத்தவன்மேற்பார்வையங்கிருத்திப்படைத்திடுந்தொழிலலனெவனற், றுங்கநற்சுரூபபதிபுகழ்கினதுதூயபொற்பதிநலனேவ, னிங்கெமக்குணர்த்தியெனுமொழியிசைத்தா

ங்கெண்ணரும்பண்ணவர்நீவிர், நுங்கடம்பணியுநம்வரன்
முறையுறுவலுமென்றனனுனித்துணர்வோன். (அ)

வேதநான்முகனேயாதிவிண்ணவர்கண்மேகவண்ணன்
கழலிறைஞ்சி, யோதுநின்னருளாலுற்றவெம்பதங்கட்கோ
ரொருகுறையுமோவின்றாற், றாதையுந்தாயுந்தானருள்புரிய
த்தநயர்கடளர்வரோவென்னாப், பாததாமரையின்முறைமு
றைதொழுதுபரிந்துமுன்பரவமேயினரால். (கூ)

வனமிகுசிகரமந்தரகிரியைமத்தெனகிறுவியோர்தாம்பா
ப், பனகநற்றுத்திப்பணாமணிபிதுங்கப்பிணித்துநற்கச்சபவு
ருவாய்க், கனைகடல்வயிறுகலங்கிடக்கடைந்துகடவுளர்க்க
முதநன்களித்த, தினகரனெனவேசெஞ்சுடர்பரப்புந்திருமி
குமொருமணிமார்பா. (கo)

திகழ்தருநாரசிங்கமதாகிச்செம்பொன்மேனியன்றனை
யுகிராற், புகழ்பெறமார்புகீண்டணிவாகைபுனைதிருக்கரவர
விந்த, விகழ்தலிலிருகோட்டேனமதாகியேழ்நிலமேந்தியவெ
ந்தாய், சுகமிகவுயிர்க்குத்துணிந்தருள்புரியுந்தொல்லருட்சோ
திவானவனே. (கக)

உறுதினமுலர்ந்தவுகாந்தகாலத்திலுததிகளேழுமொன்
றாகி, மறுகுறக்கண்டுமென்னுயிர்க்கிரங்கிமாற்றருந்திருவுருமா
ற்றி, யறைவரிதாயதிறலுடனோங்கியஞ்சலென்றுங்கொர்செ
ஞ்சேலாய்ச், சிறுசெலுப்புனையிற்சிந்துவேழடக்குந்தீதறுதி
கழ்சதுர்வேதா. (கஉ)

மன்னியவுலகில்வயப்பரியாகிவருங்கருணாகரமூர்த்தி
தன்னிகராயசதுர்மறைவிளக்கந்தந்திடவந்தஎம்பிரானே
பன்னுநல்லன்பர்பவந்தனைச்சாடிப்பரிவினுண்டருள்புரிபரம
நின்மலஞானவீடருள்கருணைநீர்பொழிநீண்டமாமுகிலே. ()

வாமனவுருவமாகிமாவலியைவன்சிறைவைத்திடும்வள்
ளால்,பூமலர்வாளிகொண்டுபூங்கழைவிற்பூட்டியேயுலகெலாங்
காம,காமியைநல்குங்காமனைத்தந்தகண்ணகாயாமலர்வண்ண,
நேமியும்வளையுநின்றிலங்கியகைநேரிலாநின்மலமூர்த்தி. (கச)

ஒருபடியண்டமுண்டதையன்றியோரடியாலுலகளந்தோய், கருமுகிலெனவேகண்படுத்தருளுங்கட்செவிக்கணைபணுடவியின், பருமணியெறிக்கும்பயோததிநாப்பட்பன்னகப்பாயனீத்தயோத்தித், திருநகருலகமருள்செயவந்ததீதறுசீராமூர்த்தி. (கரு)

விசிதரங்கறங்குவேலைசூழ்ஞாலமேவியபொதுக்கடிந்தருளூர், தசரதன்மதலையாகவந்திராமசந்திரனெனும்பெயர்தாங்கி, வசையறுகவத்துக்கவுசிகன்பின்போய்மன்னுதாடகையுயிர்வாங்கித், திசைதொறுமுரியவிசைகிறுவியமெய்திகழ்ந்திடுந்திருமறுமார்பா. (க௬)

காதலிற்றவங்கூர்கவுசிகன்வேள்விகாத்தெதிர்சுவாகுயிர்பதைப்ப, மேதினிப்படுத்திவிலகரிதாமைம்புலப்பகைவென்றருண்மேலாங், கோதிலாக்குணக்குன்றனையகோதமன்சொல்கொடியிடைகொடியகற்சாபம், பாதநுண்டுகளாற்படவுருவளித்தபாதபஞ்சாயுதநாதா. (கஎ)

வனமிகுந்தோங்குவரிசிலைகுனித்துவான்முகடதிர்தரமுரித்துச், சனகர்கோன்றந்தசானகியின்றன்றனிமணமிதிலையில்வேட்டுப், பனகநற்றுத்திப்பணுமுடிகிடந்தபடிநடுங்கிடப்பரசுராமன், றனதுவிற்குனித்தவனமிகுமலர்செந்தாமரைத்தடக்கைநாயகனே. (கஅ)

மன்னியவசிட்டமாமுனிசெம்பொன்மணிமுடிகவித்திடும்வேலை, பன்னுகைகேசிபண்டுகொள்வரத்தாற்பரவருந்தாதைசொற்றவரு, தன்னமன்னவளோடரியதம்பியுடனணைந்துநற்குகனைநண்புவந்து, பொன்னுலகேத்தத்தன்னிகர்வனத்திற்போதுபொற்பாதபுண்டரிகா. (க௯)

அணைந்தபின்கானத்தணைந்தவான்றந்தைக்கந்தியக்கடன்முறையாற்றிப், பணிந்துபின்சென்றபரதனுக்குரியபரிவுடன்பாதுகையுதவி, வணங்குறுசரபங்கனுக்குயர்ந்தோங்குவான்பதமளித்துயிர்விராதன், றணந்திடத்தடிந்ததண்டுழாயலங்கற்றுங்கபூந்தடந்தோளாய். (உ௦)

மாற்றருஞ்சடாயுவுடன்மகிழ்கூர்ந்துமாயமாரீசனைவதைத்துக், கூற்றெனவந்தச்சானகிதன்னைக்கொடியராவணன்கொடுபோத, வேற்றமர்பொருதேயிறந்தபின்றந்தைக்கிறுசெய்கடனிழைத்தளவி, லாற்றல்சேர்கவந்தனுருயிர்கொண்டவலைகடலச்சுதானந்தா. (உக)

தாராதலத்தொடுவான்றடவிடுமருத்துத்தந்தருண்மைந்தனைக்கண்டு, பராவருகிரணப்பரிதிசேய்கமலப்பதம்பணிந்தேத்தவேழ்பாரா, மராமரமுருவவாளிதொட்டுலையாவாலிமெய்பதைத்திடவதைத்த, வராவணைமீதினுழியினுப்பணுநக்தத்தறிதுயிலமர்வோய். (உஉ)

வானரசேனைதன்னொடுமேகிமறிதிரைக்கடற்கரைகட்டி, யீனமின்மேன்மைவிபீடண னன்பினேய்ந்திடவிலங்கையையீந்து, தானவர்கிளையைவேரொடுந்தடிந்துதசமுகன்றன்சிரமரிந்தாங், கானசானகிதன்சிறைவிடுத்தருச்சித்தயோத்திவந்தணிமுடிபுனைந்தோய். (உங)

என்னவேபன்னியின்னனவிமையோரோத்திடவெம்பிரான்மகிழ்ந்தா, னன்னவர்தமக்குவேண்டியவரங்களளப்பிலாதனவளித்தருளிப், பன்னருந்திறல்சேர்பண்ணவர்தமக்குப்பரிவுடன்விடைகொடுத்ததன்பின்,றன்னிகர்மணிப்பொற்சயனமண்டபத்திற்சார்ந்தனன்சக்கரக்கடவுள். (உச)

வேறு.

விஞ்சுசோதிவியன்மணிமண்டப
மஞ்சின்மீதுமலர்த்திருமாதரா
ளஞ்சியேபொன்னடிவருடத்திருக்
கஞ்சமாமலர்க்கண்வளர்ந்தானரோ. (உரு)

ஆதியந்தமிலாதவருளின்வாழ்
போதனைந்துபுலன்களடக்கினோர்
கோதிலாதகுணத்தர்குரோதமின்
மேதகுந்திறல்வேதபராயணர். (உசா)

குறளுருபரங்குட்டத்தளவினர்
பொறையினீண்டினர்பொங்கெழின்மெய்முக
மிறையுநேர்கிலரொண்ணருமாதவத்
துறையின்மேவினர்தத்துவசுத்தியோர். (௨எ)

சிலநற்சயன்றிதில்விசயன்சேர்
மூலவேதமுழங்கிடுமுன்றில்வாய்
நீலமேனிநிமலனைநேடிய
வாலகில்லியர்வந்துபொருந்தினார். (௨அ)

வந்துசேர்ந்தமணிக்கடைவாயிலிற்
றந்தகாவலர்தாமெதிர்தாழ்ந்தெழீஇச்
சிந்தையார்வந்தெவிட்டமுன்மண்டபத்
தந்தமாதவர்க்காதனநல்கியே. (௨௯)

அருக்கியத்தொடருச்சனையாற்றியே
பொருக்கெனப்பணிவுற்றுப்புகழ்ந்துநன்
கிருத்தியின்பத்திருவருமேகியே.
திருக்குலாமணிமுன்றிலிற்சென்றனர். (௩0)

சென்றுபையவச்சேடியர்தங்களை
வென்றிமேவுநர்மெல்லவிளித்தரு
டுன்றுமாதவர்தொக்கனரெம்பிராற்
கொன்றுமன்பினுணைக்குதிரொன்னவே. (௩க)

வேறு.

பிருகுமாமுனிதவப்பேற்றின்வந்தருண்
முருகுலாவியமுகைவிண்டமுண்டகத்
திருமிகவிளங்குசெல்வத்தின்செல்வமே
தருணமண்டலங்கொள்சந்திரசகோதரி (௩உ)

மண்ணுடையுயிரெலாம்வளர்த்திடுந்திருக்
கண்ணனுக்குத்திருக்கண்களாகிய
பெண்ணமுதேதவப்பெற்றியோர்கட
னண்ணியவுணர்வினானுகருந்தேறலே. (௩௩)

சங்கரிதனையிணைசாற்றிற்பாதிமெய்
மங்கலவாணிநின்மருகியாகுநே
ரங்கனையவர்க்குனையறைதுமென்னில்யா
மிங்குனக்கிணையெவரியம்பலாவதே. (ஙச)

மணிதிகழவிரொளிவடங்கொண்மென்முலைப்
பணிமொழிப்படவரவல்குற்பாவையா
ரணிதருமணிக்குழல்லழகுசெய்யுநின்
றுணைமலர்ப்பதந்தனைத்தொழுதல்செய்தனம். (ஙரு)

ஓர்மொழியுரைப்பதொன்றுடையமெய்த்தவ
நேர்தருமந்தணர்சீள்கடைத்தலை
சேர்தருமண்டபஞ்செறிந்துவைகுநர்
நீர்முகில்வணற்குநீகிகழ்த்துமென்றனர். (ஙசு)

என்னலுமலர்த்திருவெழுந்துமுன்றில்சென்
றன்னவர்தமைத்திருவழகிலாமையான்
முன்னவமதிப்பினன்முத்தங்கான்றிரு
நன்னிலவெறித்திடநகைத்திட்டாளரோ. (ஙஎ)

பெண்டகைமதிகொடுபெருகுமோகையா
லொண்டொடிநகைத்தல்கேட்டுறவர்யாவரும்
விண்டுவைமதித்திடார்வெகுண்டுசெல்லவை
குண்டர்தருநெறிகுறிக்கொண்டாரரோ. (ஙஅ)

அச்சுதன்றுயிலுணர்ந்தவற்றைநாடியே
மெய்ச்சரோருகத்திருமின்னைநோக்குறுச்
சிச்சியந்தணர்க்கவமதிசெய்கிற்றிநின்
னிச்சையினேனெனவெடுத்தியம்புவான். (ஙகூ)

துன்றுமீதெழுந்தலைசுருட்டுமொழிசூழ்
வென்றிசேருலகினில்வேதபாரகர்க்
கென்றுநல்லன்பனென்றியம்புநம்பெய
ருன்றனுலின்றஃதொழிந்ததாலரோ. (சு0)

கோதிலாவருங்குலத்துதித்தகொள்கையாற்
காதல்கூர்கருமநற்கணவற்காற்றினும்

வேதியர்க்கவமதிவிளைக்கினுங்கவள்
கேதமிலக்குலக்கேடியாகுமால். (சக)

என்றவன்சபித்தலுமிரங்கியிந்திரை
தென்திருப்பூவணந்தன்னிற்சென்றலர்க்
கொன்றையஞ்சடைமுடிக்குழகனைப்பணிந்
தோன்றியமாதவமுழந்துவைகினாள். (சஉ)

மாயவனஞ்சிப்பின்மஞ்சரீங்கிகற்
சேயதாமரைப்பதஞ்சென்னிசூட்டியா
னேயெனுமுன்னரிங்கிருத்துவேனெனாத்
தூயவேதியர்கடஞ்சூழலேகினான். (சங)

வார்கொள்பூண்முலைத்திருமயிலைநீக்கியே
கார்கொள்வண்ணத்தினான்வரவுகண்ணுறீஇப்
பேர்விலந்தணர்பதம்பெயர்த்திடாமலே
சீர்கொள்வைகுண்டமத்தியினின்றனர். (சச)

நின்றவந்தணர்தமைநேமிவானவன்
மன்றல்சேர்மலர்ப்பதம்வணங்கிவல்லையி
னென்றியவன்புடனொடுங்கியேயெதிர்
நின்றுநன்மொழியினைநிகழ்த்தலுற்றனன். (சரு)

பன்னருமாதவம்பயிலுமந்தணிர்
மன்னியதனதுபெண்மதியினாலடைந்
தன்னவணைத்தனளடியனேன்பொருட்
டின்னதோர்பிழைபொறுத்திரங்கல்வேண்டுமால். ()

அந்தணாரியபாதாரவிந்தமேல்
வந்தவன்சிரமுறீஇவண்டர்மொய்த்திடு
சுந்தரக்கழற்றுகள்சுகந்தகுங்கும
சுந்திரதிலகமேதானதாகுமால், (சஎ)

ஆங்கவரறைந்தசொல்லினைத்துமின்பமாத்
தாங்கருமன்புசேர்தந்தைதாயுரை
போங்குநல்லந்தணருரைத்தவாசக
நீங்கிவையிருத்துகேனெனதுசென்னிமேல், (சஅ)

வேறு.

வேதமெய்நெறிவழாதுமேசகுநன்னீராடிப்
பூதிசாதனமணிந்துபொருவருமந்திரத்தா
ஞதனையருச்சித்தேத்திநாடொறுமெரிவளர்க்கு
மாதவர்சிறினந்தம்வைகுண்டமில்லைமாதோ. (சகூ)

சதுர்மறைவேள்வியாளர்தமைச்சரண்புகுவதன்றி
நொதுமலர்தம்மைவேண்டேனுவலருநும்மைநோக்கிக்
கதுமெனநகைத்தலால்யான்கட்டுரைசெய்தசாபம்
பதுமபீடிகைமான்பெற்றுப்படர்புவியிடம்படர்ந்தாள். (ருo)

ஆதலாலறவிர்காளோவருஞ்சினமகன்றுநீவி
ரேதமில்வைகுண்டத்தினினிதமர்ந்திருத்திர்மன்ற
போதுகேன்பொருந்துதிக்கினென்றருட்புனிதமூர்த்தி
யோதிடவுறுவரானேருவப்புடனுரைப்பதானர். (ருக)

கொண்டல்வண்ணத்தயாமேகூர்ந்தனங்கருணைநின்னாற்
புண்டரிகப்பூங்கோயிற்பொருந்துகற்பரசியாமப்
பெண்கொடிதனைநீவிட்டுப்பெயர்ந்திடிற்பிரிதலாற்று
யொண்டொடிதனதுசாபமொழிவதுமொழிகுவாமால். (ருஉ)

புண்ணியப்பொருளாய்மேலாய்ப்புனிதமாய்ப்பூர்வமாகி
வண்ணமாம்பாரிசாதமரத்திருநீழறன்னிற்
கண்ணகன்ஞாலம்போற்றுங்கனவிமுன்னருச்சித்தேத்த
வுண்மகிழ்வரங்கணல்குமொருசிவலிங்கமுண்டால். (ருங)

அன்னதொல்பூவணத்தினலர்ந்தசெம்மலர்ப்பூங்கோதை
பன்னிருவருடமந்தப்பண்டைநன்மணிகுண்டத்திற்
றன்னிகர்தவஞ்சாரப்பின்சார்ந்தரன்பூசையாற்றி
யன்னியதிருவினேடுவைகுண்டமருவிவாழ்வாய். (ருச)

செம்மையொன்றின்றியாஞ்செய்தீமையைப்பொறுத்தியாவர்
மம்மர்மாந்தரினான்றுள்வணங்கில்யாம்வணங்கற்பாலா
ரம்மநீயரனன்பர்க்குளதிகமாமாதலாலே
யெம்மனோர்தமக்குமேலாமென்பதற்கையமின்றால். (ருரு)

ஆதலாலோதுவங்கேளலர்ந்தசெந்தாமரைக்கண்
மாதவமாயாகாயாமலர்வண்ணு னைதுமெய்பு
மோதிடுமெமதுமெய்யுமோர்ந்திடிஞன்றேயாகு
நீதியினெம்மைக்காத்தியென்றனர்நெறியினின்ருேர். (ருசு)

இங்குநீரடைந்தபான்மையென்னெனவினவலோடும்
வெங்கனல்வேள்விசெய்வான்விழைந்தனே வேண்டப்போந்தா
மங்கதுகாத்திநீயென்றந்தணராசிகூறப்
பங்கயச்செழுங்கண்ணனும்பரிந்தவர்வேள்விகாத்தான். ()

காத்தவர்விடைபெற்றன்னோன்ககனகூடத்தின்காறும்
வாய்த்தவைகுண்டம்வைகிவருடமீராறுமாளப்
பூத்திகழ்திருவினைசைபுந்தியிற்பொருளுய்ப்பூமா
தேத்திடும்பூவணத்தினின்பத்தினிழிந்துமன்னோ. (ருஅ)

மாவணங்குற்றசாபமாண்டிடவேண்டியந்தப்
பூவணங்கோயில்கொண்டபொருவிடைப்பாகன்றன்னைக்
கோவணவுடையினனைக்கோதிலாக்குழகன்றன்னைத்
தீவணச்சடையினனைச்சிவலிங்கந்தனிற்பூசித்தான். (ருகூ)

பூசனைப்பலத்தினலேபூமகள்சாபநீங்க
வாசையினவட்கண்டங்கேயருமணமுடித்துமீண்டு
மீசனைவழிபட்டேத்தியிந்திரையோடும்பின்ன
ரோசைகொள்வைகுண்டத்தினுலகெலாம்போற்றவுற்றான். ()

அந்தணர்தம்மைப்பூமாதவமதிசெய்ததோட
மந்தநற்பூவணத்தினன்றியேயகலாதென்று
லந்தநற்சிவலிங்கந்தானருண்மேனிதரித்துவந்த
வந்தநற்றலத்தின்மேலாமருந்தலமொன்றுமின்றும். (௬௧)

வேறு.

தேவர்வந்துசேவிக்கஇருநிதிக்
கியாவர்கட்குநன்கினிதுநல்குவான்
கூவிளிக்கிசைகொண்டவெல்லையின்
மேவுபாதியின்வேணவாவினல். (௬௨)

அன்றுதொட்டுநன்காதிகேசவன்
மன்றவித்தலமான்மியத்தினற்
கொன்றையஞ்சடைக்குழகனைப்பணிந்
தென்றுமெதிர்முகந்தாவிருந்தரோ. (சுங)

பூர்வலிங்கநேர்போற்றுபச்சிமத்
தேர்கொளம்பிரண்டேகுமெல்லைவாய்ச்
சார்பெரும்புகழ்த்தன்றனுமத்தா
லோரிலிங்கமுண்டாக்கினனரோ. (சுச)

தந்தலிங்கத்தின்சந்நிதிக்கணே
சிந்தைகொண்டிடுதீர்த்தங்கண்டன
னந்தநான்முகத்தயனையன்றுதன்
னுந்திபூத்தருளும்பர்தம்பிரான். (சுரு)

ஓங்குநல்அலகுண்டவெம்பிரான்
பாங்கினல்வழிபாடுசெய்பரன்
பூங்கழற்பதங்கண்டுபோற்றினோர்
தாங்குபாவவெஞ்சட்டைநீங்குவார். (சுசு)

உரைகொண்மாயனுக்குத்தாத்திசை
யரைகொளம்பிடுதூரத்தாழ்கிணற்
றுருவமாகியேயோங்கிடும்புகழ்
விரவுமந்தநல்விண்டுதீர்த்தத்தில். (சுஎ)

மண்டுகாதலின்வந்தமூழ்கியே
விண்டுலிங்கத்தைக்கண்டுமேவினோர்
பண்டுசெய்கொடும்பாவநீங்கியே
யெண்டருஞ்சிவலோகத்தேறுவார். (சுஅ)

இடபத்திங்களிலிந்துமேவுநாட்
டொடருமன்புடன்சொல்லிலிங்கத்தி
னடியிறைஞ்சினோராற்றிடும்பவ
நொடியினீங்கிடுநுணங்குகேள்வியாய், (சுகூ)

செப்புகின்றவத்திங்களிற்றின
மொப்பிலாதபனுதிக்குமுன்னரோ
யப்புனற்படிவோரரும்பல
னிப்பரிசெனவியம்பவொண்ணுமோ. (எ0)

மின்னுமாமணிவிமானமேவியே
துன்னரம்பையர்சூழ்ந்துபோற்றவே
தென்னுறுந்திசைசேர்தராமலே
மன்னுபேரின்பமருவிவாழ்வரோ, (எக)

கழறுமப்ரமகைவருத்தத்தி
னெழுபதின்கடையிட்டவெட்டதா
மழிவிலத்தியாயம்மதாமரோ
வழுவின்மாதவமதித்துக்காண்டியால் (எஉ)

வேறு,

பங்கயத்திருமங்கைசாபகவிர்த்திடுகாதைதான்
றங்குநற்சொல்பகர்ந்துளோர்தஞ்செவிக்கொடுநாடுவோர்
தங்கமிக்கபலன்கள்சிர்துன்றுளத்தருள்கூரவே
மங்கலத்தினினந்திநேர்வந்துறைக்கினுமரிதரோ. (எங)

இலக்குமிசாபமோசனச்சருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள் (அுஙஎ)

இலக்குமிசாபமோசனச்சருக்கச்சுருக்கவசனம்.

வைகுண்டலோகத்திலே, செம்பொற்றிருமண்டபத்தின் மத்தியிலே, சிங்காசனத்திலே, இலக்குமிசமேதராக விஷ்ணுமூர்த்தி வீற்றிருக்குங்காலையில், அவர் திருமுன்பு வித்தியாதரர்பாடினர். அரம்பைமுதலாயினோர் ஆடினர். தேவர்முதலாயினோர்துதித்தனர். அப்போது அவர்களுக்கு வேண்டியவரங்களை அருளி விடைகொடுத்த பின்பு, விஷ்ணுமூர்த்தி சயனமண்டபத்தைச்சார்ந்து திருமஞ்சத்திலே இலக்குமிதேவி திருவடிப்பணிவிடைசெய்ய நித்திரைபுரிந்தனர். புரியும் பொழுது, ஐம்பொறிகளையும் அடக்கித் தவஞ்செய்பவரும், குறள்வடி

வினரும், அங்குட்டத் தளவினருமாகிய வாலகில்லியரென்னு முனி வர்கள் வந்தார்கள். வந்தவர்களை வாயில்காப்போர் எதிர்சென்று வணங்கி உபசரித்து ஆசனத்திலிருக்கச்செய்து, உள்ளே போய்ச் சேடியர்களை அழைத்து முநிவர்கள் வரவை விஷ்ணுமூர்த்திக்கு விண்ணப்பஞ்செய்யும்வண்ணந் தெரிவித்தனர். அதனையுணர்ந்த சேடியர் இலக்குமிதேவியைவணங்கி முனிவர்கள் வரவை விஷ்ணுமூர்த்திக்கு விஞ்ஞாபிக்கும்படி வேண்டினர். வேண்டினவுடன் அம்முனிவர்கள் குருபிகளாயிருத்தல்பற்றி இலக்குமிதேவி நோக்கிப் பெரிதும் நகையாடினள். உடனே அம்முநிவர்கள் விஷ்ணுவையும் மதியாமற் கோபங்கொண்டு இவ்வைகுண்டத்தைவிட்டு வந்தவழியை நோக்கிச்செல்லும்பொழுது, விஷ்ணுமூர்த்தி நித்திரைநீங்கி, நிகழ்ந்தவைகளை யுணர்ந்து இலக்குமியைப்பார்த்து "இதுகாறும் யான் அந்தணர்களுக்கு அன்பனென்பதை நீமாற்றினாய்" உயர்ந்த குலமகளாய்க் கணவன் கருத்தின்வழி ஒழுகுபவளாயினும் அந்தணர்களை அவமதிசெய்தால் அவள் குலக்கேடியாம்'' என்று சபித்து விலக்கினர். அச்சாபத்தையடைந்த இலக்குமி வருந்தித் திருப்பூவணஞ்சேர்ந்து தவஞ்செய்துகொண்டிருந்தனள். இலக்குமியை விலக்கியபின்பு விஷ்ணுமூர்த்தி பயந்து விரைந்துசென்று முனிவர் குழாத்தை அடைந்து வணங்கி, "ஹே முனிவர்களே? என்னுடைய மனைவி பெண்மதியினாலே நகைசெய்ததைச் சித்தத்தில்வைத்தருளாது கருணைபுரியவேண்டும்'' என்று பிரார்த்தித்தபோது முனிவர்கள் இரங்கி, "ஹேவிஷ்ணுமூர்த்தி? இலக்குமியானவள் பன்னிருவருடம் மணிகன்னிகையில் மூழ்கித் தவஞ்செய்ய நீபோய்ப் புட்பவனேசுரரைப் பூசித்தால் அவமதித்த அபராதமும் சாபமும்நீங்கும். பின்பு அவளோடு நீ இவ்வைகுண்டத்தில் வாழ்குவாய்'' என்று அருளினார்கள், உடனே விஷ்ணுமூாத்தி மகிழ்ந்து, "முனிவர்களே நீவிர் இங்கேவந்த காரியம்யாது'' என்று வினவியவழி அதற்கு அம்முனிவர்கள் "யாங்கள் செய்யும் வேள்வியைக் காத்தல்வேண்டும்'' என்றனர். அங்ஙனமே முனிவர்கள் வேள்வியைக் காத்துப் பின்பு திருப்பூவணஞ்சேர்ந்து, சிவலிங்கப்பெருமானைப் பூசித்ததனால் இலக்குமிக்குண்டான அபராதமும் சாபமும் நீங்க அவளோடு வைகுண்டஞ்சார்ந்துவாழ்ந்தனர். திருப்பூவணேசருக்கு மேலைத்திசையிலே, இரண்டம்பு செல்லுந்தூரத்திலே, விஷ்ணுமூர்த்தி தம்பெயராலே ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்தனர். ஒருதீர்த்தமு

முண்டாக்கினர்; சித்திரைமாசத்திலே, ஆதிவாரத்திலே, அத்தீர்த்தத்திலே மூழ்கி விஷ்ணுலிங்கத்தை வழிபட்டோர் பாவநீங்கிப் பதமுத்திபெறுவர். இங்ஙனம் பிரமகைவர்த்தபுராணத்திலே, எழுபத்தெட்டா மத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

பதினோராவது.

உமாதேவி திருவவதாரச்சருக்கம்.

உற்றதிருமாலுடனியைந்தவையுரைத்தாய்
தற்பரமசத்தியவதாரமுரையென்னக்
கற்றுணர்வுறுஞ்சவுனகன்கழறலோடும்
பொற்புறுபுராணமுநிபுங்கவனுரைத்தான். (க)

மன்னுமகவான்முநிவர்வானவர்வழுத்த
வுன்னரியசத்தியவுலோகமதின்மேனாட்
சென்னியொருநான்குடையசெல்வனையிறைஞ்சித்
தன்னிகரிலாதவருட்டக்கனிதுரைத்தான். (உ)

ஒக்கவுயிர்கட்குயிரதாயுறைகுவோனைத்
தொக்கவறிவாகியுயர்தொல்லமரர்போற்று
மிக்கவொருவன்றனைவிளம்பியருளென்னத்
தக்கமலர்வட்டவணையிற்கடவுள்சாற்றும். (௩)

முன்னொருதினத்தனின்முகுந்தனுமியானும்
பன்னரியபன்றியதுவாய்ப்படியிடந்து
மன்னமதுவாகிவிண்ணடைந்ததுபறந்து
மின்னுமறியாதசிவனேயிறைவனென்றான். (ச)

இறைவனவனேனென்னையுலகீன்றருளிமாய்க்கு
முறைமைதருமுத்தொழிலுமூவர்கடனன்றே
வறையினமரர்க்குளவனுதிபெனுநாமம்
பெறுவதேவனெனவருள்பிதாமகனுரைப்பான். (௫)

சிலமுடனென்னை மிகுசெங்கணெடுமாலை
ஞாலமது தன்னை முனநல்கியதிகாரம்
பாலுறவெமக்கதுபடைத்தருளநல்கி
மேலவனழித்தருள்வன் மீட்டும்வினை தன்னால். (ரு)

பங்கமறவேயதுபடைத்தருளவெங்கட்
கங்குமகிழ்வோடுபினுமப்பரிசளிப்பன்
சங்கரனவன்செயலதன்றியொருதன்ன
மெங்கள்செயலாற்புரியவெண்ணிடவுமுண்டோ. (எ)

பேதமறயாவையினையும்பிரமமென்றே
வேதமவையோதுவதென்னென்னின்மிகுமிந்த
வாதரவுபூண்டவருமந்தவெழின்மைந்த
வேதமறவேமுகமனுலவையியம்பும். (அ)

இத்தகைமைகாடியினியெங்கள்பெருமானைப்
பத்தியுடனீயும்வழிபாடதுபுரிந்தே
யத்தனைநினைந்துநலருந்தவமுழந்தான்
முத்தியவனிற்கருள்வனென்றயன்மொழிந்தான். (கூ)

என்றுரைசெய்தந்தையடியின்கணுடன்வீழ்ந்து
நன்றெனமகிழ்ந்துவிடைநல்கியருளென்ன
மன்றல்கமழ்மானதநல்வாவியிடைமைந்த
சென்றரியநற்றபசுசெய்கெனவிடுத்தான். (க0)

வேறு.

சார்ந்துடனந்தத்தடந்தனில்வளங்கொடாமரைக்கண்களால்வாரி, யார்ந்துநற்றவத்தினருந்துறைபோயவருந்தவர்போன்றயனன்பு, கூர்ந்தருளுபதேசந்தனையுள்ளங்கொண்டருளுடன்வழிக்குறுகிச், சேர்ந்திடுமூலவங்கியையெழுப்பிச்சிரத்தினிற்சொலித்திடச்செலுத்தி. (கக)

நம்பிரான்றனக்குறற்புரூரத்தினடுவருமமுதநீராட்டி, யைம்புலஞானமாலிகைசூட்டியமர்மனப்பூசனையாற்றி, வெம்ப

ஸிமாரிவெயில்வளியிவற்ருன்மேவியமெய்நனிவருந்தி, யும்பர்தம்பிரான்வந்தவப்புறவருடமொராயிரமருந்தவமுழந்தான்.

தக்கவாயிரமாமாண்டுநற்றவஞ்செய்தக்கனுக்கருளுவான்விரும்பித், தொக்கபொற்பிதிரிற்சுணங்கினையணிந்துசுமந்தகச்சினையிறுத்தோங்கி, மிக்கவான்வட்டமுகட்டினைமுட்டிவெளியினையடைத்திடுகொங்கை, மைக்கருங்கண்மாமயிலொடுமெம்மான்மழவிடைமேற்கொடுவந்தான். (கங)

அண்ணல்வந்தனனென்றுடனெழுந்தேயானந்தபரவசனுகி, விண்ணின்மேற்பொருவல்விடைக்கொடியுயர்த்தவிமலனல்விமைத்தவின்மூன்று. கண்ணுமான்மழுவுங்கரசரணமுமெய்க்கவினுமேதன்கணேபுகுத, மண்ணிடையேவீழ்ந்தெழுந்தனன்றக்கன்வழுத்தினனுன்மறைதன்னல். (கச)

ஆயகாலையிலங்கணனருள்புரிவானருந்தவங்கண்டகமகிழ்ந்தே, நேயமோடெம்மைநினைந்துசெய்தவத்தைநிகழ்த்துதிதக்கநீயெனலு, மேயதோர்சென்னியிற்றிடவயன்முனெழுதியதலைவிதிவசத்தாற், றூயநற்பசுந்தேன்சுரும்புணுங்கமலத்துணைப்பதந்தொழுதிவைசொல்வான். (கரு)

நினைவரிதாகிநினைந்துயிர்க்குயிராநின்மலநினைவணங்கிடுவா, ரனைவருமெனைவந்தடியில்வீழ்ந்திறைஞ்சியருந்துதிசெய்திடல்வேண்டுந், தனைநிகர்தேவர்தானவரொன்றுஞ்சாற்றுமென்பணிகளாற்றிடவு, முனையலதொருவர்தனைவணங்காதவுரிமையுமுதவுதல்வேண்டும். (கசா)

படந்தருமுரகஞ்சுமந்திடக்கிடந்தபௌவநீருடுத்தபாரமு, மிடைந்தசிரடைந்தவிண்ணவர்பதமும்வேதமாலாதியர்பதமு, மடர்ந்தமர்விளைக்குமசுரர்தம்பதமுமனைத்துமெந்நாளுமென்னுணை, கடந்திடாவண்ணந்திடம்படவேந்தாய்க்கருதிநீயருளவும்வேண்டும். (களஎ)

பொருவரும்புதல்வர்புதல்வியர்தந்துபொன்றிடாதிருத்தலும்வேண்டு, மரியவண்டங்களுந்தவிடுமுனைமயெற்கொரு

மகவாகவும்வேண்டு, மருமறையவன்போலன்பிலேன்பால்
வந்தருமணமுடிக்கவும்வேண்டுங், கருதரிதாயகடவுணீயென்
னுக்கருணைவாரிதியுரைசெய்வான். (கஅ)

தவலரிதாயதவமிகமுயலுந்தக்கநற்றலைமைநீபெறவே,
யிவையுனக்களித்தாமித்திருநீங்காதிம்முறை நடத்தியாலென்
னுக், குவளைசேர்தடங்கட்கோமளவல்லிகொண்டகூறுடை
க்குழகன்செம், பவளவார்சடையிற்பகிரதிமிலைச்சும்பராபர
ன்கயிலையிற்படர்ந்தான். (கக)

வேறு

எந்தைமறைந்தபினேத்தியிறைஞ்சி
நந்தினையேந்தியகாரணனற்பூ
வுந்தியுதித்தவனுத்தமமைந்தன்
சிந்தைமகிழ்ந்துதிளைத்தனனம்மா. (உ0)

நாமகண்மேவியநான்முகனைத்தன்
பூமருவுந்திதழ்புந்திநினைந்தா
னேமுறுநல்வரமீந்தனையெங்கோன்
மாமலரோனுமனத்தின்மதித்தான். (உக)

பன்னரிதாயபரன்றனைநோக்கி
மன்னியமாதவமைந்தனுழந்து
மின்னலின்மூழ்குறவிவ்வரமுற்று
னன்னலமன்றிதுநாடிடினன்றே (உஉ)

என்னுரையொன்றையுமெண்ணலனாகி
முன்னவன்வந்துநன்முத்தியையெண்ணுன்
பின்னினியென்னதுபேசுவனென்னுத்
தன்னதுநெஞ்சுதரிக்கலனாகி (உ௩)

இருந்தினபன்னியெனென்றரிதாய
மருந்தனமைந்தனைவல்விரைந்தேத்திப்
பொருந்தினனுசிபுகன்றனன்மிக்க
பெருந்தகைமேயபிதாமகன்மாதோ. (உச)

அல்லிமலர்த்திகழுமயனலன்பா
லொல்லையினீநகரொன்றுசெயென்று
மல்லல்கொடக்கனன்மாபுரமென்றே
தொல்லழகாபுரிதோற்கவிதித்தான். (உரு)

அந்தமில்சீர்புனையப்புரிநோக்கா
விந்தநகர்க்கிணையின்றெனவேதன்
றந்தருள்கோயிலிற்சார்ந்தனன்கூடம்
வந்துபுகுந்திடுமோகளிறேபோல். (உசு)

தண்ணளிசேர்மதிசார்கவிகைக்கீழ்
வண்மையினோங்குகைமன்னியசெங்கோ
லெண்ணரிதாமுலகெங்குமளப்பத்
திண்ணியவாணைதிசாமுகஞ்செல்ல. (உஎ)

பூவினின்மேவியபுங்கவனாதி
தேவர்கடானவர்சித்தரியக்கர்
மூவுலகும்புகழ்முச்சுடரோனை
யாவருமேத்தவிருந்தரசுற்றான். (உஅ)

வேறு.

பின்னொருநான்குசென்னிப்பிதாமகன்பதத்தில்வந்த
மன்னுசீர்வடமீன்கற்பின்மறைக்கொடிதனைமணஞ்செய்
தன்னருமுலகநல்கவொராயிரமைந்தர்த்தந்தாங்
கின்னருளீசற்போற்றியிருந்தவஞ்செயவிடுத்தான். (உகூ)

அந்தமானதவாவிக்கணருந்தவஞ்செய்யமைந்தர்
நந்திசைமகதிவீணைநாரதனங்கணெய்தி
யிந்தமாதவம்புரிந்ததென்னெனவிறையைநோக்கித்
தந்திடவுலகம்யாவுந்தவம்புரிகின்றேமென்றார். (௩௦)

என்றலுநன்றுநன்றென்றிருகரந்தாக்கிநக்கு
மின்றிகழ்வாழ்வுதன்னைமெய்ம்மையின்விரும்பினீரா
லென்றுநன்கழியாவின்பத்திருந்தாசிபெற்றுமென்று
வன்றவர்க்குபதேசஞ்செய்தந்தரத்தேகினானே. (௩க)

ஆருளுபதேசஞ்செய்தம்முனிசெல்லமைந்தர்
பேரருளோடுங்கூடிப்பேரின்பவாரிமூழ்கி
நாரணன்கமலக்கோயினுன்முகனண்ணவொண்ணுப்
பூரணமோனஞானப்பூங்கழனீழல்சேர்ந்தார். (௩௨)

வேறு.

ஆனகாலையினருந்தவம்புரியுநன்மைந்தர்
பான்மைநாடுதுமென்றவட்படர்ந்தபின்றக்கன்
ருனும்வந்தருண்மைந்தர்க்குச்சத்தியமோன
ஞானநாரதனவின்றதைநாடினன்வெகுண்டான். (௩௩)

தக்கனுமிடைத்தக்கநம்மைந்தர்கள்யாரு
மிக்கமுத்தியின்மேவினர்விதியிதுவென்னுத்
துக்கமுற்றுமெய்துண்ணெனநடுங்கியசூழல்
புக்கனன்பினுமாயிரம்புதல்வரைத்தந்தான். (௩௪)

தந்தமைந்தரோராயிரவோரையுந்தக்கன்
மைந்தவம்மினீர்மானதமடுவினிலேகி
யிந்தமானிலம்படைத்திடவெந்தையைநோக்கிச்
சிந்தைகூர்தவஞ்செயுமெனச்செப்பினன்விடுத்தான். (௩௫)

விடுத்தவாயிரமைந்தருமேவிமானதமா
மடுத்தலத்திடைவைகியேமாதவம்புரிய
வடுத்தனன்முனமகன்றநாரதனருள்வீடு
கொடுத்திடும்படிகோதிலாக்குமரர்கடம்முன். (௩௬)

நீதிமாதவம்புரிந்திடுநீவிர்கள்யாவிர்
யாதுகாரணமித்தவமிழைக்குவதென்னத்
தாதையாந்தக்கன்றன்பணியாற்படைத்திடுவா
ஞதன்றன்னிடைநற்றவமுஞற்றுதுமென்ருர். (௩௭)

என்னலோடுமெங்கியைந்திடுநாரதனிரங்கி
மின்னுமொக்குளுமென்னவேவிளிந்திடும்யாக்கை
தன்னினீர்நிலையென்னவேதந்திடுந்தொழிற்கா
மன்னுமாதவமிழைக்குதிர்மம்மரினம்மா. (௩௮)

ஈதினற்பிறப்பிறப்புறுநரகிடையெய்தும்
பேதையோர்தொழிற்பிடித்தனிர்பிறப்பிறப்பில்லா
வாதிநாயகனழிவிலாவருட்பதநீழல்
காதலாலினியடைவதேகருமமென்றுரைத்தான். (ஙகூ)

உரைத்தநாரதன்றனைப்பணிந்துற்றநன்மைந்த
ரருத்தியாலெமக்கருளெனவம்முனிதன்ருள்
சிரத்தினன்குறவிருத்தியேசெப்பினன்வாக்குத்
திருத்தமாந்திருவஞ்செழுத்தருளுபதேசம். (ச0)

திகழ்ந்தமெய்த்திருவஞ்செழுத்தருணிலைசெப்பி
மகிழ்ந்துபின்றிரிமலத்தினைமாற்றிவெம்பிறவி
யகழ்ந்தருந்திடவரியஞானமூதமருளிப்
புகழ்ந்திடுந்தவநாரதன்விண்ணிடைப்போந்தான். (சக)

நடையின்மேதகுநல்லெழின்மைந்தர்கண்ஞானப்
படைகொடைம்புலப்பகைஞரைவென்றுதம்பரிவா
லிடைவிடாதுநல்லிறைசிவயோகினிலிருந்தே
முடிவிலாதபேரின்பமாமுத்தியையடைந்தார். (சஉ)

அன்னமைந்தர்களாயிரவோருநன்முத்தி
தன்னையெய்தலுஞ்சதுர்முகப்பிரான்றிருமைந்த
னின்னும்வந்திலாரெம்மகாரென்கொலோவென்னு
மன்னுமானதவாவியின்வந்தனன்மன்னே. (சங)

வந்துமானதவாவியின்மைந்தரைக்காணு
னிந்தவாறிதுவென்னெனவேங்கியேவிரங்கா
முந்தைநாளினம்மைந்தரைமுத்தியினேற்று
மந்தநாரதன்புணர்ப்பிதுவாமெனவறிந்தான். (சச)

அருளினீர்மையாலப்பரிசுணர்தலுமுள்ள
மருள்கலந்ததுமன்னுயிர்பதைத்ததுவையம்
வெருவுகின்றதாய்வீங்கியவுயிர்ப்பின்வெங்கோப
விருள்பரந்துசென்றேறியதெண்டிசாமுகத்தும். (சரு)

பாந்தளின்றலைபரித்தபாரடங்கலும்படைப்ப
காந்தருந்திறன்மைந்தர்க்குநன்கதியளிப்ப

வாய்ந்தடைந்தனனன்றவராருமிருண்பான்
போந்தகூற்றிவனென்றுதன்னெஞ்சகம்புழுங்கி. (சசா)

நொந்துபங்கயன்மைந்தன்பின்னுவலுவான்மகதி
நந்துவீணைசேர்நாரதன்செயலிதுவானுற்
றந்துநேரிடையாரலாற்றனயைப்பெறுவான்
சிந்தைசெய்கிலனென்றுதன்றிருநகர்சென்றான். (சஎ)

மிக்ககாதலின்மேவினன்மெல்லியற்சேர்ந்து
திக்கெலாம்புகழ்சென்றிடச்சென்னிமூன்றிட்ட
தொக்கவெண்டருமிருபதுதுடியிடையாரைத்
தக்கன்மீண்டுநற்பரிவொடுதந்தனன்மன்னே. (சஅ)

தருமனுக்குயர்கிரியைநல்வபுவைகீர்த்திசாந்தை
சுரசைபுத்திநற்சுபுத்தியேதுட்டையோடிலச்சை
திருதிகத்திமென்சிரத்தைமேதாவெனுந்திருப்பே
ரருளினுகுமிப்பத்தின்மேன்மூவரையளித்தான். (சகூ)

பிருகுமாமுனிமரீசியேபெரும்புகழ்மன்னும்
பொருவிலாவருட்புலத்தியனங்கிராபுலகன்
திருவலந்திகழ்வசிட்டனத்திரிவளர்செந்தீக்
கிரதுநற்பிதராவெனக்கிளத்திடுமிவர்பால். (ருo)

புகல்கியாதிசம்பூதிகாரிசந்நதிமிருதி
துகளரித்திடுபிருதியூற்சையனசூயை
நிகழ்சுவாகமைசுவதையாம்பதின்மனைநிரலே
மகிழ்வினின்பகன்மணம்புணர்வித்தனன்மன்னே. (ருக)

பின்னர்நான்முகப்பிதாமகப்பிரானருள்பிள்ளை
மின்னுகின்றநற்றாரகைக்கணங்களின்மேலா
முன்னரும்புகழோங்குமூவொன்பதுமடவார்
தன்னைநேர்பெறவுதவியேதண்மதிக்களித்தான். (ருஉ)

வேறு.

இன்னநன்மருகற்கன்பாலின்பகன்மணம்புணர்த்திப்
பன்னிடுமன்னேன்மேவும்பதியிடைவிடுத்தபின்ன
ரன்னமன்னவர்கண்மைந்தரவர்தருமைந்தரானேர்
மன்னியகேளிர்துன்னமகிழ்ந்தரசியற்றுநாளின். (ருங)

படமணிச்சோதியண்டபகிரண்டம்படர்ந்துசெல்லும்
வடுவறுசிறப்பின்மிக்கவட்டவான்மூகடுமுட்டிக்
கொடுமுடியிடறும்வெள்ளிக்குன்றின்மேற்குழகனோர்நாள்
விடுசுடர்க்கிரணந்தாக்கவிற்றிருந்தருளினனே. (ருச)

அந்தநல்லமையந்தன்னினம்பிகைவணங்கியெந்தாய்
சந்ததமுயிர்கட்கெல்லாஞ்சஞ்சலப்படுத்துகின்ற
வெந்துயர்ப்பிறப்பிறப்பைவீட்டிவிடருளுந்தன்மை
யிந்தவாறடியனேற்கிங்கியம்பிடவேண்டுமென்றாள். (ருரு)

என்றுமையியம்பநன்றென்றினவரிவண்டுகிண்டு
கொன்றையந்தேன்றளிக்குங்கோடீரப்பாரத்தெந்தை
பொன்றிகழ்சுணங்கணிந்துபொற்படாம்போர்த்தகொங்கை
மின்றயங்கிடைவைவேற்கண்மெல்லியற்குரைப்பதானன். ()

தன்னிகராகிநின்றசகளநிட்களமெமக்கு
மன்னியவுருவமாகும்வகுத்திடுஞ்சகளமான
வுன்னருளதனையாமேயுபாதானமாகியென்று
நின்னொடுமன்பர்போற்றச்சதாசிவமாகிநிற்போம். (ருஎ)

நிட்களவுருவந்தன்னைநிகழ்த்திடினுலகுக்கெல்லா
முட்பொருளாகியெண்ணிலுயிர்க்குயிராகிமன்னோ
வெட்டருந்தயிலமென்னவெங்கணுநிறைந்தெஞ்ஞான்றுந்
தெட்பமதாகியார்க்குந்தெரிவரிதாகுமன்றே. (ருஅ)

உருவொருநான்கதாகியுற்றிடுமருவநான்கா
யருவுருவொன்றேயாகியையைந்துபேதமாகி
மருவியதிருமால்கஞ்சமலரயன்வாசவன்சீர்
பொருவருமுனிவர்விண்ணோர்போற்றிடவீற்றிருப்போம். ()

அந்திகழ்பரசிவன்றான்பராசத்திதன்னையன்பாய்த்
தந்திடுமதனிலாதிசத்தியாமதனிலிச்சை
வந்திடுமதனின்ஞானமாமதிற்கிரியைமன்னு
மந்தமிலிவற்றினொவ்வொன்றுயிரத்தொன்றதாகும். (சூo)

அந்தமிலாதவிந்தவைந்துநஞ்சத்திதன்னாற்
றந்தனமயன்மாலீசன்மகேசனற்சதாசிவந்தாம்

வந்திடக்கருதியன்னோர்மருவுமைந்தொழிலியற்ற
நந்திருவருளினாலேநாடொறுநடாத்துவாமே. (சூக)

தாவில்பல்லுயிர்க்கெஞ்ஞான்றுந்தருமிருவினையறிந்து
நாவெடுத்தியம்பலாற்றாநரகொடுசுவர்க்கமீதும்
பூவின்மேலயன்மால்காணாப்பொருவருஞானநிட்டை
மேவினோர்தமக்குநந்தாவீடருள்புரிதுமன்றே. (சூஉ)

ஆதலாலைந்தொழிற்கொளப்பிரமாண்டமெல்லா
மோதிடினின்கூறுமென்றுரைக்கருமொருவன்கூற
வீதெலாமெனதுகூறென்றெண்ணியேயெம்பிரான்முன்
காதலிற்றனைமதித்துக்கழறினள்காமக்கோட்டி. (சூ௩)

மங்கைநீயெம்முனின்னைமதித்தனையுலகெலாமங்
கங்குயிர்க்குயிராய்நின்றேயருள்புரிந்திலமேற்செய்ய
பங்கயனாதியாயபண்ணவர்பணிகடம்மா
லிங்கொருசெயலதுண்டோவென்றனனெவர்க்குமேலோன்,

கண்டினுங்கனிந்ததீஞ்சொற்கலங்கிடந்தொளிருங்கொங்கை
யொண்டொடிநின்னாலுண்டோவோர்செயலதுநீகாண்டி
யெண்டருகாதலாலென்றெடுத்திசைத்தருளியெங்கோன்
பண்டுபோற்பரயோகத்திற்பரிவுடனிருந்தானன்றே. (சூரு)

இறைசிவயோகமெய்தவெழுதுசித்திரமதென்ன
நிறையுயிரண்டமியாவுநிகழ்ந்திடநெஞ்சமஞ்சிச்
சிறிதுநின்செயலென்னாதுதீயனேன்றனைமதித்திங்
கறிவிலாதுரைத்ததோடமதுபொறுத்தருள்செயென்றே. ()

சீருறுகமலச்செங்கைகூப்பியேதிருமுனின்றிங்
கோர்வரிதாயவண்டத்துற்றிடுகின்றவெண்ணி
லாருயிர்த்தொகையைமுன்போலளித்திடவேண்டுமென்றாள்
பேருறுமண்டமெல்லாம்பெற்றெடுத்தருளும்பேதை. (சூஎ)

அன்னமன்னவள்வருந்தவாருயிர்த்தொகையளிப்பான்
றன்னிகருருத்திரேசர்தங்களையுன்னலோடு
மன்னவர்யாருமீண்டியருச்சுனவட்டத்தேகி
மன்னியசிவநிசிக்கண்வள்ளலையருச்சித்தார்கள். (சூஅ)

அருச்சனைபுரிந்தபின்றையன்னவர்முன்னமுன்னோன்
பொருக்கெனவந்துதோன்றிப்பொன்றுயிரனைத்துநல்க
விருப்புறுமயன்மாலேனோர்மெய்த்துயிலுணர்ந்தோரொன்ன
மரித்தனரெழுந்தார்மூடும்வல்லிருணீங்கிற்றன்றே. (சுகூ)

ஆலகாலம்பழுத்தவந்தநற்கந்தரத்தோன்
சீலமாஞ்சிவயோகத்திற்சேர்ந்தினிதிருந்தகாலை
மாலயன்முதலோர்செய்கைமாண்டனரென்றால்யார்க்கு
மேலவன்சிவனேயென்றுவிரித்திடவேண்டலின்றே. (எ0)

அருள்வரமமலற்கேளாவவ்வுருத்திரர்கண்மாகத்
திருசுடர்சேர்நாளெனைனவெல்லியினுன்கியாமம்
பரமநிற்பூசைசெய்வோர்பரகதிபெறுதல்வேண்டும்
வரமருளென்னச்செய்யமலர்த்திருவாய்மலர்ந்து. (எக)

சங்கரன்பின்னரேகாதசவுருத்திரர்கட்கெல்லாம்
பங்கமில்வரமீந்தன்னோர்பதியிடைப்படரவேவிச்
செங்கமலத்தோனாதிதேவர்கள்யாரும்போற்ற
வங்கண்வானவன்மிக்கோங்குமகலிருவிசும்பிற்போந்தான். ()

செம்பதுமத்தோனாதிதேவர்பின்கயிலைமேவி
யெம்பணியிழந்துவாளாவெண்ணமொன்றின்றிப்பன்னாள்
வெம்பலமடைந்தியாமேமெய்புணர்விகந்தோமெங்க
டம்பிரானருளினீராற்சாற்றுதிமாற்றமென்றார். (எஉ)

அன்னவர்பன்னியிவ்வாறறைதலுமமலன்கேளா
மன்னியவுணர்வுமாண்டுவரன்முறைவழுவுகின்ற
நின்னவையிறைவிக்காகுமிற்றைநாட்கைப்பிடித்துந்
தொன்மறைமுறைநீராற்றுமென்றனன்றெழுதுபோந்தார்.()

அரிதிகழ்மதர்வேற்கண்ணியமலனையடிவணங்கிக்
கருதருமுயிர்களாற்றுங்கருங்கொடும்பவங்களென்பான்
மருவிடுமென்றதென்னைவாய்மலர்ந்தருளுகென்ன
வொருதிருநுதற்கணும்பர்தம்பிரானுரைப்பதானுன். (எரு)

நின்னைநீமதித்துநம்முனிகழ்த்தினையாதலாலே
மன்னுயிர்த்தொகையுஞ்செய்கைமாற்றினமானீவேண்டப்

நின்னைநீமதித்தசம்முனிகழ்த்தினையாதலாலே
மன்னுயிர்த்தொகையுஞ்செய்கைமாற்றினமானீவேண்டப்
பின்னுமுண்மகிழ்ந்துமுன்னர்ப்பெற்றியிற்றந்தேம்யாமீ
துன்னிடினுன்னால்வந்ததுன்னிடத்தாகுமன்றே. (எசா)

ஈங்கிதுவன்றியின்னுமிசைத்திடினுலகமெல்லாம்
பாங்கினுலீன்றநிற்குப்பலித்திடும்பவங்களியாவுந்
தாங்கிடுந்தன்மைத்தாகுமென்றனன்ருணுவாகி
யோங்குலகங்கட்கெல்லாமுயிர்க்குயிராகிநின்றோன். (எஎ)

நித்திலக்கொத்துமாலைநெருக்கினமுலையாளஞ்சிக்
கைத்தலங்குவித்தியானேகருத்தினின்மதித்துரைத்த
வித்துயர்வீடுமாறென்றியம்புதியெந்தையென்னப்
பைத்நலைமணியொதுக்கும்பன்னகாபரணன்சொல்வான். ()

காளிமங்கனுனன்னீர்க்காளிந்திநதியினெய்தித்
தாளதாமரையின்மேவித்தன்னிகரின்றிமன்னு
நீளிருவிசும்பினேங்குநிலவுகான்றௌளிருங்கோல
வாள்வலம்புரியாயங்கண்மாதவம்புரிந்துவாழ்தி. (எகூ)

மிக்கவர்நதியிற்பின்னோர்விழைவுறுகுழவியாவை
தக்கனுங்கெய்திநின்னைத்தன்றிருப்புதல்வியென்று
பக்கமோடக்கணந்தன்பதியிடைக்கொண்டுசெல்லத்
திக்குலகேத்தவன்னான்சேயெனவளர்திமாதோ. (அ0)

வளம்பெறவையாண்டேகமன்னியேயெம்மைபுன்னி
யுளங்களிதூங்கநீயுமொண்டவம்புரிதியாமே
விளங்கிழைநின்பான்மேவிமிக்கசன்மணம்புணர்ந்து
களங்கமில்கணங்களோடுங்கயிலையில்வருதுங்காண்டி. (அக)

என்றிவையிறைவன்கூறவெண்ணரும்புவனமீன்ற
மன்றலங்கூந்தற்செவ்வாய்மாதுமைவணங்கியேத்தி
மின்றிகழிடைநுடங்கவிடைகொடுவிளங்கும்வெள்ளிக்
குன்றினையொருவிமிக்ககுவலயத்திழிந்துபோந்தாள். (அஉ)

மூளுமன்பதனல்வேதமுளைத்தெழுமூலமன்ன
காளமார்கவியைவெல்லுங்காளிந்திநதியிற்சங்காய்

வாளுலாவியதடங்கண்மங்கைபங்கனை நினைந்து
தாளதாமரையிருந்துதவம்பலநாளுழந்தாள். (அங)

சந்தநான்மறைதேர்வண்மைச்சவுநகமுனிவகேண்மோ
சிந்தையிலுவந்துநாதன்றிருவெழுத்தஞ்சையுன்னி
யிந்தமாதவம்புரிந்தாங்கிறைவிநன்கிருப்பத்தக்கன்
வந்தவடனையெடுத்துவளர்த்திடுவளமைசொல்வாம். (அச)

வேறு.

அற்றமில்சிறப்பினந்தவாழ்புனற்கண்மூழ்குவான்
மற்றுநேரிலாதமாசிமாமகத்தின்வண்மையால்
விற்புருரவேதவல்லியோடுமெந்தவேலையி
லெற்குலாவுமெல்லைதோன்றுமெல்லையங்கணெய்தினன். ()

சார்ந்தவேதவல்லியோடுதண்புனற்கண்மூழ்கியே
கூர்ந்தவன்பினோடுதானைகூடியேகவேகுருச்
சேர்ந்ததாமனாக்கணந்திகழ்ந்தசங்கிலங்கல்கண்
டார்ந்தவன்பினோடுதக்கனங்கைகொள்ளவள்ளினன். (அசு)

சிவனருட்டிகழ்ந்துவந்தசெல்விதன்னையெண்ணரும்
புவனமீன்றமாதைநம்புதல்வியென்றுகைக்கொளா
வுவமனற்றவேதவல்லியுச்சிமோந்துறத்தழீஇ
யவணலத்தையன்பினுடியகமகிழ்ச்சிபொங்கினள். (அஎ)

பொங்கியேசுணங்கணிந்துபுடைபரந்தெழுந்துபொன்
றங்குநற்கலன்சுமந்துசந்தனந்திமிர்ந்துநேர்
துங்கமேருவென்முலைசுரந்தபாலருந்தியே
மங்குல்வந்துறங்கிடுந்தன்மாளிகைக்கொடேகினள். (அஅ)

உம்பரோடுமுலகமெங்குமுற்றசேனைசுற்றவே
நம்புமாமணிக்கணங்கணண்ணுகோயின்மன்னியே
வம்புலாவுமதாகிதேவண்டுகின்டிமதவுணு
மம்புயாசனத்தன்மைந்தனரசுசெய்திருந்தனன். (அகூ)

வேறு.

வந்துமனைபுகுந்ததற்பின்மறைக்கொடிதன்மார்படங்காச்
சுந்தரப்பொற்றுணைமுலைப்பால்சுரந்தளித்துநாட்குநா

ஞாந்துபெருங்காதலினுலுலகின்றவுத்தமியைச்
சந்திரன்போற்றிருமேனிதான்வளரவளர்த்தனளால். (கூ0)

பக்கமுறுமோரன்னப்பார்ப்பென்னப்பங்கயன்சேர்த்
தக்கவருண்மிக்கமடவழ்ந்துதளர்நடைபயின்று
தொக்கவனமுருந்தெயிறுதோன்றிடவையாண்டகற்றி
மைக்கண்மயிலாருண்டின்மனத்திஃதுமதித்துரைத்தாள். ()

மொழியொன்றுபுகல்வலிருமுதுகுரவரதுகேண்மின்
செழுமலர்க்கொன்றையினறும்பூந்தேன்றுளிக்குஞ்சடாமௌலி
மழவிடையான்மணஞ்செய்யமாதவஞ்செய்குவனெனவோ
ரழகியநற்கடிமாடத்தருந்தவஞ்செய்தமர்ந்திருந்தாள். (கூ௨)

மங்கைகடிமாடத்தின்மன்னுமருந்தவம்புரியத்
துங்கமிகுமறைக்கொடிதான்றெழுகணவன்முகநோக்கித்
திங்கணுதற்பேதைதவஞ்செய்திறநீசெப்புகெனக்
கங்குறவழுங்கூந்தற்காரிகைக்குக்கட்டுரைப்பான். (கூ௩)

யான்முபன்றுதவஞ்செயுநாளிந்தமடமயிலோடு
மான்மழுவேந்தியவெங்கோன்மழவிடைமேல்வந்தருளித்
தான்வரமிக்களித்தனன்பின்சங்கரிசேயாய்நீயென்
பான்மருகனுகவரும்படியடியேற்கருளென்றேன். (கூச)

அன்னவரந்தந்தனமென்றரனருளவதனுலே
மன்னியவிம்மடக்கொடிநம்மகவாகவந்துதித்தாள்
பின்னருநம்மருகோனுய்ப்பிஞ்ஞகனும்வந்தருள்வ
னென்னலுமின்பக்கடலிலேந்திழைவீழ்ந்தழுந்தினளால். ()

வேறு.

இன்னணமிறைவிமிக்கவிருந்தவம்புரியும்வேலை
பன்னிரண்டாண்டுநீங்கப்பரஞ்சுடர்பரசுபாணி
தன்னருளதனலந்தச்சங்கரிதவத்தைக்காண்பான்
மன்னியபிரமசாரியாகவோர்வடிவந்தாங்கி. (கூசு)

மடன்முறுக்குடைக்குஞ்செந்தேன்மாமலரயனுமாலு
மிடலுடன்றேடிக்காணுமெய்ப்பதங்கொப்பளிப்பப்

படிமிசைநடந்துதக்கன்பதியினிற்போந்துஞானக்
கொடியிடைதவக்கோட்டத்திற்குழகனல்லழகிற்சென்றான்.

பொம்மல்சேர்சேடியார்முன்புகன்றவட்புகுத்தலோடு
மிம்மெனவெதிர்சென்றேத்திவெழின்மணித்தவிசினேற்றிச்
செம்மலர்ப்பதத்திற்பூசைசெய்துமுன்வணங்கிநின்றாள்
கொம்மைவெம்முலைக்கருங்கட்கோதின்ஞானப்பூங்கோதை.

நின்றவடன்னைநோக்கிநெற்றிவெண்ணீறுபூத்தோ
னென்றியான்விழைந்தீங்குற்றேனெண்டொடியதுநீசெய்யின்
மன்றவேயுரைப்பனென்னவாய்புதைத்தொதுங்கியஞ்சி
யென்றனக்கியைவதென்னினியம்புதியெந்தையென்ன. ()

சதுர்மறைபாடும்வாயான்றானுரைத்தருள்வானின்னைப்
புதுமணஞ்செய்யகிற்பான்போந்தனனீண்டியானே
மதிதருதிருமுகத்தாய்மாற்றமொன்றியம்பலென்னக்
கதுமெனக்கன்னமூலங்காந்தளங்கைபுதைத்தாள். (௧௦௦)

நெஞ்சகங்கனன்றுவல்லேநெட்டுயிர்ப்பெறிந்துசோர்ந்து
வஞ்சகவேடந்தாங்கிவந்தனையிதுமதித்தோ
வெஞ்சலிலிறைவன்வேண்டியின்பநன்மணஞ்செய்கிற்பான்
றஞ்சமாமவனைநோக்கித்தவமிகச்சார்ந்தேனென்றாள். (௧௦௧)

நாதனைநாடற்கெட்டாஞானநாயகனைநோக்கி
நீதவமுயல்வதென்னைநின்மலன்வந்துநின்னைக்
காதலின்வதுவைசெய்தல்கருதரிதால்வருந்தல்
பேதையேயென்றானென்றம்ப்ரமசாரியாயபெம்மான். ()

தன்னிகராகிநின்றதம்பிரான்வதுவைசெய்ய
மன்னுமாதவங்களின்னும்வருந்தியான்புரிவனந்த
நின்மலன்றானேவந்துநினைத்ததுமுடித்திடானே
லென்னுயிர்க்கிறுசெய்வேனென்றனளெம்பிராட்டி. (௧௦௩)

நீங்குகவென்றுசீறிநின்மணிமாடந்தன்னிற்
பாங்குறுபரிசனத்தோர்தம்முழைப்படர்தலோடும்
பூங்குழலுமையாள்காணப்பொருவருங்கருணைவள்ள
றீங்குறுத்தனதுபண்டைத்திருவுருத்தரிசிப்பித்தான். (௧௦௪)

அருளுருவதனைக்காணூஉவம்பிகையுள்ளம்வெம்பி
வெருவிமென்முலைமுன்றிற்செவ்வேற்கணீரிறைப்பக்காந்தட்
காமலர்குவித்துநாயேன்கருதிடாதுரைத்தயாவும்
பொருவிடைப்பாகநீயேபொறுத்தருள்புரிதியென்றாள். ()

இப்பரிசியம்பலோடுமிறைவிமேலன்பிருத்தித்
துப்புறழ்சடிலத்தெந்தைதூய்மறைபாடும்வாயான்
மைப்படிந்திலங்குமொண்கண்மடந்தைநீயஞ்சலென்னாச்
செப்பினன்மகிழ்விற்சூழ்ந்தசிலதியர்செவிநிறைப்ப. (கo௬)

தேங்கியவார்வமோங்குஞ்சிலதியர்சிலவரோடிப்
பாங்குறுதக்கன்றன்பாற்பான்மொழிபான்மைகூற
நீங்கருங்காதல்கூர்ந்துமின்மலனென்னைநாடி
லாங்கவன்றனக்கென்சேயையருமணமுடிப்பலென்றான். ()

கொலைகெழுகூர்வேலுண்கட்குலவுகோமளக்குரும்பை, முலைமுகஞ்சிறந்தபொற்பூண்மொய்குழன்முறுவற் செவ்வாய்ச், சிலைதுலாநுதல்சேர்மங்கைசிலதியர்சிலவர்சூழத், தலைவனைநாடியங்கட்டானினிதிருந்தாளன்றே. (கoஅ)

வேறு.

மைக்கருங்கணுமைமாதராண்மட்டறுங்கருணைகூரவே
தக்கபண்புரியின்மேவியேதக்கனன்பின்மகளானசீர்
மிக்கநன்கதையையோதுவோர்மெய்ச்சொலின்பயனைநாடுவோர்
முக்கணெந்தையருளாகியேமுத்திசென்றடைகுவார்களே. ()

உமாதேவி திருவவதாரச்சருக்க முற்றியது.

ஆகச் செய்யுள் கூசுஎ.

பதினோராவது.

உமாதேவிதிருவவதாரச் சருக்கச்சுருக்கவசனம்.

தக்ஷன், சத்தியவுலகஞ்சார்ந்து, பிரமாவைவணங்கி, "உயிர்க்குயிராயிருக்கு முதற்கடவுள் யாவர்" என்று வினவ, அதற்குப் பிரமா யானும் விஷ்ணுவும் அன்னமும் பன்றியுமாய் முடிஅடிகளைத்தேடியும் உணரக்கூடாத சிவபிரானே பரம்பொருள்" என்று கூறினர்.

அதற்குத் தக்ஷன், "படைத்தல் காத்தல் அழித்தலாகிய முத்தொழி ல்களும் முறையே மூவர்களுக்கும் உரித்தாயிருக்க அம்மூவருள் ஒருவ னைமுதற்கடவுள்" என்று கூறுதல் பொருந்தாதென்றபோது, பிரமா "என்னையும் விஷ்ணுவையும் உண்டாக்கிப் பின்புஉலகத்தைப்படைக்க வும் காக்கவும் அதிகாரங்கொடுத்துப் பின்னர் எங்களையுலகத்தோடு அழித்துப் பின்பு வினைவசத்தால் உண்டாக்குவோர் அச்சிவபிரான், ஆதலால் அவரே முதற்கடவுள் அவரைவழிபட்டே உய்வாய் என்றும் அவரைநோக்கி மானதவாவியிலே தவஞ்செய்வாய் என்றும்" கூறி னர். அங்ஙனமே மானதவாவியின்கண்ணே தக்ஷன் ஆயிரவருடம் தவஞ்செய்தான். அதற்குச் சிவபிரான் எழுந்தருளியவுடன் தக்ஷன் வணங்கி, சிவபிரானைநோக்கி "கருணையங்கடலே, உம்மை வணங்கு வோர் அனைவரும் என்னைவணங்கவும், என்பணிசெய்யவும், உம்மை மாத்திரம் யான்பணியவும், இந்திரபதம் பிரமபதம் விஷ்ணுபதம் அசுரபதமுதலியவெல்லாம் என்னுடைய ஆணைவழி ஒழுகும்படி, நான் தலைவனுயிருக்கவும் எனக்குப் புதல்வர் புதல்வியர்களைக்கொடுத்து அவர் மரியாதிருக்கவும், உமாதேவி எனக்குப் புத்திரியாகவரவும் நீர் என்மாட்டு எழுந்தருளி அத்தேவியைத் திருமணம்புரியவும் வரம ருளவேண்டும்" என்று பிரார்த்தித்தபோது, சிவபிரானும் பிரார் த்தித்தபடி வரமருளி மறைந்தருளினர். உடனே தக்ஷன் மகிழ் ந்து, பிரமாவை அழைத்து, நிகழ்ந்தவைகளைச்சொல்லி ஒரு நகரம் அமைக்கும்படிகூற, அங்ஙனம் பிரமா "மகாபுரம்" என்னும் ஒருநக ரம் சிருட்டித்தார். அதிலே தக்ஷன்வீற்றிருந்து அரசாட்சிசெய்து, வேதவல்லியைமணந்து ஆயிரம்புத்திரரைப்பெற்று, உலகத்தைப்படை க்கும் வலிமைபெறும்படி தவஞ்செய்ய அனுப்பினன். அப்புத்திரர் நாரதமுனிவர் உபதேசத்தால் ஞானநிட்டைகூடி முத்திபெற்றனர். பின்னும் தக்ஷன் ஆயிரம்புதல்வரைப்பெற்று முன்போலத்தவஞ்செய் யும்படி அனுப்பவும், மீட்டும் நாரதமுனிவர் உபதேசத்தாலே அப்புத்தி ரர் திருவைந்தெழுத்தைச் சிந்தித்து நிட்டைகூடி முத்திபெற்றனர். பின்பு தக்ஷன் புத்திரிகளைப்பெற்று விவாகஞ்செய்து கொடுத்துப் பௌத்திர பாக்கியத்தோவோழ்ந்து கொண்டிருந்தான். அக்காலையில், திருக்கைலாசத்திலே, சிவபிரானை உமாதேவியார் வணங்கி, உயிர்க ளுக்கு முத்திபருளுமுறையை அருளிச்செய்ய வேண்டுமென்று விண் ணப்பஞ் செய்தபொழுது, சிவபிரான், "ஹேதேவி நாம் உன்னை அதிஷ்டித்து நின்று பஞ்சகருத்தர் முகமாகப் பஞ்ச கிருத்தியங்களை யும் உலகத்தில் நடாத்தி, இருவினைக்கீடாக உயிர்களுக்குப் போகங்களை யூட்டிப் பின்பு ஞானத்தைக்காட்டி முத்திகொடுப்போம். ஆனால் அப்

பஞ்ச கிருத்தியப்படும் உலகமெல்லாம் உன்னுடைய அம்சம்'' என்று அருள, அதுபற்றி உமாதேவியார் தம்மைமதித்து நின்றவழி, சிவபிரான் யோகத்தில் எழுந்தருளியிருந்தனர். அப்போது உயிர்களும் உலகங்களும் அசையாமைபற்றி உமாதேவியார் அஞ்சி, சுவாமீ, "தேவரீர் திருமுன்பு அடியேனை மதித்ததோடம் அகலும்படி அருள்புரியவேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்ய, அதற்குச்சிவபிரான், தேவீ "நீ காளிந்திநதியிலே, தாமரைமலரிலே, வலம்புரிச் சங்கவடிவாய்த் தவம்புரிந்தால், பின்பு குழந்தையாவாய்: அப்பொழுது தக்ஷன்வந்து உன்னைப் புதல்வியாகக்கொண்டு வளர்ப்பான். அப்பால் நாம் வந்து உன்னை மணஞ்செய்துகொண்டு இக்கயிலைமலைக்கு வருவோம்'' என்றருளினர். உடனே உமாதேவியார் விடைபெற்று, காளிந்திநதி சேர்ந்து கமலமலரிலே சங்கவடிவாய்த் தவஞ்செய்தனர். அப்போது வேதவல்லியோடு தக்ஷன் ஸ்நாநஞ்செய்ய வந்தவழி, காளிந்திநதியின் கமலமலரிலே தங்கிய சங்கினைக் கண்ணுற்றுக் கைகளினால் அள்ளிய காலையிலே குழந்தை வடிவாயினர். அக்குழந்தையைத் தன்புதல்வியாகக்கொண்டு மகிழ்ந்து, வேதவல்லி கையிற்கொடுக்க, அவள்வாங்கிக் குழந்தையை உச்சிமோந்து தழுவி மகிழ்ந்து, மாளிகைசேர்ந்து வளர்த்தனள். தக்ஷனும் அரசாட்சிசெய்துகொண்டிருந்தான், குழந்தையாக வளர்ந்த தாக்ஷாயணி ஆறுவது பிராயத்திலே, கன்னிமாடத்திலே, சிவபிரானைநோக்கித் தவஞ்செய்துகொண்டிருக்கும்போது சிவபிரான் பிரமசரியவயோதிகப் பிராமண வடிவங்கொண்டு வந்தருள, வந்தவரைத் தவஞ்செய்யும் உமாதேவியார் வணங்கி யுபசரித்தனர். உபசரித்தவுடன் பிரமசாரியார், தேவீ "நின்மாட்டு ஒன்றை விரும்பி வந்தோம்'' என்றனர். அதற்குத் தேவியார்யாதென்று வினவ, பிரமசாரியார் உன்னை மணஞ்செய்யும்பொருட்டு வந்தோம் என்றனர். உடனே தேவியார் அஞ்சி, ஓ பார்ப்பானே "நீ வஞ்சகவேடந்தாங்கி வந்தாய்போலும்'' என்றுகூறி, ஞானமூர்த்தியாகிய சிவபிரான் மணம் புரியும்பொருட்டு அவரைநோக்கித் தவஞ்செய்கின்றேன் என்றபோது, பிரமசாரியார், அசிந்திதனாகிய இறைவன்வந்து மணம்புரிதல் அருமை என்றனர். தேவியார் இன்னும் வருந்தி அருந்தவஞ் செய்வேனென்றுகூறிச் சேடியர் குழாத்திற்சேர்தலும், பிரமசாரியார் தமதுண்மைவடிவைத் தரிசிப்பித்தருளினர். அதனைத்தரிசித்த தேவியார் திருவுள்ளமுருகிக் கண்ணீர் ஒழுகத்தொழுது அடியேன்கூறிய பிழையைத் தேவரீர்பொறுத்தருளும் என்றனர். அப்போது அங்கேநிகழ்ந்த செய்திகளைச் சேடியர் ஓடித் தக்ஷனுக்குச் சொல்ல, அதனை யுணர்ந்த தக்ஷன், சிவபிரான் என்னைவிரும்பும் பக்ஷத்தில், என்னுடைய புத்தி

ரியை அவ்விறைவருக்கே மணஞ்செய்து கொடுப்பேன் என்றபொழுது உமாதேவியாரும் பரமபதியாகிய நாயகனையே நாடிக்கொண்டிருந்தனர், இப்படலத்தை ஓதுவோருங் கேட்போரும் நற்கதிபெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாவது.

திருக்கலியாணச்சருக்கம்.

அருமறைநான்கையுங்கடந்தசீர்
மருவியசவுனகமகிழ்ந்துகேண்மியா
பொருவிடைப்பாகனைப்பொருவின்மங்கையைத்
திருமணஞ்செய்ததுசெப்புவாமரோ. (க)

பரைதிருமணஞ்செயப்பரமன்றந்தசொல்
விரைமலர்க்கூந்தலார்விளம்பும்வேலையிற்
றரைபுகழ்தாவருதக்கனத்தநாட்
கரையிலாவின்பநற்கடலிற்றுன்னினான். (உ)

முச்சுடராகியமுக்கணெம்பிராற்
கிச்சகப்புகழ்தாவின்றெடுத்தநன்
மைச்சுருளோதியைமணம்புணர்த்துவா
னச்சதுர்முகன்மனகத்தினெண்ணினான். (ங)

உரைபுணர்வறிவருமும்பர்தம்பிரான்
மருவியவுமைதனைவதுவையாற்றவே
திருநகரணிபெறச்செய்மினென்றுநன்
முரசறைகென்றனன்மூண்டகாதலான். (ச)

அம்மடிமணமுரசறைந்தகாலையின்
மைக்கருங்கண்மடமங்கைபங்குறை
முக்கணநாயகன்மணமுடித்தல்காண்குவான்
றொக்கனர்யாவருந்துன்னியெங்கணும். (ரு)

கோதனகாசலங்கொண்டகோபுர
மாகமூடுறநிமிர்மாடமாளிகை

தோகைகணடமிடேந்துதைந்தருளிகை
யாகியபக்திசேராவணங்தொறும். (சா)

வம்புசேரிளமுலைமாதர்மேவிய
செம்பொன்மண்டபத்திருவாயில்சேர்தரப்
பைம்பொனன்மணிகொள்பூம்பந்தர்செய்தன
ரும்பருங்கண்டுதம்முள்ளநாணவே. (எ)

பம்பியெண்டிசாமுகம்பரந்துசென்றிடு
வம்புலாமதுமலர்மாலைசாமரை
நம்புசிர்த்தருப்பணநலங்கொள்பூந்துகில்
கம்பலஞ்சூழ்தரக்கலந்துதூக்கினர். (அ)

மாடநீடியகொடிமகாதோரணங்
கோடகமுகங்கொளுங்குலையரம்பைசேர்
பாறுடுகோண்மடற்பாளைவிண்டசீர்
வீடரும்பூகதமிகநிறுத்தினர். (கூ)

உலம்பொருகுவவுத்தோளுற்றமைந்தர்பூ
ணலங்கிளர்பொன்மணிகண்ணுநன்மணிக்
குலந்திகழலர்மலர்க்குப்பைவாரியே
யலங்கிடவேதிருவலகிட்டாரரோ. (க0)

சந்தகின்மேவுசெஞ்சாந்தங்குங்கும
மந்தநற்றண்பனிநீரளாவியே
சுந்தரம்பெறத்தரைமெழுகித்தோன்றவே
சிந்தையிற்கொடுதிருக்கோலந்தீட்டினர். (கக)

விண்டலந்தங்கியவெண்ணிலாக்கதிர்
மண்டலந்தயங்குபாலிகையமைத்தன
ரண்டர்களுண்டிடவட்டமங்கலங்
கொண்டிடுஞ்சோதியெண்டிசாமுகங்கொள. (கஉ)

அத்திருவீதியினணிமயிற்புருத்
தத்துவாம்பரிகரிதானைதேர்கிளி
சித்திரப்பொறியினற்செய்துதத்தகன்
மெய்த்தொழிலியற்றிடவிதித்திட்டாரரோ. (கங)

பூவிரிசோலையும்பூந்தடங்களு
மேவுதேருர்மணிவீதியெங்கணுந்
தேவர்கள்யாவருஞ்சேருங்கற்பகக்
காவுறுநகரெனக்கற்பித்தாரரோ. (கச)

மாதருமைந்தருமன்னுமங்நக
ராதரவான்மிகவணியியற்றலும்
போதுசேர்கின்றபொற்பொகுட்டிற்புங்கவன்
காதல்கூர்மகன்றிருக்கண்பரப்பினுன். (கரு)

நன்றிதுநன்றெனநவின்றுநாடியே
யொன்றியவுளத்தினிலுவகைபூத்தனன்
மன்றல்செய்தருந்திருமருகன்காமுறத்
தன்றிருக்கோயிலுந்தயங்கக்கண்டனன். (கசா)

பொற்புறுமாலயன்புரந்தராதிய
ருற்றநன்மாதரோடொல்லையீண்டியே
மற்றுமையவடிருமணத்தைநோக்குவான்
சொற்றிடவொற்றரைத்தூண்டினனரோ. (கஎ)

துங்கமோடடைந்தனரவர்க்குச்சொற்றது
மங்கைதன்றிருமணங்காணமாதரோ
டங்கதுபோழ்தினிலரியயன்முதற்
புங்கவர்யாவரும்பொள்ளென்றீண்டினர். (கஅ)

ஈண்டுறுப்பண்ணவர்யாருமெய்தவே
நீண்டசெஞ்சடாடவிநிமலன்மேவிய
காண்டகுஞானநற்கற்பின்காரிகை
மாண்டவம்புரிகடிமாடத்தெய்தினர். (கசூ)

எய்தியபுங்கவரீண்டிச்சூழ்வரத்
துய்யபொற்பூவினுற்றாவித்துத்திசேர்
பையணிபன்னகாபரணநாயகன்
செய்யதாமரைப்பதஞ்சென்னிசேர்த்தினர். (உ௦)

அங்நிலைதன்னிலட்டாங்கமாகவே
பன்னிருகான்முறைபடியிற்றாழ்ந்தெழீஇத்

துன்னியவுளங்களிதூங்கவின்னணந்
தன்னிகாருந்தவத்தக்கன்சொல்லினான். (உக)

வேறு.

ஆதிநாயகியடியனேனிடத்துதித்திடவு
நீதியாலவனின்பகல் மணஞ்செயநினைந்திப்
போதுநீயிவண்போதரப்பொருந்தியபொற்பால்
யாதுநற்றவம்புரிந்ததிவ்விருங்கடிநகரம். (உஉ)

என்றுபற்பலவியம்பியேபின்னருமிறைஞ்சித்
துன்றுசீர்த்திருமாலயன்சுரர்புடைநெருங்க
மன்றலாற்றவென்மனையிடைத்திருவுளமகிழ்ந்து
வென்றிமால்விடைதனில்வரல்வேண்டுமென்றிரந்தான்.

இரந்தகாலையினெம்பிரான்றிருவுளமகிழ்ந்து
வருந்தனீயெனவேதிருவாய்மலர்ந்தருளி
யருங்கலன்கண்மெய்யிலக்குறவருமணமுடிப்பான்
பொருந்திநன்கினிதிருந்தனன்பொருவிடையதன்மேல்.

மாலயன்புகழ்வாசவன்வானவர்முனிவர்
சீலமார்தருசித்தர்வித்தியாதாரியக்கர்
கோலவட்டவெண்குளிர்மதிகொடுங்கதிர்வெய்யோ
ரேனுமிக்கதாராகணமெண்வகைவசுக்கள். (உரு)

அழிவிலாதவுருத்திரகணத்தவரநேகர்
வழுவிலாதுயர்மந்திரநாயகரேனோர்
கழிவரும்பெருங்காதலிற்கண்டுகண்களித்தார்
குழகன்கொண்டதோரழகியமணத்திருக்கோலம். (உசா)

மைக்கருங்குழன்மங்கையோர்பங்குடைவானோன்
மிக்கவெள்ளிமால்வரைபுனாவிடையினிற்றோன்ற
வக்கணத்தினிலளப்பரிதாமுளக்களிப்பிற்
றக்கனுற்றதுசவுனகசாற்றரிதன்றே. (உஎ)

அன்னகாலையினரியயனதியர்போற்றப்
பொன்னினாட்டவர்கற்பகப்பூமழைபொழிய
மன்னுமந்தாமத்திமதாரகமாபாற்
பன்னுநான்மறைதும்புருநாரதர்பாட. (உஅ)

வண்ணமேவுகுன்டோதரன்வெண்குடைநிழற்ற
விண்ணவர்க்கிறையாலவட்டங்கொடுவீசத்
தண்ணருங்கடற்றலைவன்சாந்தாற்றிகாலசைப்பக்
கண்ணுறுங்கலாமதிகதிர்க்கவரிசேர்ந்திரட்ட. (உக)

பம்புமாயிரம்புலிமானுமோர்பானு
கம்பனாயிரமுகத்தினுமாயிரஞ்சங்கந்
தம்பமாமிரண்டாயிரங்கைகொடுசாற்ற
நம்புமாயிரமறையொலிநாற்றிசைநடப்ப. (கூ0)

சகலலோகமுநிலைபெறுதபமியமேருச்
சிகரமால்வரைதிகழுபொராயிரந்திண்டோன்
மிகுமணித்தொடிக்கரத்தினன்மேவியவாணன்
முகிலெனக்கொடுமுழக்கிடுமுழவொலிமுழங்க. (கூக)

பாழிசேர்துடிகாகளம்பரந்தவாய்ப்பதலை
வாழிமாலொருகட்பறைவயிர்சிறுசின்னக்
தாழ்வில்பேரிகைசல்லரியாநிசாரதங்கள்
சூழுமாழியோரேழினதோசையிற்றுவைப்ப. (கூஉ)

ஆதிநாரணனாகியபண்ணவரார்ப்பும்
பூதநற்கணந்துவைத்திடுபொங்கியத்தொலியு
நாதகீதத்தினோதையுநான்மறையொலியுங்
கோதிலண்டகோளகைமுகட்டினிற்குடியேற. (கூகூ)

கன்னிதன்னொடேந்தவம்புரிகடிமணியாடந்
தன்னினின்றுமத்தக்கன்மாமனையிடைச்செல்வான்
முன்னவன்திருமுதற்பெருவாயில்களொருவிப்
பொன்னிநாட்டமர்மாடநீண்மறுகினிற்போந்தான். ()

போந்தகாலையிற்பொங்கரவல்குலார்செம்பொன்
வாய்ந்தமாடத்துங்கூடத்துமன்னுகோபுரத்து
மேய்ந்திலங்குசெய்குன்றினுமெழின்மறுகெங்குஞ்
சேர்ந்துசெங்கைகள்குவித்தனர்களித்தனர்திளைத்தார்.

வேறு.

எந்தைபெருமானழகிருந்தபடிகாணூஉச்
சுந்தரமலர்ப்புதியசுண்ணமணவைதூவி

யிந்தவுமைதன்னையிவனின்பமணமெய்வான்
வந்தருளுமந்தமணவாளனிவனென்பார். (ஙசா)

மைக்கரியகண்டனருண்மாதுதனைவெஃகி
யிக்கடிநகர்த்தெருவெழுந்தருளமேனுண்
மிக்ககமலக்குரிசின்மெய்த்தவமளித்த
தக்கன்மகள்செய்ததவமேதவமதென்பார். (ஙஎ)

இத்திருநகர்க்கணுமைமின்பமணநாடி
யத்தனணைகின்றபரிசாரறியகிற்பார்
சத்தியமெய்ஞ்ஞானசிவசத்திதவமேவும்
பத்தியவள்கைமிசைபலித்ததிஃதென்பார். (ஙஅ)

உள்ளமகிழ்கூரவருளுத்தமமதாமேல்
வள்ளலெனவந்தமடமங்கைமணவாளற்
கெள்ளரியபூணணியிருங்கலைகளெல்லாங்
கொள்ளுமெனநின்றுசிலர்கொள்ளைகள்கொடுப்பார். ()

ஐயன்மணிமகுடமிகுமாதவர்கொலென்பார்
செய்யதிருவாயழகுசெம்பவளமென்பார்
துய்யமதுமாலைபுனைதோள்வரைகளென்பார்
மெய்யணிவிழுங்கியதிம்மேவுமணியென்பார். (சo)

கண்ணுதலெம்மண்ணன்மிகுகாமமிகழென்பால்
வண்ணமுறுகாமர்சரமாரிபொழியக்கண்
டெண்ணுலகிலின்பசுகமேவவருபோக
நண்ணுகிலனென்னவிவனுகரிகமென்பார். (சக)

காண்டகையகாமவிரகக்கடல்விழாது
நீண்டதொடைநல்கெனநினைந்தருள்செய்கில்லான்
வேண்டினர்தமக்கவர்கள்வேண்டியவைநல்கு
மாண்டகைதனக்கிஃதடாதெனவுரைப்பார். (சஉ)

தங்குகழைவிற்றனதுசெங்கையினெடுத்துத்
துங்கமதனீலமலரம்பதுதொடுத்தான்
மங்கையைமணம்புணரவந்தருளும்வள்ள
லெங்களகமீதினெழுந்தருளுமென்பார். (சங)

நந்தமனைநண்ணுமெனநண்ணுகிலனென்பா
ரிந்தவிறைநந்தமனையெய்தரியனென்பார்
பந்தணிவிரற்பரவைபாலிருளின்முன்னாட்
சுந்தரன்விடுப்பவருதூதனிவனென்பார். (சச)

கந்தமலரம்பன்விடுதூதுகளகண்டங்
கொந்துலவுசோலைபயில்கூற்றமிதுவென்பார்
மந்தமருதங்கொல்வடவானிலமதென்பா
ரிந்தமதிமொண்டழலிறைக்குமினியென்பார். (சரு)

நன்றுமிகநன்றுமிகநாடினமரங்காள்
வென்றிவிடையேறியிவன்வீதியிடைபோத
வன்றில்பகையாழிபகையாயர்குழலோடித்
தென்றல்பகையென்றுசிலர்செப்பியிடுகிற்பார். (சசா)

எண்டரிலிவன்றினமெழிற்பிரமசாரி
யொண்டொடியுபோதினமுமுன்னிலொருகன்னி
பெண்டகைமணம்புணர்தல்பேசினமரங்காள்
கண்டறிகிலாதகலிகாலமிதுவென்பார். (சஎ)

சந்தமறையேபரவுதக்கன்மருகோனென்
றிந்தமறுகூடிருவரின்னுமறியொண்ணு
நந்தியுமைநன்மணநயந்துநமரங்காள்
வந்தருளுகின்றதெனமாயமிஃதென்பார். (சஅ)

சங்கரன்விரும்பிவிடைதன்னிலிவண்மன்னி
மங்கையைமணம்புணரவந்ததேவனென்பார்
சங்கரன்மணம்புணர்தல்சாற்றினமரங்காள்
மங்கையருமைந்தருமணம்புணரவென்பார். (சகூ)

என்றெழுவகைப்பருவமாதர்களியம்பி
நின்றுதொழமாடமலிநீண்மறுகுநீங்கா
வென்றியயன்மால்கைகொடுவெள்விடையிழிந்து
மன்றல்புரிமாடமணிவாயிலிடைவந்தான். (ருo)

வேறு.

வந்தருளெந்தைமுன்மாதர்நிம்பநற்
பைந்தளிர்செய்யகாற்பாசஞ்சேர்ப்பாற்
சிந்துறமிலவணந்திரள்பகற்சுடர்
சுந்தரக்கலங்கொடுசுலவிப்போயினர். (ருக)

காரணகாரியங்கடந்துநின்றதோர்
பூரணன்பதத்தினன்பொழிந்தகீரத்தா
லாரணவல்லிவந்தடிவிளக்கியே
சீரணிதன்றிருமனையிற்சென்றனள். (ருஉ)

படர்ந்தமாமணிவெயில்பரப்புஞ்சோதிவா
னடர்ந்துசென்மண்டபமதனினப்பனோர்
முடங்குவாலுளைமணிமொய்த்திலங்குநன்
மடங்கலாசனத்தினில்வந்துதோன்றினன். (ருங)

மாலயனாதியவானுளோரொலா
மேலவனேவலின்விருப்பினோங்குநற்
கோலமாநவமணிகுயிற்றிடுங்கதி
ரோலுமாசனங்களினினிதினேறினர். (ருச)

பாரினும்விசும்பினும்படர்மணிக்கதிர்
மேருமால்வரையெனவிளங்குமண்டபச்
சீரியவளனெலாந்திருக்கண்சாத்தின
னுருயிர்க்குயிரதாயமர்ந்தநாயகன். (ருரு)

பன்னருமன்னுயிர்படைக்கும்பண்பினன்
மன்னியநன்பெருவளங்கணல்கலாற்
றென்னுறுதிசாமுகஞ்சேர்ந்திலங்கலா
லன்னமண்டபமலரயனையொத்ததே. (ருசா)

மேலுறநிமிர்ந்துவான்வெளியடைத்தலாற்
சிலமாம்பொறிமயில்சேர்ந்திலங்கலாற்
கோலமாகியவுருக்கொண்டிலங்கலான்
மாலவன்போன்றதம்மாடமண்டபம். (ருஎ)

உவமனற்றியாவருமுணாக்கொணுமையா
லிவையெனவியம்பருமின்பமீகையா
னவையறுசிறப்பினினண்ணியோங்கலாற்
சிவபிரான்போன்றதச்செம்பொன்மாடமே. (ருஅ)

முத்தொழிலியற்றிடுமூவர்சேர்தலாற்
சத்தியவுலகமுந்தகுவைகுண்டமு
மத்தனதுலகமுமவனிசேர்ந்ததை
யொத்ததம்மணவினைக்குரியமாடமே. (ருகூ)

அங்கதுகாலையினருமறைக்கொடி
தங்கியமனையிடைத்தானெழுந்தரு
ளெங்கணுபகியுலகெங்குமின்றருண்
மங்கைதன்செய்கையைவழுத்துவாமரோ. (சா0)

மாயிருஞாலஞ்சேர்மன்னுயிர்க்கெலாந்
தாயெனவந்தருடம்பிராட்டியை
நேயநன்மறைக்கொடிநெருங்கப்புல்லினு
ளாயிழையார்களுமடிவணங்கினர். (சாக)

மருவியமஞ்சனமாட்டிவார்ந்தநற்
புரிகுழலீரமெய்புலர்த்திப்பொங்கெழி
லரவகலல்குலினம்பொன்மாமணி
யுரியசெம்பட்டினையுவந்துசாத்தினர். (சாஉ)

பண்டியவகிற்புகைவாசமூட்டியே
கொண்டல்சூழ்ந்தித்திலக்கொத்துமாலைபொன்
முண்டகக்கரங்களான்முடித்துக்கூந்தலி
னெண்டருஞ்செழிகையிலங்கச்சூட்டினர். (சாங)

தருணமிக்கிலங்கியசந்திரோதயத்
திருமுகமழகுறத்திலகஞ்சேர்த்தினர்
வரிபரந்தொழுகியமதர்நெடுங்கணி
லிருளுமிழஞ்சனமெழுதினரரோ. (சாச)

இருசுடருதயமால்வரையினேய்ந்தெனக்
கருதருமணிக்குழைகாதுசேர்த்தினர்

திருமிகுமங்கலநாண்டிகழ்ந்திட
மருவுகந்தரமணிமாலைசேர்த்தினர். (௬௫)

நுணுகிடைமுரிதாநுவலருந்திரு
மணமலிகுங்குமமன்னுதேய்வையா
லிணையறவேபுடைத்தெழுந்தவேந்திளந்
துணைமுலையணிபெறத்தொய்யிறீட்டினர். (௬௬)

பழுதறுபசும்பொனிற்பதித்தபான்மைசேர்
கழுவியநன்மணிக்கற்றைத்தூறுசீர்
கெழுதகுவயிரகேயூரங்கேழ்கிள
ரழகியதோள்களிலலங்கல்சேர்த்தினர். (௬௭)

சூழுறுதிசாமுகந்தொறுகிறைந்துறும்
பாழிசேர்மிகுவெயில்பரந்தெறித்திடு
மேழிரண்டென்னவேயிசைக்குநன்மணி
யாழிகளங்குலியணிந்திட்டாரரோ. (௬௮)

ஓதிடுமுவமஞுலுமைக்கொணுதநற்
காதலிற்கனவளைகவினச்சேர்த்தியே
மேதகுநவமணிவிட்டெறித்திடுஞ்
சோதிசேர்சூடகந்துணைக்கைசேர்த்தினர். (௬௯)

நற்கமலத்திருவழகுநண்ணியே
பொற்பதந்தனிற்றெழில்பொருந்தப்பொற்கொலர்
பற்பகலியற்றுநற்பாடகத்துடன்
செற்றியசில்லரிச்சிலம்புசேர்த்தினர். (எ0)

உணர்வருந்திருவருளுமையைபின்னண
மணியினுக்கணிகலனணிந்ததாமென
மணவணிபுரிதலுமகிழ்ந்துதக்கனேர்
பணிதலுற்றெழுந்தருள்கெனப்பராயினன். (எக)

வேறு.

தங்குபுகழ்த்தக்கனிஃதுரைத்திடலுமுடனெழுந்துசத தளப்பூஞ், செங்கமலத்திருக்கோயிற்றிருமாதுங்கலைமாதுஞ் செங்கைதாங்கப், பொங்கரவவகலல்குற்புலோமசைமுன்

போற்றமணம்புணருங்கோல, மங்கலஞ்சேர்மாடத்தின்மன்னுமரசன்னமௌமங்கைசேர்ந்தாள். (எ௨)

சேர்ந்தருளுமுமையாடன்செங்காந்தட்கரங்குவித்துச் சிவபிரான்முன், போந்தெதிர்நின்றிறைஞ்சிடத்தன்புடையிருத்தியென்றருளிற்புகறலோடு, மார்ந்தசெழும்பல்லியங்களார்கலியினார்ப்பெடுப்பவமரர்போற்ற, வேந்தரியாசனத்தேறியுடனிருந்தாளுலகீன்றவெம்பிராட்டி. (எ௩)

எங்கள்பெருமாட்டியுடனெம்பெருமானெழுந்தருளியிருப்பத்தக்கன், றுங்கமறைக்கொடிவளைக்கைத்தூமலர்மஞ்சனமாதிசுமந்துநிற்ப, வங்கணன்றனடியிணையிலருக்கியமீந்தருச்சனைசெய்தான்பால்கொண்டு, பங்கயப்பொற்பதம்விளக்கிப்பைந்தொடியையளித்திடுவான்பரிவுகூர்ந்தே. (எ௪)

எம்மையினிதாண்டருளென்றியாவருமேபணிந்தேத்துமெம்மான்றன்னை, நம்மருகனென்றெண்ணிநாயகியைநிற்களித்தேனெனவென்னு, வெம்முனைசேர்வேனெடுங்கண்விளங்கிழைசெங்காந்தளங்கைதன்னைமிக்க, செம்மணிப்பொற்குண்டிகையிற்றிகழ்திருமஞ்சனமரன்றன்செங்கையீந்தான். ()

அந்நிலையிலயனெடுமோலமரர்முனிவரரிறைஞ்சியார்வங்கூர்ந்தார், பன்னுமரம்பையர்கானம்பாடிநடமாடினர்முன்பணிந்துபாங்காற், றுன்னுதிசைக்கடலெனவேசொல்லரியபல்லியங்கடுவைத்தார்பூதர், தன்னருளைக்கைகலந்துதனதுதிருவுளமகிழ்ந்தான்றுணுவானேன். (எசு)

மண்டபநின்றிலங்கவட்டமங்கலமும்பாலிகையுமரபிற்றந்தாங், கண்டர்மனங்கண்டுவெப்பவருந்திமிகுந்தருப்பைமலராச்சியத்தாற், குண்டமதிற்கொழுந்தழன்மேற்கொழுந்துவிடத்தானினைந்துகூட்டிமூட்டிப், பண்டருநான்மறைமுறையிற்பரிவினெரிவளர்த்தனன்பல்லுயிர்படைப்போன். (எஎ)

நாலுமுகனின்பமணச்சடங்குமுடித்திடலும்மேகஞ்சமுண்டு, நீலமணியெனமிடற்றுநீங்காமற்பழுத்தோங்குநிமலமூர்த்தி, மாலயனேமுதலானவானவர்சூழ்ந்திடத்தக்கன்மருக

ஞனேன், கோலமதனைக்காய்ந்தகுறிக்கரியத னதுதிருக்கோலங்கொண்டான். (எஅ)

வேறு.

வானோர்பெருமான்மறைந்திட லும்வண்டறெங்குந்
தேனார்ந்தகஞ்சத்திருவாணிதம்முழைச்சேர்ந்
தானுமணியிழந்தவவ்வரவமேயென்னக்
கானார்ந்தகூந்தற்கவுரியிவைகட்டுரைப்பாள். (எகூ)

பன்னாளருந்தவங்கள்பண்ணியவென்பாக்கியத்தா
லென்னாயகன்றானேயென்பாலெழுந்தருளி
நன்னாளெனவுவந்துநன்மணமுஞ்செய்தருளி
யிக்காண்மறைந்ததியானேதென்றறியேனே. (அ0)

இன்னமும்யான் காண்பேனோவெம்மான்றனதுதிருச்
சென்னியின்மேற்சேர்ந்திலங்குஞ்செம்பொன்மணிமுடியும்
பன்னுமறைபாடும்பவளத்திருவாயு
முந்நூன்மணிமார்புமூன்றநயனங்களுமே, (அக)

கண்ணாலினுமொருகாற்கண்டுகளிகூர்வதெந்நாள்
விண்ணார்நதிமிலைச்சுமிக்கபவளச்சடையு
மண்ணுடையானமகராலயத்தெழுந்த
வுண்ணாதநஞ்சதனையுண்டிருண்டகண்டமுமே. (அஉ)

எந்தநாட்கண்டிக்கினியானிறைஞ்சிடுகேன்
சுந்தரஞ்சேருங்கடகத்தோள்களொருநான்கும்
வெந்ததிருநீறணிந்தமேனியுந்தன்மெய்யடியார்
பந்தமறுத்தாண்டருளும்பாதாரவிந்தமுமே. (அஙு)

இங்கினியானென்றேவிறைஞ்சப்பெறுவேனுன்
சங்கக்குழைதான்றயங்குகின்றவார்காதுந்
திங்கள்விளங்குந்திருமுகத்தின்சேவையுமேற்
பொங்கிவழிகாதற்பொருந்துமணக்கோலமுமே. (அச)

வேறு.

என்றென்றுபினுமிறைவாவெனுமா
லொன்றும்மினியானுனையேனெனுமாற்

பின்றங்குசடைப்பெருமானருடா
ளன்றிங்கிதெனுநகைசெய்திடுமோல். (அரு)

பொன்றேய்சடிலப்புனிதன்மறையுஞ்
சென்றேங்குபுகழ்த்திசைகைதொழுமா
லொன்றேவுரையாமலொளித்தனையா
னன்றேசிவதாநடுவோவெனுமால். (அசு)

இருளானவரீங்கிடவேயெனையோர்
பொருளாகமனைப்புகுந்தாண்டுமெனக்
கருளாதெவனேவறியேனெனுமான்
மருளாதினமும்வருமோவெனுமால். (அஎ)

வேறு.

என்றுபன்னியிரங்கும்விழுமெழு
நின்றுசோர்ந்திடுகெட்டுயிர்ப்பெய்திடுங்
கன்றுநெஞ்சகங்காந்தளங்கையினு
லொன்றுமாநிலத்துற்றிடவெற்றிடும். (அஅ)

தாங்குஞ்சூடகத்தாமரைக்கைகளாற்
பூங்கருங்குழன்மாலையைப்போக்கிடுங்
கோங்கரும்பனையகொங்கைமுகட்டினி
லோக்கியேபின்னொலித்திடவெற்றிடும். (அகூ)

காசிலாதகதிர்மணிமண்டபத்
தாசைபோலகலல்குனன்மாதரா
ரேசவேமணஞ்செய்தென்பயனெனும்
பேசில்யான்பெண்பிறந்தென்பயனெனும். (கூ0)

செல்லும்வானிற்றிசைதனைநோக்குமென்
சொல்லுகேனென்றுதுண்ணெனச்சோர்ந்திடும்
வல்லுலாவும்வனமுலைமுன்றிலிற்
கல்லுமுத்தெனக்கண்புனல்கான்றிடும். (கூக)

இன்னதன்மையையெண்ணியிலங்கிழை
மன்னுகாதன்மறைக்கொடிமாமல

ரன்னமன்னவளன்னையைவாழ்த்தியே
துன்னுகின்றனர்சூழ்ந்திவைசொல்லுவார். (கூஉ)

மாதராய்நின்மனங்களரற்கநற்
காதலாலுனைக்கண்ணுதற்சாமியிப்
போதுவந்துபொருந்துவனன்கெனு
வாதரத்துடனங்கவர்தேற்றினர். (கூங)

தேற்றிப்பின்னருந்தேமொழிமாதரா
ராற்றவேநின்னருமணக்கோலத்தை
நோற்றநோன்பினுவலருமப்பலப்
பேற்றினுற்றெழுப்பெற்றனமியாமென்றார். (கூச)

என்றகாலையினெம்பெருமாட்டிதான்
றன்றுமாதர்குழுவைத்துறந்துநீண்
மன்றல்சேர்கடிமாடத்தினெய்தியே
யொன்றுமாதவமுற்றிருந்தாளரோ. (கூரு)

உற்றவேலையினேடுமாலயன்
மற்றியாருமனங்களர்வெய்தியே
கற்றைவார்சடைக்கண்ணுதல்ண்ணறன்
பெற்றிநாடரிதென்றென்றுபேசினர். (கூசா)

வேறு.

எம்பிரான்மறைந்தேகலுமெண்கணன்றருஞ்சேய்
வெம்பியுள்ளம்வெகுண்டுமெய்வியர்த்தறவெள்கித்
தம்பமாகியதடக்கையொன்றோடொன்றுதாக்கி
யம்புயக்கைகாசாக்கிரத்தமைத்திவையறைவான். (கூஎ)

என்னருந்தவப்பேற்றினுலீன்றமெய்ஞ்ஞானக்
கன்னிபாகன்வான்கங்கைமாநதியலையெறிக்கும்
பின்னருழ்ந்திடப்பேயுடனுடியபித்தன்
கன்னர்கண்புணர்கின்றதுநன்றெனநக்கான். (கூஅ)

ஈதியாலெனவென்மகடனையிவண்மேவ
வேதநானெறிமேவியவிண்ணவர்வியப்பக்

காதலாலருங்கடிமணமுடித்தனன்யானிப்
போதிவன்புகல்கணவனென்றறிந்திலன்போலாம். (கூகூ)

தெரியின்யானினிச்செப்புவதென்னேயோவண்ணங்
கரியமாலயன்கண்ணுதலாகியகள்வன்
பெரியர்யாவரேயென்னினும்பிழைத்திடவெண்ணி
லரியதோர்தலைவிதிபிலேவிலக்கிடலாமோ. (க00)

ஆதலாலிஃதென்றலைவிதியிதுவாயி
னேதுசெய்குதிர்நீவிரென்றியம்பிமான்முதலோர்ப்
போதுநும்பதியெனவவர்தமையிடம்போக்கி
காதனூர்செயனுடியேகண்ணிடுநாளில். (க0க)

பூதிசாதனமுந்திரிசூலமும்பொருதுங்
காதில்வெண்குழையுங்கரசபாலமுஞ்செய்ய
பாததாமரைப்பரிபுரமும்படர்சடையு
மாதுகாதலோர்தாபதன்போலிறைவந்தான். (க0உ)

வந்ததாபதன்றன்னெதிர்வந்தனைசெய்
தெந்தைதன்னடியானெனவேத்தலுமிரங்கிக்
கந்தவார்குழற்காரிகைகண்டுகண்களிப்பச்
சுந்தரங்கொள்வெள்விடையினிற்றோன்றினன்றொல்லோன்.

தோன்றலாங்கெதிர்தோன்றலுஞ்சுந்தரிதுணுக்குற்
றூன்றவன்புடனளிக்குலங்களிக்குமம்புயத்தா
ளூன்றபூங்கழறைவரதன்கினிதிறைஞ்சி
யேன்றநற்றுதியியம்பிநீயிரங்கெனவிரந்தாள். (க0ச)

இரந்தகாலையினெம்பெருமாட்டியையெங்கோன்
வருந்தனீயெனவேதிருவாய்மலர்ந்தருளி
விரும்பியேபொருவெள்விடைமீதுடனிருத்திப்
புரந்தராதியர்போற்றிடக்கயிலையிற்போந்தான். (க0ரு)

போந்தகாலையிற்பொருந்தியசேடியர்விரைந்து
சார்ந்துதக்கனைத்தாழ்ந்துநீதந்தருண்மருந்தை
யேந்திடும்புனற்சடிலன்வந்தெழில்விடையேற்றிக்
காந்துவெண்மதிக்கதிர்விடுங்கயிலையிற்படர்ந்தான். (க0சு)

என்றவேலையினிறைமகனெம்பிரான்றன்னை
யொன்றுசிற்றமேற்கொண்டுநிந்தனைசெய்பவும்பர்
கன்றுமான்மழுவேந்தியகண்ணுதற்பெருமான்
மன்றலங்கழன்மதித்திடாதுரைத்திடல்வழக்கோ. (க0எ)

ஆதலாலரனம்புயமருவியசெம்பொற்
பாதமீதினிற்பரிவொடுபணிவதேபாங்காற்
போதியென்றுபுத்தேளிர்கள்போற்றிசெய்திசைப்ப
வோதுநீள்விசும்பிடறிடுங்கயிலையையுற்றான். (க0அ)

உற்றவானதியுவட்டெடுத்தெழுந்தலைகொழிக்குங்
கற்றையஞ்சடைக்கண்ணுதற்சாமிதன்கோயின்
முற்றுமாமணியெறித்திடுமுதற்பெருவாயிற்
பொற்பினேறினன்போகலையென்றனர்பூதர். (க0கூ)

பூதர்நீவிர்தாம்போகலையென்றதென்புவிமே
லோதரும்பெருந்தவம்புரிந்துவந்தியானீன்ற
மாதராண்மணமருவியவொருதிருமருகன்
காதலாற்கலந்திருத்தல்யான்காணியவந்தேன். (கக0)

என்றுதக்கனீதியம்பலுஞ்சாரதர்வெகுண்டே
யுன்றன்மாமுகநோக்கினுமுற்றிடுகிரயம்
பின்றயங்குசெஞ்சடிலனைப்பேசிமுனிந்நத
நன்றுகாணியவந்ததுநவின்றிடினகையே. (கக க)

அன்றியெந்தைநின்மருகனுயம்பிகைமகவா
யுன்றனுணையிலுலகெலாமொருதனிச்செங்கோ
லென்றுமோங்கிடவீந்ததையயர்த்திநீதக்க
கொன்றுநன்றியைத்தின்றுழல்கூற்றனேகொடியாய். (ககஉ)

இன்னுமொன்றுநன்கியம்புவங்கேட்டியாலெங்கோன்
பொன்னடிக்கமலந்தொழப்போதுவையாயின்
மன்னுகிற்றியர்லன்றெனில்வந்திடும்வழியே
நின்றனக்கினிதேகெனநிகழ்த்தினரன்றே. (ககக)

அந்தவாசகங்கேட்டலுமக்கொடுந்தக்கன்
கந்தமாமலரோன்முதற்கடவுளர்யாரும்

வந்தெனணையின்வழிபிழைக்கின்றிலாதனு
லெந்தஞான்றினுமிறைவனையிறைஞ்சலன்யானே, (ககச)

திருமணிப்பெருங்கோயினீசெல்லலென்றதுதா
னரியநற்றவத்தியான்றருமொருமடக்கொடியு
மருவுமென்றிருமருகனும்வழங்கியமாற்றங்
கருதினும்முறையன்றிதுவென்றுகட்டுரைப்பான். (ககரு)

பாவுகின்றதும்பரஞ்சுடர்தன்னையாவருமே
கருதிடாவகைகாண்குவனன்னதுகாண்டிர்
பொருவில்செய்கையான்புகழ்பெறப்புரிகுவலென்னுத்
திருகுசிந்தையாலினையனசெப்புதலுற்றான். (ககசு)

விடருங்கொடும்பவந்தொறும்விஞ்சியசெம்பொற்
பாடகந்தரும்பழகியதீவினைபற்றிப்
பிடுருவகைபிடர்பிடித்துந்திடப்பெருஞ்சீர்த்
தேடரும்புகழ்த்தக்கமாபுரத்தினைச்சேர்ந்தான். (ககஎ)

சேர்ந்துபுங்கவர்க்குரைசெய்வான்றிருந்துமோவியரு
மோர்ந்துநல்லெழிலெழுதொணுவொவ்டொடிதன்னே
டேந்துபுன்சடையிலங்கியவிறைசெயன்முறையாற்
சார்ந்துவாயினேர்சாரதர்தாந்தடைசெய்தார். (ககஅ)

ஈதலாதுபின்னியம்பியதிசைத்திடவற்றோ
வாதலாலின்றுபற்றிரங்கணனம்பொற்
பாததாமரைபணிவதுதவிர்குதிரொன்னுப்
போதுகென்னலும்புங்கவர்தம்பதிபுக்கார். (ககசு)

வேறு.

அன்பருளந்தனதாயகோயிலாமங்கணன்மங்கையையா
ர்வமாகவே, யின்பமணம்புணர்காதையோதுவோரின்புடன
ன்செவியேறவேய்குவோர், வன்பவவெந்துயர்யாவுமாறியேம
ங்கலவங்கனையார்களோடுதாந், தென்பயிலிந்திரபோகமேவி
யேசெஞ்சடிலன்பதமீதுசேர்குவார். (க௨௦)

திருக்கலியாணச்சருக்க முற்றியது.

ஆகசெய்யுள் சு௦அஎ.

பன்னிரண்டாவது.

திருக்கலியாணச்சருக்கச்சுருக்கவசனம்.

தக்ஷன் தனக்குப்புத்திரியாராக அவதரித்தஉமாதேவியாருக்குத் திருமணஞ் செய்யும் பொருட்டு மணமுரசு அறைவித்து நகரத்தை அலங்கரித்துத் திருமணமண்டபம்நிருமித்துப் புத்திரிகளுக்குத் தெரிவித்தவுடன் அவர்களும் வந்தனர். மற்றையதேவர்களுக்குத் தெரிவித்தவழி பிரமாமுதலியதேவர்களும் வந்தனர். திருக்கைலாசமலையினின்று சிவபிரான் இடபாரூடராய் உமாதேவியார் தவஞ்செய்யுங் கன்னிமாடத்துக்கு எழுந்தருளினர். அப்போது தக்ஷன் வந்து வணங்கித் துதித்து, "தேவரீர் திருமால்முதலிய தேவர்கள்சூழ அடியேனுடைய புத்திரியாரைத் திருமணஞ் செய்தற்பொருட்டுத் திருமணமண்டபத்துக்கு எழுந்தருளவேண்டும்" என்றுபிரார்த்தித்தனன். உடனேசிவபிரானும் அம்மண்டபத்துக்கு எழுந்தருளிய பொழுது வேதவல்லி வந்து பசும்பால் வார்த்துப் பாதாரவிந்தங்களை விளக்கியபின் சிவபிரான் திவ்வியசிங்காசனத்திலே வீற்றிருந்தருளினர். திருமால் முதலியதேவர்களும் ஆசனங்களிலே அமர்ந்தனர். உமாதேவியாரும் திருமணக் கோலங்கொண்டுசிவபிரானருகே அமர்ந்தருளினர். உடனேதக்கன் சிவபிரான்திருக்கையின்கண் உமாதேவியாரைத் தத்தஞ்செய்தான். பிரமா அக்கினிவளர்த்துத் திருமணச்சடங்குகளை முடித்தார். உடனே சிவபிரான் மறைந்தருளினர். மறைந்தபின்பு உமாதேவியார்பெரிதும்வருந்தி அருந்தவஞ் செய்தார். அப்பொழுது, திருமால்முதலிய தேவர்கள் சிவபிரான் திருவுளப் பாங்கை உணர்தல் அருமையென்று பேசிக்கொண்டார்கள். இச்செய்தியையுணர்ந்த தக்கன் தேவர்களை அனுப்பிவிட்டுச் சிவபிரானை நிந்தித்துக்கொண்டிருந்தான். இருக்கும்போது, சிவபிரான் தாபதவுருக்கொண்டு தோன்றி உமாதேவியாருக்குக் காட்சி கொடுத்து இடபாரூடராய் உமாதேவியாரையும் பாகத்திலே வைத்துக்கொண்டு திருக்கைலாசமலையை அடைந்தனர். அடைந்தபின்தக்கன் திருக்கைலாசமலையை அடுத்தும் சிவபிரான்றரிசனங்கிட்டாமையாலே, தன்னகரத்தைச்சார்ந்து தேவர்குழாங்களை அழைத்துச்"சிவபிரானை இன்றுமுதல் நீவிர் வழிபடுதலை ஒழியுங்கள்" என்று கூறினன். இப்படலத்தை ஓதுவோருங்கேட்போரும் நன்மை பெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்றாவது.

தக்கன்வேள்வியழித்தசருக்கம்.

மட்டவிழ்சரோருகனன்மைந்தன்மகிழ்கூர்ந்தாங்
கிட்டிபுரிகாதையையிசைப்பவதுகேண்மோ
கட்டழகுசேர்சவுனகத்தலைவவென்னச்
சிட்டர்புகழ்சூதமுனிசெப்பியிடுகிற்பான். (௧)

மாதவன்விரிஞ்சன்மிகுவானவர்கண்மாத
ரேதமறுமாதவர்களெண்டிசைபுரப்போ
ராதியர்கள்சூழநுதலங்கணனைநீத்தே
மேதகையதக்கனொருவேள்விசெயலுற்றான். (௨)

வேழ்விதனைநன்மகதவீணைமுனிகாணூஉத்
தாழ்விலருளோடுமுயர்சத்தியதவத்தோர்
வாழ்வுறுபெருங்கயிலைமால்வரையினண்ணிக்
காழ்தருகளத்தனடிகைதொழுதுநின்றான். (௩)

நின்றுதொழுநாரதனைநின்மலனுவந்தே
யின்றிவணடைந்தபரிசென்னவுரையென்ன
மன்றன்மலரோன்முதலவானவர்கள்சூழ
வென்றிகொடுதக்கனொருவேள்விபுரிகின்றான். (௪)

என்னலுமகிழ்ந்திறையிடத்தினிலமர்ந்த
மின்னனையநுண்ணிடைவிளங்கிழையெழுந்து
தன்னிகரிலெந்தையிருதாடொழுதுபோற்றி
மன்னியதொர்செம்பவளவாயினுரைசெய்வாள். (௫)

எந்தையிதுகேண்மதியியம்பலுடையேனென்
றந்தைபுரிவேள்விதிகழ்சாலையடியேற்காச்
சிந்தைமுனியாதுகொடுசென்றவியருந்தி
வந்தருள்புரிந்திடும்வரந்தருதல்வேண்டும். (௬)

அல்லதடியேற்குமினதானனமலர்ந்தே
வல்லைவருகென்னவிடைவாய்மையொடுமீதி
செல்லலெனவேயருள்செய்தேவவெனவிமவான்
நல்வினையைநாடிவிடைஈதனுரைசெய்தான். (௭)

உரைத்தருளவொல்லையினுவந்துவிடைகொண்டே
விருப்பினோர்விமானமதின்மேவியருணந்தி
யருட்டருகணங்களொடுமக்கொடியதக்கன்
றருக்கினுடன்வேள்விபுரிசாலையிடைசார்ந்தாள். (௮)

சார்ந்துயர்விமானமதுதன்னைமுனிழிந்து
சேர்ந்துரியதக்கனெதிர்செல்லவவன்வல்லே
வார்ந்தகுழன்மாதுதனைமற்றவன்வெகுண்டே
நேர்ந்தபலநிந்தனைநிகழ்த்தியிடலுற்றான். (௯)

நின்னருமைபூண்டகணவனிலைமையென்னோ
வுன்னிலவன்மன்னிடவொரூராதுவுமுண்டோ
பின்னாதுநிற்கவொருபேர்பரவவுண்டோ
வின்னனிவனென்றுலகியம்பிடவுமுண்டோ. (௧௦)

மாசுணமருந்துமொருவாயுமலைவுற்றே
வீசியலையாழியிடுமேருமலைவில்லா
மூசுதலையோடுகலனூர்கொள்பலியாலப்
போசனமிலங்கிடமெய்பூசுதல்வெண்ணீறே. (௧௧)

பன்னகமிகுந்திலகுபைம்பொனணியார
முன்னிலொருகோவணமுடுப்பதுபுலித்தோ
றன்னிகர்பொருங்கரடதந்தியுரிபோர்வை
சென்னிதிகழ்கின்றதுசிறந்ததலையோடே. (௧௨)

கூறரியவென்பினொடுகொக்கிறகுமக்கு
மாறுபடுவன்றிறல்வராகவளைகோடு
மூறுபடுமாமைமுதுகோடுமுறுசெஞ்சேல்
வேறுபடுகண்ணுமலர்வெள்ளர்க்கமாலை. (௧௩)

காதணிகலன்சுரிமுகங்கடகமார
மேதமறவேதினமுமேறுதல்வெளேறே
யாதரவினின்றுகடமாடுவதுகாட்டிற்
கோதின்மணிமேவுதிருக்கோயில்சுடுகாடே. (௧௪)

ஒ[illegible]ரிதெனவேதினமுமொண்டொடிநின்னோடும்
வெள்[illegible]மலையென்றதனின்மேவியிடமேனு

ளெள்ளருமிலங்கையிலிராவணனிராதே
யள்ளிபகழ்கின்றதனையாருமறியாரோ. (கரு)

இந்தமுறைதன்னையிறையும்மறிகிலாதே
சந்தமறைநூலின்வழிதந்நகின்மணந்தான்
முந்தவிதிவந்திதுமுடிந்ததவனைத்தா
னந்தமருகோனெனவுநாணியிடுமுள்ளம். (கசு)

என்றுபலநிந்தனையிபம்பினவிசைப்பான்
வென்றிதருகின்றயலவிண்ணவர்கணாண
மன்றல்செயவந்தெனதுமர்மருகனுகி
யன்றவனெடுத்தபரிசார்புரியவல்லார். (கஎ)

தக்கவுலகங்களிடைசார்ந்தபலயோனி
தொக்கவுயிர்கட்கருள்செய்தோன்றனின்யானென்
றக்கொடியதக்கனுமையாளையும்வெகுண்டே
மிக்ககயிலைக்கிரியின்மீண்டுபடர்கென்றான். (கஅ)

அங்கனுமைமங்கைதிகழங்கணனையந்தோ
பங்கமுறநிந்தனைபகர்ந்தவதனாலே
வெங்கனல்விளங்கிடுமிவ்வேள்வியுமழிந்து
தங்கியிடநின்றலைதணந்திடுகவென்றே. (கசு)

வெங்கனல்சொரிந்திடும்விலோசனம்விளங்கு
நங்கள்பெருமானருகுநண்ணிடவுமஞ்சித்
தங்குமனல்வேள்விபுரிசாலைநடுமூல
வங்கியையெழுப்பியதினம்பிகைகுளித்தாள். (உ௦)

ஏர்கொளிமவானுமையெனக்குமகவாகென்
றோர்பரனைநோக்கிமூனுழந்ததவம்வந்து
சேர்படவும்வேள்வியிடைநீடருளின்வந்து
பேர்பரவுமந்தவொருபெண்கொடிபிறந்தாள். (உக)

வேறு.

ஆங்கதன்பின்னாருங்கணத்தலைவனையகோவென் றெடுத்தரற்று; மேங்குநின்திரக்கும்விழுமெழும்வாயினெற்றி மெம்பிராற்குணர்க்கும், பாங்கெத்துவென்னப்பாதவித்தமழு னும்படர்புவிசென்னிமேற்படுத்தாங், தீங்குறுகனற்கண்ணிசென் றுகாணுதநிகைத்திடுமெய்யணிசிதைக்கும். (உஉ)

ஈங்கினியாதுசெய்குவனென்னவெண்ணியேயெம்பிரான் கயிலைப், பாங்கரிற்படர்ந்துபவளவார்சடையிற்பகீரதியிலைச் சியபரமற், காங்கனஞ்சென்றேயறைகுவமென்னுவந்தனனக் தியங்கணத்தோர், திங்கெடுத்தியம்பச்சிறிதறியார்போற்சிவ பிரான்றிருச்செவிசார்த்தி. (உ௩)

அண்டகோளகைக்கீழமர்ந்தினிதென்றுமருந்திறல்வீரர் கள்விரும்ப, மண்டியகாதல்கொண்டருள்புரியும்வயமிகுவீர பத்திரனைக், கண்டனன்மனத்திற்கணத்தினிலந்தக்கனகூ டத்தினின்றிழிந்த, முண்டமத்திமைசேர்கண்டனில்வந்து முளைத்தனன்முண்டெழுசினத்தால். (உ௪)

எரிந்தகுஞ்சியுமூன்றெரிசொரிகண்ணுமிருசிறுபிறை தருமெயிறுந், திருந்துசெம்மதியந்திகழ்திருமுகமுஞ்சேர்ந் தவிற்புருமுங்காதிற், பொருந்துகுண்டலமும்புகழ்திருமா ர்பிற்பொலங்கொளாபரணநின்றிலங்கத், திரண்டதிண்டோ ளிற்செங்கண்வாளரவகங்கணஞ்செறிந்துடன்விளங்க. (உ௫)

விரவியபவங்கள்வேரறுத்திடுநல்வெண்டிருநீறுமெய்விளங்கக் கருதரிதாயதிகழுரையதனிற்கட்டிபகச்சுடைவயங்க மருவியவுதரபந்தன்மானவாளராமணியொளிவயங்கப் பொருவருகிரணபரிபுரமிலங்குபொற்பதாம்புயங்கவின்பொழிய

மாமுகிலெனவேமன்னுமோர்செங்கைமணிநெடுநாவினை யசைப்ப, வேமமாகியவோரெழிற்கரநின்றேயிடிபடுதுடியது முழக்கத், தோமறுமின்போற்றுணைக்கரகமலஞ்சூலமேல் கொண்டதுசுலாவத், தேமலர்வாசந்தினந்தொறும்வீசுஞ் சேவடிதொழுதிதுபுகல்வான். (உ௭)

புண்ணியபுராணபூரணஞானப்புனிதபொற்பொதுவினின் றாடுங், கண்ணுதற்பரமகயிலைநாயகநீள்கடல்விடமுண்டிரு ...ண்ட, வண்ணநல்லரவிந்தாசனந்றனதுமருவியசிரகரக பா... வுண்ணினைந்தனையுரைத்திநீயென்னவும்பர்தம்பிரா னி... ...ப்பான். (உ௮)

நேரிதாயவிரலிகேட்டிசிந்தனைநந்தமைமகிழ்த்திச், சீரு றுகமலத்திசைமுகன்றந்தசிறுவிதிவேள்விசெய்கின்றான், பா ரிடப்பெரியபடையுடனெருங்கிப்பக்ர்ந்திடு·மவன்றனைமருவி, யேருறுமவிளையுயிகெனக்கேட்டியிந்திடினீண்டடைகுதியால்

அருத்தியினந்தவவியளித்திலனேலம்புயத்தவிசினெஞ் ஞான்றும், விருப்புறுமயன்மால்விண்ணவராதிமேவியபண் ணவர்வெருவத், தருக்குறுதக்கன்சிரத்தினையறுத்துத்தக்க வவ்வேள்வியைத்தகர்த்தி, பொருக்கெனயாமும்பேர் துது மென்றான்பொடிபடப்புரங்கண்மூன்றெரித்தோன். (௩௦)

தூமமார்வடவைத்தூயவெங்கனல்போற்றொடர்ந்தெரி குஞ்சியுந்துண்ட, மாமதியிரண்டுமன்னியதென்னவளைந்தபே ரெயிறுவர்வ்வயங்கக், காமருசிறப்பிற்கண்கள்செங்குருதிகா ன்றிடக்ககனகூடத்திற், றூமநீள்சென்னிதடவிடுங்கொடிய சாரதர்சந்ததம்பரவ. (௩௧)

அண்டமானவற்றையணித்துணைக்கரத்தினங்குலியொன் றினாற்றூக்கி, யுண்டிடவேண்டினொருகணமதனினுண்டுமிழ் தரவுறுவலியு, மண்டியபுகையின்வளர்ந்தெழுசிகையும்வா ளிளம்பிறையிரண்டென்னக், கொண்டபேரெயிறுங்குருதி சோர்கணுஞ்சேர்குறட்சிறுபூதங்கள்பாட. (௩௨)

துங்கமிக்குறச்சூழ்ந்தாழ்ந்தகண்களுஞ்சிர்சொற்றரி தாயசிற்றரையுந், தங்கிமிக்கொடுங்குங்கபோலமுநீள்கந்தர முமேல்கிளர்ந்தறவெறிந்த, பங்கியுமுலர்ந்தபண்டியுமிலங்கப் பதங்களைமாறியேநீண்ட, வங்கைகள்கொட்டியலமரலுற்றே யலகைகளவைதிரண்டாட. (௩௩)

சீரணிவாசந்திகழ்ந்தசெங்கமலத்திருமுலைத்தடங்களிற் றிளைக்கு, நாரணிறந்தநாட்கவர்கின்றநன்னிலாக்கற்றைசேர் ந்தரிக்கும், பூரணமதிபோற்பொருந்தும்வெண்சங்கிற்பெரு வருவிந்துநாதத்தின், சார்தருமோசைதழங்கிடவந்தச்சாரதர் தமிற்சிலர்தொனிப்ப. (௩௪)

பொங்கியவாசத்துதைந்தளிமுரன்றுபுதுமதுவுண்டுதேக்கிடும்பூம், பங்கயத்தவிசிற்பண்ணவரனேகர்பண்டுயிர்ப்பிரிந்திடவவர்சேர், செங்கமலத்தாட்டிகழ்சிறுசின்னஞ்சேர்ந்தகைச்சிறுகுறட்பூத, மங்கணனுதற்சேர்துங்கவீரன்வந்தானெனவேபணிமாற. (௩௫)

அண்டர்நாயகன்றனனுக்கிரகத்தாலலகிலண்டங்களுமுதவிப், பண்டருவேதப்பாடலோர்நான்கும்பட்ர்திசாமுகத்திலும்பயிலும், புண்டரீகப்பொற்பொகுட்டில்வீற்றிருக்கும்புங்கவரனேகர்பொன்றிட்ச்சேர், குண்டிகையனர்தங்குறட்சிறுபூதங்கொண்டுகைக்குடமுழாமுழக்க. (௩௬)

இன்னபல்லியங்கடுவைத்திடவுயர்வானெழுமுகடிடிபடச்சேடன், மன்னியசென்னிமருவியவுலகும்வானமுமிகநடுநடுங்கப், பன்னுமேழ்கடலிதென்னவேசூழ்ந்தபாரிடப்படையொடுபடர்ந்தான், கொன்னுருவீரர்கொடியவாருயிரைக்கூற்றினுக்கிரையிடும்வீரன். (௩௭)

மன்னியகரிமேல்வாலுளைமடங்கன் மறக்கொடுசெல்வதுபோன்று, முன்னிமான்றன்னையுறுவலியொழிப்பானேர்வயப்புலியுறல்போன்றும், பன்னகமதனைப்பரிகுவானினைந்துபன்னகவயிரிசென்றெனவும், தன்னிகர்வீரபத்திரன்வேள்விதந்திடுந்தக்கனைச்சார்ந்தான். (௩௮)

வேறு.

சார்ந்தகாலையிற்றக்கன்முன்
சேர்ந்துளோர்திடுக்குற்றனர்
வாய்ந்தமாதவர்வாழ்த்தினா
ரேய்ந்தவான்வரேங்கினார். (௩௯)

கந்தமாமலர்க்கடவுள்சேய்
மூந்துறக்கடிதுமொழிகுவா
னிந்தமாநிலத்தியாணர்நீ
வந்ததென்னுரைவழங்கெனா. (௪0)

வெள்ளநீர்பொதிவேணிசேர்
வள்ளறன்றிருமைந்தன்யா

வெள்ளருங்கனலவியினைக்
கொள்ளவென்றுநிற்குறுகினேன். (சக)

ஆதலாலவிப்பாகநீ
காதலுக்கிவணல்கென
வோதுமற்றவியுதவிலன்
போதியென்றுபுகன்றனன். (சஉ)

என்றவேலையிலெம்பிரான்
வன்றிறற்றிருமாயனைத்
தன்றடக்கைசேர்தண்டினாற்
பொன்றினனெனப்புடைத்தனன். (சங)

அலங்குநன்சிகையவிழமெய்
கலங்கிவாய்குருதிகக்கவே
நலங்கொள்வேதனொருநான்முகங்
குலுங்கிடக்கைகொடுகுட்டினான். (சச)

மயலுழந்துநல்வாசவன்
குயிலதாமுருக்கொண்டுவோன்
சயமொடேகலுக்தடிந்தனன்
பயிலுந்தன்கைவாட்படையினால். (சரு)

நாற்பெருந்திசையுநாடியே
யேற்றதிக்கிதெனவேகலுஞ்
சிற்றமோடுதலைசிந்திவெங்
கூற்றனாருயிர்குடித்தனன். (ச௬)

பொங்குவெங்கதிர்பொருந்துபற்
றங்குகைகொடுதகர்த்தனன்
திங்கள்யாமுகந்தேய்த்தனன்
பங்கயந்திகழ்பதத்தினால். (சஎ)

நந்துவாணிதிரணகிலமோ
டந்தநாசிகையரிந்தனன்
செந்தழற்கடவுள்செங்கைநா
வந்துவல்லையினின்மாற்றினான். (சஅ)

மைக்கருங்கணவன்மனைவிமூக்
கக்கணத்தினிலரிந்தனன்
சிக்கெனச்சிகைபிடித்துடன்
றக்கனைத்தலையறுத்தனன். (சகூ)

ஆய்காலையத்தலைமைவெந்
தீயருந்திடச்சிறுவரா
யேய்வேள்வியினெய்தினோர்
மேயவாருயிர்வீட்டினான். (ருo)

வீடினோர்குருதிவெள்ளநீர்
கூடியுண்டுபினர்குதுகுதுத்
தாடுகின்றனவலகைகள்
பாடுகின்றனபாரிடம். (ருக)

காரணன்னயனந்துநாட்
சோரியுண்டுறலைத்தல்போ
லாரவுண்டனமின்றுநல்
வீரவென்றுவிளம்புமர்ல். (ருஉ)

கூடுசோரிகுளித்தலான்
மாடுயூபமரந்திகழ்
காடுகின்றுகவந்தின்
றுடுகின்றவனந்தமே. (ருங)

ஆயகாலையின்னண்ணலை
வீயும்விண்ணவருயிர்பெற
நேயமோடருணியென
மாயன்வந்துவணங்கினான். (ருச)

வேறு.

தந்தையுந்தாயுந்தன்சொலின்வாராத் தனயனைத்தண்ட மாற்றுதல்போற், சிந்தையாவருமேதிருந்திடமுனிந்தேதிறலு றும்வீரனுற்றீர்த்தாங், கந்தவேலையினிலரியயன்முதலோர்க் கறிவுறுத்தருண்மிகப்புரிவான், வந்துதோன்றினனோர்மழவி டைமீதில்வார்ந்தசெம்மகுடவேணியனே. (ருரு)

வானதிமுடித்தவானவன்விடைமேல் வந்தெதிர்தோன்
றமாலயன்செங், தேனலம்பியவஞ்சிறையளிமுரலுஞ்செம்ம
லர்க்கழறொழுதெந்தா, யானகன்மைந்தரளித்தனர்தமக்கேய
வமதிபுரியினுமன்னோர், தானருள்வதுபோற்றமியர்கட்களித்
ததண்ணளியாதெனவுரைக்கேம். (௫௬)

என்னலுமிரங்கியெம்பிரான்மகிழ்கூர்ந்திந்திராதியர்தமை
யின்னே, நின்னரும்பண்பானிலைபெறத்தருதிநீயெனநிகழ்த்
திடவீரன், ஒன்மயனருளாற்றேவரைத்காலுந்திருமலர்த்தி
சைமுகப்பெருமான், றன்னிகர்தலைவவென்றொருசேயைத்
தந்தருளென்றுநேர்ந்திரந்தான். (௫௭)

இரந்திடுமமையத்தெம்பிரான் வீரவின்னதும்புரிதிநீயெ
ன்றுக், கரந்தலைக்கொண்டுவணங்கியேபானுகம்பனைத்தக்க
னற்கவந்தம், விரைந்துநீகொணர்தியென்னலுமந்தமேதகுபூத
மாங்குப்பப், புரிந்தவவ்வேள்விக்கரிந்தமைத்தலையைப்பொ
ருத்தினனெழுகெனவுரைத்தான், (௫௮)

உரைத்தலுமுயிர் பெற்றுறங்கினன்போல வெர்ல்லையி
னெழுந்தளநாணித், தரைத்தலமதனைநோக்கிமுன்னின்றத
கர்முகத்தக்கனைமேரு, வரைத்தனுவெடுத்துமால்கணைதொ
டுத்துமருவியதிரிபுரமெரியச், சிரித்தருள்புரிந்தசிவபிரானுன
துசிந்தனைதியங்கலையென்றான். (௫௯)

என்றலுங்கமலத்தெழில் கவர்கழற்கீழிரந்திரந்துருகிநி
ன்றிறைஞ்சி, யொன்றுநின்றன்மையுணர்ந்திடாதயன்மாலு
ம்பனைசம்பியேசம்ப, மன்றல்செய்கின்றமருகனென்றுன்னைம
னனிடைமதித்தனனந்தோ, பின்றிகழ்சடிலப்பெருமகாயடி
யேன்பிழைத்ததுபொறுத்தருளென்றான். (௬௦)

ஆங்கதுகாலையரியயன்முதலோர்க் கங்கணனருள்செய்
வானெம்மை, யிங்குநீரிகழ்ந்ததிசைக்கின்முன்விதியேயிரங்
கலிர்நீவிர்நும்பதத்திற், பாங்குடன்படர்மினென்றுரைபகர்ந்
துபரிவினல்வீரனோடருளாற், றீங்கறுமன்பர்சிந்தையிற்றிக
ழுந்தென்றிருக்கயிலையிற்சென்றான். (௬௧)

சென்றபினந்தத்திறல்கெழுவீரன் சேவடிதொழுதெதிர்நிற்ப, வென்றுநீமுடிவினின்பதத்திருத்தியென்றுவான்முகடு தோய்பதத்தில், வென்றிகொள்வீரமேவுதியென்னவிடைகொடுத்தருளிநீள்வெள்ளிக், குன்றினையொருவிக்குலவுநல்லிமயக்குன்றில்யோகுற்றனன்குழகன். (சூஉ)

சந்தநமின்னுஞ் சதுர்மறைதேடித் தான்றடவிடத்தனிசென்று, மந்தரமலைபோல்வளரதன்பாங்கர்மங்கைவந்தவதரித்திடவு, மெந்தையோகத்தினெண்ணருங்காலமின்பமாத்திருவருள்செயவு, மந்தநல்லிமவான்முன்னைநாட்புரிந்தவருந்தவம்யாதெனவுரைப்பாம், (சூங)

எம்பிரான்யோகுற்றிருப்பவையாண்டிலெண்ணரும்புவனமீன்றருள்பூங், கொம்பினைநோக்கிக்குறித்துநல்லிமவான்கோதிலாவென்குலக்கொழுந்தே, யும்பர்கோனகியுயிர்க்குயிராகியோங்குலகுக்கெலாமொன்றாந், தம்பிரான்றனக்குத்தகும்பணிவிடைநீசந்ததம்புரியெனவிடுத்தான். (சூச)

அப்பரிசலகிலண்டமீன்றெடுத்தவருண்படக்கொடியகண்டிதமா, யொப்பிலாதுயர்ந்தவும்பர்தம்பிரானுக்குறுந்தொழிலுழந்திடுநாளின், மைப்புயல்வண்ணமாயவன்மலரோன்வாசவன்வானவரேனைச், செப்பருமுனிவர்திரட்சியின்வதுவைசெய்துடன்கயிலையிற்சேர்ந்தான். (சூரு)

வேறு.

தக்கன்வேள்விதகர்த்திடுமிக்கதைதக்கஞானதவத்துறுமாதவீர், மிக்கசீரின்விருப்பினுனைக்குநர்மெய்ச்சொன்மேவுசெவிக்கொளுமேன்மையோர், திக்கினேடுலகுக்கரசாகியேசித்தநீடுகளிப்புடன்மேவியே, தொக்கபோகசுவர்க்கமதுற்றுயர்சுத்தஞானசுகத்தினிலாழ்வரே. (சூசு)

தக்கன்வேள்வியழித்த சருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள் - கசுூங.

பதின்மூன்றாவது.

தக்கன்வேள்வியழித்தசருக்கச்சுருக்கவசனம்.

தக்கன், சிவபிரானை விலக்கித் திருமால் முதலிய தேவர்கள் சூழ ஒரு வேள்விசெய்யத் தொடங்கினன். அதனைக்கண்ணுற்ற நாரதமுனிவர் திருக்கைலாசஞ் சேர்ந்து சிவபிரான் மாட்டு விண்ணப்பஞ் செய்தபொழுது, உமாதேவியார் எழுந்து சிவபிரான் திருவுள முணராமல்விடை பெற்றுத் தக்கன் யாகசாலையை அடைந்தனர். உடனே தக்கன் கோபித்துப் பலவாறுகச் சிவபிரானை நிந்தனைசெய்து உமாவி "நீகயிலைமலைக்குச்செல்லலாம்" என்றனன். அதற்கு உமாதேவியார் தக்கனை நோக்கிப் பெரிதுஞ் சினங்கொண்டு, ஹே தக்கனே "நீசர்வ லோகைக நாயகராகிய சிவபிரானை நிந்தனைசெய்தமையால் நீசெய்யும் வேள்வியும் அழிந்து உன்னுடைய தலையும் ஒழிந்திடுக" என்று சபித்து, மூலாக்கினியை எழுப்பி அதிலே முழுகி, முன்னமே சிவபிரானைநோக்கி உமாதேவியார் தன்மாட்டுப் புத்திரியாராக அவதரிக்கும் வண்ணம் எண்ணித் தவம்பண்ணிய இமய மலையரையன் வளர்க்கும் யாககுண்டத்திலேஅவதரித்தருளினர். பின்னர்த்தக்கன்யாகசாலையிலே நிகழ்ந்தவைகளைத் திருநந்தி தேவர் முதலியோர் முகமாக வுணர்ந்த சிவபிரான் வீரபத்திரக் கடவுளை நெற்றிக்கண்ணினின்றும் படைத்து, ஹே வீரனே "நம்மைநிந்தித்துத் தக்கன் யாகஞ்செய்கின்றான், நீ அவனை அடைந்து 'அவியைக்கொடு'என்றுகேள். கொடுத்தால் வாங்கிக்கொண்டு இங்கே வா, கொடாவிட்டால், அவன்சிரத்தினை அறுத்து வேள்வியையும் அழித்துவிடு, யாமும் வருவோம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே வீரபத்திரக்கடவுள் சிவபிரான் மாட்டு விடை பெற்று, தக்கனை யடைந்து, ஹே தக்கனே "சிவபிரானுக்குரிய அவிப்பாகத்தைக் கொடு" என்றனர். அதற்குத் தக்கன் "அப்பித்தனுக்கு அவிப்பாகங்கொடேன். நீசெல்" என்றபொழுது, வீரபத்திரக்கடவுள், யாகசாலையிலிருந்த விஷ்ணுவைத் தண்டாயுதத்தினாலே அடித்தார். உதிரத்தை உமிழும்படி பிரமன்றலையிற்குட்டினர். குயில்வடிவங்கொண்டு ஓடின இந்திரனை வாட்படையினால் வெட்டினர். கூற்றுவனைக்கொன்றார். சூரியன்பல்லைத் தகர்த்தார். சந்திரனைப் பாதத்தாலேதேய்த்தார். சரசுவதி மூக்கையும் முலையையும் அரிந்தார். அக்கினியின் கையையும் நாவையுஞ்சேதித்தார். தக்கன்மனைவி மசியை அரிந்தார். தக்கன்றலையைஅறுத்து யாககுண்டத்திலேபோட்டார். மற்றவர்களையும் தக்கபடிதண்டித்தார். அப்பொழுது சிவபிரா

னும் இடபாரூடராய் எழுந்தருளினர். உடனே திருமால்வணங்கிப் பிரார்த்தித்தமையால், வீரபத்திரக்கடவுள் முகமாகத் தேவர்களைப் பிழைப்பித்தபின், பிரமாவணங்கிக் கேட்டுக்கொண்டபடி, ஆட்டின்றலையைத் தக்கனுக்கமைத்து எழுப்பினர். பின்னர்ச் சிவபிரான்யோகியாய் அமர்ந்து, இமயமலைக்கு எழுந்தருளிப் பார்வதிதேவியாரைமணந்து திருக்கயிலாசமலைசேர்ந்து யோகியாய் எழுந்தருளியிருந்தார். இப்படலத்தை ஓதுவோருங் கேட்போரும் நற்கதிபெறுவார்.

திருச்சிற்றம்பலம்.

பதினாலாவது.
உமைவருசருக்கம்.

பூங்குழலுமையின் பூவணந்தன்னிற்பொருந்தி நற்றவஞ்செயுமாறு, மோங்கியகாதலுவந்திடத்தானமூத்தமர்க்குதவிடுமாறுந், தாங்கரும்வெகுளிதணந்திடுஞானச்சவுனககேளெனவருளிற், றாங்கியேமிகுவெந்தீங்கெறிந்தோங்குஞ்சூதமாமுனிவரன்சொல்வான். (க)

இம்முறைமகிழ்கூர்ந்திமயமால்வரையினின்பகற்கடிமணம்புணர்ந்து, செம்மையினோங்குந்திருக்கயிலாயச்சிலம்பினிற்சேர்ந்தபினோர்நாட், கொம்மைசேர்வெம்மைக்கோங்கரும்பெனவேகுவிந்தபொற்குங்குமக்கொங்கை, வெம்முனைமிளிர்வேல்விளங்கியநயனமெல்லியற்கெம்பிரான்விளம்பும்.

தழுவுதற்கெட்டாத்தபனியவரைசேர் சந்தனக்குங்குமக்கொங்கைக், குழைகிழித்தோடிக்கொடுஞ்சமர்விளைக்குங்கூரிலைவேனெடுங்கண்ணாய், விழையுநீயாமுன்விளம்புரைமறுத்துமிக்கதக்கன்வயிற்சென்ற, பிழைதனையொழிவான்வழிமதியென்னுப்பேசினன்பிறையணிபெருமான், (௩)

பார்தனின்மேலாம் பரதகண்டத்திற்பாண்டி நன்னாட்டினிற்பாந்த,. வார்புனைச்சங்கூர்வைகைசூழ்கிடந்தமாடநீண்மதுரைமூதூர்சேர், பூர்வதிக்கதன்கட்புகலும்யோசனையிற்பொங்கர்சூழ்கற்பகவனத்தி, லோர்தருவரார்த்தேயுறுதவமுனூற்றிலோர்சிவலிங்கமங்குண்டாம். (௪)

அத்தருமூலமர்ந்தலிங்கத்தினழகுடன்பழமறைவிதியி
ற், பத்திமிக்குயர்ந்தபூசனைபயிற்றிப்பண்டைநாளண்டர்கண்
டறியாச், சுத்தமாமந்தத்தொல்லிலிங்கத்திற்றோன்றியர்நினக்
கருள்புரிகுஞ், சித்திரபடம்போற்றிகழ்புறவடிமேற்செஞ்சிலம்
பரற்றுசிறடியாய். (௫)

என்றருள்புரிந்தேபேகெனவடியேற்கிப்பரி சிருந்தவா
றென்றுக், கொன்றையஞ்சடிலக்குழகனையையுட்கொண்டு
தாழ்ந்துடன்விடைகொண்டு, தூன்றியபாரிசாதமாவனத்திற்
றோன்றுபல்லுலகெலாமீன்றந், தன்றனித்துணையாகின்றமெ
ய்ஞ்ஞானசங்கரியடைந்தனளன்றே. (௬)

தேவதேவன்றனருளினாலோர்கற் றேவதாரத்தினைப்ப
தித்து, மூவுல்கேத்தமுறைமையின்வளர்ப்பாண்முண்டகச்
குடகக்கரத்தாற், கூவலின்வடிவங்கொண்டிடத்தேவிகுண்ட
மென்றொருபெருந்திர்த்த, மேவொரைந்தெனுந்தூரத்தினிற்
கண்டாளீசனுக்குத்தரதிசைப்பால். (௭)

கூறிடுந்தேவிகுண்டதீரத்தின்குணதிசை குழித்திடுமெ
ல்லை, யாறுவெம்பகையுமறவெறிந்துதறியரும்பன்னசாலைசெ
ய்ததன்கட், சிறுகாலருந்திச்சிலபகலதுவுஞ்சிறிதருந்தாதுதே
வாண்டி, னூறுமன்புடனோராயிரவருடமொண்டொடியுறு
தவமுழந்தாள். (௮)

அப்டரிசந்தவருந்தவமுழந்தேயாயிரமாண்டுமாண்டதற்
பி, னொப்பரிதாயவுமையவள்வளர்த்தவோங்குமந்தாரமூலத்
தில், பைப்பெரும்பாந்தட்பாதலத்துதித்துப்படியினைக்கீண்டு
மேன்முளைத்துத், திப்பியமாகத்திருவருளுருவாய்ச்சேர்ந்த
சோதிகழ்சிவலிங்கம். (௯)

வாலுகமயமாய்வானுறநிமிர்ந்துமன்னியசோதியாய்மே
லா, யோலிடுமறைகளுரைத்திடுமிலிங்கவுற்பவந்தனதுகற்பக
த்தின், மூலநேர்வந்துமுளைத்தலுங்கண்டுமுழங்கழன்மெழு
கெனவுருக, ஞாலமேல்விழுந்துபணிந்தெழுந்தயர்ந்துஞான
நாயகியிதுநவில்வாள். (௧௦)

ஆபிரந்தேவாயனந்தனிலடியேனருவினைப் பயத்தினுலழியாச், சேயதாளென துசென்னிமேற்பதித்துன்றிருவருள்புரிந்திடகினைத்தோ, மாயிருஞாலந்தன்னினீமுளைத்துவந்தெழுந்தருளினையென்னு, நீயருள்செனக்கண்ணீர்முலைமுன்பினிறைந்திடநிமலனுக்குரைத்தே. (௧௧)

மருவலங்காரவல்லிசொல்லருஞ்சிர் மன்னியமாதவந்தன்னும், பரவுமாசாரம்படைத்தபண்பரனுற்பார்த்தலங்களைத்துறதோடம், பொருவருபூசைமறைமுறைபுரிந்துபோற்றிசெய்தன்பினுன்மாற்றி, யருளுடன்முன்போலானந்தகானத்தான்செருழில்புரிந்தமர்ந்திருந்தாள். (௧௨)

வன்னமாமணிகண்மதுவுணும்வட்டமட்டருறுயர்ந்தன்முட்டாட், பொன்னிதழ்க்கமலப்பொகுட்டில்வீற்றிருக்கும்பொறிசிறப்புயல்வணமூர்த்தி, யன்னவாகனனையாதிவானவர்களருந்தவராயிரங்கதிரோன், பின்னுமவ்விலிங்கந்தன்னின்மெய்யன்பின்பெருக்கெழவேயருச்சித்தார். (௧௩)

இந்தநல்லிலிங்கத்தியல்பினைநாடியெண்ணருமாதவர்கண்ணி, யந்தநற்பாரிசாதமூலத்தினணைந்திடுமுகந்தொறுமாங்காங், கெந்தைதான்மலரையிதயநாண்மலரிலிருத்தியேவேறுவேருகத், தந்தருளிலிங்கத்தாபனஞ்செய்துசந்ததம்வழிபடலுற்ருர். (௧௪)

வேறு.

எத்தலமும்புகழித்தலமேவியவியல்பாலே
பத்திகொள்பாரிசாதநிழற்கட்பரமேசன்
சித்திரமேவியசேவடிகண்டுதினந்தோறு
முத்தியடைந்திடமோனமடைந்தனரொருசாரார். (௧௫)

வெங்கனலாகுதிவேள்வி விரும்பினரொருசாரார்
தங்கியயோகசமாதியடைந்தனரொருசாரார்
பொங்குதவம்புரிபொற்பின்விளங்கினரொருசாரா
ரங்கணரன்றனருச்சனைசெய்குநரொருசாரார். (௧௬)

பரிசனர்பலசெருழில்பரிவுகொடடைகுநரொருசாரார்
குருவினைவழிபடவகமகிழ்கூருநரொருசாரா

ருளொடுசதுர்மறையச்சமதிந்தனரொருசாரார்
மருவியநன்னியமத்தொழின்மன்னினரொருசாரார். (௪௭)

விரவியவைம்புலவேடரைவெல்குநரொருசாரார்
திருவருளோடுதிருந்தவிருந்தனரொருசாரா
ரரியநலாச்சிரமத்தினடைந்தனரொருசாரார்
மருவியதிருநந்தனவனம்வைக்குநரொருசாரார். (௪௮)

இன்னவைபோல்வனவெண்ணிலருந்தவமேய்வுற்றே
யன்னதலந்தனிலச்சிவலிங்கமருச்சித்துப்
பன்னரும்வேதபராயணர்பூசைசெய்திக்காற்றித்
தன்னிகர்பாரிசாதவனத்திற்றுன்னேற்றார். (௪௯)

இத்தருநீழலின்யோகமடைந்தவரொவரேனு
மத்தனைநாடியுளூற்றனர்தம்பலனறையுங்கா
னித்தமதாகியநின்மலனறிகுவனீள்பார்மே
லுத்தமநற்றவர்தம்மிலுரைத்திடவற்றாமே. (௫௦)

சூடியவெண்பிறைவேணிசுயம்பிரகாசித்தே
விடருள்பதிகளின்மிக்குவிளங்குமிமெய்த்தானங்
கூடியபேரறிவாளர்கொடுத்தருள்கூர்தான
நீடவிலெள்ளளவாகிலுமேருவைநிகராமால். (௫௧)

அன்னியதானமதன்கணினின்றானருளாலே
மன்றலும்விருப்பின்வெறுப்பினினுதலிவண்டானத்
துன்னெர்கணப்பொழுதேனுமுறைந்தனருலகுண்டோ
வின்னமுமேவரிதாயபதத்தினிலேய்வாரே. (௫௨)

என்பதொராயமுமின்றஃதன்றியுமின்பாலே
மன்பதைநாளுமகிழ்ந்துவழுத்துமிவண்டானந்
தன்கணடைந்தொருசாகினியின்கறிதானல்கி
னன்புடனறுசுவையுண்டிசெரும்பலமதுவுண்டாம். (௫௩)

முன்னொருவன்கதையுண்டதுசவுனகமுனிகேண்மோ
பன்னுதம்யாமிப்பாற்கரநகரப்பதியின்கண்
மன்னுமொரந்தணனன்னியமத்தொழில்வழுவாதோ
வின்னருளொடுநல்லிசைமறைபாடிடவியனுவான். (௫௪)

நானிலமும்புகழ்நாதனருச்சனைநன்காற்றி
யூனுடறன்னையொறுத்துறுசாகினியுண்டென்று
மீனமில்யோகுற்ருென்றுமிரண்டுமின்ருகி
வானுயர்பாரீசாதவனத்தினின்வாழ்வானல். (உரு)

உற்றவனங்கனுறைந்திடுநாடனினோர்நாளிற்
சுற்றுதிரைக்கடல்சென்றுகுடித்தெழுசூன்மேக
மற்றவனஞ்சவிடித்துமுழங்கிருண்மழைதூங்கப்
பொற்புறுதன்பனசாலையில்வந்துபுகுந்தற்ருன். (உசு)

ஆயிடையங்கணனைத்தனருத்தியினடிபேணி
நேயமோடுற்றனனீடிருடேங்கிடுகிசியின்கண்
மேயதொர்பஃதுறுகன்னலினோர்விப்பிரனங்கட்
டீயகொடும்பசியோடுநனைந்தியங்குற்றே. (உஎ)

மைம்முகின்மாமழையால்வழிநாடியுண்மகிழ்வாயொண்
மெய்ம்மயிர்வந்துபொடிப்பநடுங்கிவிளித்திட்டா
னிம்மெனவேகியிறைஞ்சிவிளக்கினனிருபாதம்
பொம்மலின்மிகுபனசாலைகொடேபுரிமனைசேர்த்தி. (உஅ)

இருத்தியருக்கியமாதிகொடுத்தங்கியல்பாலே
யுரைக்கரிதாமுகமன்மிகவங்கனுரைத்துண்பா
னருத்தியின்முன்புசமைத்ததினோர்பங்கடகீந்து
விருப்பினருத்தினன்வேதியனும்மகிழ்மேவுற்ருன். (உகூ)

வேதியன்மகிழ்வுறவிரிசடையோன்மகிழ்மிகவுற்ரு
ேதுவர்மகிழ்வுறவுலகிடமெங்குமுவப்புற்ற
தாதலினித்தலமேன்மையினுலன்னியதானத்
தேதமிலாவிருகோடியிலிங்கிகளிடர்தீர. (ஙo)

அறுசுவையுடனமுதவினரவர்பலனதுவுண்டா
முறுமிலதருநதியுளமகிழ்நரவுதவ்நலாலே
யறுசுவையுடனமருமறைபவருணவருள்வோர்தாம்
பெறுபலனிதுவெனவெவருநாசெய்குவர்பேசுங்கால். (ஙக)

அருமறையவனுணவடகினையருளியவறவோனுக்
கொருமறைமயிலுதவுவதெதுவெனவெதிருளமோர்ந்து

புரிகுழலுமையொடுபொருமடல்விடைவருமகன்மேல்
வருபவமறும்வகையருளினனொருதனிவரமன்னே. (௩௨)

அடசதுதனோநன்குடன்மிசைதருமந்தணனுக்கு
முடலுயிர்விடுபொழுதும்பரினுபர்கயிலாயத்தின்
விடநகர்தருவெள்விடைதருகொடியவன்மெய்யன்பாற்
றிடமுறவேதிகழ்மறைமுடிதனையுபதேசித்தான். (௩௩)

கோடுதிகழ்ந்தகுழந்தைமதிச்சடைகொண்டென்று
மாடுமரன்றிகழ்பூவணநகரமதன்பாலே
பீடுறுதானமளிப்பவரங்கதுபெற்றோர்க
ணீடுமரும்பலகோடிநிறுத்திடினிகராகும். (௩௪)

அன்னியதானமதன்கணளிக்குமருந்தான
மன்னுபலங்கள்வழங்குநர்கட்கவைவந்தெய்து
மின்னருளாலஃதேற்குநர்க்கென்றமிரும்பாவந்
தன்னிகர்சவுனகசத்தியமாமிதுசாற்றுங்கால். (௩௫)

மெய்ப்படுதானமளித்திடுமந்தநன்மேலோர்கட்
கொப்பறுநற்பலனுண்டெனவோதுதலேற்றோர்கள்
செப்பருநிரகத்திடைசேர்குவரென்னுஞ்சொ
லிப்பதியின்கணிதில்லையிரண்டுமிணையாமால், (௩௬)

இத்தலமெங்கணுமித்தலநேர்சொலவின்றாகு
மித்தலநற்குமையுந்தவமுற்றவிருந்தான
மித்தலமேயெனிலித்தலமன்னுமுயிர்க்கெல்லா
மித்தலநன்கெனவுரைசெயவேண்டுவதின்றாமால். (௩௭)

புரிகுழலுமைதிகழ்பூவணம்வந்துபொருந்துஞ்சி
றுரைதருபிரமகைவர்த்தபுராணத்தொன்றான
மருவியவெண்பஃதாகவழுத்துநலத்தியாய
மருளுறுசவுனகமுனிவவருந்தவறவிர்காள். (௩௮)

வேறு.

சிமயமாலிமயாசலமேவியசிவமனோன்மணிசேர்கவுமாரிதேர், சமயநாயகிசௌரிசகோதரிசகலகாரணநாரணியாயிதழ்ச், கமலலோசனிநாதையையோதுநர்கருதியேசெவிவாய்

வழியோர்குவோ, ரமலநாயகனூர்பதமாகியவரியதாமரைநீழலி
ல்வாழ்வரே. (௩.கூ)

உமைவருசருக்க முற்றியது
ஆகச்செய்யுள் - கககூ௨.

பதினூலாவது.

உமைவருசருக்கச்சுருக்கவசனம்.

திருக்கைலாச மலையிலே, சிவபிரான் யோகமூர்த்தியாக எழுந்த ருளி யிருக்கும்பொழுது, ஒருதினத்திலே சிவபிரான் உமாதேவியாரை நோக்கி "நீ நம்முடைய கருத்தையுணராது தக்கன்மாட்டுச் சென்ற குற்றத்தைப் போக்கும்பொருட்டு, செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் கண்ணதாகிய திருப்பூவண க்ஷேத்திரஞ்சேர்ந்து, பாரிசாதவிருக்ஷம் வளர்த்து அதனடியிலே நீதவஞ்செய்தால், அங்கே ஒருமூலலிங்கம் தோன்றும், அதிலே நம்மைப்பூசித்தால் நாம்வெளிப்பட்டு அக்குற்றத்தைப் பற்றி உனக்கு அருள்புரிவோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அருளியவுடனே விடைபெற்று உமாதேவியார் திருப்பூவணஞ் சேர்ந்து பாரிசாததாருவளர்த்து அதனிழலிலே தவஞ்செய்துகொண்டிருந்தார். இருக்கும்போது, அம்மரத்தடியிலே ஒருசிவலிங்கம் தோன்றியது. அதனைக்கண்ணுற்று மகிழ்ந்து பூசித்துச் சிவபிரான் வார்த்தையைக்கடந்த தோஷத்தைமாற்றி, அங்கே யமர்ந்திருந்தார். மற்றும் பலமுனிவர்களும் அச்சிவலிங்கத்தைப் பூசித்தார்கள். அச்சிவலிங்கப் பெருமான் அமர்ந்தருளுநற்றிடமாகியபாற்கரபுரியிலே, சற்பாத்திரமாயுள்ளவர்கட்குத் திலமளவுதானஞ்செய்தால் அதுமேருவாகும். இந்த க்ஷேத்திரத்திலே,ஒருஅந்தணன்வேதமுதலியவைகளையுணர்ந்து, ஒழுக்கத்திலேவழுவாது, சிவார்ச்சனைசெய்து,உடவினைவெறுத்து, இலைக்கறி மாத்திரம்உண்டு, சிவயோகத்தில் அமர்ந்திருந்தான். இருக்கும்போது, ஒருநாள் இரவிலே, பெருமழை பெய்யுங்காலத்திலே, ஒருபிராமணன் பெரும்பசியோடு அச்சிவயோகி பர்ணசாலையை அடைந்தான். உடனே சிவயோகி எழுந்துவணங்கித் திருவடிகளைவிளக்கிப் பர்ணசாலையினுள்ளேசேர்த்து, உபசரித்துத் தனக்குப்பாகஞ்செய்திருந்த இலைக்கறியில் ஒருபங்கை உண்பித்தான். பிராமணனும் அவ்விலைக்கறியையுண்டு மகிழ்ந்தான். அதனாலே சிவபிரானும் திருவுளமகிழ்ந்தருளினர். அதனால் உலகமுழுவதுமகிழ்ந்தது. உடனேஇலைக்கறிபடைத்தஅந்தணன்முன்னே இடபாருடராகச் சிவபிரான் தோன்றிப் பிறவியறம் வண்ணம்

அருள்செய்தார். இலிங்கதியுண்ட அந்தணனுக்குமரணநேரிட்டபோது வேதாந்த முடிபாகிய சித்தாந்தத்தை உபதேசித்தார். இத்திருப்பூவண த்துக்கு ஒப்பான க்ஷேத்திரமில்லை. இப்படலத்தை ஓதுவோருங் கேட்போருஞ் சிவபிரான்திருவடி நிழலிலேவாழ்வர். இங்ஙனம் பிரம கைவர்த்த புராணத்திலே எழுபத்தொன்பதா மத்தியாயத்திலே கூறப் படும்.

திருச்சிற்றம்பலம்.

பதினைந்தாவது.

சுச்சோதிதீர்த்தயாத்திரைச்சருக்கம்.

படர்செழுந்தகட்டுப்பையவிழ்துத்திப்பாந்தளின்றலையி ன்மேற்படுத்த, வுடைதிரைக்கடற்சீருலகினின்மேலாயுரைத ருமித்தலப்பெருமை, தடைபடாதருளிற்சார்ந்திடுமின்பச்ச வுனகமுனிவகேளென்று, முடிவிலானந்தவாரிதிமூழ்குமுதிர் தவச்சூதன்பின்மொழிவான். (க)

திரைபுரள்கோதாவிரிதருதீரஞ்சேர்ந்திடும்பலவளனுர் ந்த, பொருவருபோகவதியெனவோங்கும்பொற்சுவருடுத்தநற் புரியி, லரசர்கணெருங்கியறுதினந்தத்தமருந்திறையளந்துவி ழ்ந்திறைஞ்சப், பரவருமகுடமணியொளிபரப்பும்பரிபுரமரு வியபதத்தான். (உ)

அருமறையாளர்க்கருச்சனையன்பினூற்றியேயறங்கள்கைக் கொண்டோன், பெருகுநற்றீர்த்தத்துறைதொறுந்தோய்ந்து பெருங்குலப்பிதிர்கடன்றீர்த்தோ, னிருநிதியதனையிரவலர்க் காற்றியிரப்பெனுமிருள்வலிதுறந்தோன், கருதரிதாயகலைப லதெரிந்துகடக்கருங்கலைக்கடல்கடந்தோன். (ங)

காமனிற்சிறந்தகட்டழகுடையோன்காமமாதியகளைக ட்டோன், றாமநீள்புயஞ்சேர்தரையுயிர்க்கெல்லாந்தாயினினூ ங்குதண்ணளியோன், சேமமாகியசெஞ்சுடர்வடிவேலாற்செற வ்வலியடக்கியதிறலோ, னேமியந்தடக்கைநீனிறச்செங்கணி ண்டமாலெனவருள்பூண்டோன். (ச)

செப்புமாயிரநற்றிருந்துமந்திரத்தாற்சிரித்துமுப்புரந்த னையெரித்த,முப்பரம்பொருளாமுக்கணெம்பிரானைமுப்பொழுதருச்சனைமுயல்வோன், பைப்பெரும்பாந்தட்டஃறலைசுமந்தபடியெலாங்கண்ணிமைபோல, வொப்பருமதியமுறழ்கவிகைக்கீழோங்குசெங்கோனடாத்துரவோன். (௫)

மதிவளர்ந்தொடுங்கிவந்திடுநாளின்மன்னியவட்டமிதன்னிற், றுதிதருமர்த்தோதயமகோதயத்திற்சொல்விதிடாதநன்னுளி, னுதயகாடனிலோராயிரமோரொன்றுளங்களிதூங்கவெஞ்ஞான்றுந், திதமுறுதானவிதமிகவளிக்குந்தேவவன்மாவெனும்பெயரோன். (௬)

அன்னதொல்புகழ்சேர்மன்னர்மன்னவனுக்கழிதலின்மூழுதலகேத்த, மன்னுசுச்சோதிமாநீதிமுகனல்வதானியன்றேவமித்திரக,னென்னுநன்மைந்தரீரிருவோருமிகலறுமகரமேலுயர்த்த, கன்னலஞ்சிலையிற்காபனேயென்னக்கண்ணகன்புவிபினண்ணினரால். (௭)

சாலவுங்கற்றோர்தங்கள்பாற்கலைகடாந்தெரிந்திருமுதுகுரவர், சிலநற்குரவன்செப்பியமாற்றந்தினந்தொறுந்திறம்பிடாத்திறத்தோர், ஞாலமேற்றிகிரியுருட்டிநன்களிப்பானரபதியெனவளர்ந்ததற்பின், மாலுமெய்த்திருவும்போலவர்க்கின்பமணம்புணர்வித்தனன்மன்னன் (௮)

மன்னவன்றமைந்தர்நால்வருக்கு மணம்புணர்வித்தபின்மரபான், முன்னவன்றனக்குமுழுதுலகளிப்பான்மொய்த்திடுமணிமுடிகவித்துப், பன்னுமந்திரிகடம்மை நம்புதல்வர்ப்டாதுகாத்திடுமெனட்பணித்துத், தன்னுடைமடவாடன்னுடும்பொதும்பர்தான்றிகழ்வனத்திடைச்சார்ந்தான். (௯)

சார்ந்துபூதங்கடகுபொறிதணந்து தடுப்பரும்வளியையுந்தடுத்து, நேர்ந்தமெய்ஞ்ஞானநிட்டையிற்கூடிநேயமோடுற்றுடனீத்தான். சேர்ந்திடுந்தருமசிலையுங்கணவன்செல்வழிக்கொடுசெலத்திருநன், கார்ந்திடுமுன்னோனுசரோடவர்க்காங்கந்தியக்கடன்முடித்தன்னல். (௧௦)

அதுபொழுதங்கணணைந்துமுன்னவனைப்பாரருள்வீணை
நாரதன்றான்,றுதிபலபுனைந்துசொல்லுவதுடையேன்றூயநற்
பாரெலாந்தோன்மேன், மதுமலர்மாலைமெய்ன்னவேசுமந்தம
ன்னநின்மனத்திடைமதித்தே, யிதுபுரிவைகுயேலாழிசூழுல
கத்தின்றனக்கிணையிலையென்றான். (கக)

இந்நகர்த்தலத்தினிருங்குலப்பிதிர்களியைந்தாங்கிற்கெதிர்
முகந்தரவே, வந்தாங்கவழங்குந்தில தருப்பணத்தைவாங்கிடின்
மற்றைபதலத்தை, முந்நூறக்காண்டியத்தலம்பிதிர்கண்மு
த்தினைடைந்திடும்புரமா, மந்நகற்றலமேயநம்பெருந்தலத்தி
னதிகவுத்தமதலமாயால். (கஉ)

அன்றியும்பிதிர்களைவருமேலாமநம்பெருங்கங்கையி
ன்கரையி, னென்றியமகிழ்ச்சியும்பினிதிருப்பருணைக்குமெட்
டருப்பனமதனை,மன்றவப்பிதிர்கள்வளங்கைகயில்வழங்கின்ம
ற்றையர்நற்றதிபடைவ, சென்றதையானிங்கியம்பவேண்டின்
றேயில்கடிக்கிலங்கியசீவலோய். (கங)

ஆதலாலிந்தவோதநீர்ஞாலத்தருங்குலப்பிதிர்கள்யாவரு
மே, காதலிவினைந்துதிலதருப்பணத்தைக்கைக்கொளும்பதி
யைநீகருத்தின், மேதகக்காண்டிபென்றுநன்மகதிவீணைநாரத
னியம்பிடலும், பூதலமன்னன்பொருவருந்தவத்துப்புரோகி
தற்கின்னனபுகல்வான். (கச)

ஆரழல்வளர்க்குமந்தணர்நுந்தமப்புபப்பாதநண்டுக
ளாற், பேர்பெறுமெமதுபெருங்குலத்தோர்கள்பெருங்கதி
பெற்றனரதனு, லோரினத்தகளுக்குரியம்பாநீவிருகக்தருள்
புரிகுதிரென்னு, நாரதற்பணிந்துநற்றவத்தலைவனுளிலவேக்
தனுநகுணைப்பான். (கரு)

தொடுகடலுலகிற்றன்றிருவுருவஞ்சுடரவன்றொல்குலத்
தோன்றல், வடிவறுசிறப்பின்மதித்தாக்கங்கைமாநதியாகிய
தீர்த்தத், தடைவினிற்சென்றேயாடுதியாயினருத்தியினாரத
னுரைத்த, படிநினக்குண்டாய்பகர்குவமின்னும்படியையோ
ரடியினுளளந்தோய். (கசு)

கடஞ்சொரிகடாக்கவுளுடைக்கறைக்காற்கசரததுர
கமாசேனை, மடந்தையரங்கிவளர்த்திடு மறையோர்மன்னுமா
ணுக்கர்பாங்காகத், தொடர்ந்துபின்செல்லத்தூமணிகனகஞ்
சுடர்விடுமாளிகைக்கொண்டு, படர்ந்திடுசென்றுப்படிவன்
ருன்பகர்ந்தபான்மையிற்பார்த்திவன்படர்ந்தான். (௧௭)

வேறு.

திக்குலகெலாம்பரவுதீர்த்தமதின்மேலாய்த்தேசுபெறு
கின்றநல்ராசமாய்விறி, மிக்கபிரயாகையினின்மெய்முனிவ
ரோடும்வேந்தர்தொழும்வேந்தன்மகிழ்வோங்குபிதிர்கணமு,
முக்கணிமலக்கடவுள் முண்டகமலர்த்தாண்முத்திபெறவே
விரதமுண்டனமதாயே, தக்கபுகழ்சேர்திலநருப்பணமுதல்
கித்தண்புனல்படிந்துரியதானமுமளித்தே. (௧௮)

மன்னியவரித்துவாரந்திகழவந்திமாளவங்காகோலயாநில
கண்டம், தன்னிகரில்சோமேசுரஞ்சிலாதலநீள்சதுர்வேதவி
சங்கோமதிதீர்த்தவாரம், பன்னகேசம்பான்மைபகர்பர்ப்பரோ
சம்பகருமதுகண்டேசுரப்பரவருஞ்சீர், துன்னுமாரணியங்
கோமளமருவிநாளுஞ்சூருநலவுகின்றகௌமாரகாந்தாரம். ()

கதிரொழுகுநாககானம்பிமகானங்காசறுசெழுங்கவுசி
கம்புகழ்காளிங்க, மதனமகிழ்கூரவருள்பாராவதேசம்வான்
முகடுதொடவெழுசிலாசநாகஞ்சே, ரதிகநல்வராகமெய்த்துதி
யமர்கோகன்னமாத்திரியேசுரம்வேகதரிசனம்வருஞ்சீர், வித
மருவுமங்கிசாலாவனம் விளங்குமேவுமதுவாரணியமிக்கவட
கானம். (௨௦)

மாவுலவுசரவணேசுரமநவியோங்கும்வானர்தொடுஞ்
சுத்தவானந்தகானந், தேவர்தொழுதெழுநன்மரிசிவனபோ
ரெண்டிசைசென்றுபுகழ்கொண்டதிகழ்சங்கமேசந், காவில
ருண்மிகுபிராசாபத்தியசுரந் தலைமைபெறுமாவேணிதிரமி
ழ்கூரும், பூவுலகெலாம்பரவுபூய்புனஞ்சேரும்பூசுரர்கணேசை
முறுசிசயிலமம்மா. (௨௧)

சம்பராலயநீடருங்கதலிகானந்தருஞ்சீர்விருபாக்கங்
தருகோடியிச, மம்புவிதொழும்வசிட்டாச்சிரம மன்பரம

கயிலையீசுரமருட்காளகண்டம், வம்புலவுகின்றமாவனநகர
மேவான்வாளுற்றவளமிக்ககாளத்திமலைசே, லெம்பிரான்
மகிழ்தங் குபம்பாதியீசமிருளோடவருண்மேவுதிரிகூடவீசம்.

கருதரியவண்காஞ்சிநகர்கந்தமேவுகணகண்டவிசமிகுகட
லமுதகானம், பரவுமவிமுக்தநற்பாராவதேசம்பாசுறுகிருத்த
கங்கன்மாடகளரி, திருமேவிசோணுசலங்கோமுகேசந்தெ
ன்றமிழ்மணங்குலவுகின்றமுதுகுன்றங், குருமணிகொள்
கோபநப்பதம்விண்டுகிரியேகோலமதிமேலுலவுகின்றவிசுவே
சம். (௨௩)

விசதமிகுதில்லைவனமிக்கிலகுகின்றவேதனசலம்மெழி
ன்மேவுதிருவெண்கா, டிசைவயித்தியநாதமென்சாயையடவி
பேமுறுமின்பமருளாமிரவணஞ்சேர், வசையில்கல்யாண
மங்கலமகிழ்சிறந்தமருவுதிரிகோடீசமன்றிமாகேசந், திசைக
டொறமிசைசிறவுகோமுத்தியீசஞ் சித்திதருபூமீசமத்தியா
ர்ச்சுனமே. (௨௪)

பரவரியநாகநாதங்கும்பகோணம்பட்டீசமேவுசந்திரசே
கரஞ்சூழ், திரிசிராவெல்லையிறுவாயுறுதலஞ்சேர்தீர்த்தமவை
யாடியுடன்மூர்த்தியடிபேணிப், பெருகார்வமொடுதிலதருப்ப
ணமுநன்காற்போரதகாதலிற்பிதிர்கட்களித்தே, யருளாள
னங்கயற்கண்ணியொடமர்ந்தவாலவாயின்கண் மிகுமன்புட
னடைந்தான். (௨௫)

வேறு.

அடைந்ததன்பின்மிடைந்தளிசேரலர்ந்தசெந்தாமரைப்
பூவினழகுபூத்த, தடங்குடைந்துபடிந்தாடித்தக்கபிதிர்கட
னீத்துதழலிற்காய்ந்தே, யுடைந்தபைம்பொனணிசுமந்தவு
மையாளோடமையாருமிமையாமுக்கட், படர்ந்தசடைப்ப
ரஞ்சுடர்செம்பரிபுரப்பொற்பதங்கடமைப்பணிந்துபாங்கால்

ஏர்பெறுநற்றீர்த்தங்களியாவையுந்தோய்ந்தேய்ந்தபிதிர்
கடன்கழித்து, பேர்பெறுமத்தலங்கடொறும்பிரியாதபிரான்ற
னடிபேணியன்னோர், நேர்படவிலாமையினனிநழ்ந்துமுனிய

னைத்தமொழிவிநோதமென்னுத், தார்புனைந்ததடந்தோளான் ருமனைக்கண்ணீர்ததும்பத்தானங்குற்ருன். (உ௭)

அப்பரிசங்கரசர்பிரானமூங்குதலுமரனருளினங்கைதாங்குஞ், செப்பருந்தந்திரிவீணைத்திருமுனிவனன்பினெதிர்சேர்ந்தகாலை, யொப்பரியகடன்முகட்டி லுதயவாதபனெனவேயுலகிற்ருேன்றுந், தப்பறுமன்னவன்முனிவன்சரண்பணிந்து மகிழ்ந்துமுகஞ்சாம்பிநின்ருன். (உ௮)

நின்றிடலுநிருபன்முகமெதிர்நோக்கிவீணைமுனிநிகழ்த்துகின்ரு, னுன்றனதுதந்தையுவந்துனற்கரும்புண்ணியகன் மமுஞற்றலாலே, துன்றியசெஞ்சுடர்வேலோய்சொற்றரு மப்பலன்புசித்துத்தொலைத்தல்வேண்டு, மென்றதனுலெளிவந்திங்கின்பிருத்தியெதிர்முகந்தந்திலனைம்மா. (உ௯)

ஆதலினுலினியிரங்கேலாதபன்றன்குலத்துதித்தவரசர்கோவே, போதலுறுகாரணமொன்றுண்டதனையுரைத்திடுவமோர்தியிந்தக், கோதிலுயர்மதிற்கூடற்குணதிசையோசனையெல்லைகொண்டபாரி, சாதவனந்தனிலுலகந்தருள்சுந்தரிதவஞ்செய்தலமொன்றுண்டால். (௩௦)

அங்கணமர்கின்றசிவலிங்கமதோன்றரசகினதருங்குலத்துப், பொங்குகதிரோன்பூசைபுரிந்திடுபொற்பினதாகிப்போகமுத்தி,செங்கைகுவித்தெவரோனுந்தெரிசனஞ்செய்தளவிலருள்செய்வதாய்வெண்,சங்குலவும்வேகவதித்தடங்கரையின்றென்மேல்பாற்சார்ந்துவைகும். (௩௧)

அந்தமணற்றந்தசிவலிங்கமதற்காயபுகழ்வாயுதிக்கிற், சுந்தரமூன்றம்புதொடுதூரத்தில்ரவினெளிதுதைந்திலங்குஞ், சந்திரன்வந்தருச்சனைசெய் சந்திரலிங்கமதொன்றுதன்னேரின்றி, யிந்தவொருமூவுலகுமெஞ்ஞான்றுமினிதேத்தவிருக்குமாதோ. (௩௨)

அத்தலந்தானரன்றனக்குமருந்தவர்க்குமரும்பிதிர்களாயினோர்க்குஞ், சித்தமகிழ்தலமதனிற்சென்றடைந்துன்பிதிர்களுக்குத்திலோதகத்தைப், புத்தமுதத்தடம்பொருந்துபுன

லாடியளிக்கினெதிர்பொருந்திவாங்கி, முத்தியடைகுவாத
னுன்முயன்றிடுதியிஃதுண்மைமுழவுத்தோளாய், (௯௫)

மேதகுமிக்நாள்காறுமிக்ககருமத்தொடர்ச்சிமேவலா
லே, யோதிடுநின்னுற்பிதிர்களுறக்காண்டற்கரிதாகிற்றுழந்தக
ன்ம, மாதரவிற்பரிபாகமடைந்தமலமடைந்தவதனுலேயங்க
ண், டீதறுபூந்திருமடந்தைசெல்வனீயேயிஃதுதிண்ணமாதோ.

மலர்தலையிவ்வுலகத்துமைந்தரினின்னிகராகுமைந்தரின்
ருற், றலைமைபெறுகின்றந்தைதன்னைநிகர்மாந்தருமோசாற்றி
னின்ரு, னிலவிடவேநீவிருந்தாநீள்புகழினெடுதருமநிறு
வுநிரா, விலகுபருந்திருந்துசுவைத்தருந்துதசைந்திடுநெடுங்
கூரிலைகொள்வேலோய். (௯௬)

மதியுடனன்மாதவனைவழுத்திமன்வல்வினைநீங்குமதனி
லும்மைத், துதிகொடுபோற்றினர்யாருந்தொல்பவங்கடொலை
க்குவர்யாஞ்சொற்றவாற்றாற், கதிர்விடுபொற்கரபுரத்திற்கருது
திலோதகம்பிண்டஞ்சிராத்தநல்கிச், சதுர்மறையோரருச்ச
னையுந்தானதருமங்களுநீதயங்கச்செய்வாய், (௯௭)

மலங்கிடுநின்மலர்க்கண்ணீர்மாற்றிடவந்தனமிங்ஙன்வ
ல்லேவந்தத், தலந்தனிலேகுதியாமுந்தகுந்தீர்த்தத்துறைக
டொறுஞ்சார்துமென்ன, விலங்கையர்கோன்சிரமரிந்தவிரா
மனிரும்பழியொழியவிறைஞ்சுஞ்சேது, தலந்தனைநற்புண்ணி
யதீர்த்தம்மாடநாரதனுந்தணந்துபோனன். (௯௮)

நினைவரியபுகழ்திருபனிகழமுதகானமணிமகதிவீணை,
முனிவனுரைசெவிமடுத்துமுழுதுணர்மூவாயிரமாமுனிவரோ
டேந், தனதுபிதிர்கடன்கழித்துத்தங்குபலதானதருமங்கள்செ
ய்வான், புனிதமிகுந்திலங்கியபொற்புரிசைசூழ்பூவணத்திற்
பொருந்துகின்முன். (௯௯)

வேறு.

பேசுமிக்கபுனலதுமூழ்குசீர்பேர்கொளேட்டுறுபஃதுய
ர்காதைபீ,தோசைபெற்றவுலகினிலோதுவோரோதுசொற்கள்

செவிகொடுதேர்குவோர், நேசமுற்றபுதல்வர்கண்மேன்மை
யார்நீடுபத்திநிகழும்விவேகநேர், தேசுசுத்திபடைவர்பினீறில்
வான்சீர்மிகுத்தசிவகதிசேர்வரே. (கூக)

சுச்சோதிதீர்த்தயாத்திரைச்சருக்க முற்றியது.

(ஆகச்செய்யுள் கஉகூக.)

பதினைந்தாவது.

சுச்சோதிதீர்த்தயாத்திரைச்சருக்கச் சுருக்கவசனம்.

கோதாவிரி நதிக்கரையிலே, போகவதி நகரத்திலே, தேவவன் மாவென்னும் அரசன் ஒருவன் அரசாட்சிசெய்து கொண்டிருந்தான். அவனுக்குச் சுச்சோதி, நீதிமுகன், வதானியன், தேவமித்திரன் என்னும் பெயருள்ள நான்குபுத்திரர்கள் இருந்தார்கள். அந்நால்வருக்கும் விவாகஞ் செய்வித்து, மூத்தபுத்திரனாகிய சுச்சோதி என்பவனுக்கு முடிசூட்டி, அமைச்சர்களை அழைத்து, "நம்முடைய புத்திரனைப்பாதுகாத்து, அவன் ஆணைவழி ஒழுகுவீராக" என்று ஆஞ்ஞாபித்து அத்தேவவன்மாவென்பவன்தருமசீலையென்னும் மனைவியோடும்தவஞ் செய்யும் பொருட்டு வனத்தையடைந்து சிவயோகியாய் அமர்ந்து தேகவியோக முற்றான். மனைவியும் சிவபதமடைந்தாள், அவ்விருவருக்கும் சுச்சோதியென்பவன் சகோதரர்களோடுங்கூடி அந்தியேஷ்டியைமுடித்தான். முடித்தபின் நாரதமுனிவர் சுச்சோதியைச் சந்தித்துத்துதித்து, ஹேநீதிமன்னனே "நீசெய்யுந் திலதருப்பணத்தை நேரிலே பிதிர்கள்வந்து ஏற்றுக்கொள்வதற் கிடமாகியதே உத்தமக்ஷேத்திரமாம் அதனையடுத்துத் தருப்பணஞ்செய்வாய்" என்றுகூற, உடனே சுச்சோதிராசன் மகிழ்ந்து அக்கினிகர்ப்பன் என்னும் புரோகிதனை அழைத்து, முனிவர் அருளியதைச்சொல்லி, சேனைகள்சூழ அரசன் புறப்பட்டுப் பிரயாகைசேர்ந்து ஸ்நாநஞ்செய்து,பிதிர்களுக்குத் தர்ப்பணம்பண்ணித் தானங்கள்கொடுத்து, அரித்துவாரம் அவந்தி மாளவம் காகோலம் நீலகண்டம் முதலாகத் திரிகூடவீசம் ஈறுகவடதிசையிலுள்ள ஸ்தலங்களையும், காஞ்சிபுரமுதலாகத் தொண்டை நாட்டிலுள்ள ஸ்தலங்களையும், தில்லைவனமுதலாகச் சோழநாட்டிலுள்ள ஸ்தலங்களையும் அடைந்து தீர்த்தங்களாடிச் சிவபிரானைத் தரிசித்துப் பிதிர்

களைநோக்கித் திலதருப்பணஞ்செய்து, பாண்டிநாட்டிலே திருவாலவாய்சேர்ந்து, பொற்றாமரை வாவியிலேமூழ்கிப் பிதிர்தருப்பணஞ்செய்து ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுரரை வழிபட்டு அத்தலத்தே தங்கினான். ஒருதினம்அரசன், "நாரதமுனிவர்கூறிய வார்த்தைவிநோதமோ" என்று கருதி மனம்வருந்தி யிருக்கும்போது நாரதமுனிவர் சந்தித்து, இத்திருவாலவாய்க்குக் கீழைத்திசையிலேயுள்ள திருப்பூவணம், சிவபிரானுக்கும், முனிவர்களுக்கும், பிதிர்களுக்கும் திருவுளமகிழத்தக்க க்ஷேத்திரமானதால், அங்கேசென்று பிதிர்தருப்பணஞ் செய்வாயானால் அதனைப்பிதிர்கள் நேரேவந்தேற்று முத்தியடைவார்கள், என்றனர். அங்ஙனமே அரசன் திருப்பூவணஞ் சேர்ந்தான். இங்ஙனம் பிரமகைவர்த்தபுராணத்திலே எண்பதாமத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

பதினாறவது.

சுச்சோதிபிதிர்களை முத்தியடைவித்தசருக்கம்.

பொங்கர்தொறுமங்குறவழ்பொழில்மிகழும்பூவணத்திற் பொருந்திமன்னன், றங்குகருமங்கண்முதற்றானிழைத்தநியாவையுநீசாற்றுகென்ன, வெங்கொடுங்காமாதிகளையொறுத்தொழித்தசவுனகன்றான்வினவலோடுந், துங்கமறைவடித்தெடுத்த தூயவியாதனைநினைந்துசூதன்சொல்வான். (க)

கூடியநான்மறைவாணர்குலத்துதித்தகுருபரநீகுலவுகின்ற, கேடிலருங்கதைமேலாக்கிளத்திடுநன்புராணமிகுங்கேள்வியோய்நீ, வாடியடைகுநர்தமக்குமகிழ்ந்தளிக்கும்வள்ளலுநீபதனானிற்கு, நாடிலிணையின்றென்றுநரபதிசெய்கையைச்சுருக்கிநவில்வதானான். (உ)

சதுர்மறையோர்குரவருடன்றமிழ்மதுரைதணந்தேழ்பைம்புரவிபூட்டி, யுதயமால்வரைமுகட்டினோராழித்தேர்வெய்யோனுதிக்கும்வேலை, யிதயமதினொருமையுடனியல்வீணைநாரதன்றானியம்புமாற்றா, லதிர்கழற்காலரசர்பிரானரும்பாரிசாதவனத்தடைந்துமாதோ. (ங)

வேறு.

வண்டினந்துதையுமண்டலப்பொகுட்டுமலர்தருமணியொளிபரப்புங், குண்டநீர்ப்படிந்துகோதில்செம்பவளக்கோலமேனிச்சிவக்கொழுந்தைக், கண்டடிபணிந்துகருதரும்பிதிர்கள்கடன்கழித்தடைந்தவனோர்நாட், பண்டருவேதபாராயணரோம்பரிக்குநற்றொழிலின்முறைபுரிந்து. (ச)

வந்திடுமளவின்வானவர்பெருமான்மாபெருங்கோபுரவாயின், முந்தைநான்மறையுமுழுதொருங்குணர்ந்துமூவுலகேத்திடுநெறிசேர், சுந்தரநீறுதுதைந்தமெய்யழகுந்தூயவற்கலையுடையழகுந், தந்தகாலவனைக்கண்டவன்றாளிற்றடமணிமுடிபடத்தாழ்ந்தான். (ரு)

தாழ்ந்தெழுமன்னன்றன்னைநேர்நோக்கித்தவமுனியாசிகள்கூறி, வாழ்ந்தனைகொல்லோமன்னநீயென்னுவளம்பெறமாற்றநன்கறையப், போழ்ந்திடுமதியம்பொதிந்தபொற்சடிலப்பூவணமேவுமாரமுதைச், சூழ்ந்தமாதவர்கள்குழாங்கண்முன்றுதைந்துதுதித்திடத்தொழுதுகைகுவித்தான். (சா)

தொழுதகைதலைமேற்சுமப்பமெய்பொடிப்பத்துதித்திடுகின்றசொற்றருநாத், தழுதழுத்திடச்செந்தபனியப்பொருட்டுத்தாமரைக்கண்கணீரருவி,பொழிதரவுள்ளமுருகிடவன்பிற்பொருந்தியானந்தவாரிதியின்,முழுகிமெய்ஞ்ஞானவிழியினாற்கண்டுமூண்டெழுகாதலின்மீண்டே. (எ)

பாவின்வெண்டரளந்தனைத்திரைசுருட்டிப்பங்கெறிந்தேவிளையாடுஞ்,சிலமார்வைகைத்திகழ்புனலிடத்துஞ்சேர்ந்ததெள்ளமுததீர்த்தத்துஞ், சாலநீள்வான்றோய்சந்திரதடத்துஞ்சங்கரன்கோயிலினன்பாற், கோலவாளியிரண்டிட்டதோரொல்லைகொண்டமார்க்கண்டதீர்த்தத்தும். (அ)

கானமுந்தருமதானமும்புரிந்தநவிலுநல்லைந்தினங்காறு, மானபண்பாடியறுபதமூரன்றே யணிமுகைவிண்டிடவலர்த்தித், தேனிருந்துண்டுதேக்கிடுமிதழிச்சிகழிகைதிகழ்ந்துசெஞ்

சடில, வானவன்பூசைமறைமுறைநடாத்திவைகினன்வையக ங்காப்போன். (௯)

முறைமையினங்ஙனுறையுநாடோறுமொழியுமூவாயிர முனிவர்க், கறுசுவையடிசிலளித்துவான்மதியமருங்கலேயொ டுங்குநாட்டீர்த்தத், துறைதொறும்படிந்துதூயமாதவர்தந்து ணையடிதொழுதுயர்பிதிர்கள், பெறுதிலோதசமும்பிண்டமு மளிப்பான்பிஞ்ஞகன்பூசையும்பேணி. (௧௦)

மாமணிவரன்றிமறிதிரைகொழிக்குமருமலர்க்குருமணி வாவி, நாமவேலரசனண்ணுருவுணர்ந்தேகன்முநிகணத்தவர் நாகர், தேமலரலங்கற்றிண்மனுவேந்தர்சித்தர்விஞ்சையர்கள் கின்னரர்ச, ளேமுறுபிதிர்களெண்டிசாமுகத்தரியாவருமீண் டினரன்றே. (௧௧)

நாந்தகத்தடக்கைநரபதியந்தகன்புனன்மூழ்கியேயன் பாற்,சேர்ந்ததக்கிணபிமுகத்தனய்முன்னூற்றிகழிடம்பூண்டு நன்குசையி, னேய்ந்தமாமறையோரிசைத்திடுமாற்றாலிருந்து சங்கற்பநேர்புரிந்தாங், காய்ந்திடுதருப்பைதன்னிலாவாகித்த ருங்குலப்பிதிர்களையம்மா. (௧௨)

வழுவிலாச்சிறப்பின்மன்னியமரபின்வந்தருள்கின்றவெ ன்றந்தை, கழிபெருங்காதற்காளையானுகிற்கலைக்கடல்கடந்த னனுகின்,மொழிவருந்தவங்கண்முயன்றனனுகின்முனியுளா தவறிலனுகிற், பொழிதருங்காதற்பொருவிடைப்பாகன்பூச னைபுரிந்தனனுகில். (௧௩)

அரியகற்றீர்த்தத்துறைதொறுமன்பினடைந்தியான்ப டிந்தனனுகிற், றருமமுந்தவமுந்தானெருவடிவாந்தந்தைசொ ற்றவறிலனுகிற்,பிரிவரும்பிதிர்நன்பிதாமகன்பிதாவாம்பெரு ங்குலப்பிதிர்கள்யாவருமே, யிருநிலம்புகழவெட்டருப்பணங் கொண்டெதிர்முகமாகவேவேண்டும். (௧௪)

வேறு.

ஈங்கடைந்தேயாவருமேயெதிர்முகந்தந்தியானளித்தவி ரும்பிண்டத்தை, வாங்கியருந்தாதொழியின்வல்லேயிலாரு

யிர்துரப்பன்மன்றவாய்மை, நீங்கலருமனுகுலத்தினிந்திக்கப் பட்டேனாய்சேர்வனென்னு, வாங்கணைந்தோர்செவிநிறைப்ப வறைந்துதிலோதகமதனையவர்கட்கீந்தான். (கரு)

ஈந்திடுமவ்வேலைதனிலிருநிலவேந்தன்பிதிர்களின்புற் றேவான், றேய்ந்துயர்பொன்னுலகமுறுஞ்சுரர்வடிவங்கொ ண்டவன்முன்றோன்றியேனோர், தாந்தெரியாவகையடைந் துதக்ககரபாத்திரத்திற்றந்தயாவு, மாந்தரங்கமுடன்றேவராமு தருந்துமாபோலவருந்தினால். (கசா)

வேறு.

அந்தவேலையின்மன்னனரியபிதிர்கடம்மை
முந்துறவேகாண்டலுமேமுதிருங்காதன்மூண்டே
நந்தம்பிதிர்கள்காணநானன்குடையேனென்னுச்
சிந்தைமகிழ்ந்தாங்கன்னோர்செப்புமாசிபெற்றான். (களஎ)

பூணார்மைந்தர்தந்தபுதல்வர்சூழ்ந்துபோற்ற
வீணாள்படுதலன்றிவீடுவிசயத்தோடு
நீணாளுடன்வாழ்கென்னுநேர்ந்ததவமீந்தயன்மால்
காணாவரனல்லதிருங்கழற்சேவடியிற்கலந்தார் (கஅ)

இந்தத்தலமான்மியத்தினிறும்பூதுதனைவிறையோ
னந்தமற்றவறஞ்சேர்ந்தரியபுகழைநாட்டி
யுந்துங்காதற்பிதிர்கட்குயருங்கதிகன்குறவே
தக்கபுரமென்பதனைத்தாவில்விளக்கந்தந்தான் (ககூ)

வாவிதிகழ்பூவணத்துமாணிக்கம்மாமலைக்கு
மேவுசெம்பொன்கொடிக்கும்வேணவாவினீந்து
பூவலையந்தான்போற்றும்பொன்னனையானல்லருளாற்
றேவவன்மனருள்சேய்சிவன்முத்தனானான் (உ0)

ஆனமூவாயிரநல்லரியமுனிவரந்த
மானவேற்கைமன்னன்வண்மைகண்டுமிக்க
தானந்தன்னைநல்கத்தத்தம்பிதிர்கடுய்த்து
மோனஞானவின்பமுத்திதன்னிலுற்றார். (உக)

பன்னவரும்பராரைப்பாரிசாதவனத்தின்
வன்னமிகுநன்மணிப்பூண்மன்னன்றன்மைகாணூஉ
வுன்னவரியகாதலுள்ளம்பிடித்தாங்குந்தப்
பொன்னுலகத்தினும்பர்பூமழைமிகவேபொழிந்தார் (உஉ)

பண்ணுபாவமனைத்தும்பாறல்செய்வதாகிப்
புண்ணியமாய்மேலாகிப்பொருந்தும்புட்பகானத்
தண்ணனண்ணுகோயிற்கரியநிருதிதிசையிற்
றண்ணந்துளபமாயோன்றனக்குப்பச்சிமத்தில் (உங)

தாவில்புகழ்நற்றந்தைசகலவுலகும்பெறுவான்
றேவதேவனருளாற்றேவவன்மலிங்க
மோவின்மறையோர்தம்மாலொன்றையங்கேதாபித்
தாவதானதானமந்தமறையோர்க்குதவி. (உச)

கோடிசெம்பொனந்தக்குழகன்றனக்குங்கொடுத்தாங்
காடல்வயமாமன்னனருந்தவஞ்செய்தமர்காட்
டேடுங்கதிகணல்குந்தீர்த்தந்தோறும்படிந்து
மாடுநல்லவீணைவல்லமுனிவந்துற்றான் (உரு)

உற்றமுனிவனுரைப்பானுரைசெய்யிந்தப்பதியி
னற்றமறுநன்மகிமையறிந்தனைகொல்லென்னு
மற்றையங்கத்தலத்தின்வைகன்மூன்றுவைகிப்
பொற்பினேனுங்குங்கயிலைப்பூதரத்திற்போந்தான் (உசு)

அழிவில்புகழ்மன்னன்பினைதானையோடு
மெழுதாமறைதேர்மூவாயிரமாமுனிவரோத்த
மழையினகடுகிழிக்குமதில்சூழ்மாடநீடும்
பொழில்சேர்ந்தோங்கும்பொற்பிற்போகவதியிற்போந்தான்.

வேறு.

தாவிலத்தலத்திலெட்டருப்பணஞ்செய்து
தேவவன்மேசனைத்தெரிசனஞ்செய்வோர்
மேவுமெண்டலைவர்வான்முறைவிரும்பியே
யாவருந்தொழச்சிவபுரியினேறுவார். (உஅ)

பரவுபஞ்சாமிர்தம்பஞ்சகவ்விய
மருவியபலோதகமஞ்சனத்தினு
லரியபூவணேசனுக்காட்டுவோர்பலன்
கரியகண்டப்பிரான்கழறல்வேண்டுமோல் (உகூ)

ஆடல்செய்பூவணத்தானுக்கானெய்பாற்
பீடுறவோர்விளக்கேற்றும்பெற்றியோர்
தேடருங்கதியருள்சிவபுரத்தினிற்
கோடிநன்குலத்துடன்கூடிவாழ்வரால். (௩0)

நந்தனவனமணிமாலைநற்றுகி
லந்தனமாதியீசனுக்களித்துளோ
ருந்துசீர்க்கோடிநல்லுகமொரொன்றினுக்
கெந்தைசேர்கயிலையினினிதுவாழ்வரால் (௩க)

குழந்தைவெண்மதிச்சடைக்குழகனுக்குமுன்
பழிந்திடுமாலயந்தனையுண்டாக்குநர்க்
கெழுந்தவன்புடன்புதியற்றுயன்னதின்
வழங்கிடுமதிகநான்மடங்குபுண்ணியம். (௩உ)

தவலருந்தினவிழாத்தங்குந்திங்களி
னிவறலினெழுச்சிநன்கியற்றுவோரியாண்
டவர்மணித்தேர்விழாவணிநடத்துவோர்
சிவபிரானுடன்சிவபுரியிற்சேர்குவார். (௩௩)

உற்றவித்தலத்திடையுயிர்மெய்யொத்துறக்
கற்றுணர்கலைவலோர்கண்டமாத்திரை
பொற்புடன்பொருந்தினேர்புனிதமேனியாய்
நற்பெருங்கயிலையினண்ணிவாழ்வரே. (௩ச)

ஆயினோரணுவளவறையுமித்தலத்
தேயநான்மறையவர்க்கீந்தவப்பொருள்
சேயுயர்விசும்புதோய்சிகரபந்திகண்
மேயசெம்பொன்றிகழ்மேருவாகுமால். (௩ரு)

உறுமொர்கன்பிடியனமுதவினேரவண்
குறைவினன்மறைதெரிகோடியந்தணர்க்

கறுசுவையடிசிலன்னியதலங்களிற்
பெறவுவந்தருள்பலப்பேறுண்டாகுமால். (௩சா)

வேறு.

சதுர்முகக்கடவுளன்னசவுனகமுனிவவிந்தப்
பதிதனிற்றிலோதகஞ்செய்பான்மையோர்பலனையாமோ
துதிதரலரிதுமாதோசொற்றிடின்மன்றவாய்மை
மதிபொதிசடிலத்தெங்கள்வானவனறிவனன்றே. (௩எ)

புகலுநல்லின்பமிக்கபுண்ணியமளிப்பதாகி
நிகழ்தலம்புகழ்வதாகிநீள்பவத்துடைப்பதாகி
யகமகிழ்தரவெம்மானுக்கானந்தகானமென்றுந்
திகழ்வுறுநாமம்பெற்றித்திருநகர்சேர்ந்திலங்கும். (௩அ)

தகுந்திருமுனிவிர்காணுஞ்சந்நிதிதன்னில்யானு
மிகுந்திருவுடைமைபெற்றேன்மேலையோர்தம்முன்யாவர்
புகுந்துதாம்பொருந்தின்மிக்கபுண்ணியந்தன்னாலன்னோ
ரகந்தெளிந்தருளினீடமறிவினாலும்பராவார். (௩கூ)

வேறு.

சிருலாவுபிதிர்களுறுங்கதிசேருமாகதைசெப்புறுகிற்பவ, ரேருலாவு பொருட்பகர்கின்றவரீதுகாதி னிறைத்திடுமன்பி னோ, ரூர்கள்யாவுமொடுக்கிவிளைந்துவிணூடுலாவிடுமுப்புரம் வெந்திட, மூரன்முன்னம்விளைத்திடுமெம்பிரான்மோனஞான நன்முத்திபொருந்துவார். (சO)

சுச்சோதிபிதிர்களை முத்தியடைவித்தசருக்கமுற்றியது.
ஆகச் செய்யுள் கஉஎக.

பதினாறவது.

சுச்சோதிபிதிர்களை முத்தியடைவித்த சருக்கச்சுருக்கவசனம்.

நாரதமுனிவர் அருளியபடி திருப்பூவணஞ்சேர்ந்த சுச்சோதிராசன், மணிகன்னிகைத் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, சிவலிங்கப் பெருமானை வழிபட்டு வருநாளிலே, ஒருநாள், காலவமுனிவரைக்கண்

ணூற்று வணங்கி, அவரது ஆசிர்வாதம்பெற்று, வைகைநதிமுதலிய தீர்த்தங்களிலே அமாவாசியை தினத்திலே ஸ்நாநஞ்செய்து, தன்னோடும்வந்தமூவாயிர முநிவருக்கும் அறுசுவைக்கறியமுதுடன் திருவமுது செய்வித்து, திருப்பூவணேசருக்குப் பூஜைநடாத்தி, மணிகன்னிகைத் தீர்த்தத்தை அடைந்து ஸ்நாநஞ்செய்து, சங்கற்பம்பண்ணிக் கூர்ச்சத்திலே பிதிர்களை ஆவாகித்து, ''யான் என்னுடைய பிதாவிற்குப்பெரிதும் விருப்பமுடையபுத்திரனானால், வேதமுதலிய கலைகளை உள்ளபடி ஓதியுணர்ந்தவனானால், தவங்கள் செய்தவனானால், நாரதமுநிவர் அருளிய மொழிவழியே ஒழுகுகின்றவனானால், சிவார்ச்சனை அன்புடன் செய்தவனானால், சிவதீர்த்தங்களிலே சிரத்தையோடு ஸ்நாநஞ் செய்தவனானால், பிதாவார்த்தையிற் பிறழாதவனானால், என்னுடைய பிதிர், பிதாமகர், பிரபிதாமகர் அனைவரும் எனக்கெதிரிலேதோன்றி நான்கொடுக்குந் திலோதகத்தையும் பிண்டத்தையும் ஏற்றருளவேண்டும்; ஏற்றருளாவிடின், எனதுயிரை விட்டுவிடுவேன்.'' என்று அனைவர் செவியிலும்புகும்படி சொல்லித் திலோதகமும் பிண்டமுங் கொடுத்தபோது மற்றவர்களுக்குத் தோன்றாமல் அவ்வரசனுக்கு மாத்திரம் பிதிர்கள் அனைவரும் தேவவடிவங்கொண்டு எதிரிலேதோன்றிப் பிண்டத்தை உண்டு ஆசிர்வதித்து அரசனைமகிழ்வித்துச் சிவபிரான் திருவடிநிழலிற் சேர்ந்தார்கள். இக்காரணத்தாலே புட்பவனமானது பிதிர்முத்திபுரமென்னும் பெயர்பெற்றது. சிவபிரான் திருவருளினாலே சுச்சோதிராஜன் சீவன்முத்தனானான். மூவாயிர முநிவர்களும் பிதிர்கள்பொருட்டுத் தானஞ்செய்தமையால் அம்முநிவர்களுடைய பிதிர்களும் நற்கதிபெற்றனர். புட்பவனேசர் திருக்கோயிலுக்கு நிருதிதிக்கிலே, சுச்சோதிராஜன் தன்னுடைய பிதா தேவவன்மாவின் பெயராலே ஒருசிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தான். பின்பு அவ்வரசன் மூவாயிரமுநிவர்களோடு போகவதிநகரஞ் சேர்ந்தான். திருப்பூவணக்ஷேத்திரத்திலே பிதிர்களுக்குத் திலதர்ப்பணஞ் செய்வோர் அளவில்லாத பயன்பெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

பதினேழாவது

தீர்த்தச்சருக்கம்.

மறைநான்குமனங்கிடந்தவழுவிலருட்சவுனகவன்னக்
கலாபப், பொறிமயினின்றனவரதநடனமிடும்பொழினிகழும்

பூவணத்தி, னறைதருதீர்த்தங்கடமிலரும்பவநீங்கிடவாமோ ன்மியத்தின், முறைமைதனைமூவாறுபுராணமுனியுரைப்ப னெனமொழிவதானன். (க)

சிரார்ந்தகார்த்திகைநற்றிங்களுறுந்தினந்தன்னிற்சேர்மு ன்வாரத், தோராழித்தேர்வெய்யோனுதிப்பதன்முன்மணி குண்டத்துந்தித்தான, நேராகநின்றவன்மந்திரநவிற்றிமூழ்கு நர்தாமினைந்ததேய்ந்து,போரதபெரும்பவநோய்பெயர்ந்ததன் பின்சிவலோகம்பெறுவரன்றே. (உ)

வனசமலர்மாளிகையின்வண்டிருந்தின்னிசைபாடும் வண்டானஞ்சேர், தனைநிகரத்தடம்படிந்துதருங்கிருதமறை யவர்க்குத்தானஞ்செய்வோர், நினைவுதருநெஞ்சாலுநினைப் பருங்குன்மாதிவெந்நோய்நீங்கிவான்றோய், கனைகதிராயிரம் பரப்புகனலிதனதுலகத்திற்கலந்துவாழ்வார். (௩)

இரவிமணித்தேர்பூண்டவேழ்புரவியுததிநடுவேறும்வேலை, மருவியவத்தீர்த்தத்தின்மார்கழித்திங்கட்டிங்கண்மாதினோடு, மொருமையுடன்படிந்தாடுமுத்தமர்நற்புத்திரர்ப்பெற்றுவந்து வாழ்வார், பரவுசிவமந்திரத்தைப்பன்னிமுன்னுட்படியிலரன் பதியிற்சேர்வார். (௪)

உறைதருமத்திங்கடனிலொண்கலைசேர்பூரணையினோனா தன்னின், மருவியவன்புடன்பிரமதாண்டவர்மாபூசைசெய் வோர்மகேசலோகத், தொருபிரமகற்பமுறைந்துகாந்தத்தி னுருத்திரனோடுற்றுப்பின்றைக், குருமணிநல்விமானமேல் கொண்டுசிவலோகமதிற்குடியாய்வாழ்வார். (௫)

பங்கமில்சீர்தருமாகத்திங்கடனில்விசேடித்தெண்டிசை பரப்பும், பொங்குகதிரோனுதயப்பொருப்பினிலேழ்பசும்பரி த்தேர்பூட்டும்வேலை, யங்கவன்மந்திரநவிற்றியரன்றிருமுன் னருத்தியினோடாடுமாந்தர், துங்கமுடன்பவமொழிந்துசுத்த மாயத்துவிதமுத்திசேர்வார். (௬)

மைக்கிடமாங்கடன்முகட்டின்மான்றேரில்வாளிரவிதோ ருன்முன்சீர், மிக்கசிவநிசியினந்தவேகவதிதனின்மூழ்கிவிழி

துஞ்சாது, நக்கனேநான்கியாமத்துநன்கருச்சித்தருந்தானநய ந்திவோரெண், டிக்குபாலகர்பூசைதினம்புரியச்சிவபுரியிற்சே ர்ந்துவாழ்வார். (எ)

இப்பரிசங்கமர்ந்துறையுமெல்லேயினெம்மீசனருளிருந் தவாறே, மைப்படியுந்திருநயனவல்லிதவம்புரிதலத்தின்வ ண்மையேயோ, வொப்பரியநவமணிசேருயர்விமானமதேறி யும்பர்சூழச், செப்பரியவுலகமெலாந்திசைவிசயஞ்செய்தின் பந்திளேத்துவாழ்வார். (அ)

மானவுபரிடபரவிதன்னின்மணிகன்னிகைவைசாகமா க,நானமதுபண்ணினர்கணவில்பலதானப்பலமுநண்ணிவாழ் வா, ரானவமுதோதககமாமத்தீர்த்தத்துற்றதக்கிணுயனத்திற், பானுமதிதனேயரவம்பற்றிடுநாண் மூழ்கினரப்பலத்தைச்சேர் வார். (கூ)

கொடுமறலிதனேயிடறுங்குனைகழற்காங்கவனுயிரைக் கொள்ளேயீந்த, கடுவடக்குங்கந்தரத்தெங்கண்ணுதலோன் திருமுனிருகணேபோமெல்லே, நடுவறுநன்மாதவத்துவசிட்ட முனிவன்கண்டவசிட்டதீர்த்தம், படிபவர்பண்பாடியறுபதந் துவைக்கும்பங்கயன்றன்பதத்தைச்சேர்வார். (க0)

கனேகதிரோன்கடன்முகட்டேழ்கடும்பரிபூண்டிடுமோன் றேர்கடாவும்வேலேத், தினம்பொருபோர்க்களத்தசுரர்செங் குருதிமுடைநாறும்வச்சிரத்தான், மனமகிழ்விற்றருகிருதமா லேமேலணிந்திலங்குமிந்த்ர தீர்த்தஙு்,தனிஉயர்பங்குனிதருமு த்தரமாடினேர்யாகபலத்தைச்சார்வார். (சக)

பார்புகழீராறுதினம்படிந்தாடிற்சாகமகப்பலன்படைப் பார், சோர்வறநற்றிங்களுவந்தாடினாச்சுவமேதபலத்தைத் துய்ப்பா, ரோர்காரீருந்தினரக்கினிட்டோமபலந்தன்னேயு றுவர்நாளும், பேர்பெறும்யாகாதிகன்மம்பேணுதபலன்மூழ் கிற்பெறுவரன்றே. (கஉ)

பூரணேயிற்கலேயொடுங்குங்குவதனிற்சங்கிரமந்தன்னி லிந்து, வாரமதினெடுத்துனைத்தமாதீர்த்தந்தொறுமூழ்குமா

ந்தரேய்ந்த, வார்கலிசூழுலகத்திலன்னையர்தம்முதாரத்திலனு காரம்ம, வோரினவருமாபதிதனுருவமடைந்திடுவரிஃதுண் மையாமால். (கங)

மிக்கவறம்பொருளின்பம்வீடருள்வதாய்மேலாய்விமல மாகித், தொக்கவநம்புண்ணியமாய்த்தொல்பதியாய்ப்பிதிர் கள்பவந்துடைப்பதாகித், தக்கனருடவக்கொடிநற்றகுந்திரு மால்சதுர்முகன்செங்கதிர்மார்க்கண்டன், றிக்குலகம்வழி படுமத்திருநகர்சேர்குநர்க்கரிதுசெப்பினின்றும். (கச)

நவின்றிடுவர்ணுச்சிரமகன்கடைவுபெறநாளுநாடியுள்ள, மூவந்துபுரிகுற்றனரே லுமைக்கரிய பரமசிவனுருவமாவார், நவந்தருமித்தலந்தன்னிற் றகுமிடையூறஃதடையா வகைக ணேசன், சிவந்தமுருகன்வடுகனிவர்பூசைசெய்யினிகறீர்ந் துவாழ்வார். (கரு)

புகலரியகேதாரமலைகாசிமாகாளம்புட்கரஞ்சேர், திகழ் கமலாலயந்தில்லைவனந்திதில்வேசவனந்திருவெண்காடு,மகிழ் தருதென்மதுரைதனின்மருவுகதியைப்பெறுவான்வைகுவோ ர்சேர், மிகுபலமானவையனைத்துமேவுவர்பூவணநகரின்மேவு வோரே. (கசா)

ஆதலினித்தலமெல்லாமத்தலங்கட்கதிகமெனவறையுமிந் தக், காதைபுகழ்தருபிரமகைவர்த்தத்திரண்டுதலையிட்டவெ ன்ப, தோதிடுமத்தியாயத்தினோர்ந்திடுகசவுனகவென்றுரைத் தான்மிக்க, மூதுணர்வின்மேதகுநல்வியாதனருண்மாணுக்க முனிவர்கோமான். (கஎ)

வேறு.

ஆரிரும்பவமாற்றியவாக்கினாலாரணந்தெளிவுற்றிடுமந்த ணீர், சேருநன்பலதீர்த்தவிசேடமாஞ்சீர்தருங்கதைசெப்பி டுஞ்செஞ்சொலோ,ரோர்வுறும்படியோதியமேன்மையோரோ ர்ந்துசிந்தைகொளுத்திடுமன்பினோர், பார்புரந்தருள்பார்த்தி வராகியேபரவரும்பரமுத்திபொருந்துவார். (கஅ)

தீர்த்தச்சருக்க முற்றியது.

ஆகச்செய்யுள் - கஉஅக.

பதினேழாவது
தீர்த்தச்சருக்கச்சுருக்கவசனம்.

கார்த்திகை மாசத்திலே சங்கிரம புண்ணிய காலத்திலும், ஆதிவாரத்திலும், சூரியோதயத்திற்கு முன்னே, மணிகுண்டதீர்த்தத்திலே, சூரியமந்திரம் உச்சரித்து மூழ்குவோர், இஷ்டகாமியங்களை அடைந்து, முடிவிலே சிவலோகஞ்சேர்வர். அம்மணிகுண்டத்திலே மூழ்கி அந்தணர்களுக்குக் கிருததானஞ்செய்வோர் குன்மமுதலிய நோய்கள் நீங்கி, முடிவிலே ஆதித்தியவுலகம் அடைவர். அத்தீர்த்தத்திலே, மார்கழிமாசம் சோமவாரத்திலே மனைவியுடன் மூழ்குவோர் புத்திரப்பேறடைவர். திருவைந்தெழுத்தை உச்சரித்து அசுவதிநக்ஷத்திரத்தில் மூழ்குவோர் இறுதியிலே சிவலோகம் அடைவர். பூரணையிலே பிரமதாண்டவமூர்த்தியைப் பூசிப்போர் மகேசருலகத்திலே ஒருகற்பம்வரையிலே தங்கிப் பின்பு சிவலோகஞ்சேர்வர். மாகமாசத்திலே, சூரியோதய காலத்திலே, சூரியமந்திரம் உச்சரித்துச் சிவபிரான் திருமுன்னர் நாடகஞ்செய்வோர் இறுதியிலே நற்கதிபெறுவர். சூரியோதயத்திற்குமுன் வைகைநதியிலேமூழ்கி, சிவநிசியிலே நித்திரையின்றி நான்குயாமமுஞ் சிவபூஜை செய்து, தானங்கள் செய்வோர் இறுதியிலே சிவலோகஞ்சேர்ந்து வாழ்வார். மணிகன்னிகைத் தீர்த்தத்திலே இடபமாசத்தில்விசாகநக்ஷத்திரத்திலும், தக்ஷிணாயனத்திற் கிரகணகாலத்திலும் ஸ்நானஞ் செய்வோர் பலதானஞ்செய்தபயனைப் பெறுவர். சிவசந்நிதியில் இரண்டம்புசெல்லுந்தூரத்தில், வசிட்டதீர்த்தத்தில், மூழ்குவோர் இறுதியிலேபிரம பதம்பெறுவர். சூரியோதயத்திலே இந்திர தீர்த்தத்திலே, பங்குனிமாசம் உத்தரத்திலே, மூழ்குவோர் யாகபலத்தை அடைவார். பன்னிரண்டு தினமூழ்குவோர் சாகயாகபலனைப் பெறுவர். ஒருமாசமூழ்குவோர் அசுவமேதபலனைப் பெறுவர். அத்தீர்த்தத்தைப் பருகுவோர் அக்கினிட்டோமபலனை அடைவர். இந்தத்தீர்த்தச் சருக்கத்தை ஓதினோரும் கேட்டோரும் பூலோகத்தில் அரசராய் வாழ்ந்து முடிவில் நற்கதி பெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

பதினேட்டாவது.

நளன்கலிமோசனச்சருக்கம்

அரியவிரதம்பூண்டவந்தணராவையத்தோரங்கமாக, வு ளாதருநல்லோருயிராயுறைகின்ற சவுனகனையுற்று நோக்கிப், பரிவினுடன்பௌராணிகோத்தமனும் பன்னுதவப்படிவச்சூத, னரபதியாநளன் கலிமோசனமானகாதைதனைநவில்வதானன். (க)

அருளுடனெண்டிசாமுகஞ்சூழங்கணுலகெங்கணுஞ் சென்றளப்பச்செங்கோன், மருவியமண்டலங்கொண்டமாகிர்த்திபுனைந்துமறைவரம்பினின்றோன், விரவுமறம்பொருளின்பம்வீட்டைவானருச்சனைசெய்விருப்பின்மேலோன், கருதரியபராசர்கனகமணிமுடியிடறுங்கமலத்தாளான். (உ)

முழுதுலகந்தனிலேட்டினெழுதரியசதுர்வேதமுற்றுநாவோ, னழிவிலரனரியதிருவஞ்செழுத்தையுபதேசமருளாசானைப், பொழிதருநன்மதுவாசப்புதுமலரிட்டருச்சித்துப்போற்றிநாளுங், குழைவுறுமன்புடனகத்துக்குடியிருத்துங்கோதிறவக்குணக்குன்றன்னன். (௩)

அடன்மிகுவெம்படைகாத்தலமைச்சரணைப்புடனூக்கமறிவஞ்சாமை, தொடைபெறுநல்லியற்கல்விதூங்காமைதூய்மைதுணிவுடைமைவாய்மை, யுடனுரியகுடிபுறங்காத்தோம்பல் பகையொடுக்கலிவையுடைமைபூண்ட, கொடைமடம்பட்டிடுகோதில்குவலயங்கொள் குங்குமப்பொற்குவவுத்தோளான். (௪)

முழங்குதிரைக்கடலுலகமுழுதுமொருமதிக்கவிகைமுறையிற்காத்து, வழங்குகலிவலிதொலைத்துமருவலர்தம்மாருயிரைவாங்கிமாந்திக், கொழுங்கனற்செங்குருதிதனைக்குடித்துமிகக்குமட்டியெதிர்கொப்பளிக்குந், தழங்கிலைவேனெடுந்தடக்கைதாங்குநளனென்றுரைக்குமோங்குபேரான். (௫)

ஆளுமறைக்குலத்தினன்பினவதரித்தவருங்குலத்தினரசர்கோமா, னீளுமருளுடனோர்நாணித்தநியமக்கடன்கணிரப்பிச்செம்பொன், வாளுறைசேர்நீள்சுரிகைமன்னீளக்கச்சையுடைமருங்குசேர்த்தித், தாளதனிற்றொடுதோலுந்தகவிக்கிச்சட்டகமேற்கவசந்தொட்டு. (சு)

வேறு.

கோட்டியசிலைக்கைதாங்கிக்கோதையங்குலியிற்சேர்த்தி
மூட்டியபேராவந்தான்முதுகுறப்பிணித்தியங்க
வீட்டமெங்கணுந்துவைப்பவெண்ணருங்கருவிபம்ப
வேட்டையின்விரும்பிவேட்டுவேந்தர்களோடும்போந்தான்.

மூடங்குவாலுளமடங்கன்முருக்கியபுகர்முகஞ்சூழ்
கடங்களுங்கொடிகள்பின்னுங்கண்டகவனமுஞ்செந்தீப்
படர்ந்தெரிவதிற்செங்கஞ்சம்பலமலர்கின்றநற்பூந்
தடங்கருமிடங்களெங்குந்தகுவலைக்கண்ணிசேர்த்து. (அ)

பூண்டநாண்டொடர்ச்சிநீங்கிப்பொங்குகானெங்குந்தாண்டி
நீண்டவாலினைக்கொழித்துநேர்கடுங்காவினோடிக்
காண்டகுசெவிசிலிர்த்துக்கடுங்குநன்ஞமலிசூழத்
தூண்டியேதொகுவிலங்கின்றொகையெலாந்தொலைவுசெய்தே

பச்சைவாம்பரியேழ்பூண்டபாழியோராழித்தேரோ
னுச்சியினேறும்வேலையுறுகதிர்தெறுதலாலே
நச்சிலையயில்வேலங்கைநளனனிவேட்டையாடி
யச்சிலைவேடரோடுமரும்பசியால்வருந்தி. (கo)

வேறு.

நேடிப்பசுந்தேனிறைமலரினீடுஞ்சுரும்புபண்பாடு
மோடைப்புனலினுடியுவந்துச்சிக்கடன்றீர்த்துயர்தருக்கீ
ழாடற்பரியூரரசர்பிரானங்வன்பொதிசோறருந்தியுடன்
வேடப்படைகள்சூழ்தரவேவிரவோர்கன்னல்விழிதுயின்றான்

வேறு.

மாயிருஞாலத்தின்னல்வந்தடைந்திடவுமாக
மீயுயர்தருவினின்றுமேதினிவீழ்வதாயும்

காய்சினத்தரவந்தீண்டிக்காளிமங்கஞலத்தன்மெய்
தோயவுங்கனவுகாணூஉத்துண்ணெனத்துயிலுணர்ந்தான்.()

துண்ணெனத்துயிலெழாமுன்சூழ்ந்திடுமமைச்சர்பாவ
புண்ணியம்புகலுமேனைப்புரோகிதர்விரவிப்போர்வே
லண்ணலங்குற்றதென்கொலருளுதியெனமன்னன்
கண்ணுறக்கண்டதீயகனுவிலேகட்டுரைத்தான். (கங)

ஆங்கதுகேட்டோர்யாருமரசர்கோன்றன்மேற்பார்வை
தாங்கியோர்சாதமாற்றஞ்சாற் வார்தலைவவிந்தத்
தீங்குறுகனவுகண்டதீமைநீங்கிடநற்சாந்தி
பாங்கினுற்புரிதியின்றேற்பலித்திடும்பகற்கணுவே. (கச)

ஆதலாலரும்பகற்கனரசர்கண்டுபிறலாகா
வோதிடின்வாதபித்தமுறுகனவந்தியாமத்
தேதமாம்வெங்நோய்சிக்கைதயெண்ணியதிடையினெய்துங்
காதல்கூரிராக்கடைக்கண்கண்டதுகருதினுண்டாம். (கரு)

கனைகடன்முகட்டின்வெய்யோன்கடும்பரித்தேரூர்காலை
நினைவுறுங்கனவோர்திங்கணிகழ்த்திடும்பகற்கணோருந்
தனைநிகர்தருமசேதாதனைவிடுகின்றவேலை
யினிவருகனவியம்பிலீரைந்துதினத்திற்சேரும். (கசா)

கழிதருகனவின்செய்திகாண்டியீதரசரோறே
வ வறவியன்றதானம்வழங்கிடல்வேண்டுமின்றே
லழிதராதருளல்வேண்டுமறிகவெம்மரசென்றன்னோர்
மொழிதருசாந்திமன்னன்முடித்திலன்முந்தையூழால். (கஎ)

சில்பகல்கழிந்தபின்னர்த் கழ்மணிப்பூணினுனுந்
தொல்பெருந்தானிகோட்டிச்சூதாடியாவுந்தோற்றே
பல்லலுற்றருஞ்சிறுரோடாந்தமையந்தியென்னும்
வல்லிமான்றனையுநீத்துமல்லல்சேர்வனம்புகுந்தான். (கஅ)

புகுந்துகானகத்துாப்பட்புந்தியையொருப்படுத்துத்
தகுந்திறன்மன்னன்றன்னந்தனியுடன்சாரும்வேலைப்
பகுந்தவாய்ப்பாம்பதாகிப்பகைகொடுகுடனென்பான்
நிகழ்ந்தமெய்ப்புகழ்மான்றன்னைச்சீறியேதீண்டினனே. ()

சீறியேதீண்டலோடுந்தீவருமரம்போற்செந்தீ
வீறுயிர்களன்றனக்குவெவ்வராவிடத்தைவீட்டிக்
கூறரிதாகியோங்கிக்கொழுந்துவிட்டெழுந்துமண்டி
மாறுசெய்கருடன்முனும்வனந்தனின்மறைந்துபோனான்.

திவ்வியவழகின்மேலோன்றேசெலாமழுங்கிமாசாய்
வெவ்வராத்தீண்டியங்கம்விகிர்தமிக்குறவேமேவு
மவ்வினை துஞ்சப்பின்னரறம்பிடித்துந்தலாலே
யெவ்வமுற்றிருதுபன்னனிடத்தவன்றெண்டினேய்ந்தான்.

அன்னவன்சின்னாளேகவருந்ததிகற்பினென்னத்
தன்னிகரெழிலினோங்குந்தமயந்திசொயம்வரத்துக்
கின்னருட்டலைவனாகியின்னறீர்ந்திருதுபன்ன
மன்னவன்றன்னோடேகிமாதினைவல்லைசேர்ந்தான். (உஉ)

ஆங்கவன்பின்னுஞ்சூதங்காடிமுன்னவனைவென்ற
பாங்குடன்றனதுதொல்சீர்ப்படியெலாமடைவிற்கொண்டு
தீங்குறுங்கனவுவந்தித்தீமையைப்புரிந்ததென்னத்
தாங்கியபூந்தார்மார்பன்றன்னுளங்கொண்டுமன்னோ. (உங)

தங்குதீர்த்தங்கடோய்வான்றமயந்தியென்னுமாது
மங்கலந்தருநன்மைந்தர்மந்திரித்தலைவர்சூழ
வெங்கணும்பரவுஞ்செம்பொனினமணித்தேரினேற்றிப்
பொங்குவெம்படையினோடும்புரவலன்கொண்டுபோந்தான்.

வேறு.

கேதாரமவிமுத்தங்கிளத்துகயைபிரயாகைகிளர்வானோங்கும், போதார்ந்தவடகானம்பொங்கியெழுங்காளிந்திபுகலவந்தி, காதார்ந்தகுழையனரித்துவாரமிகுமாளவமாகதங்காகோல, மாதாரமாத்திநகர்பஞ்சாப்சரத்தோடாரணநற்கானம்.

பிறங்குகிருட்டினகானஞ்சடாயுதலஞ்சோமேசம்பீமகானஞ், சிறந்திடுமஞ்சேசுரஞ்சல்லிகாயாவனங்கோகுராசந்தீதி, லறங்கனைநால்வேதவியாதாச்சிரமம்வெதிரிகாச்சிரமமாதி, கறங்குதிரைக்காவிரிசூழ்கருதுதிரிசிராக்கியமுங்கண்டுமன்னோ. (உரு)

தெண்டிரைமோதிக்கறங்குந்தீர்த்தமவையாடியவன்மூர்த்திபேணிப், பண்டருநற்குறுமுனிவன்பன்னுதமிழ்ச்சொன்மணக்கும்பாண்டிநாட்டில், வண்டலெடுத்தலைபுரட்டும்வைகைநதியுடுத்தமதுராபுரேசன், கண்டுறுசொற்சுயனயனகர்ப்பூரநாயகிதாள்கண்டுபோற்றி. (உஎ)

கொடிமாடமதிற்கூடற்குணதிசையோசனையெல்லைகொண்டிலங்கும், பொடிமூடுதழலெனவேபொருந்தியதென்பூவணத்திற்பொருந்கிநாளும், படிநீடுபுகழ்கொண்டபாதாளநாதனையும்பங்கிற்பச்சை, வடிவோடுமுடனுகிவளர்நாதவதிதனையும்வந்தித்தேத்தி. (உஅ)

முழுதுலகும்புகழ்நாமும்முரசுநின்றுமுழங்குமுன்றின்முழவுத்தோளான்,வழுவில்பதிமகிமையையுமனத்துறநின்மலத்தினையுங்கண்டுமுன்ன, மழிவுறவெஞ்சூதாடியலமரவெங்கலிகலியவகன்றிடாவெம், பழிகழுவும்படிகுறித்துப்பரிமேதயாகத்தைப்பண்ணலுற்ருன். (உகூ)

வேறு,

ஆதியந்தமிலாதவரன்றிருக்
கோதிலாத்பொற்கோயிற்குடதிசை
யோதுகூவிளியெல்லையினேங்கவே
காதல்கூர்கனகத்தலக்கம்மியர். (௩0)

மாகநீணவமாமணிகொண்டுவே
தாகமப்படியாயிரந்தூணிறீஇப்
போகமன்னியபொன்னகரொன்னவே
யாகமண்டபமேத்தவியற்றினர். (௩க)

மந்தமாருதமூரும்வசந்தநாட்
கந்துகம்பட்டங்கட்டிவிடுத்திசை
நந்தும்வேதியரோடுமெந்நன்னளன்
றந்தவேள்வியஞ்சாலையிலேறினன். (௩உ)

ஓடுவாம்பரியுற்றகுளப்படி
நாடியோமகயந்துபுரிந்துபொன்

னுடையாபரணங்களணிந்தணி
நீடுவேள்வித்தறியைநிறுவியே. (௩௩)

ஆண்டுதானென்றறைவபையாதியான்
மாண்டருங்கனல்வேள்வியமைத்தபின்
வேண்டுமாறுசுவையின்மிதவைமெய்
பூண்டவேதியர்பூசைபுரிந்தனன். (௩௪)

ஆசிலவ்வருடாந்தத்தருந்தமிழ்
வாசமாமலயத்துமந்தாநிலம்
வீசுங்காலத்துமின்னனையோடும்வந்
தீசன்விண்ணவரேத்தவங்கெய்தியே. (௩௫)

மேவுமந்தமிகுந்திரையாயுக
மோவில்பல்புகழோங்குநளன்றனக்
கியாவுநல்கியிருங்கலிதீர்த்தருள்
பூவணேசன்பொற்கோயில்புகுந்தனன். (௩௬)

எந்தஞான்றுமிருந்துவிளைத்திடு
முந்துகாதலரோடுறுவைகையி
னந்தவேந்தனவபிருதப்பெயர்
தந்தநானமுந்தானமுஞ்செய்துபின். (௩௭)

செங்கணற்றனைச்செய்துத்தியாபனம்
பொங்குபூவணத்தெம்புனிதன்றனக்
கங்கண்மாநிலமெங்கணுமாற்றவே
மங்கலோற்சவமன்னனுண்டாக்கினன். (௩௮)

பிரமகைவர்த்தமாமிப்பெருங்கதை
சாதமூன்றுதலையிட்டவெண்பதா
முரியவத்தியாயந்தனிலோரார்திநீ
ரரநளேந்திரன்கலிமோசனம், (௩௯)

இந்தநளன்கதை
சந்தமுடன்புகல்
சிந்தையுவந்தனர்
வெந்துயர்சிந்துவார். (௪௦)

நளன்கலிமோசனச்சருக்கமுற்றியது.

ஆகச்செய்யுள் - ௧௩௨௧

பதிவேட்டாவது.

நளன்கலிமோசனச் சருக்கச்சுருக்கவசனம்.

நளச்சக்கரவர்த்தி வேட்டைக்கோலங்கொண்டு காட்டையடைந்து வேட்டமாடித் துஷ்டமிருகங்களைக் கொன்று,வேடரோடும் பசியால் வருந்திச், சூரியன் உச்சியில்வரும்போழ்து, தடாகத்தைஆராய்ந்து கண்டு, அதிலே மூழ்கி நியமங்கள் நிறைவேற்றி, பொதிசோறுண்டு மரநிழலிலே ஒருநாழிகை நித்திரைசெய்தான். செய்யும்பொழுது, தனக்குத்துன்பம் வந்ததாகவும், மரத்தினின்று கீழேவீழ்ந்ததாகவும், சர்ப்பந் தீண்ட அதனாற்சரீரம் கறுத்ததாகவுங்கனவுகண்டு விழித்தான். விழித்தவுடன் வந்த அமைச்சர் புரோகிதர் முகமாக, அத்தீய கனவிற்குப் பிராயச்சித்தத்தையுணர்ந்தும் தீயூழினாற் பிராயச்சித்தஞ் செய்வதில் நளராசனுக்கு ஊக்கமுண்டாகவில்லை. பின்பு நளராசன் சூதாடி எல்லாவற்றையுந்தோற்றுத் துன்பமுற்று, மனைவிபுத்திரர்களைவிட்டு வனம்புகுந்தான். புகுந்தபின்னர் கருடனென்பான் பாம்பாகித்தீண்டினமையால், உடல்முழுவதும் ஒளிமழுங்கிக் கருமையுற்றனன். அப்பால்நளராஜன் இருதுபன்னமன்னன்மாட்டுப் பாகுகனுயமர்ந்து,அம்மன்னனோடுதமையந்திசுயம்வரத்திற்குச்சென்று அம்மனைவியையடைந்து, பின்னுஞ்சூதாடிவென்று அரசாண்டு மனைவிமைந்தருடன் நால்வகைச்சேனைசூழத் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டான். புறப்பட்டு, கேதாரம் ஸ்ரீகாசி முதலாகிய க்ஷேத்திரங்களை அடைந்து, தீர்த்தங்களாடிச் சிவலிங்கமூர்த்திகளைத்தரிசித்துக்கொண்டு, செந்தமிழ்ப்பாண்டிநாடு சேர்ந்து, மதுரையம்பதியுற்றுத் தீர்த்தங்களாடி ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுரரைத்தரிசித்து, திருப்பூவணஞ்சேர்ந்து சுவாமியையும் அம்மையையுந் தரிசனஞ்செய்து, அப்பதியின் மகிமையும், அப்பதிக்குத்தான் வந்தபின்னர்த் தனக்குண்டாகிய நிர்மலத்தன்மையுமுணர்ந்து அங்கேவதிந்து, கலிவருத்துதற் கேதுவாகிய பாபசேஷத்தைப்போக்கும் வண்ணமெண்ணிப் பரிமேத வேள்விபுரிந்து அவபிருதஸ்நானஞ்செய்து தானங்கள்கொடுத்து அக்கினியை உத்தியாபனஞ் செய்து, புட்பவனேசருக்கு மகோற்சவநடாத்தத் தொடங்கினான். இங்ஙனம் பிரமகைவர்த்த புராணத்திலே எண்பத்துமூன்றா மத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

பந்தோன்பதவது.

திருவிழாச்சருக்கம்.

எனகற்புராணமுனிசொற்றலோடுமெழுதாமறைச்சவுனகன், புனிதந்தயங்குபுகழ்தங்குகங்கைபொதிசெஞ்சடைச்சங்கரன், றினமன்புகூரமகிழுற்சவங்கொடிருநாள்புகுந்ததனைநீ, துனிநந்தவோதுகெனஞானநீடுதொழின்மேவுசூதன்மொழிவான். (க)

வேதாகமத்தின்விதியோதுகீர்த்திவீசும்வைகாசிரவியிற், பாதாளவீசன்மகிழ்வோங்குபூர்வபக்கங்கொள்பஞ்சமதனி, ஞேதாளியத்திஞேரேழ்தினத்திலுறுவேதபாரகர்தமாற், கோதேதுமில்லதொருகோவிலங்குகொடியேற்றுவித்தனனரோ. (உ)

பகர்பல்லியங்களுடனீள்பதாகைபணியொன்றுமல்குன்மடவார், விகிர்தங்கொள்சோதிமணிகொண்டிறைத்தமிகுமாடவீதியிடைநீண், மகரந்தயங்குமணிதோரணங்கண்மணிவாயிறோறும்வதியச், சிகரங்கொள்செம்பொன்மணிகின்றிலங்குதேரூர்விழாக்கண்டனன். (ங)

ஒருகோடிசெம்பொனவைநல்கிநீடுமுலகெங்குமோங்குதிருநாட், டிருநாளுநின்றுநடமாடுகின்றசென்பூவணத்தினிடைகண், டருண்மேவுதீர்த்தவிழவும்விருப்பினணிசேர்தரக்கண்டனன்,பராசர்செம்பொன்முடியாற்சிவந்தபாதாரவிந்தகளனே

வேறு.

கலைக்கடல்கடந்தனர்கனைகண்டோதமால்
விலக்கரும்வேதநூல்வேள்வியாற்றிகல்
லிலக்கணவிழாவணியெடுத்தலானளன்
றொலைக்கருங்கலியெலாந்தொலைக்கின்றனரோ. (ரு)

மற்றையநாளெனுமன்னர்தம்பிரா
னுற்றவெம்பிரான்றனையுவந்துதாழ்ந்தெழீஇ

வெற்றிசேர்படைபொடும்விடைகொண்டேயுயர்
பொற்சுவருடுத்ததன்புரியிற்போந்தனன். (சா)

அந்தநல்விழாவணியடைந்துகண்டுளோர்
பந்தவெம்பவமெலாம்பற்றறுத்துநற்
கந்தமேகமழ்செழுங்கமலபீடிகைச்
செந்திருவளத்தினிற்றிளைக்கின்றாரரோ. (எ)

வருந்தியேயாயினுமாக்கள்பாதலப்
பரன்றிருத்தேர்விழாப்பணிதல்வேண்டுமாற்
றிருந்தொருதினந்தரிசித்துளோர்களும்
பொருந்துவரழிவிலாப்போகமுத்தியே. (அ)

அந்திவண்ணத்தனையண்ணலங்கைவேற்
கந்தவேணந்திதன்கணங்கடம்மொடுஞ்
சந்ததம்பல்லுயிர்தழைப்பநாடொறும்
புந்தியிற்பூவணம்போற்றல்காண்டிநீ. (சு)

உத்தமமாநவதீர்த்தத்துண்மையு
மித்தலப்பெருமையுமெடுத்தியம்பொணு
தத்துணையெனினுநெஞ்சமைகிலாமையாற்
சுத்தநற்சவுனகதொகுத்துச்சொல்லுகேன். (க0)

அழிந்திடுமபுத்திபூருவமதாய்ச்செயும்
பவங்களிப்பூவணப்பதியைக்கண்ணுறிற்
றவிர்ந்திடும்புத்திபூருவத்திற்சார்பவ
முவந்தொருமதியுறிலொழியுமாலரோ. (கக)

சந்தகான்மறையவர்தம்மைநிந்தைசெய்
பந்தபாதகமெலாம்பாறல்செய்திடு
மெந்தையெம்பிராட்டிபாவியைந்திலங்கிடு
மந்தநற்பதியனையாண்டுமேவினுல். (கஉ)

பூரணைதனின்மணிபொருந்துமோடையி
லாரருளுடன்படிந்தண்ணல்சென்னிமேல்
வாரிசந்தயங்குபூமாலைசாத்தினர்
சேர்குவரத்தினகிரிந்தயாவுமே. (கங)

மேவுபூரணையுறுவிசாகத்தோங்குதென்
பூவணத்திறைக்குநற்பூம்பட்டீகுநர்
பாவமானவையெலாம்பற்றறுத்தரோ
தாவில்சந்ததியுடன்றரணிதாங்குவார், (௧௪)

அன்றியேகயிலேயினணைந்தநந்தநாள்
வென்றியினவமணிவிமானத்தேறியே
துன்றுபூம்பொழிற்றுறுஞ்சுவேச்சையாலுறீஇச்
சென்றரனுடன்சிவபுரியிற்சேர்குவார். (௧௫)

செப்புமுத்தராயணந்தெக்கிணுயனந்
தப்பிலாவிடுக்களிற்சார்ந்தமாகத்தி
னெப்பருங்கலேகளோதாதநாட்களி
னப்பெருஞ்சுடர்களேயரவந்தீண்டுநாள். (௧௬)

இந்தநற்றீர்த்தங்களினிதினுடியே
யந்தணரங்கையினரியதானங்கள்
சிந்தையின்மகிழ்ந்தினிதீகுவோர்கடாம்
வெந்துயர்ப்பவங்களேவேரறுத்தரோ. (௧௭)

அன்னநல்லணிகலமாரருந்துகின்
மின்னிடைமாதரார்வீணைநன்மணம்
டான்னுகாய்நூறடைபஞ்சுப்பாயலே
யென்னுமிப்போகமோரெட்டுமேய்வரால். (௧௮)

இந்நாற்பிரமகைவர்த்தத்தீங்கிதை
நந்திமுன்சனற்குமாரற்குநன்கருள்
பந்திசேர்கின்றவெண்பானோர்நான்கதா
மந்தவத்தியாயத்தினருளிற்காண்டியால். (௧௯)

வேறு.

சந்திவந்தனைதந்தமாதலஞ்சங்கரன்புகழ்தங்குமாலயஞ்
சுந்தரந்திகழ்கின்றபூசனைதுன்றுமன்பர்தொடங்குமாமட
மிந்தவண்கதைபண்பினேதுரரன்புடன்செவிகொண்டுதேர்குநர்
சிந்தைவெந்துயரங்கடீர்குவர்செம்பொனம்பதிசென்றுசேர்வரோ. (௨௦)

திருவிழாச்சருக்க முற்றியது.

ஆகச்செய்யுள் - ௧௩௪௯

பத்தொன்பதாவது.

திருவிழாச்சருக்கச் சுருக்கவசனம்.

நளச்சக்கரவர்த்தி, திருப்பூவணேசருக்குத் திருவிழா நடாத்தத் தொடங்கி, பூர்வபக்கத்திலே, புனர்பூச நக்ஷத்திரத்திலே, இடபக் கொடியேற்றி இரதோற்சவநடாத்தித் தீர்த்தவிழாவுஞ் செய்வித்தனன். பின்பு சிவலிங்கப்பெருமானைத் தரிசித்து விடைபெற்றுக் கொண்டு தனது நகரத்தையடைந்து வாழ்ந்திருந்தனன். இத்திருவிழாவைத் தரிசித்தோர் இகத்திலே செல்வத்தோடுவாழ்ந்து, மறுமையிலே பலபோகங்களை அநுபவிப்பார். அபுத்திபூர்வகமாகச் செய்தபாவம், திருப்பூவண க்ஷேத்திரத்தைத் தரிசித்த மாத்திரமே ஒழியும். புத்தி பூர்வகமாகச் செய்தபாவம், அந்தக்ஷேத்திரத்திலே ஒருமதிவதிந்தால் ஒழியும். அந்தணரை நிந்தித்த பாவமுதலியன, அப்பதியில் ஆறுமதி வதிந்தால் ஒழியும். சித்திரைமாசத்துப் பூரணையிலே, மணிகன்னிகைத் தீர்த்தத்திலே, மூழ்கித் திருப்பூவணேசருக்குத் திருப்பூமாலை சாத்தினால், சிந்தித்தனவெல்லாஞ் சித்திக்கும். பூரணையோடு கூடிய விசாகநக்ஷத்திரத்திலே, புட்பவனேசருக்குப் பட்டுப் பரிவட்டங்கொடுத்தவர், பாவங்கள் நீங்கிச் சந்ததியுடன் சக்கரவர்த்தியாய் வாழ்ந்து, சிவலோகஞ் சேர்வர். உத்தராயணம் தக்ஷிணாயனம் விஷுகாலம் கிரகணகால முதலிய புண்ணியகாலங்களிலே மணிகன்னிகை முதலிய தீர்த்தங்களாடிச் சற்பாத்திரங்களிலே தானஞ்செய்வோர், பாவங்கள் ஒழிந்து அஷ்டபோகங்களை அநுபவிப்பார், இங்ஙனம் பிரமகைவர்த்த புராணத்திலே எண்பத்து நான்கா மத்தியாயத்திலே கூறப்படும்.

திருச்சிற்றம்பலம்.

இருபதாவது.

சிதம்பரவுபதேசச்சருக்கம்.

தனைநிகரரியதவமொருவடிவாஞ்சதுர்மறைச்சவுனகவ
வன்மா, னினைவருஞ்சகளநிட்களவடிவாகிமலனானந்ததாண்
டவத்தை, முனிதருதிமிரமுக்குறும்பெறிந்தமுனிவார்க்கரு
ளியமுறைமை, யினிதுகேளெனக்கட்கமலநீர்பொழியவெடு
த்தருட்சூதனுங்கிசைப்பான். (க)

மேவுநல்வேதவியாதனென்வசிட்டன்மிக்கசீர்க்கவுதமன் வாம, தேவன்மார்க்கண்டனங்கிராத்திகழத்திரியதீரான்சநா னக்தன், ரூவில்பாரத்துவாசனக்கினிபன்சவுனகன்மவுன பாற்கரனே, டோவறுமனையமுனிவர்மாணுக்கருடன்மறை முழுதுநன்கோதி. (உ)

தெரிவருஞ்சீர்மத்தியானகாலத்திற்றென்றிருப்பூவண ந்தன்னி, னொருவருமுள்ளத்துணர்வுடன்றாங்கியுவந்தினிது றைதருமதனுற்,புனையிகந்தோக்கும்புகழ்சதுர்வேதபுரமென ப்புகன்றிடுமூலக, மருள்பழுத்தின்பத்தழுந்துமாதவவிவ்வரு ந்தலப்பெருமையாரறிவார். (௩)

அறையுமத்தலத்தின்முறைவியாதன்பாலருளுபதேச நன்கடைந்து, செறிசடாடவியிற்சிறுபிறைமுடித்தசிவபிரா ன்றன்னைநேர்நோக்கி, மறையினற்றுறைபோமாத்தியந்தின னுமருவியதியானகாட்டனுஞ்சி, ருறமுயர்நிலைசேரும்பரா ண்டொருநூறுணாக்கருந்தவமுழந்தார்கள். (௪)

கனைகதிர்தெறுநாட்கழறுமோனாந்தகனல்வளர்த்தத னிடைநின்று, நினைவருஞ்சீதநிகழ்ந்தகாலத்துநீர்நடுவாகியே நின்றுந், துனியறுமூந்தித்தழற்சுழுமுனையாற்றுவாதசாந்தந் தனிற்சொலிப்ப, மனமகிழ்ந்தெங்கோன்மலைமகளோடுமழவி டைவந்துதோன்றினனல். (௫)

குழகன்மால்விடைமேல்கொண்டுமுன்றோன்றிக்குறுக லுங்கோதிலாத்தவத்தோர்,விழுமகன்படிமேல்விழுந்தடிபணி ந்துமெய்ம்மயிர்பொடித்திடவுள்ளந்,தழன்முகங்கண்டமெழு கெனவுருகிச்சதுர்மறைப்பாடலிற்றுதிப்பக், கழைதருசிலைக் கைக்காமனைக்காய்ந்தகண்ணுதல்கருணைசெய்தருள்வான். ()

மதிக்கரும்பெரியமாதவமுடித்தமாத்தியந்தினனையுநினை விற், கதித்திடுந்தியானகாட்டனுமுனிபுங்கவனையுங்களிப்புட ன்கண்டு, விதிக்குநல்வரங்கள்வேண்டியதளிப்பமேலினும் வேண்டுதிரொன்றைத், துதித்தவண்டினங்கடுவைத்திடுங்கமல த்துணைப்பதந்தொழுதிவைசொல்வார். (௭)

அலகிலண்டங்கட்கருள்சுரந்தளிக்குமமலநீயருள்வடிவா கி, மலர்மயிலுறைபூவணநகர்மிகுமாமந்திரமானவைந்தெழுத்தை, நிலைபெறவெமக்குநிகழ்த்தியானந்தநிருத்தநீயளித்தருளென்னக், கலைமதிபுரட்டுங்கங்கைபஞ்சடிலக்கண்ணுதற் பண்ணவன்கனைவான், (அ)

மெய்த்தவம்புரிகான்மீரதீரத்தின்வேதநான்காதிநூல் வருணர், சத்தியஞானதாண்டவங்காணத்தந்தருள்வாயெனமுர்ச்சைச், சித்திரகூடஞ்சேர்ந்திடுமெனவேசெப்பவாங்குற்றனரவரோ, டத்திலைவனத்திலானவானந்தவருணடங்குயிற்றிடல்காண்பீர். (௯)

உரைத்திடினிந்தவுலகின்மேலாகியோதரிதாயநால்வேத, சிரப்பொருளாகித்திகழ்ந்திடுமிந்தத்திருவெழுத்தஞ்சினைச்சேர்த்து, விரித்தியாமிவணேமேவுபதேசம்விதிப்படிவிளம்பியானந்த. நிருத்தமாடுதுநுமுளக்கமலமதாநிகழ்திருவம்பலந்தன்னில். (௧௦)

இத்தலமானந்தத்தலமாகுமிழைத்திடுந்தவமுடனெய்து,நித்தியானந்தந்தன்னைநெஞ்சகத்தினினைக்குநர்தமக்குநேர்விக்கும், வைத்திடும்புகழான்மிக்குயர்ந்தோங்கும்வைரமொன்றின்றியேவைகுஞ், சத்தியஞானதவத்தர்காணீதுசத்தியஞ் சத்தியமாமால். (௧௧)

முதுசுவைதருமாரமுதவிந்துவிற்றுன்முளைத்திடுஞ்சுரர்தருவொன்று, துதிபெறுகிரேதாயுகமதுமுன்னச்சொற்றகுநான்குகந்தொறுமிப், பதிகனிற்பாரிசாதமாலூரம்பன்னருமுயர்புகழ்வன்னி, திதமுறுசெம்பொற்சுனைக்குடக்கனிசேர்நிம்பலவாகியேதிகழும். (௧உ)

தாதருகுடுத்தசோதிசேர்மடற்பூந்தகட்டுநற்றபனியப்பொகுட்டு, மேதகுகமலவேதன்மாலாதிவிண்ணவர்கண்ணரும்பரமப், பாதலத்திடைநின்றெழுந்தொர்தாபரமாய்ப்பழவடியார்க்கருள்பொழியுங், காதல்கூர்தலம்போற்கழறுகாண் முன்பின்கருதருங்காட்சியின்மிகுமால். (௧௩)

ஆதலினிந்தவரும்பிரணவமாமஞ்செழுத்தருளுபதேசந், தீதறக்கொடுநீர்தில்லையிற்சேர்மின் செம்பொனம்பலந்தனில் யாமே, காதலினிருத்தங்காட்டுதுமிக்தக்காசிறென்பூவணக் காசி, யோதிடுமுபதேசத்துளாடனமுனூற்றுதன்மந்தணமா மால். (கச)

செப்புறுமிந்தத்திருநகர்மேலாஞ்சிதம்பரமெனும்பெயர் திகழு, மொப்பிலாவிதனிலொருகணமேனுமுறைகுநர்க்கான ந்தநிருத்த, மெய்ப்படஞானம்விளங்கிடவளிப்போமென்ன லுமிகமகிழ்கூர்ந்து, தப்பிலாதுயர்ந்ததவமுயன்றரியசஞ்சித வினையறுந்தவத்தோர். (கரு)

அற்புதத்துடனங்கடிபணிந்தேத்தியன்புடனங்கணன் றன்பா, லுற்பவந்துடைக்குமுற்றவஞ்செழுத்தினுமையுப தேசநன்குணர்ந்து, சொற்பதங்கடந்தசோதிதன்னருளாற்சு த்தமாமுளக்கமலத்திற், சிற்பரானந்தத்திருநடங்கண்டுதென் றிருத்தில்லையிற்சென்றார். (கசா)

சிந்தையின்மகிழ்ந்ததிருமறைமுனிவர்தில்லையினெல்லை யைச்சேர்ந்து, மூந்துறக்கண்டுமூலகாரணமாய்முளைத்திடுமு தல்வனைமுறையாற், புந்திகொண்டுரியபூசையும்புரிந்துபுலி பதஞ்சலியுடன்கூடிச், சந்ததம்விளங்குந்தபனியப்பொதுவி ற்றாண்டவங்காண்டகவிருந்தார். (களா)

இத்தலமதனுக்கின்னுமோர்நாமமியம்பின்மாபாதககாச, வுத்தமநாமமுற்றிடுமதனாலுமை திருமாலயன்வெய்யோன், வித்தகமுனிமார்க்கண்டனெண்டிசையோர் வேந்தரொண்குரு குலவேந்தர், புத்தியும்பொருவின்முத்தியும்பொருந்தப்பூசனை புரிந்தனர்மாதோ. (கஅ)

அன்றியுமுனிவரிராக்கதரசுரரானநன்முனிவர்களே னோர், கன்றிடும்பவங்கள்கழித்துநன்கிட்டகாமியமளிக்கு மித்தலத்திற், கொன்றையஞ்சடிலக்குழகனையுள்ளங்கொண் டருச்சனைவிதிகண்டாங், கொன்றியவன்பினுடன்பணிந்தே த்தியுத்தமமுத்தியினுற்றார். (கசு)

அங்கணனுடன்வாதாடிமாகாளியாடியதோடமதகலச், சங்கரான்றனக்குத்தரதிசையிரண்டுசார்தருகூவிளிதூரத்,தெங்கணும்புகழ்காளீச்சுரலிங்கமினிதமைத் தருச்சனைசெய்து, வெங்கொடும்பவத்தைவேரறுத்திட்டமேன்மைமூவுலகினும் விளங்கும். (௨௰)

பொருதிரைக்கடல்சூழ்புடவியிற்பூர்வம்பொருந்துமீரறு வருடஞ்சூழ், வருகிரகங்கள்வக்கிரமுறலால்வான்முகின்ம ழைவறந்திடவே,தரைவளந்தணப்பச்சலந்தருவடிவச்சலந்தர ன்றுனெர்மண்டுகமா, யருமணங்கமழுமலர்தருமலரியடியி ணுங்கமர்ந்தினிதிருந்தான். (௨௧)

அப்புனற்சிதமடைதலினலரியரியநெட்டிலையுடனரும் பித், துப்புறழ்சடிலச்சோதிதன்முடிமேற்சூட்டிடக்கண்டுமு ன்றோன்றித், தப்பறவந்தச்சலந்தரன்றனக்குத்தலம்புரந்த ருளரசளித்துத், திப்பியமுறமாலயன்முதலேனோர்சிதைக்க ரும்வாழ்வுமீந்தனனல். (௨௨)

மேககுவரத்தான்மிடலுடன்றோன்றிமிக்குயர்விரிஞ்ச ன்மால்விண்ணோ, ராதிபுத்தெளிர்க்ககந்தையேவிளைப்பவாங் கவர்வெருவியேயந்த, வாகையைச்சுமப்பான்வலிபெறுமை யினன்மங்கைபங்கொளிர்ந்திடுமெங்கோன், பாததாமரையிற் பணிந்தவனுயிரைப்பறித்திடல்வேண்டுமென்றிரந்தார். (௨௩)

ஆயதுகாலைமாயவன்கரத்தினுயிரஞ்செங்கதிர்பரப்பு, மீ யுயர்கோடிவெய்யவரொளியை விளக்கிடுஞ்சக்கரமளித்துத், தீயுமிழ்நெற்றிச்செங்கணுற்கன்னற் செஞ்சிலைக்காமனைச்செ ற்றுத், தாயுமாயுயிர்க்குத்தண்ணளிசுரப்போன்சலந்தரனுட றடிவித்தான். (௨௪)

அச்சலந்தரனுக்கருச்சனைக்கேற்றவாய்மலரளித்திடும்ப லத்தா, னிச்சயம்பெறநீடாழிசூழுலகினெடியமாலயனரிவரி தாம், பச்சைமாமயிலோர்பாதிநின்றிலங்கும்பரஞ்சுடர்பன் னகாபரணன், மூச்சகம்புகழுமிக்கபூவணத்தின்முத்தியை யளித்தனனன்றே. (௨௫)

பொலங்கலன்சுமந்தபொற்கொடியிடமாம்புண்ணியன் பொற்பதந்தன்னி, லலர்ந்தநற்செந்தாமரைமலரொடுகண்ணருமலரிட்டருச்சித்துச்,சலந்தரனுடலந்தடிந்திடுமிந்தச்சக்கரந்தனைமால்பெற்று, னலந்திகழ்ந்தோங்குமானிலம்புகழுநற்றமிழ்ப்பூவணநகரில். (உ௬)

இன்னுமோர்காதைதன்னைநீகேண்மோவிந்தநற்பூவணந்தன்னிற், றுன்னிவண்டிமிருந்தொகுமடற்றுழைதூமலர்த்தாமரைக்கோயி,லன்னவூர்திக்காவன்றுமாறம்முனரியபொய்க்கரிபகர்ந்ததனன், மன்னியதோடமாற்றியபூசைமகிழ்ச்சியிற்புரிந்ததும்வகுப்பாம், (உ௭)

வேறு.

பண்டொர்காளறுபதமுரன்றிசைபாடியேநடமாடுபொற், புண்டரீகமலர்ப்பொகுட்டுறைபுங்கவன்புகழ்தங்குவை, குண்டநண்ணியிம்மண்டலந்தருகுரிசில் யானெனவுரைசெய்தே, தண்டுழாய்மலர்மாலைசூடியசார்ங்கபாணியொடட்டைகுவான். (உ௮)

ஏதமேதருமேழ்பிலங்களுமேழொடேழ்புவனங்களு, மோதுதெண்டிரைசேர்கருங்கடலொழுகஙன்குமொழிந்திடும் பூதலந்திகழேழுதீவுயர்பொன்னெடுங்குடுமிப்பொருப்,பாதியட்டகுலப்பருப்பதமானவண்டமடங்கலும், (உ௯)

வித்தகந்திகழ்மரீசிகாசிபன்விளங்குமைந்தரவர்மைந்தரா, கத்துநேமியமுதத்தைநக்குமுகில்கருடகந்தருவர்சந்திரா, தித்தர்சித்தர்கள்வசுக்கள்கிம்புருடர்திக்குபாலர்கணநாதர்வா, ணித்தமானதினநீடுதாரகைகணேரில்வானவர்கடானவர். ()

எண்ணில்பல்லுயிருமெண்ணிரும்பொருளுமென்படைப்பினிலையைந்ததாற், றிண்ணமீதுமுகில்வண்ணநீயுயிர்திதித்திடுந்தொழின்மதித்திடே, லுண்ணினைந்திலைகொலுன்னையொன்பஃதுடன்பெறும்படிபடைத்தனன், கண்ணவின்றுமுயிர்சாக்கவேண்டிலொருகண்ணனைத்தருவல்காண்டியால்.

என்றுவேதியனியம்பலுஞ்செவியினெறிகொளம்படையையெறிதல்போற்,கன்றுகொண்டுகனியன்றெறிந்தமுதுகட

வுணெஞ்சமதுகன்றியே, துன்றுவெள்ளெயிறுதின்றுவாயிதழ்
துடிப்பமாமுகிலிடிப்பபோ, னன்றுநன்றெனநகைத்துமாமு
டிதுளக்கிமேலிதுநவிற்றுவான். (௩௨)

நாதகீதசதுர்வேதவென்கமலநாபிவந்தது மறந்துநந்,
தாதையென்றுமதியாதுதர்க்கவுரைதருதியானதுதரிக்கிலேன்,
பேதமில்லதொர்பிதாமகன்னெனுமொர் பெயர்புனைந்துமது
பேணலா, தோதுநீயொருவர்பாலுநித்தவருரைத்திடாமொ
ழியுரைசெய்தாய். (௩௩)

நளிர்கடற்புவியினிலவுடல்களுமெனன்படைப்பெனநவி
ற்றினாய், மிளிர்பிறைக்கணிமிலைச்சுசெம்பவளவிரிசடைக்கட
வுண்மேலநாட், குளிர்படைக்கையுகிர்கொண்டுகின்னொர்தலை
கொய்தநின்றுமதுகூடிடா, தொளிருயிர்த்திரளுமுலகுநீகரு
தியுதவுகிற்பதைப்புரைத்திடாய். (௩௪)

ஈதலாதினமியம்பியென்னபயனேடவென்னநெடுமாலய,
னோதுகின்றதெவனுந்திபூத்தவனினுந்திதந்தவினையோதினாய்,
சோதிசேர்கனகனேற்றவன்றுதிரடூணில்வந்துவெளிதோன்றி
னா, யாதலாலிரணியன்கொல்கந்துகொனினத்தனென்பதை
யுரைத்திடே. (௩௫)

மாசிலாதமணிமார்பவென்னமதுவாசமேவுகமலாசன,
னேசமோடரவினுச்சிநின்றுநெறு நெறுநெறென்னநடமாடு
வோன், பேசொணாதவதிகாரநிற்கருள்செய்பெற்றிதன்னையும
யர்த்தெனை, யேசியேவசைகள்பேசிநீகருதியின்றுவந்தனையெ
னென்றனன். (௩௬)

என்றுமாலயனின்னபோல்வவெடுத்திசைத்தெதிர்கூவி
யே, கன்றிநெஞ்சுகலங்கியேமிகுகண்கள்வெங்கனல்சிந்தியே,
குன்றுபோன்றெழுகுவவின் மொய்ம்பு குடங்கைகொட்டின
ரார்த்தனர், வென்றிசேருலகெங்குமஞ்சினவிண்டதண்ட
கடாகமே. (௩௭)

உடுதிரட்கணமவைகளுக்கனவுற்றபொன்மலைகீறியே,
பொடிகள்பட்டனதிக்கயங்கள்புதைத்தகண்கள்புயங்களின்,

படமடங்கிபபிடியடங்கலுநடுநடுங்கினபல·திர்ச், சுடர்களுந் திசைமாறியோடினசுரர்கணெஞ்சுதுளங்கினர். (௬௮)

எதிர்த்துவந்துடனெருக்கிவிண்ணினிடையேற்றுவிழ்ந்துபினுமெங்குமெய், விதிர்த்துமேல்சுழலலோடுயிர்த்தணிகொள்வீங்குதோளின்முறைதாங்கியே, குதித்தலோடுநனியாடிவெற்றியதுகூறியங்கைகொடுகுத்திடாத், துதித்துநின்றுதமின்மாறிமாறியெதிர்துள்ளிமிக்கமர்தொடங்கினர். (௬௯)

இந்தவெஞ்சமருடன்றவெல்லைபினெறிறைவனோரிருவர் தங்கள்பா, னந்தமாகிலமடங்கலுந்திகிரிகன்குருட்டுகெனவங் கடைந், தந்தவேவலர்கடந்தமக்கென்வறைந்துபோர்செய்யமையந்தனிற், றந்தமன்னவரவர்க்களித்தவதிகாரமாற்றவருதன்மைபோல். (௭௦)

கூடுபாதலமோடுமெல்லைகள்கூடிவேர்விழுந்தோடியே, நீடுமண்டகடாகமெங்குநிறைந்துமேலுநிகழ்த்திடுங், கேடிலாதபலண்டமானவைகீழ்படக்கனலாகியே, தேடருஞ்சிவலிங்கமொன்றவர்முன்னமன்னியசின்னமாய். (௭௧)

சின்னமுன்னுறல்கண்டுமன்னவர்சிந்தையிற்கொடுதேறியே, மன்னுகம்பரமென்றுநாடிவணங்குதற்குமனங்கொளா, தின்னருட்குறிதன்னைநாடுகவீதுநந்துணையாமெனப், பின்னருந்தமகந்தைகொண்டிவர்பேசினர்கடம்வாக்கினால்.

தீதிலிந்திரனாதிமேதகுதேவர்நீர்கரிதேர்கெனச், சோதிலிங்கமதாகநம்மெதிர்தோன்றுகின்றதழற்குறி, யாதியந்தமறிந்துளோரெவராவரோமுதலாவனொன், றோதினர்மறையாவுமாசறவோதுகேமெனுமமர்போல். (௭௩)

வேறு.

திருமாலுமொருநாலுமறைநாவின்விளையாடுதிசைமர் முகப், பெருமானுமயர்தந்தவரனதடிமுடிதேடுபோராசையா, லொருநாளுமுலையாதவிருசோடுகொடுமென்னியுறுகோலமு, முரமேவுவெண்டேவியழகாகுமன்னவுருவும்மாகியே,

பஞ்சாயுதக்கடவுளோர்௲ணத்தாயிரங்காவதம்படியிடந்துங், கஞ்சாசனக்கரிசில்கணமனையிராயிரங்காவதம்விண்பறந்துஞ், செஞ்சோதிதருமழற்சின்னத்தினடிமுடிதினந்தேடியுங்காண்கிலார், நெஞ்சானுகினைவரியகீடேழியூழிபலகிகழ் தன்மையதுகண்டனர். (சரு)

வேறு.

முன்னமேவுங்கோலமுகமும்பிறைக்கோடுமொய்ம்பின்றியே, வன்னியாருஞ்சோதியின்னுன்றுமின்றிமெய்மழுங்குற்றிடத், தன்னுளேதடுமாறியமிபாமலரிமீண்டமரர்தங்குலங், துன்னியயன்முடியறிகிலானென்னவைபந்துணிக்தெய்தினன். (சசு)

நாலாரணன்சிந்தைதளிவெய்தியனமாகிநவிசென்றுதான், மேலானவண்டங்கண்முறைபேறுசிறைகொண்ட விசைசிந்தியே, மாலானவன்சிந்தைமாலாகுமோபாதமலர்காணுமோ, வேலாதெமக்கென்ன விடைகின்றுமேறுமோ வெனவெண்ணியே. (சஎ)

போதும்மியானுற்றதுபாங்கொலென்னுப்புலம்புற்றபினேதிங்ஙனுனைசெய்வ லென்னேயிதென்னே யெனுங்காலையின், முதண்டகூடத்துமுடியாதமூர்த்திசடைமுடிநின்றும்வீழ், காதன்மிகுங்கைதைதனேயுமெண்கண்கொண்டுகண்டானரோ. (சஅ)

கண்டங்கைகொடுநண்புகொண்டெங்ஙனுற்றனைதிகழறென்னயான், பண்டங்குவேதங்களறிவரியவிந்தப்பரஞ்சோதியுட், கொண்டன்புறுஞ்செய்யகோடீரபாரம்மதின்வீழ்குவே, னெண்டங்குகைகாற்பதின்னுயிரஞ்சதுர்யுகம்மெய்தினேன். (சகூ)

விடுவிடிங்கெனையென்னவிடையுகைத்தேவரும்விமலன்சடாமுடிநின்றுமதுதவறிவிழ்தாலினுயிர்பெற்றுமொழியுமதனு. விடர்நின்றெமைக்காக்கவிஃதிங்ஙனினைகின்றதெனநெஞ்சிடைப், படிறென்றுனைத்திடப்பங்கயப்பகவனிப்பரிசுன்னினன். (ருo)

கண்டாதரிக்கவருகைதையேதாழையேகண்டலேசீ, பண்டாருமறிவரியபையுளேயகற்றவருபான்மையாலே, விண் டாரணிககணைற் குன்போலுயிர்த்துணை விளம்பிடின்வே, றுண்டோவதற்கையமின்றுகுமுறைசெய்வ லொன்றுகேண் மோ. (௫௧)

வேறு.

ஆணையானன்மறையவனுகுமித்
தாணுவாமழற்றம்பத்தடிமுடி
நாணுறுதந்நாரணனேடியான்
காணுமாறுகருத்தினிற்கொண்டனன். (௫௨)

அற்புதத்தினிரும்புவிகீண்டுகோண்
கிற்பனுலெனக்கேழலுருக்கொடு
சொற்கடந்தவிச்சோதிலிங்கந்திகழ்
பொற்பதந்தனைத்தேடிமுன்போயினன். (௫௩)

வேறு.

கூடியபல்லுகங்கொண்டநாண்முத
லுடிவந்திச்சிவலிங்கநன்முடி
தேடியுமின்னும்யான்றெரிசிக்கின்றிலேன்
வாடினனீயருள்வழங்கல்வேண்டுமால். (௫௪)

கரியமாலாகியகடவுளானுட
னருளினிற்பொருந்திவ்வன்னமாயினேன்
குருமிகுதழலுருக்கொண்டவெம்பிரான்
றிருமுடிகண்டனனென்றுசெப்புவாய். (௫௫)

நஞ்சடவருதலுநாரிபாகனுண்
டஞ்சலென்றமரரையளித்ததோர்தியாற்
றுஞ்சிடவந்தநாட்சொல்லரும்பெரு
வஞ்சகம்பொய்யுரைவழங்கலாகுமால். (௫௬)

நறுமடற்றாழைதன்னம்பினேற்குநண்
புறுவதிவ்வுட்கணேயுதவல்வேண்டுமாற்
பெறுவதுகருதிநண்புறுதிபோற்றியே
மறுமையினுஞ்செயவரம்புண்டாகுமோ. (௫௭)

என்னலுநன்றெனவெழுந்துதுன்னியே
மன்னரியவண்டிமிர்மடற்பெய்தாழையோ
டுன்னரும்வானெலாமொருவிப்பூதலத்
தன்னவாகனனும்வந்தரியைக்கண்டனன். (ருஅ)

வேறு.

வரையொன்றெடுத்துநிரைவருமாரிகாத்தநெடுமேழைவண்ணவெவ்வரவுகேள், கருதுங்கனத்தரையினுயிரங்கொண்டதோர்காதங்கடந்துவிண்போய்ப், பொருதெண்டிரைக்கங்கைநதிசென்று வட்டெடுத் தொளிர்செஞ்சடைப்புங்கவன், முருகொன்றுமுட்பொதிபு நெட்டிலைமுடங்கலின் முகிழ்மடவின்முடிகண்டனன். (ருகூ)

கருநாமல்விடமுண்டுகண்டங்கறுத்ததோர்காமாரிகற்றைச்சடை, தருகைகதையும்மீண்டுனக்காகயான்சென்றசான்றையெனச்சார்ந்ததாற், திருமேவுசெந்தாமரைக்கண்ணவின்னவைதேர்கிற்றியாலென்னவே, யருளாழியாய்கண்டதையமின்றேயென்றதந்தவெண்டாழைபங்கண். (கூ0)

தருணமுறுபகிரண்டமுகடிடிபடக்கொடியதண்டவடவங்கியண்டத், திரிசுடர்கடிசைமாறியலமரத்தெரிவரியதிரிபுவனமிகநடுங்க, வருணசந்திரமதியுமரியகங்காநதியுமமுதவலைதிவலையீசச், சுருதியினமுந்தொடர்ந்தறிவரியசெஞ்சுடர்ச்சோதிப்பிரான்றோன்றினன். (கூக)

அமையாதவன்பருக்காநந்தமேதினமுமருள்கருணைமொழிவதனமு, மிமையாதமுக்கண்ணுமீரிருகரங்களுமெடுத்தேந்துமழுவுமானு, மூமையாளொடேனையவொருமேனியும்விடையுறக்காண்டலும்பணிந்து, நமையாண்டுகொண்டருளவந்ததொருநம்பனிவனெனவஞ்சிநாணுற்றனர். (கூஉ)

வேறு.

அலைகடலன்றெழுந்தவந்தநஞ்சுண்டகண்ட
னிலவுதோன்றிடநகைத்துநீண்மறைபாடுவாயான்
மலரவநம்முன்பொய்த்துமாற்றநீவழங்கலாலே
நிலவலயத்திற்பூசைநினக்கில்தாகவென்றே. (கூங)

இரள்செழும்பரிதியென்னச்செம்மணிகிடந்தமார்ப
சரதநீவழங்கலாலேதராதலத்துலகோரெல்லாம்
பரவியேயின்னேப்பூசைபண்ணிடக்கடவரென்று
வரமருள்புரிந்துபின்னும்வாய்மைகளளந்துமன்னே. (௬௪)

மண்டியவாசந்தோய்ந்துவண்டிமிர்தாழைநீயிப்
புண்டரீகன்றன்னேடும்பொய்த்துரைபுகறலானந்
தெண்டிரைக்கங்கைநீர்பாய்செஞ்சடைசேரலென்னப்
பண்டருவேதன்செம்பொற்பதம்பணிந்திவைபடித்தான். ().

வேறு.

இத்தலமுமேத்தவேவந்தருளியெங்கட்
கத்தனுடனன்னேயெனவன்புடைமையானே
சுத்தவநுபோகமதுதுய்க்கவருள்வானே
முத்திதருநித்தகுருமூர்த்தமுடையானே. (௬௬)

மெய்புணர்வின்மேலவர்களக்குரியமெய்யாய்
பொய்புரையினின்றவர்பொருக்கரியபொய்யாய்
பையிலகுபாந்தளுறுபஃறலைபடுத்த
வையகமதுய்யவிவண்வந்தருளும்வள்ளால். (௬௭)

பாலனையளித்தவொருபார்வைகருபாலா
காலுமுநிவர்க்கறநவிற்றுமமைறநாவா
காலனுயிருண்டுசுவைகண்டுமகிழ்காலா
சூலியுடன்வாதுகடமாடுதிரிசூலா. (௬௮)

நாதமொடுவந்துவருநாதமுறுநீதா
வோதரியநான்மறையுரைத்தருள்விநோதா
காதன்மிகமேவுகுழைகாணவணிகாதா
பாதகமனைத்தையுமறுத்தருள்செய்பாதா. (௬௯)

கற்பனையில்வந்துபொருகாமனையெரித்தோய்
சொற்பரவுநான்மறைதுதித்திடுதுரங்கா
பொற்புறவணிந்திலகுபூடணபுயங்கா
சிற்பரமஞானிகடினம்பருகுதேறல். (௭௦)

மிக்கதொருதக்கன தூவேள்வியையழித்தோ
யக்கட்கினின்றுவருமாலவிடமுண்டோய்
மொக்குளினியக்கவுணர்முப்புரமெரித்தோய்
திக்குலகெலாம்பரவுதிங்களைமுடித்தோய். (எக)

வேறு.

என்றுபுனைந்துரைபலகொண்டேத்திடலுமெம்பெருமா னிரங்கிப்பின்னர், மன்றன்மிகுநறுஞ்செந்தேன்வாய்க்கதும் பிவழிந்தொழுகுமலர்ப்பூங்கோயிற், பொன்றிகழும்பொற்பொ குட்டுப்புங்கவகின்பொய்த்துரையிற்பொருந்துந்தோட, மொன் றியபன்மகம்புரிபினுயர்ந்தகந்தமாதனத்தினெழியுமென்றான்.

ஆங்கதுகாலைபிற்கைதையடியேனையஞ்சலெனவருள்வா யென்னத், தேங்கிப்வத்திறனமிக்துதிரிந்தமுகந்தெரிந்தாதிரு வுளந்துணிந்து, பாங்கின்மலர்ப்பரமேட்டிதனக்காநீபொய் யுரைத்தபாவம்பாறும், பூங்கமலத்திருமருவுபூவணத்தினமை ப்பூசைபுரிதியன்றே. (எ௩)

அப்பிரமன்றனைத்தேசுமிக்கபிரானிருந்தவிடத்தடைதி யென்று, செப்பிவிடைகொடுத்ததற்பின்றிண்டிறன்மால்வை குண்டஞ்செல்லவேவிப், பொய்ப்பகர்தறருமுடங்கற்பூவினை யப்பூவணத்திற்போதியென்னத், துப்புறழுஞ்செஞ்சடிலச் சோதிலிங்கங்காந்தான்றன்மையேபோல். (எச)

தேவர்பிரானிம்மாற்றஞ்செப்பியுருக்காந்ததற்பின்றிரு மடந்தை, மேவுமுகந்தொறுநின்றுவிளையாடும்பூவணத்தின் விரைந்துபோந்து, தாவருஞ்சீர்தருபாரிசாதநிழற்றங்குசிவலி ங்கம்பூசித், தோவில்புகழுறுகைதையுனாத்திடும்பொய்ப்பவ த்தினுகின்றொழிந்ததன்றே. (எரு)

வேறு.

நித்தமாய்மேலாயென்றுநீடுயிர்க்கறிவாய்ப்போக
முத்தியையளிக்குமுக்கண்மூர்த்திதன்வடிவமாய
சத்தியமோனஞானசவுநகமுனிவமேலா
மித்தலப்பெருமையெம்மாலெடுத்துரைசெய்யலாமோ. (எசு)

முத்தியோருருவமாகிமுளைக்குமிவ்விலிங்கத்திற்குப்
பத்தியான்மூன் றுதூணிபசுவினன்பால்வடித்துப்
புத்தியினிட்டபத்திங்கட்பூரணைபொருந்துகின்ற
வித்தகவிசாகந்தன்னில்வெய்யவனெடுங்கும்வேலை. (எஎ)

நீதியின்வழாதுமுன்னநிகழ்தருபூசையாற்றிக்
காதலினிருந்துதாஞ்சங்கற்பமும்பண்ணிச்சங்கின்
வேதமந்திரத்தினாலேவிளைகொண்மஞ்சனம்பூரித்துத்
தீதறத்தாபித்தன்பிற்றிருந்தபிடேகஞ்செய்து. (எஅ)

அந்தநல்லமுகந்தன்னையன்புடனபிடேகித்தே
யந்தநற்புகழ்சேர்கின்றவர்த்தநாரீசற்காண்பா
ரந்தநற்றரிசனத்தாலரசராயனைத்துஞ்சேர்ந்தாங்
கந்தமிலாதமூர்த்தியான்கழலடைவரன்றே. (எகூ)

கூடியபேரன்புள்ளங்கொண்டமார்க்கண்டனென்போன்
நீடுமச்சிவலிங்கத்தினிகழ்த்துமான்பான்முன்னாட்டித்
தேடருமர்த்தநாரீசன்றனைத்தெரிசித்தங்க
ணாடருஞ்சிவன்முத்திநண்ணினனறிகமாதோ. (அ0)

ஆதலினிந்தக்காதையறைந்திடினறிதரேற்றூர்க்
கோதலைவைதிகத்தோர்க்குரைத்திநீயெனவியாதன்
காதலினுரைக்கப்பான்மைகட்டுரைத்தனன்யானன்றி
யேதமின்முனிவிர்காளிதெவராலுமியம்பலாமோ. (அக)

கொலைபழுத்தொழுகும்வைவேற்குமரவேணந்திக்கோதத்
தலமலிபுகழ்சேர்நந்திசநற்குமாரற்குரைப்ப
வுலகெலாம்பரவவன்னோனுயர்வியாதற்குரைப்ப
வலைவறவவன்பால்யான்கேட்டறைந்தனனுமக்கின்றன்பால்.

என்னலுமுனிவரந்தவேதமில்சூதன்றன்னை
மன்னியதருப்பைசீராவண்கனிமூலந்தன்னாற்
பன்னரும்பூசையாற்றிப்பின்முறைதழீஇக்கொண்டன்பா
லங்கிலையாசிகூறியானந்தமடைந்தாரன்றே. (அங)

பன்னுமிப்புராணந்தன்னைப்படிக்குநர்தம்மையன்பான்
மன்னியவாசனத்தின்வைத்தருச்சனைசெய்வோர்க்குப்

பொன்னுலகேத்துந்தொல்சீர்ப்பூவணத்தரனைப்பூசை
தன்னைநன்கியற்றினோர்கடாம்பெறும்பலன்களுண்டாம். ()

தேடரும்பலன்கணல்குந்தென்றிருப்பூவணத்து
நீடுசேர்புராணந்தன்னை நிகழ்த்திடுஞ்செவிநிறைத்து
நாடியபொருள்கள்யாவுநன்னலரனவிற்றுஞ்செஞ்சொற்
பாடலைவருத்தியேனும்பரிவுடன்கேட்கப்பண்ணே. (அரு)

புவனமெங்கணுஞ்சீர்போற்றும்பூவணமான்மியத்தை
நவிலுறச்செவிக்குநாளுநல்விருந்தளிக்குநர்க்குச்
சிவபிரானருளினாலேதேடுபேருவகைகூடுஞ்
சவுநகமுநிவவீதுசத்தியஞ்சத்தியங்காண். (அசு)

வேறு.

ஒப்பிலாதவுருத்திரசங்கிதையுற்றபூவணநற்கதையோதுவோர், செப்புமாறுசெவிக்கொடுமன்னியசிட்டராயசிறப்புறுதன்மையோர், விப்பிராதிபவித்தகமெய்ம்மொழிமிக்கவேதவிதத்துயர்மாதவீர், தப்பிலாததவத்திருமன்னவர்தயாபரன்கயிலைக்கிரிவாழ்வரே. (அஎ)

வேறு.

வாழ்கமன்னவன்செங்கோன்மழைமுகில்
வாழ்கநான்மறைவாணர்களுநிலம்
வாழ்கவைதிகசைவமலர்த்திரு
வாழ்கவஞ்செழுத்துண்மைநன்மந்திரம். (அஅ)

சிதம்பரவுபதேசச்சருக்க முற்றியது.

ஆகச்செய்யுள் கசுஙஎ.

திருப்பூவணப்புராண

முற்றியது.

இருபநாவது.

சிதம்பரவுபதேசச்சருக்கச்சுருக்கவசனம்.

வசிட்டர்முதலாகிய முனிவர்கள், நான்குவேதங்களையும் ஓதி உணர்ந்து தங்குதற்கிடமானதால், புட்பவனம், சதுர்வேதபுரமெனப் பெயர் பெறும். அப்பதியிலே, வியாசமுனிவர் மாட்டு உபதேசம்பெற்ற மாத்தியந்தின முனிவரும், தியானகாட்ட முனிவரும் சிவபிரானை நோக்கித் தேவவருஷம் நூறுவரையும் அருந்தவம்புரிந்தனர். அதற்குச் சிவபிரான் இடபாரூடராகத் தோன்றிய பொழுது, அம்முனிவர்கள் தரிசித்துத் துதிக்க, அத்துதிக்கு மகிழ்ந்தருளிய சிவபிரான், முனிவர்களே "நீங்கள் வேண்டியவரம் யாது" எனவினவியபோது, அம்முனிவர்கள், சுவாமீ, "இத்திருப்பூவணத்திலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை அடியேங்களுக்கு உபதேசித்து ஆநந்த தாண்டவஞ் செய்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தவழி, சிவபிரான், முனிவிர்காள், "காஷ்மீர நாட்டிலேயுள்ளமுனிவர்கள் பொருட்டுத் தில்லைவனத்திலே திருநடஞ்செய்வோம். அதை நீங்கள் தரிசிக்கலாம் இத்தலத்திலே பிரணவமாகிய திருவைந்தெழுத்தை உங்களுக்கு உபதேசித்து, உங்கள் இருதயகமலமாகிய திருவம்பலத்திலே திருநடஞ்செய்வோம்." என்று பிரணவத்தை யுபதேசித்தருளினார். அதனை முனிவர்கள் சிந்தித்து, சிவபிரான் திருநடனத்தையும் இருதயகமலத்திலே தரிசித்துப் பின்பு தில்லைவனஞ்சேர்ந்து சிவபிரானுடைய ஆனந்த தாண்டவத்தைத் தரிசிக்க விரும்பியிருந்தார்.

உமாதேவி விஷ்ணு பிரமன் சூரியன் முதலியோரும் மற்று முனிவர் இராக்கதர் முதலியோரும் புத்தி முத்தியின்பொருட்டுச் சிவபிரானைஅர்ச்சித்துப் பாவங்களைப் போக்கினமையால், இத்திருப்பூவணம் மகாபாபமோசனபுரமென்று பெயர் பெறும்.

சிவபிரானோடு காளிதேவி சபதங்கூறி ஆடிய தோஷநிவர்த்தியின் பொருட்டுத் திருப்பூவணேசர் திருக்கோயிலுக்கு வடதிசையிலே தன் பெயராலேகாளீசுரலிங்கம் எனஒன்று பிரதிஷ்டைசெய்துபூசித்தாள்.

பன்னிரண்டுவருஷம் மழையில்லாத காலத்திலே. சலந்தரனென்னுந்தவனை திருப்பூவணத்திலே, அலரியடியிற்றங்கினமைபற்றி அவ்வலரிபூத்த மலர் சிவபிரான் திருமுடியி லேறினதாற் சிவபிரான் அத்தவனைக்குச் சக்கரவர்த்தியாயிருக்கும் வரமருளினார். பின்பு பூமியையாண்டு தேவர்களை வருத்தினமைபற்றிச் சிவபிரான் விஷ்ணுவுக்குப்

புஷ்டவனத்திலே சக்கரப்படை அருளிச் சலந்தரனைக் கொல்வித்து, முன்பு அலரிமலர் சூடுதற்கு ஏதுவான புண்ணியத்தால், சலந்தரனுக்குப் புஷ்பவனத்தில் முத்தியருளினர்.

தாழைமலர், பிரமாவின்பொருட்டு விஷ்ணு முன்னே பொய்ச்சான்று கூறியதாலாகிய பாவத்தைத் திருப்பூவணேசரைப் பூசித்துப் போக்கியது. திருப்பூவணேசருக்குப் பசுப்பால் அபிஷேகிப்பவர் புத்தி முத்திகள் பெறுவர். மார்க்கண்டமுனிவர் புட்பவனேசருக்குப் பசுப்பால் அபிடேகித்துச் சிவன்முத்தி யுற்றனர்.

இத்திருப்பூவணக்ஷேத்திர மான்மியம் அளவிடுதற்கு அருமையாம். இப்புராணத்தை ஓதுவோரும் கேட்போரும் பூமியிலே அரசராய்ப்பிறந்து முடிவிலே திருக்கைலாசபதவி யடைவர்.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க
சிவஞானயோகிகள் திருவடிவாழ்க.

பரிசோதனபத்திரம்.

பக்கம்.	செய்யுள்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩௧	௨௩	௧	பெறி	பொறி
௪௬	௫௭	௩	மேய்ங்டும்	மேய்ந்திடும்
௸	௫௮	௩	திருவஞ	திருவஞ்
௸	௸	௪	செவித்து	செபித்து
௭0	௧௭	௩	மோவிப்	மாலிப்
௭௩	௩௭	௩	வானே	வானேன்
௮௩	௫0	௨	மரலி	மொலி
௸	௸	௪	மெண்	மெண்டி
௯௧	௧௯	௩	செல்மிகு	சென்மிகு
௯௬	வசனம்	௫	யடைர்	யடைங்
௧0௭	௨	௩	வாளிற்	வானிற்
௧௩௩	வசனம்	௪	னுள்டே	னுள்ளே
௸	௸	௸	போய	போய்
௧௪௫	௸	௧௫	கேடிரி	கேடி
௧௫௪	௫௬	௨	கோடீரப்	கோடீர
௧௬௧	வசனம்	௧	ணங்கி	வணங்கி
௧௬௭	௨௨	௨	லவனின்	லவளின்
௧௮௭	௩௫	௪	கணுைத	கணைனுத
௸	௩௯	௪	வான்வ	வானவ
௧௯0	௬௧	௧	கண்ணருள்	கணனருள்
௧௯௩	வசனம்	௬	யோகி	போகி
௸	௨	௧	திமமய	திமய
௨0௩	௧௭	௫	படர்	படர்ங்
௸	௨௨	௨	மன்பரம	மன்பாமருங்
௨0௪	௨௩	௧	கண	கன்
௸	௸	௩	கங்கன	கங்கள
௸	௨௭	௧	யுங்தேயங்தோய்ந்த	யுமேதோய்ந்து
௨௧௬	௭	௨	ரூன்முன்	ன்ருமுன்
௨௨0	௨	௨	சொங்	செங்
௨௨௩	௨௬	௨	குரரோச	குரோச
௨௨௫	௩௯	௩	லோரர்கி	லோர்கி
௨௨௭	வசனம்	௨	பதவது	பதாவது
௨௪0	௬0	௨	கைகதை	கைதை